பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

மூலமும் தெளிவுரையும்



3

வர்த்தமானன் பதிப்பகம்

வ.ஜோதி M.A.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

(மூலமும் உரையும்)
மூன்றாம் தொகுதி

உரையாசிரியர்:

வ. ஜோதி, M.A.

வர்த்தமானன் பதிப்பகம்
141, உஸ்மான் சாலை,
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ்,
தி. நகர், சென்னை – 600 017
தொலைபேசி : 8257995

முதலாம் பதிப்பு : 1991

இரண்டாம் பதிப்பு : 1998

ஐந்து தொகுதிகள்

விலை : ரூ. 500.00

Laser Typeset at : LKM Computer Prints, Chennai – 17
Printed at :

பதிப்புரை

திருவிளையாடற் புராணத்தின் மூன்றாம் தொகுதி இது. இதில் 17 முதல் 37 வரையிலான படலங்கள் இடம் பெற்றுள்ளன. இறைவனின் பேராற்றலை விளையாட்டாக விளக்குவதே திருவிளையாடல்! இப்பகுதியில் காணும் 'பழியஞ்சின படலம்' பாண்டிய மன்னன், உண்மையை அறிய எவ்வாறெல்லாம் முயன்றான் என்பதைத் தெளிவு படுத்துகிறது. ஆராயாமல் கோவலனைக் கொன்று, பின் மனம் துடித்து மாண்ட சிலப்பதிகாரப் பாண்டியனைவிட, ஆராய்ந்து செயல்பட்ட திருவிளையாடற் புராணத்துப் பாண்டியன் கற்பார் நெஞ்சில் நீங்காத இடத்தைப் பெற்று விடுகிறான்.

அந்த அந்தணன்தான் என்ன அருமையாக வழக்கைத் தொடுக்கிறான்! மனைவியின் பிணத்தை முதுகிலே சுமந்து கொண்டு, கதறியழும் குழந்தையை மார்பிலே அணைத்துக் கொண்டு, கொலையாளி எனக் கருதப்பட்ட வேடனை ஒரு கையால் பிடித்து இழுத்துக் கொண்டு போய்ப் பாண்டியன் முன்னால் ஆற்றலோடு வழக்கை எடுத்துரைக்கும் அந்தணன் சிறப்பை என்னென்பது?

'இது முறையோ?' என்று முறையிட்ட அந்தணனைக் காண ஓடோடி வருகிறானே பாண்டியன், அவனது காட்சிக்கு எளியனாம் தன்மையை எப்படிப் புகழ்வது?

நகைச்சுவை விருந்தளிக்கும் 'வளையல் விற்ற படல'த்தையும் படித்து மகிழ வேண்டுகிறோம்.

—பதிப்பகத்தார்

பொருளடக்கம்

திருவிளையாடற் புராணம்

மதுரைக் காண்டம்
(தொடர்ச்சி)

மூன்றாம் தொகுதி

17. மாணிக்கம் விற்ற படலம்

1195. சுகந்த வார்பொழின் மதுரையெம் பிரான்றன
துணைத்தாள்
உகந்த வாவறு கண்ணுவ முனிமுதல் ஓதும்
அகந்த வாதபேரன்பருக் கருமறைப் பொருளைப்
பகர்ந்த வாறிது மாணிக்கம் பகர்ந்தவா பகர்வாம்.

1196. அன்ன நாள்வயின் வீரபாண் டியற்கணங் கனைய
மின்ன னாருளைம் போகமும் விளைநிலம் அனைய
பொன்ன னார்பெறு காளைய ரைங்கணைப்புத்தேள்
என்ன வீறினார் வான்பயிர்க் கெழுகளை யென்ன.

1197. பின்ன ரும்பெறற் குமரனைப் பெறுவது கருதி
மன்ன னுங்குலத் தேவியும் கயற்கணி மணாளன்
தன்னை நோக்கியட் டமிசதுர்த் தசிமதி வாரம்
இன்ன நோன்புநோற் றொழுகுவார் இறைவனின்
னருளால்.

1198. சிறிது நாள்கழிந் தகன்றபின் கங்கையிற் சிறந்த
மறுவி லாவட மீன்புரை கற்பினாள் வயிற்றிற்
குறிய வாலவித் தங்குரம் போன்றொரு குமரன்
நிறையு நீருல கருட்குடை நிழற்றவந் துதித்தான்.

17. மாணிக்கம் விற்ற படலம்

1195. நறுமணம் வீசும் நெடிய சோலைகள் சூழ்ந்த மதுரை நகரில் எழுந்தருளி இருக்கும் சோமசுந்தரக் கடவுளுடைய இரண்டு திருவடித் தாமரைகளையும் பற்றி, பற்று நீங்கிய கண்ணுவர் முதலாகக் கூறப்படும் முனிவர்களுக்கு அரிய வேதங்களின் பொருளைக் கூறிய திருவிளையாடல் இதுவாகும். இனி அப்பெருமான் மாணிக்கம் விற்ற திருவிளையாடலைக் கூறுவாம்.

1196. அந்தக் காலத்தில் வீரபாண்டியருக்குத் தெய்வ மகளிர் போலும் மகளிருள், ஐந்து போகங்களும் விளைகின்ற நிலம்போலக் காமம் விளைக்கின்ற காமக் கிழத்தியர் பெற்ற பிள்ளைகள், பயிருக்கு மாறாக வளர்கின்ற களையைப் போல மதவேள் என்று கூறும்படி வளர்ந்தனர்.

1197. பின்பு, பெறுவதற்கரிய பண்புடைய சிறந்த மகனைப் பெறுவது குறித்து அரசனும் அவன் குல மனைவியும், அங்கயற்கண்ணம்மையின் கணவனான சொக்கலிங்கப் பெருமானை நோக்கி, அட்டமி நோன்பு, சதுர்த்தசி நோன்பு, சோமவார நோன்பு போன்ற நோன்புகளை நோற்றிருந்தனர். இறைவனுடைய இனிய திருவருள் கூடியது.

1198. சில நாட்களுக்குப் பின், தூய்மையுடைய குற்றமில்லாத அருந்ததி போலும் கற்பினையுடைய அத்தேவியின் வயிற்றிலே சிறிய ஆலம் விதையில் தோன்றிய முளை போல, கடல் சூழ்ந்த நிலவுலகைத் தன் அருளுடன் கூடிய குடையால் நிழலைச் செய்ய ஒரு குமரன் தோன்றினான்.

1199. அத்தன் இச்சிறு குமரனுக் ககங்களி சிறப்ப
மெய்த்த நூன்முறை சாதக வினைமுதல் வினையும்
வைத்த னான்பொலி வெய்துநாண் மன்னவ னூழ்வந்
தொத்த நாள்வர வேட்டைபுக் குழுவைகோட் பட்டான்.

1200. வேங்கை வாய்பட்டு மீனவன் விண்விருந் தாக
வாங்கு நூன்மருங் கிறக்கர மார்பெறிந் தாரந்
தாங்கு கொங்கைசாந் தழிந்திடத் தடங்கண்முத் திறைப்ப
ஏங்க மாதர்பொன் னகருளார் யாவரும் இரங்க.

1201. மற்ற வேலைகா மக்கிழத் தியர் மைந்தர்
அற்ற நோக்கியீ தமையமென் றானைமா வாதி
உற்ற பல்பிற பொருணிதி யொண்கல னோடுங்
கொற்ற மோலியுங் கவர்ந்தனர் கொண்டுபோய் மறைந்தார்.

1202. மன்னன் ஆணையா றொழுகிய மந்திரக் கிழவர்
மின்னு வேலிளங் குமரனைக் கொண்டுவிண் ணடைந்த
தென்னர் கோமகற் கிறுதியிற் செய்வினை நிரப்பி
அன்ன காதலற் கணிமுடி சூட்டுவா னமைந்தார்.

வீரபாண்டியன் புலியால் கொல்லப்படுதல்

1199. அந்த ஒப்பற்ற சிறிய புதல்வனுக்கு மனமகிழ்ச்சி உண்டாக வேதநூல்களில் கூறிய முறைப்படி சாத கன்மம் முதலிய பிற சடங்குகளைச் செய்து முடிக்க விளக்கமுடன் வளர்ந்து வருகின்றான். அந்நாளில் வீரபாண்டியன், போகூழ் வந்து பொருந்திய நாள் வந்தமையால் வேட்டை ஆடச் சென்று புலியால் கொல்லப்பட்டான்.

1200. புலியால் கொல்லப்பட்ட மீனவன் விண்ணுலக தேவர்களுக்கு விருந்தினன் ஆயினான். எனவே நூல் போன்ற இடையானது முறியும்படியும், முத்துமாலையைத் தாங்கிய கொங்கைகளில் உள்ள சாந்து சிந்தும்படியும் மகளிர் தம் கைகளால் மார்பில் அடித்துக் கொண்டு, கண்களானது நீர் சிந்தி வருந்த, அழகிய நகரத்தில் உள்ள அனைவரும் கவலை அடைந்தனர்.

1201. அவ்வாறு வருந்தும் பொழுது காமக் கிழத்தியர் பெற்ற பிள்ளைகள், இதுவே ஏற்ற சமயம் என்று கருதி, பொருந்திய ஏனைப் பல்பொருள்களும் திரவியங்களும், ஒள்ளிய. அணிகலன்களும், வெற்றியையுடைய முடியு மாகிய இவைகளைக் கவர்ந்து கொண்டு போய் மறைத்தார்கள்.

முடி சூட்ட எண்ணல்

1202. அரசனது ஆணை வழி நடந்த அமைச்சர்கள், இளம் குமரனைக் கொண்டு, சொர்க்கம் சேர்ந்த வீரபாண்டியனுக்கு, முடிவில் செய்ய வேண்டிய ஈமக் கடன்களை நிறைவேற்றி வைத்துப்பின், அந்தப் புதல்வ னுக்கு முடிசூட்ட எண்ணினர்.

1203. நாடிப் பொன்னறை திறந்தனர் நவமணி மகுடம்
தேடிக் கண்டிலர் நிதிசில கண்டிலர் திகைத்து
வாடிச் சிந்தைநோய் உழந்திது மாற்றலர் கூட்டுண்
டோடிப் போயின தாகுமென் றுணர்ந்திது நினைவார்.

1204. வேறுமாமுடி செய்துமா லென்னினோ விலைமிக்
கேறு மாமணி இலையர சிருக்கையின்று இன்றேல்
தேறு நீருல கலையுமென் செய்ததிங் கென்னா
ஆறுசேர்சடை யாரருள் காண்டுமென் றமைச்சர்.

1205. கரைசெ யாப்பெருங் கவலைசூழ் மனத்தராய்க் கறங்கும்
முரசு கண்படாக் கடிமனை முற்றநீத் தருமை
அரசி ளந்தனிக் கொழுந்தினைக் கொண்டுபோய்
அம்பொன்
வரைசெய் கோபுர வாயின்முன் வருகுவார் வருமுன்.

1206. எற்ற தும்புகோ வணஉடை யிடம்படப் பிறங்கத்
துற்ற பல்கதிர் மணிப்பொதி சுவல்மிசைத் தூங்க
மற்ற டம்புய வரைமிசை வரம்பிலா விலைகள்
பெற்ற அங்கதம் பரிதியிற் போந்துபோர்ந் திமைப்ப.

1207. மந்தி ரப்புரி நூலது வலம்படப் பிறழ
இந்தி ரத்திரு வில்லென ஆரமார் பிலங்கச்
சுந்த ரக்குழை குண்டலந் தோள்புரண்டு ஆடத்
தந்தி ரத்தரு மறைகழி தாள்நிலந் தோய.

1203. கருவூலத்தினைத் திறந்து பார்த்தனர். ஒன்பான் மணிகளும் இயற்றப் பெற்ற முடியினைத் தேடிக் காணாது திகைத்தனர். வேறு சில பொருளையும் காணாதவராயினர். மயங்கி வாட்டமுற்று மனம் வருந்தி இவைகள் பகைவரால் கவர்ந்து கொண்டு போகப் பட்டனவாகும் என அறிந்தனர்.

1204. "வேறு சிறந்த முடி செய்வோம் என்று எண்ணி னாலோ உயர்ந்த பெரிய மணிகள் இல்லை. முடி இல்லை என்றால் அரசு இருக்கையும் இல்லை. அரசில்லையேல் உலகம் வருந்தும். இங்கு நம்மால் செய்யத் தக்கது யாது?" என்று கவலையடைந்தனர். எனவே சொக்கலிங்கப் பெருமானின் திருவருளைப் பெறுவோம் என மந்திரிகள் எண்ணினர்.

1205. எல்லை காண முடியாத பெரிய துன்பத்தை உடையவராய், ஒலிக்கும் முரசு உள்ள காவலையுடைய அரண்மனையின் முற்றத்தின் நீங்கி, அரசனின் இளம் புதல்வனைக் கொண்டு சென்று அழகிய பொன்மலையைக் கோபுரமாக செய்து வைத்தது போன்ற திருக்கோபுர வாயில் முன் சென்றனர்.

சோமசுந்தரக் கடவுள் வணிகராய்த் தோன்றுதல்

1206. கோவணமாக உடுத்த உடையானது விசாலமாக விளங்கவும், நெருங்கிய பல ஒளியினையுடைய அர தனங்களின் பொதி பிடரியின் மேல் தூங்கவும், பெரிய தோளின் மேல் வாகுவலயம் சூரியனைப் போல் விட்டு விட்டு ஒளி வீசவும்,

1207. மந்திரத்தால் அமைந்த பூணூலானது வலப் புறம் புரளவும், இந்திரவில் போன்ற ஆரம் மார்பில் விளங்கவும், அழகிய குடையும் குண்டலமும் தோளில் புரண்டாடவும், அரிய வேதங்களின் சூழ்ச்சியினின்றும் நீங்கிய திருவடிகள் நிலத்தில் பொருந்தவும்,

வேறு

1208. பொன்னவிர்ந் திலங்குகோ புரமுன் போதுவார்
முன்னவர் துணிவுகூர் முன்ன நீக்கிய
தென்னவர் குலப்பெருந் தெய்வமாகிய
மன்னவர் வணிகராய் வந்து தோன்றினார்.

1209. வந்தவர் எதிர்வரு வாரை மம்மர்கொள்
சிந்தைய ராய்வரு செய்தி யாதென
முந்தையில் விளைவெலா முறையிற் கூறினார்க்கு
எந்தையாம் வணிகரீ தியம்பு வாரரோ.

1210. என்பட ரெய்துகின் றீர்கள் என்வயின்
ஒன்பது மணிகளு முள்ள வால்அவை
பொன்பதி னாயிர கோடி போனவென்
றன்புற மணியெலாம் அடைவிற் காட்டுவார்.

1211. இருந்தனர் கீழ்த்திசை நோக்கி யிட்டதோர்
கருந்துகி லடுவுமிந் திராதி காவலர்
அருந்திசை யெட்டினு மடைவிற் செம்மணி
பெருந்தண்முத் தாதிஎண் மணியும் பெய்தரோ.

1212. இம்மணி வலனுடற் சின்ன மென்னவக்
கைம்மறி கரந்தவர் கூறக் கற்றநூற்
செம்மதி யமைச்சர் அச் செம்மல் யாரவன்
மெய்ம்மணி யாயதென் விளம்பு கென்னவே.

1213. மேவரும் வலனெனும் அவுணன் மேலைநாள்
மூவரின் விளங்கிய முக்கண் மூர்த்திசெஞ்
சேவடி யருச்சனைத் தவத்தின் செய்தியால்
யாவது வேண்டுமென் றிறைவன் கூறலும்.

1208. பொன் ஒளி விட்டு வீசும் திருக்கோபுர வாயிலின் முன் வருகின்றவர்களுக்கு எதிரே அவர்களின் துன்பத்தை ஒழிக்கும் பொருட்டுப் பாண்டியர் குலத்தின் பெரிய தெய்வமாகிய சுந்தரேசர் வணிகராக வந்து தோன்றி யருளினார்.

1209. அங்ஙனம் வந்த பெருமானார் எதிரில் வரும் அமைச்சர் முதலியோரை நோக்கி, 'மயங்கிய மனத்தினராய் நீங்கள் வரும் செய்தி யாது?' என்று வினவ, முன் நிகழ்ந்த செய்திகள் அனைத்தையும் முறைப்படி கூறினர். அவர் களுக்கு எம் தந்தையாகிய வணிகர் பெருமானார் கூறத் தொடங்கினார்.

1210. "ஏன் துன்பம் அடைகின்றீர்கள்? என்னிடம் ஒன்பது வகை மணிகளும் உள்ளன,. அவைகள் பதினாயிரம் கோடிப் பொன் விலையுள்ளவை" என்று விருப்பத்துடன் முறையே அவற்றைக் காட்டத் தொடங்கினர்.

1211. கிழக்கு திக்கை நோக்கி இருந்த, விரிந்த பெரிய கரிய கம்பலத்தில் நடுவில், இந்திரன் முதலிய திசைக் காவலர்களின் அரிய திக்குகள் எட்டினும் முறையே செம் மணி, முத்து முதலிய எட்டு மணிகளையும் வைத்தார்.

வலன் என்னும் அசுரன் வரலாறு

1212. "இந்த மணிகள் "வலன் உடலின் சின்னம்" என்று அவ்வணிகர் கூறினார். பல நூல்களையும் கற்ற நுண்ணிய அறிவினையுடைய அமைச்சர்கள், "அவ் 'வலன்' என்பவன் யார்? அவன் உடல், மணிகளாய் எவ்வாறு மாறியது கூறுங்கள்" என்று கேட்க, தொடங்கினர்.

1213. "வலன் என்னும் அரக்கன், முன்னாளில் மும் மூர்த்திகளில் சிறந்தவராகிய சிவபெருமானுடைய திருவடி களில் அர்ச்சனை செய்து வந்த திருத்தொண்டால் அப்பெருமான் மகிழ்ந்து, யாது வேண்டும்? என்று கேட்டார்.

1214. தாழ்ந்துநின் றியம்பும்யான் சமரில் யாரினும்
போழ்ந்திற வாவரம் புரிதி ஊழ்வினை
சூழ்ந்திறந் தாலென்மெய் துறந்த மாந்தரும்
வீழ்ந்திட நவமணி யாதல் வேண்டுமால்.

1215. என்றுவேண் டலும்வர மீச னல்கினான்
அன்றுபோ யமர்குறித் தமரர் கோனொடு
சென்றுபோர் ஆற்றலுந் தேவர் கோனெதிர்
நின்றுபோ ராற்றலன் நீங்கிப் போயினான்.

1216. தோற்றுவா னாடவன் மீண்டு சூழ்ந்தமர்
ஆற்றினும் வெல்லரி தழிவி லாவரம்
ஏற்றவ னாதலால் இவனைச் சூழ்ச்சியாற்
கூற்றினூ ரேற்றுதல் குறிப்பென் றுன்னியே.

1217. விடங்கலுழ் படைக்கலன் இன்றி விண்ணவர்
அடங்கலுந் தழீஇக்கொள அடுத்துத் தானவ
மடங்கலை வருகென நோக்கி வானவக்
கடங்கலுழ் யானைபோற் கரைந்து கூறுவான்.

1218. விசையநின் றோள்வலி வென்றி வீக்கமெத்
திசையினும் பரந்ததச் சீர்த்தி நோக்கியுள்
நசையறா மகிழ்ச்சியா னல்கு வேன் உனக்
கிசையவேண் டியவரம் யாது கேளென.

1219. கடிபடு கற்பக நாடு காவலோன்
நொடியுரை செவித்துளை நுழையத் தானவன்
நெடியகை புடைத்துட னிமிர்த்து கார்படும்
இடியென நகைத்திகழ்ந் தினைய கூறுவான்.

1214. உடனே 'வலன்' தாழ்ந்து நின்று, "யான் போரில் யாராலும் பிளவுண்டு இறக்காத வரத்தை அருள்க. ஊழ்வினை சூழ்ந்து இறந்தால் என் உடம்பு, துறவிகளும் விரும்பும் ஒன்பான் மணிகளாக வேண்டும்"— என்று வேண்டினான்.

1215. இவ்வாறு வரம் கேட்க, இறைவன் அங்ஙனமே அருளினான். அப்பொழுதே போரினை செய்யக் கருதி, தேவேந்திரனோடு எதிர்த்துப் போரிட்டான். அத்தேவேந் திரன் நின்று போர் செய்யும் ஆற்றல் இல்லாமல் புறம் கொடுத்து ஓடினான்.

1216. இவ்வாறு தோல்வியுற்ற இந்திரன், இறவாத வரம் பெற்றவன் ஆகையால், திரும்பவும் வந்து இவனோடு போரிட்டாலும் இவனை வெல்ல முடியாது. ஆகையால் சூழ்ச்சியால் வென்று எமன் உலகு அனுப்பவேண்டும் என்று கருதினான்.

1217. நஞ்சுமிழும் போர்க்கருவிகள் ஏதுமின்றி தேவர்கள் அனைவரும் சூழ்ந்து வர, தேவயானை போல் போர்க்களத்தை அடுத்து அசுரனாகிய சிங்கம் போன்ற, 'வலனை' அழைத்துக் கூறத் தொடங்கினான்.

1218. "வெற்றியையுடையவனே! உன்னுடைய தோள் வலிமையும் வெற்றிப் பெருக்கும் எல்லாத் திசைகளிலும் பரவி விட்டது. அந்தப் புகழ்ச்சியை எண்ணி, உன் உள்ளத்திற்கு விருப்பம் வரும் 'வரம்' அளிப்பேன். நீ விரும்பும் வரம் யாது? அதனைக் கூறுவாய்" என்று கூறினான்.

1219. மணம் மிக்க கற்பக மரத்தையுடைய தேவர் உலகத்தின் தலைவனாகிய இந்திரன் இதனைக் கூறவும் அச்செய்தி அந்த அவுணனின் காதுகளில் விழுந்தவுடன், அவன் தன் நீண்ட கைகளை ஒன்றோடொன்று மோதும் படி தட்டி இடியோசை கேட்பது என்று சொல்லும்படி பேசத் தொடங்கினான்.

வேறு

1220. நன்றிது மொழிந்தா யாரு நகைக்கநீ எனைவெங் கண்ட
வென்றியு மதனாற் பெற்ற புகழுநின் வீறு பாடும்
இன்றுநின் போரிற் காணப் பட்டவே யிசைபோய் எங்கும்
நின்றதே யிதுபோ னின்கை வண்மையு நிற்ப தன்றோ.

1221. ஈறிலா ன் அளித்த நல்ல வரமெனக் கிருக்க நின்பால்
வேறுநான் பெறுவதுண்டோ வேண்டுவ துனக்கியா தென்பாற்
கூறு நீ அதனை யின்னே கொடுக்கலே னாகில் நின்போற்
பாறுவீழ் களத்திற் றோற்ற பழிப்புகழ் பெறுவ னென்றான்.

1222. மாதண்ட அவுணன் மாற்ற மகபதி கேட்டு வந்து
கோதண்ட மேருக் கொட்டிக் கொடும்புரம் பொடித்தான் வெள்ளி
வேதண்ட மெய்தி ஆங்கோர் வேள்வியோன் புரிவன் நீஅப்
போதண்டர்க் கூட்ட வாவாய்ப் போதுவாய் வல்லையென்றான்.

1223. அன்றொரு தவத்தோன் என்பு வச்சிர மொன்றே யாக
ஒன்றிய கொடையால் பெற்ற புகழுடம் பொன்றே யென்போல்
வென்றியி னாலும் வீயா மெய்யெலா மணிக ளாகப்
பொன்றிய கொடையி னாலும் புகழுடம் பிரண்டுண் டாமே.

1220. "யாரும் நகைபடுமாறு நல்லதாகிய இந்த மொழியைக் கூறினாய். என்னை நீ புறங்கண்ட வெற்றியும், அந்த வெற்றியினால் அடைந்த புகழும் உன்னுடைய பெருமிதம் இன்று என்னோடு நீ செய்த போரில் காணப்பட்டதே, புகாழானது எங்கும் சென்று நிலை பெற்றது. இதே போல் உன் வள்ளன்மையும் நிலை பெறும் அல்லவோ?

1221. "சிவபெருமான் அருளிய வரங்கள் நல்ல வரங்கள் எனக்கு இருக்கவும், அதற்கும் மேலாக நான் உன்னிடம் பெறக் கூடியது ஏதேனும் உண்டோ? என்னிடம் உனக்கு வேண்டியது யாது? அதனை நீ சொல். இப்போதே கொடுக்கிறேன். அப்படி நான் தரவில்லை எனில் பருந்துகள் வீழ்கின்ற இப்போர்க் களத்தில், உன்னைப் போல் தோல்வியுற்ற பழியைப் பெறுவேன்" என்று கூறினான்.

1222. அசுரனது இந்த வார்த்தையைக் கேட்ட இந்திரன் மகிழ்ந்து, "மேருமலையை வில்லாக வளைத்துக் கொடிய அவுணர்களின் திரிபுரத்தை எரித்துச் சாம்பலாக்கிய சிவபெருமானுடைய வெள்ளி மலையை அடைந்து, அங்கு ஒரு வேள்வியினை நான் செய்வேன், அப்போது தேவர்களுக்கு அவியூட்ட நீ வேள்விப் பசுவாகி வருவாயாக" என்றான்.

1223. உடனே "அக்காலத்தில் தவத்தில் சிறந்த ததீசி முனிவன் முதுகுத் தண்டு ஒன்று மட்டுமே வச்சிரப் படை ஆகுமாறு மனம் விரும்பிக் கொடுத்த கொடையினால் பெற்ற புகழ் உடம்பு ஒன்றேயாகும். பிறரை வெல்லும் வெற்றியினாலும், பிறரால் அழியாத உடல் முழுவதும் நவமணிகள் ஆகுமாறும் என்னைப் போல, அம்முனிவனுக்கு புகழுடம்பு இரண்டு உண்டோ? (அதாவது முனிவருக்குப் புகழ் கொடையால் மட்டுமே! ஆயின் எனக்குக் கொடை, வெற்றி இரண்டாலும் புகழ்)

1224. மேவல னல்லை நீயே நட்டவன் மேலை வானோர்
யாவரு மருந்து மாற்றா லறம்புகழ் எனக்கே யாக
ஆவுரு வாதி யென்றா அன்னதே செய்வே னென்றான்
ஈவதே பெருமை யன்றி யிரக்கின்ற திழிபே யன்றோ.

1225. அதற்கிசைந் தவுணர் வேந்தன் அமரர்வேந் தனைமுன் போக்கி
மதர்க்கடுங் குருதிச் செங்கண் மைந்தனுக் கிறைமை ஈந்து
முதற்பெருங் கலையாம் வேத மொழிமர பமைந்த வானாய்ப்
புதர்க்கடு வேள்விச் சாலைப் புறத்துவந் திறுத்து நின்றான்.

1226. வாய்மையால் மாண்ட நின்போல் வள்ளல்யார் என்று தேவர்
கோமகன் வியந்து கூறத் தருக்குமேற் கொண்டு மேரு
நேமியோ டிகலும் விந்த வரையென நிமிர்ந்து வேள்விக்
காமெனை யூபத் தோடும் யாமின்என் றடுத்து நின்றான்.

1227. யாத்தனர் தருப்பைத் தாம்பா லூர்ணை யால்யாத்த சிங்கப்
போத்தென நின்றான் வாயைப் புதைத்துயிர்ப் படங்க வீட்டி
மாய்த்தனர் மாய்ந்த வள்ளல் வலனுமந் தார மாரி
தூர்த்திட விமானமேறித் தொல்விதி உலகஞ் சேர்ந்தான்.

1224. "நீ எனக்குப் பகைவன் இல்லை. நீயே நண்பன். விண்ணுலகில் உள்ள தேவர்களின் உண்ணும் இயல்பினால், புண்ணியமும் புகழும் எனக்கே உண்டாகும். பசுவின் உருவாகி வருவாய் என்றாய். அவ்வாறே செய்வேன்" என்று வலன் கூறினான். எக்காலத்தும் பிறருக்குக் கொடுப்பதே பெருமை அல்லாமல், யாசித்தல் அழிவு அல்லவா?

1225. அவ்வாறு பசுவாய் வர உடன்பட்ட அவுணர் தலைவனாகிய 'வலன்' இந்திரனை முன்னே அனுப்பி விட்டு மதர்த்த கொடுமையான கண்களையுடைய தன் மகனுக்கு அரச உரிமையைத் தந்துவிட்டு, கலைகளுக் கெல்லாம் முதன்மையாகிய வேத நெறியிலே கூறிய முறைப்படி இலக்கணம் அமைந்த பசுவாகித் தேவர்களுக்கு அவியுணவு ஆக்கும் வேள்விச் சாலையின் அருகில் வந்து நின்றான்.

1226. "சொன்ன சொல் தவறாது நடந்து கொள்ளும் மாட்சிமையும் வள்ளல் தன்மையும் உடையோர் உன்னைப் போல் யார் உள்ளார்கள்?" என்று இந்திரன் வியப்புடன் கூறினான். 'மிகுந்த ஆணவத்தோடு மேரு மலையோடு பகை கொண்டு ஓங்கி உயர்ந்த விந்தமலை போன்ற என்னை வேள்விக்குப் பயன்படும்படியாக, யூபத் தம்பத்தோடு கட்டுங்கள்" என்று சொல்லி அதன் அருகில் நின்றான், வலன்.

1227. தருப்பைக் கயிற்றால் கட்டி, தானே தான் கொடுத்த வாக்குறுதியாக அடங்கி நின்ற ஆண்சிங்கம் போன்ற அவனது வாயைப் பொத்தி, மூச்சு அடங்கத் தேவர்கள் அவனைக் கொன்றனர். இறந்த வள்ளலாகிய வலனும் கற்பக மலர் பொழிய விமானத்தில் ஏறிப் பிரமன் உலகை அடைந்தான்.

1228. மணித்தலை மலையின் பக்க மாய்த்தவன் வயிர
வேலாற்
பிணித்துயிர் செகுத்த வள்ளற் பெருந்தகை யாவாய்
வேதம்
பணித்திடும் வபையை வாங்கிப் படரெரி சுவைமுன்
பார்க்க
குணித்தவா னாடர்க் கூட்டிக் கோதிலா வேள்வி
செய்தான்.

1229. அத்தகை யாவின் சோரி மாணிக்க மாம்பல் முத்தம்
பித்தை வை டூரிய மென்பு வச்சிரம் பித்தம் பச்சை
நெய்த்தவெண் ணிணங் கோ மேதந் தசைதுகிர்
நெடுங்க ணீலம்
எய்த்தவை புருடராகம் இவைநவ மணியின் றோற்றம்.

1230. இவ்வடி வெடுத்துத் தோன்றி யிருள்முகம் பிளப்பக்
காந்தி
தைவரு மணியொன் பானுஞ் சார்விட நிறங்கள் சாதி
தெய்வத மொளிமா சென்ணிச் சோதனை செய்து
தேகம்
மெய்வர அணிவோர் எய்தும் பயனிவை விதியாற்
கேண்மின்.

வேறு

1231. வாளவிரு மாணிக்கம் கிரேதமுத லுகநான்கும் வழியே
மக்கங்
காளபுரந் தும்புரஞ்சிங் களமிந்நான் கிடைப்படுமக்
கமல ராகம்
ஆளுநிற மொன்பதர விந்தமா துளம்பூவித் தழல்கல்
லாரங்
கோளரிய கச்சோத நரந்தநறும் பலந்தீபங் கோப
மென்ன.

1228. மணிகள் பதித்த முடிகளை அணிந்த மலைகளின் சிகரங்களை எல்லாம் அரிந்த இந்திரன், பிணித்து உயிர் போக்கப்பட்ட வள்ளன்மையும், பெருந்தகுதியும் உடைய 'வல'னாகிய பசுவினிடமிருந்து வச்சிரப் படையினால் வேதம் விதித்த வபையினை எடுத்து, படர்ந்த வேள்வித் தீயானது முன்னே சுவை பார்க்க இட்டு, தேவர்களுக்கு உண்பித்துக் குற்றமற்ற வேள்வியைச் செய்து முடித்தான்.

நவமணிகள் தோற்றம்

1229. அந்தப் பசுவினது குருதி மாணிக்கமாம், பற்கள் முத்துக்களாம். மயிர் வைடூரியமாம். எலும்பு வயிரமாம், பித்தம் மரகதமாம். நிணம் கோமேதகமாம், தசை பவளமாம், நீண்ட கண்டம் நீலமாம். இளைத்தற்கு ஏதுவாகிய கோழை புருடராகம். இவையே நவமணிகள் தோன்றிய முறையாகும்.

1230. இந்த உருவங்களை எடுத்த. இருளின் முகம் பிளக்க ஒளி வீசும் ஒன்பது மணிகளும் பொருந்தும் இடங்களும் அவற்றின் நிறங்களும், சாதியும் தெய்வமும், ஒளியும் ஆய்ந்து குற்றம் நீக்கி நல்லவற்றை அணிபவர் அடையும் பயனும் கூறுவேன். இவற்றை முறைப்படி கேளுங்கள்.

1. மாணிக்கம்

1231. ஒளி விளங்கும் மாணிக்கமானது கிருதயுகம் முதல் நான்கு யுகங்களிலும் முறையே மக்கம், காளபுரம், தும்புரம், சிங்களம் ஆகிய இந்நான்கு இட்ங்களில் தோன்றும், மாணிக்கத்தின் நிறமானது தாமரை மலரும், மாதுளை மலரும், மாதுளை விதையும், நெருப்பும், செங்குவளை மலரும், மின்மினிப் பூச்சியும், நாரத்தையின் பழமும், விளக்கும் (தீ) இந்திர கோபமும் என்னும் ஒன்பது வகைகளாகும்.

1232. இந்நிறத்த பொதுவாய மாணிக்க மறையவர்முன்
இயனாற் சாதி
தன்னியல்பாற் சாதரங்கம் குருவிந்தஞ் சௌகந்தி
கங்கோ வாங்கம்
என்னுமிவற் றாற்சிறந்து நான்காகு மிவ்வடைவே
இந்நான் கிற்குஞ்
சொன்னவொளி பத்திருநான் கிருமூன்று நான்கவையுஞ்
சொல்லக் கேண்மின்.

1233. சாதரங்க நிறங்கமலங் கருநெய்தல் இரவியொளி
தழல்கச் சோதம்
மாதுளம்போ ததன்வித்துக் கார்விளக்குக்
கோபமென வகுத்த பத்தும்
மேதகைய குருவிந்த நிறங்குன்றி முயற்குருதி
வெள்ள லோத்தம்
போதுபலா சலர்திலகம் செவ்வரத்தம் விதார
மெரி பொன்போ லெட்டு.

1234. களிதருசௌ கந்திகத்தின் நிறமிலவம் போதுகுயிற்
கண்ண சோகம்
தளிரவிர்ரபொன் செம்பஞ்சி யைவண்ண மெனவாறு
தகுகோ வாங்க
வொளிகுரவு குசும்பைமலர் செங்கல்கொவ்
வைக்கனியென் றொருநான் கந்த
மிளிர்பதும ராகத்தைப் பொதுமையினாற் சோதிக்க
வேண்டு மெல்லை.

1235. திண்ணியதாய் மேல்கீழ்சூழ் பக்கமுற ஒளி விடுதல்
செய்தாற் செவ்வே
அண்ணியவுத் தமமுதன்மூன் றாமென்பர் சாதரங்க
மணிவோர் விச்சை
புண்ணியவான் கன்னியறு சுவையன்ன முதலான
புனித தானம்
பண்ணியதும் பரிமேத யாகமுதன் மகம்புரிந்த பயனுஞ்
சேர்வர்.

1232. பொதுவாக இவ்வொன்பது நிறங்களையுடைய மாணிக்கம் அந்தணர் முதல் நான்கு சாதிகள் அமைந்திருத்தல் போல் இதுவும் சாதரங்கம், குருவிந்தம், சௌகந்திகம், கோவாங்கம் என்னும் நான்கு வகைப்படும். இந்நான்கு வகைக்கும் நூலில் கூறியபடி ஒளி, பத்து, எட்டு, ஆறு, நான்கு ஆகும். அவற்றையும் சொல்ல, கேளுங்கள்.

1233. சாதரங்கத்தின் நிறம் தாமரை மலரும், கருநெய்தல் மலரும், சூரியன் ஒளியும், நெருப்பும், மின்மினியும், மாதுளை மலரும், மாதுள விதையும், மேகமும், தீபமும், இந்திர கோபமும் என்று பத்து வகையாகும். சிறந்த தன்மையுடைய குருவிந்தத்தின் நிறம் குன்றிமணியும், முயல் இரத்தமும், வெள்ள லோத்த மலரும், முள்முருக்க மலரும், மஞ்சாடி மலரும், செவ்வரத்த மலரும், முள் இலவ மலரும் விளங்கும் பொன் போன்ற தன்மையும் ஆகிய இவைகளைப் போல எட்டு வகையாகும்.

1234. மகிழ்வுண்டாக்கும் சௌகந்திகத்தின் நிறம் இலவமலர், குயிலின்கண், அசோகந்தளிர் பொன், செம்பஞ்சி, மருதோன்றி என்ற ஆறு வகையாகக் காணப்படும். தக்க கோவாங்கத்தின் ஒளி, குராமலரும், குசும்பை மலரும், செங்கல்லும், கொவ்வைக் கனியும் என்ற நான்கு வகையாகும். இத்தகைய சிறப்புடைய மாணிக்கத்தைப் பொதுவாக ஆராயத் தொடங்குவோம்:

மாணிக்கம் அணிவதால் ஏற்படும் பயன்

1235. திட்பமுடையதாய், மேலும் கீழும் சுற்றுப் பக்கமாகிய இவற்றில் ஒளி வீசினால் முறையே உத்தமம் முதலிய மூன்று வகைப்படும் என்று கூறுவர். சாதரங்கத்தினை அணிகின்றவர்கள் கல்வியும், பசுவும், கன்னியும், அறுசுவை உணவும், தானத்தின் பயனும், அசுவமேதயாகம் முதலிய வேள்விகளால் உண்டாகும் பயனும் ஆகிய இவற்றை அடைவார்கள்.

1236. குருவிந்தம் தரிப்பவர்பார் முழுதுமொரு குடை நிழலிற்
குளிப்ப வாண்டு
திருவிந்தை யுடனிருப்பர் சௌகந்தி கந்தரிப்போர்
செல்வங் கீர்த்தி
மருவிந்தப் பயனடைவர் கோவாங்கந் தரிப்போர்தம்
மனையிற் பாலும்
பெருவிந்த மெனச்சாலி முதற்பண்டம் உடன் செல்வப்
பெருக்கு முண்டாம்.

1237. எள்ளியிடு குற்றமெலாம் இகந்துகுணன்
ஏற்றொளிவிட் டிருள்கால் சீத்துத்
தள்ளியவிச் செம்பதும ராகமது புனைதக்கோர் தம்பால்
ஏனைத்
தெள்ளியமுத் துள்ளிட்ட பன்மணியும் வந்தோங்குஞ்
செய்யா ளோடும்
ஒள்ளியநற் செல்வ மதற் கொப்பநெடும் பாற்கடலி
னோங்கு மாலோ.

1238. பிறநிறச் சார்பு புள்ளி புள்ளடி பிறங்கு கீற்று
மறுவறு தராச மென்ன வகுத்தஐங் குற்றந் தள்ளி
அறைதரு பண்பு சான்ற வரதன மணியும் வேந்தன்
செறுநர்வா ளூற்றம் ஈன்றிச் செருமகட் கன்ப னாவான்.

1239. குறுநிலக் கிழவ னேனும் அவன்பெருங் குடைக்கீழ்த்
தங்கி
மறுகுநீர் ஞால மெல்லாம் வாழுமற் றவனைப் பாம்பு
தெறுவிலங் கலகை பூதஞ் சிறுதெய்வம் வறுமை
நோய்தீக்
கறுவுகொள் கூற்றச் சீற்றங் கலங்கிட வாதி யாவாம்.

1236. குருவிந்தம் அணிபவர் உலகம் முழுவதையும் தம்முடைய ஒரு குடை நிழலில் ஆள்வர். திருமகளோடும், வீரமகளோடும் கூடி இருப்பர். சௌகந்திகத்தினை அணிவோர் செல்வமும், புகழும் அதனால் பொருந்திய பயன்களும் அடைவர். கோவாங்கம் அணிபவர் வீட்டில் பாலும், விந்த மலையைப் போன்ற நெல் முதலிய பொருள்களின் பெருக்கத்தையும் அனுபவிப்பர்.

1237. குற்றம் நீக்கப்பட்டுச் சிறந்த குணமுடைய இருளை நீக்கி, அரிய ஒளியைக் கொடுக்கின்ற இச்சிவந்த பதுமராக மணியை அணிகின்றவர் தக்கவர்களிடத்தில் ஏனைய முத்து முதலிய பிற மணிகள் வந்து சேர்ந்து பெருகும். அதற்கு ஏற்ப இலட்சுமி விளங்கும் நல்ல செல்வமும் நெடிய பாற்கடலைப் போல வளரும்.

1238. விந்துவும், காக பாதமும், தாரையும், ஒளி சலித்தலும், அவற்றிற்குரிய நிறம் அன்றி வேறு நிறம் பொருந்தி இருத்தலும் ஆகிய இவ்வைந்து குற்றங்களும் இல்லாமல் அவற்றிற்குரிய குணம் நிறைந்து சிறந்த மணி களை அணிகின்ற வேந்தன் பகைவரது வாளினால் துன்பம் இன்றி வீரனாகக் காட்சி அளிப்பான்.

1239. இம்மணிகளை அணிபவன் குறுநில மன்ன னானாலும், அவனது பெரிய குடை நிழலின் கீழ், கடல் சூழ்ந்த உலகம் யாவும் வாழும், பாம்பும், விலங்கும், பேயும், பூதமும், சிறு தெய்வங்களும், மிடியும், நோயும், நெருப்பும், எமனின் கோபமும் கலக்கமடையும்படி அவனைத் துன்பம் செய்ய மாட்டா.

1240. முன்னவ ரென்ப கற்றோர் வச்சிர முந்நீர் முத்தம்
மன்னவர் என்ப துப்பு மாணிக்கம் வணிக ரென்ப
மின்னவிர் புருட ராகம் வயிடூர்யம் வெயிற்கோ மேதம்
பின்னவ ரென்ப நீல மரகதம் பெற்ற சாதி.

1241. பார்த்திபர் மதிக்கு முத்தம் பளிங்கன்றிப் பச்சை தானுஞ்
சாத்திகந் துகிர்மா ணிக்கங் கோமேதந் தாமே யன்றி
மாத்திகழ் புருட ராகம் வயிடூர்யம் வயிரந் தாமும்
ஏத்திரா சதமா நீலந் தாமதம் என்ப ராய்ந்தோர்.

1242. இனையவை யளந்து கண்டு மதிக்குநா ளெழுமான் பொற்றோர்
முனைவன் நாள் முதலா ஏழின் முறையினால் பதுமராகம்
கனைகதிர் முத்தம் துப்புக் காருடம் புருடராகம்
புனை ஒளி வயிரநீலம் என்மனார் புலமை சான்றோர்.

1243. வெய்யவன் கிழமை தானே மேதக மணிக்கு மாகும்
மையறு திங்க டானே வயிடூர்ய மணிக்கு மாகும்
ஐயற விவையொன் பானு மாய்பவ ரகம்பு றம்பு
துய்யரா யறவோ ராய்முன் சொன்னநா ளடைவே யாய்வர்.

மாணிக்கத்தின் சாதி

1240. கற்று வல்லோர், வகையோடு சாதி கூறும் போது வயிரத்தையும், கடலில் தோன்றிய முத்தையும் அந்தணர் என்பர். பவளத்தையும், மாணிக்கத்தையும் அரசர் என்பர். புருடராகத்தையும், வயிடூரியத்தையும், ஒளி பொருந்திய கோமேதகத்தையும் வணிகர் என்று கூறுவர். நீலத்தையும், மரகதத்தையும் சூத்திரர் என்பர்.

1241. அரசர்கள் மதிக்கின்ற முத்தும் பளிங்கும் இவை அல்லாமல் மரகதமும் சாத்துவிக குணமுடையனவாம். பவளமும், மாணிக்கமும், கோமேதகமும், புருடராகமும், வயிடூரியமும், வயிரமும் ஆகிய இவைகள் பலரும் போற்றும் இராசத குணம் உடையனவாகும். நீலமானது தாமத குணம் உடையதாகும் என்று நூல்களை ஆராய்ந்தோர் கூறுவர்.

1242. இம்மணிகளை ஆராய்ந்து பார்த்து மதிப்பிடும் நாட்கள், பொன்னாலாகிய தேரையுடைய சூரியனின் ஞாயிற்றுக்கிழமை முதலாக ஏழு கிழமைகளில் முறையே, பதுமராகமும், முத்தும், பவளமும், பச்சையும், புருடராக மும், வயிரமும், நீலமும் என்று அறிவின் மிக்க பெரியோர் கூறுவர்.

1243. ஞாயிற்றுக்கிழமையே கோமேதக மணிக்கு ஆகும். குற்றமற்ற திங்கள் கிழமையே வயிடூரிய மணிக்கு ஆகும். இவை ஒன்பான் மணிகளையும் குற்றமற ஆராய்பவர் உள்ளமும், புறமும் தூய்மை உடையவராய் அறநெறியில் ஒழுகுபவராய், முன் சொன்ன கிழமைகளில் முறையே ஆராய வேண்டும்.

1244. அல்லியம் பதுமஞ் சாதி யாத்தவா யாம்பல் கோடல்
வல்லிசேர் மௌவற் போது நூற்றிதழ் மரைகா லேயம்
மெல்லிதழ்க் கழுநீர் பேழ்வாய் வெள்ளைமந் தாரமின்ன
சொல்லிய முறையால் வண்டு சூழத்தன் முடிமேற் சூடி.

1245. தலத்தினைச் சுத்தி செய்து தவிசினை யிட்டுத் தூய
நலத்துகில் விரித்துத் தெய்வ மாணிக்க நடுவே வைத்துக்
குலத்தமுத் தாதி யெட்டுங் குணதிசை முதலெண் டிக்கும்
வலப்பட முறையே பானு மண்டல மாக வைத்து.

1246. அன்புறு பதும ராகம் ஆதியாம் அரத னங்கள்
ஒன்பதுங் கதிரோ னாதி யொன்பது கோளு மேற்றி
முன்புரை கமலப் போது முதலொன்பான் மலருஞ் சாத்தி
இன்புற நினைந்து பூசை இயன்முறை வழாது செய்தல்.

1247. தக்கமுத் திரண்டு வேறு தலசமே சலச மென்ன
இக்கதிர் முத்தந் தோன்றும் இடம்பதின் மூன்று சங்கம்
மைக்கரு முகில்வேய் பாம்பின் மத்தகம் பன்றிக்கோடு
மிக்கவெண் சாலி யிப்பி மீன்றலை வேழக் கன்னல்.

1248. கரிமருப் பைவாய் மான்கை கற்புடை மடவார் கண்டம்
இருசிறைக் கொக்கின் கண்ட மெனக்கடை கிடந்த மூன்றும்
அரியன ஆதிப் பத்து நிறங்களு மணங்குந் தங்கட்
குரியன நிறுத்தவாறே ஏனவும் உரைப்பக் கேண்மின்.

1244. அழகிய செந்தாமரை மலரும், சண்பக மலரும், சிவந்த வாயையுடைய ஆம்பல் மலரும், செங்காந்தள் மலரும், கொடியில் உள்ள மல்லிகை மலரும், வெண்டா மரை மலரும், மரமஞ்சள் மலரும், நெய்தல் மலரும், பிளந்த வாயையுடைய வெள்ளையான மந்தார மலரும் ஆகிய இம்மலர்களை முறைப்படி தலையில் சூடி,

1245. நிலத்தைத் தூய்மை செய்து, ஆசனத்தை இட்டு, அதன்மீது தூய்மையான வெள்ளாடையை விரித்து, தெய்வத்தன்மை பொருந்திய மாணிக்கத்தை இடையில் வைத்து, முத்து முதலிய பிற மணிகள் எட்டினையும் கிழக்குத் திக்குமுதல் எட்டுத் திக்குகளிலும் முறையே வலமாகச் சூரிய மண்டலம் போல் வைத்து,

1246. பதுமராகம் முதலிய ஒன்பது மணிகளின் மேல் ஞாயிறு முதலிய ஒன்பது கோள்களை ஸ்தாபித்து, தாமரை மலர் முதலிய ஒன்பது மலர்களைச் சாத்தி, இன்பம் மிக உண்டாக விதிமுறை தவறாமல் பூசனை செய்க.

2. முத்து

1247. குற்றமில்லாத முத்துக்கள் 'தலசம்' என்றும் 'சலசம்' என்றும் இரண்டு வகைப்படும். இம்முத்துக்கள் தோன்றும் இடங்கள் பதின்மூன்றாகும். சங்கு, மேகம், மூங்கில், பாம்பின் தலை, பன்றியின் கொம்பு, வெண்மையான நெற்கதிர், இப்பி, மீனின் தலை, வேழக்கரும்பு.

1248. யானையின் தந்தம், சிங்கத்தின் கை, கற்புடைய பெண்களின் கழுத்து, கொக்கின் கழுத்து எனப் பதின்மூன் றாகும். ஆயின் கடைசியில் கூறிய மூன்றும் கிடைப்ப தில்லை இனி முதலில் சொன்ன பத்து வகை முத்துக்களின் நிறமும், அவற்றிற்கு உரிய தெய்வங்களும் வரிசை முறையே சொல்கிறேன் கேளுங்கள்.

1249. மாடவெண் புறவின் முட்டை வடிவெனத் திரண்ட
பேழ்வாய்
கோடுகான் முத்தம் வெள்ளை நிறத்தன கொண்மூ
முத்தம்
நீடுசெம் பரிதி யன்ன நிறத்தது கிளைமுத் தாலிப்
பீடுசா னிறத்த ராவின் பெருமுத்தம் நீலத் தாமால்.

1250. ஏனமா வாரஞ் சோரி யீர்ஞ்சுவைச் சாலி முத்தம்
ஆனது பசுமைத்தாகும் பாதிரி அனைய தாகும்
மீனது தரளம் வேழ மிரண்டினும் விளையு முத்தந்
தானது பொன்னின் சோதி தெய்வதஞ் சாற்றக்
கேண்மின்.

1251. பான்முத்தம் வருணன் முத்தம் பகன்முத்தம் பகலோன்
முத்தம்
மான்முத்த நீல முத்த மாசறு குருதி முத்தம்
கான்முத்தம் பசிய முத்தங் காலன்றன் முத்தந் தேவர்
கோன்முத்தம் பொன்போன் முத்தம் குணங்களும்
பயனுஞ் சொல்வாம்.

1252. உடுத்திரள் அனைய காட்சி உருட்சிமா சின்மை
கையால்
எடுத்திடில் திண்மை பார்வைக் கின் புறல் புடித மென்ன
அடுத்திடு குணமா றின்ன வணியின்மூ தணங்கோ
டின்மை
விடுத்திடுந் திருவந் தெய்தும் விளைந்திடும் செல்வம்
வாழ்நாள்.

முத்தின் நிறம்

1249. மாடப்புறாவின் வெண்மையான முட்டை போன்ற வடிவினையுடைய திரட்சி வாய்ந்த பிளந்த வாயினையுடைய இப்பியும், சங்கும் ஈன்ற முத்துக்கள் வெள்ளை நிறத்தை உடையன. முகில் ஈன்ற முத்து மிக்க செந்நிறம் வாய்ந்த சூரியனைப் போன்ற நிறமுடையது. மூங்கில் ஈன்ற முத்து மழைக்கட்டி போன்ற நிறமுடையது. பாம்பு ஈன்ற பெரிய முத்து நீல நிறத்தினை யுடையது.

1250. பன்றிக் கொம்பின் முத்தானது குருதியின் நிறம் உடையது. வெண்நெல்லின் முத்து பசுமையான நிறமுடையது. மீன் தலையின் முத்து பாதிரி மலர் போன்ற நிறத்தினையுடையது. யானைக் கொம்பு, கரும்பு ஆகிய இவற்றில் உண்டாகின்ற முத்துக்கள் பொன்னிறமானவை. அம்முத்துக்களுக்குரிய தெய்வங்களையும் கூறுகின்றேன். கேளுங்கள்.

முத்திற்குரிய தெய்வங்கள்

1251. பால் போன்ற வெண்மையான முத்துக்கள் வருண பகவானுக்கு உரியவை. சூரியன் போன்று செந்நிறம் வாய்ந்தவை. சூரியனுக்குரியவை. நீல நிறமுடையவை. திருமாலுக்குரியவை. குருதி நிறத்தினையுடைய சிவந்த முத்துக்கள் வாயுபகவானுக்குரியவை. பசுமை நிறமுடையவை எமனுக்குரியவை. பொன்போல் நிறம் வாய்ந்தவை தேவேந்திரனுக்குரியவை. இனி அவற்றின் குணங்களையும் அணிவோர் அடையும் பயன்களையும் கூறுவேன்.

முத்தணிவோர் அடையும் பயன்

1252. நட்சத்திரக் கூட்டம் போன்ற தோற்றமும், திரட்சியும், குற்றமின்றித் திண்ணென்று இருக்கும் தன்மையும் பார்வைக்கு இன்பம் தருதலும், படிகம் போன்று தெளிந்துள்ள தன்மையும் ஆகிய ஆறு குணங்கள் இவற்றிற்குப் பொருந்தி வரும் குணங்களாகும். இம்முத்துக்களை அணிந்தவர்களின் வறுமை நீங்கும். திருமகள் வந்து சேர்வாள். செல்வமும் வாழ்நாளும் அதிகரிக்கும்.

1253. மாசறு தவத் தோன் என்பும் வலாசுர னென்பும் வீழ்ந்த
கோசல மாதி நாட்டிற் பட்டது குணத்தான் மாண்ட
தேசதா யிலேச தாகித் தெள்ளிதா அளக்கி. னெல்லை
வீசிய விலையதாகி மேம்படு வயிரந் தன்னை.

1254. குறுநிலத் தரசும் தாங்கிற் குறைவுதீர் செல்வ மேய்தி
உறுபகை யெறிந்து தங்கோன் முழுதுல கோச்சிக் காக்கும்
வறுமைநோய் விலங்கு சாரா வரைந்தநாள் அன்றிச் செல்லுங்
கறுவுகொள் கூற்றம் பூதம் கணங்களும் அணங்கு செய்யா.

1255. மாமணி மரபுக் கெல்லாம் வயிரமே முதன்மைச்சாதி
ஆமென வுரைப்பர் நூலோர் அதிகம்யா தென்னின் ஏனைக்
காமரு மணிகட் கெல்லாந் தமரிடு கருவி யாமந்
தூமணி தனக்குந் தானே துளையிடுங் கருவி யாகும்.

1256. மரகதத் தோற்றங் கேண்மின் வலாசுரன் பித்தந் தன்னை
இரைதமக் காகக் கௌவிப் பறந்தபுள் ளீர்ந்தண் டில்லித்
தரைதனிற் சிதற வீழ்ந்து தங்கிய தோற்ற மாகும்
உரைதரு தோற்றம் இன்னும் வேறுவே றுள்ள கேண்மின்.

3. வயிரம்

1253. குற்றமற்ற தவத்தினையுடைய ததீசி முனிவன் முதுகுத்தண்டு எலும்பும், வலாசூரன் எலும்பும், விழுந்த கோசலம் முதலிய நாட்டில் தோன்றி, குணத்தால் சிறந்த விளக்கமுடையதாய், இலேசாகவும், தெள்ளியதாகவும், வரையறுக்க முடியாத விலையுடையதாகவும் உள்ள சிறந்த வயிரத்தைப் பற்றிக் கூறுவேன்.

1254. இதனைக் குறுநில மன்னனும் அணியின், குறைவற்ற செல்வத்தை அடைந்து, பகைவரை அழித்து, தனது ஆணையை உலகம் முழுவதும் அளித்துக் காப்பான். வறுமையும், பிணியும், விலங்கின் துன்பமும் அவனை நெருங்காது. குறிப்பிடப்பட்ட நாள் அன்றி இடையில் வரும் எமனும், பூதங்களும், பேய்களும் துன்பம் செய்ய மாட்டா.

வயிரத்தின் உயர்வு

1255. பெருமையான மணிகளுக்கெல்லாம் வயிரமே முதன்மைச் சாதியாகும் என்று நூலோர் சொல்வார்கள். அம் முதன்மைத் தன்மை எதனால் என்றால், அந்தத் தூய்மையுடைய வயிரமணி மற்றைய மணிகள் அனைத்திற்கும் தொளையிடும் தன்மையாவதன்றித் தனக்குத்தானே தொளையிடும் தன்மையும் வாய்ந்ததாகும்.

4. மரகதம்

1256. மரகதத்தின் தோற்றத்தைக் கேளுங்கள். வலாசூரன் பித்தத்தை தனக்கு உணவாகக் கௌவிப் பறந்த கருடன், குளிர்ந்த தில்லி நகரில் பறந்தபோது கீழே சிந்திய வற்றின் தோற்றமாகும். அவ்வாறு சொல்லப்படும் தோற்றங்கள் இன்னும் வெவ்வேறு உள்ளன. அவற்றையும் கேளுங்கள்.

1257. விதித்தவே லனைய வாட்கண் வினதைமா தருணச்
செல்வன்
உதித்தவான் முட்டை யோட்டை யுவணவேற் றரையில்
யாப்பக்
கதிர்த்தவோ டரையிற் றப்பி வீழ்ந்தொரு கடல்சூழ்
வைப்பில்
உதித்தவர் றாகு மின்னும் உண்டொரு வகையால்
தோற்றம்.

1258. முள்ளரை முளரிக் கண்ணன் மோகினி அணங்கா
யோட
வள்ளரை மதியஞ் சூடி மந்தர வரை மட்டாகத்
துள்ளரி யேறு போலத் தொடர்ந்தொரு விளையாட்
டாலே
எள்ளரி தாய செந்தீ இந்தியக் கலினஞ் செய்தான்.

1259. அப்பொழு தமல வித்தில் அரிகர குமரன் கான
வைப்புரை தெய்வத் தோடும் வந்தன னந்தவிந்து
துப்புரு கருடன் கௌவிக் கடலினுந் துருக்க நாட்டும்
பப்புற விடுத்த வாறே பட்டது கலுழப் பச்சை.

வேறு

1260. காடமே சுப்பிரமே காளமெனக் குணமூன்றாங் கருடப்
பச்சைக்
கீடறுகி னிதழ்நிறத்த காடமது சாதியினால் இருவே
றாகுஞ்
சாடரிய சகுணமெனச் சதோடமென வவையிரண்டில்
சகுண மாறாம்
பீடுபெறு காடமொடு முல்லசிதம் பேசலம்பித் தகமே
முத்தம்.

1257. வேல் போன்ற ஒளி பொருந்திய கண்ணை உடைய வினதை என்னும் பெண், அருணன் உதித்த வெள்ளிய முட்டையின் ஓட்டினைக் கருடனது இடையில் கட்ட, அவ்வோடானது அதன் இடுப்பில் இருந்து தவறி விழுந்து கடல் சூழ்ந்த நிலத்தில் தோன்றிய விதமாகும். இன்னும் வேறு வகையினாலும் தோற்றம் உண்டு.

1258. முட்கள் உள்ள தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமால் மோகினிப் பெண் வடிவாகி ஓட, அழகிய பிறையை சடையில் சூடிய சிவபெருமான், ஒரு திருவிளையாட்டாக, மந்தர மலை அளவாக, துள்ளுகின்ற ஆண் சிங்கம் போன்று அம்மோகினியைப் பின் தொடர்ந்து சென்று குற்றமற்ற தூய சிவந்த தீயாகிய இந்திரியத்தைச் சிந்தினான்.

1259. அப்பொழுது தூய அவ்விந்தில், 'ஐயன்' என்பவன் காட்டில் உள்ள பரிவாரத் தெய்வங்களோடு வந்தான். அவ்விந்தினை வலிமையான கருடன் கௌவி, கடலிலும், தேவ லோகத்திலும் பரவ விடுத்த வழியே கருடப்பச்சை தோன்றியது.

மரகதத்தின் வகைகளும் நிறங்களும்

1260. கருடப்பச்சையென்னும் மரகதத்திற்கு காடம், சுப்பிரம், காளம் என்னும் மூவகைக் குணங்கள் உண்டு. பெருமையான அறுகின் இதழ் போன்ற 'காடமா'னது கெடுதல் இல்லாத 'சகுணம்' எனவும் 'கதோடம்' எனவும் இரண்டு சாதியாகும். அவ்விரண்டில் சகுணம் என்பது காடம், உல்லசிதம், பேசலம், பித்தகம், முத்தம் எனவும், (அடுத்த பாடலில் முடியும்)

1261. புல்லரிய பிதுகமென விவையாறிற் காடமது புல்லின் வண்ணம்
உல்லசித மெலிதாகும் பேசலமே குளச்செநெல்ஒண் தரளம் போலும்
அல்லடரும் பித்தகாம பசுங்கிளியின் சிறைநிறத்த தாகு முத்தங்
குல்லை லநிறம் பிதுகமரை இலையினிறஞ் சதோடத்தின் குணனைத் தாகும்.

1262. தோடலே சாஞ்சிதமே துட்டமே தோடமூர்ச் சிதமே வெய்ய
தோடலே சத்தினொடு சூழ்மந்த தோடமெனத் தொகுத்த ஐந்தில்
தோடலே சாஞ்சி தஞ்சம் பிரவிலையா மரலியிலை துட்ட நீலத்
தோடதாம் புல்லினிறந் தோடமூர்ச் சித முளரி தோட லேசம்.

1263. மந்ததோ டங்கலப மயிலிறகின் நிறமாமிவ் வகுத்த தோடஞ்
சிந்தவா னாதகுண மணியணிவோர் நாற்கருவிச் சேனை வாழ்நாள்
உந்தவாழ் வார்வலன்க ணீலமிரண் டரன்கண்டத் தொளிவிட்டு ஓங்கும்
இந்திரநீ லந்தான்மா நீலமென வேறிரண்டுண்டு இன்னு நீலம்.

1261. அடைதற்கரிய 'பிதுகம்' எனவும் ஆறு வகைப் படும். இந்த ஆறில் 'காடம்' புல்லைப் போன்று பச்சை நிறமாகும். உல்லசிதம் மென்மையானது. பேசலம், குள நீரால் விளையும் செந்நெல் பயிரில் தோன்றிய முத்து போல் பசிய நிறத்தினை உடையது. இருள் ஓட்டும் பித்தகம் பச்சைக்கிளியின் நிறமுடையது. முத்தம் துளசியின் நிறமுடையது. பிதுகம் தாமைர இலையின் நிறமுடையது. இனி சதோடத்தின் குணங்களைக் காண்போம்.

1262. சதோடம் என்பது தோடலோசாஞ்சிதம், துட்டம், தோட மூர்ச்சிதம், தோடலேசம், மந்ததோடம் என்னும் ஐந்து வகைப்படும். இவ்வாறு சொல்லப்பட்ட சதோடம் ஐந்தினுள் தோடலேஞ்சிதம் எலுமிச்சை இலையின் நிறத்தினையுடையதாகும். துட்டம் அலரி இலை யின் நிறத்தினையும், கருங்கு வளையின் நிறத்தையும் உடையது ஆகும். தோட மூர்ச்சிதம் 'புல்'லின் நிறமுடையது. தோடலேசம் தாமரை இலையின் நிறமுடையது.

1263. மந்ததோடம், கலாபத்தையுடைய மயிலின் நிறமாகும். இங்குச் சொல்லப்பட்ட குற்றமற்ற இம்மணி களை அணிகின்றவர், நான்கு வித சேனைகளோடு நீண்ட ஆயுள் கொண்டு வாழ்வார்கள். வலனுடைய இரு கண்களாகிய 'நீலம்' இரண்டு உண்டு. இந்நீலம், சிவபெருமான் திருமிடற்றைப் போல் ஒளிவிடும் இந்திர நீலம் எனவும் மா நீலம் எனவும் இரண்டு வகைப்படும்.

1264. இந் திரநீலம் விச்சுவரு பனைமகவான் முடித்த
நாளின்
நந்தியடு பழிதவிர்ப்பான் புரியுமகப் பரிமகத்தி னறிய
தூமம்
முந்தியரும் பரியிமையா நாட்ட நுழைத் தளிசேற்றின்
ஒழுகும் பீளை
சிந்தியவாற் றிடைப்படுமொன் றிந்திரவில் நீலமெனத்
திகழு நீலம்.

1265. சஞ்சையாம் பகற்கடவுள் மனைவியவன் கனலுடலந்
தழுவ லாற்றாது
அஞ்சுவா டன்னிழலைத் தன்னுருவா நிறுவிவன
மடைந்து நோற்க
விஞ்சையா லறிந்திரவி பின்றொடர மாப்பரியா
மின்னைத் தானுஞ்
செஞ்செவே வயப்பரியாய் மையல்பொறா திந்தியத்தைச்
சிந்தி னானே.

1266. அவைசிதறும் புலந்தோன்று நீலமா நீலமிவை
யணிவோர் வானோர்
நவையறுசீர் மானவரிந் நகைநீலஞ் சாதியி னால்வே
றந்தக்
கவலரிய வெள்ளைசிவப் பெரிபொன்மை கலந்திருக்
கிற் கரிதாய் முற்றும்
தவலரிதாய் இருக்கிலிரு பிறப்பாளர் முதன் முதனாற்
சாதிக் காகும்.

1267. இலங்கொளிய இந்நீல மெய்ப்படுப்போர் மங்கலஞ்
சேர்ந் திருப்பார் ஏனை
அலங்குகதிர் நீலத்திற் பெருவிலையா யிரப்பத்தி
னளவைத் தாகித்
துலங்குவதான் பாற்கடத்தி னூறுகுணச் சிறப் படைந்து
தோற்றுஞ் சோதி
கலங்குகட லுடைவைப்பி லரிதிந்த விந்திரன்பேர்க் கரிய
நீலம்.

5 நீலம்

1264. முதலில் சொல்லப்பட்ட இந்திர நீலமானது விச்சுவ ரூபனை இந்திரன் கொன்றபோது ஏற்பட்ட பழியினை நீக்கும் பொருட்டுச் செய்த அசுவமேத யாகத்தில் எழுந்த நறுமணம் உடைய புகையானது ஓங்கி, அரிய குதிரையின் இமையாத கண்ணுள் நுழைதலால், இளகிய சேற்றைப் போல ஒழுகிய பீளையானது சிதறிய இடத்தினின்றும் தோன்றும். இது இந்திரவில்லில் தோன்றிய நீல நிறம் போல் காட்சியளிக்கும்.

1265. சஞ்சை என்னும், சூரியனுடைய மனைவியானவள், அவனுடைய தழல் வடிவத்தைத் தழுவ அஞ்சி, தனது உடல் நிழலைத் தனது வடிவமாக்கி, காட்டிற்குச் சென்று தவம் செய்தாள். இதனை ஞானத்தால் உணர்ந்த சூரியன் பின் தொடர்ந்து சென்றான். அவள் பெண் குதிரையாகி ஓடத் தொடங்கவே சூரியனும் ஆண் குதிரையாக மாறிப் பின் தொடர்ந்தான். காமம் அதிகரிக்கவே அதைத் தாங்க முடியாது இந்திரியத்தைச் சிந்தினான்.

1266. அவ்விந்திரியங்கள் சிந்திய இடங்களில் தோன்றும் நீலம் மா நீலம் ஆகும். இம்மணிகளை அணிபவர் தேவர்களும் மக்களும் ஆவர். இவ்வொளி மிக்க மா நீலம் நான்கு வகையான சாதியினை உடையதாகும். வெண்மையும், சிவப்பும், பொன்னிறமும் கலந்திருப்பினும், கருமையுடையதாய் கெடுதல் இல்லாமல் இருப்பினும் அந்தணர் முதல் நான்கு சாதிகட்கும் அவை உரியதாகும்.

1267. ஒளியினையுடைய இந் நீலமணிகளை அணிகின்றவர் எல்லா நலங்களையும் அடைவர். மற்றைய சிறப்புடைய எல்லா மா நீலத்தினும் பதினாயிரம் மடங்காகிய பெரிய விலையை உடையதாகி விளங்குகின்ற இந்த இந்திர நீலம் பசுவின் பால் நிறைந்த குடத்தில் இட்டால், அதன் தோற்றத்தை மாற்றி நூறு மடங்கு தன் குணம் மேலோங்கச் செய்யும். இது கடல் சூழ்ந்த இந்நிலவுலகில் கிடைப்பது அரிது.

1268. மைந்துறுசெம் மணிமுத்து வாள்வயிரம் பச்சை யொளி
வழங்கும் நீலம்
ஐந்திவைமேற் கோமேத முதற்பவளம் ஈறாக அறைந்த
நான்கும்
நந்தொளிய வேனுமவை சிறுவேட்கை பயப்ப அழல்
நகுசெங் குஞ்சி
வெந்தறுகண் வலனிணங்கன் சிதறுமிடைப் படுவனகோ
மேத மென்ப.

1269. உருக்குநறு நெய்த்துளிதேன் துளிநல்லான் புண்ணியநீ
ரொத்துச் சேந்து
செருக்குபசும் பொன்னிறமும் பெற்றுமெலி தாய்த்தூய்த்
திண்ணி தாகி
இருக்குமது தரிக்கினிருட் பாவம்போம் பரிசுத்தி
எய்தும் வென்றித்
தருக்குவலன் கபம்விழுந்த விடைப்புருட ராகமொளி
தழையத் தோன்றும்.

1270. தாழ்ந்தபிலத் திழிந்தெரிபொற் கண்ணவுணன்
உயிர்குடிக்குந் தறுகட்பன்றி
போழ்ந்தமுழை வாய்திறந்து திசைசெவிடு படநகைத்துப்
பொன்போற் கக்கி
வீழ்ந்தகபம் படுதீவிற் படுமுச்சி வட்டமாய் மெலிதாய்ப்
பொன்போற்
சூழ்ந்தொளிவிட்டவிர் தழல்போல் தெளிவெய்தி
மனங்கவர்ந்து தோற்றஞ் செய்யும்.

1268. வண்மை மிக்க மாணிக்கமும், முத்தும், ஒளி பொருந்திய வயிரமும், மரகதமும் ஒளியைக் கொடுக்கும். நீலமும் ஆகிய இவ்வைந்தின் மேல் கோமேதகம் முதல் பவளம் வரை சொல்லப்பட்ட நான்கு மணிகளும் மிக்க ஒளியினை உடையவேனும், அவை சிறிய விலையுள்ளன. நெருப்பு போன்ற சிவந்த சிகையையும், கொடிய அஞ்சாத் தன்மையுமுடைய வலனுடைய நிணங்கள் சிந்திய இடத்தில் தோன்றிய கோமேதகங்கள் மிக்க விலையுடையவை.

6. கோமேதகம்

1269. நெய்யின் துளியும், தேனின் துளியும், பசுவின் கோசலமும் ஆகிய இவற்றை ஒத்துச் சிவந்த, உயர்ந்த பசிய பொன்னிறத்தையும் பெற்று, மெல்லியதாய், தூயதாய், திண்ணியதாகி, இருக்கின்ற கோமேதகத்தை அணிந்தால் கருமையாகிய பாவம் நீங்கும். புனிதம் வந்து சேரும். வெற்றிச் செருக்கினையுடைய வலனது கபம் விழுந்த இடத்தினின்று புருடராக மணி தோன்றும்.

7. புருடராகம்

1270. ஆழ்ந்த பாதாளத்தில் சென்று ஒளிந்த இரணியாக்கன் என்னும் அசுரனது உயிரைக் கொன்ற பன்றி, தனது பிளந்த குகை போன்ற வாயினைத் திறந்து, பொன்னைப்போல் சிதறி விழுந்த கபம் பொருந்திய தீவிலும் உண்டாகும். உச்சியில் வட்ட வடிவமாய் மென்மையுடையதாகி, தீப்போல் சுற்றிலும் ஒளி வீசித் தெளிவோடு கண்டவர் மனத்தைக் கவரும் தன்மையுடையது.

1271. இந்தமணி பாரியாத் திரகிரியிற் கொடுமுடியா
இலங்குந் தெய்வ
மந்தரமால் வரைப்புறஞ்சூழ் மேகலையா மயனிந்த
மணியி னாலே
அந்தரநா டவனகரும் அரசிருப்பு மண்டபமும்
அமைத்தான் இந்தச்
சந்தமணி தரிப்பவரே தரியார்வெந் நிடவாகை தரிக்க
வல்லார்.

1272. வலன்மயிராம் வயிடூர்யம் இளாவிருத கண்டத்தில் வந்து
தோன்றிப்
பலர்புகழுங் கோரக்க மகதம்சிங் களமலயம் பார சீகம்
இலகுதிரி கூடாதி தேயங்கள் பிறதீப மெங்குந்
தோற்றும்
அலைகடலும் படுமிறுதிக் காரிடிக்கும் போதுநிற
மதற்கியா தென்னில்.

1273. கழையிலைகார் மயிலெருத்தம் வெருகின்கண்
நிறத்ததாய்க் கனத்த தாகி
விழைவுதரு தெளிதாகித் திண்ணிதாய் மெலிதாகி
விளங்கு மீதில்
அழகுபெற வலமிடமேல் கீழொளிவிட் டனமுறையே
அறவோர் ஆதித்
தழைவுறுநாற் சாதிகளாந் தினமிதனைப் பூசித்துத்
தரிக்க சான்றோர்.

1271. இந்த மணியானது பாரியாத்திர மலையின் சிகரமாய் விளங்கும். தெய்வத்தன்மையுடைய மந்தர மலையின் புறத்தில் சூழ்ந்த மேகலையாகவும் விளங்கும். தெய்வத் தச்சன் இந்த மணியினாலே தேவேந்திரன் நகரத்தையும், அவன் அரசு வீற்றிருக்கும் மண்டபத்தையும் உண்டாக்கினான். இந்த அழகிய புருடராக மணியை அணிபவரே பகைவரைப் புறம்கண்டு வெற்றிமாலை சூடுபவராவர்.

8. வயிடூரியம்

1272. வலன் மயிராகிய வயிடூரியமானது, இளாவிருத கண்டத்தில் தோன்றி, பலர் புகழும் கோரக்கம், மகதம், சிங்களம், மலயம், பாரசீகம், திரிகூடம் முதலிய தேசங்களிலும் பிற தீவுகளிலும் தோன்றும். அலைகின்ற கடலில் ஊழிக்காலத்தில் மேகம் இடிக்கும்போதும் தோன்றும். அம்மணிக்குரிய ஒளியைச் சொல்கின்றேன்.

1273. மூங்கில் இலையும், மயிலின் கழுத்தும், பூனையின் கண்ணுமாகிய இவற்றின் நிறத்தை உடையதாய் மென்மையுடையதாய் இருக்கும். கனமுடையதாய், தெளிவுடையதாய் திண்மையுடையதாய் மென்மையாக விளங்கும், இம்மணி வலத்தினும் இடத்தினும் மேலும் கீழும் வீசுகின்ற ஒளியை உடையது. இவை முறையே அந்தணர் முதலாக நான்கு வருணத்தார்க்கும் உரிய சாதியை உடையனவாம். அறிவுடைய சான்றோர் நாளும் இம்மணியைப் பூசித்து அணிவார்கள்.

1274. வலத்தவுணன் தசைவீழ்ந்த வழிபடுதுப் பயன்சந்தி
வடிவ மாத்தென்
புலத்தவரை விதிக்குமிடத் தவனுடல்மா சிழிபுலத்தும்
புயல்போல் வண்ணன்
வலத்தமது கைடவரைக் குறை குருதி வழிநிலத்தும்
மகவான் வெற்பின்.
குலத்தையிற கரிசோரி சிதறிடத்தும் வந்துகுடி
கொண்டு தோன்றும்.

1275. அவ்வழியிற் படுபவள முருக்கம்பூப் பசுங்கிளிமூக்
கலர்ந்த செவ்விச்
செவ்வரத்த மலர்கொவ்வைக் கனிபோலுங்
குணங்குற்றந் திருகிக் கோடல்
எவ்வமுறப் புழுவரித்தன் முகமொடிதல் பெரும்பாலும்
இப்பூ ணேந்தல்
பெய்வளையார் தமக்கேயாம் தரிக்கின்மகப் பேறுமுதற்
பேறுண் டாகும்.

1276. இரவியெதிர் எரியிறைக்குங் கல்லுமதி யெதிர்செழுநீ
ரிறைக்குங் கல்லும்
உரையிடு மொன் பதிலொன்றி லுட்கிடையாய்க்
கிடக்குமென வொன்பான்வேறு
மரபுரைத்து வணிகரே றாகியவா னவரேறு வடபால்
நோக்கிப்
பரவியிருந் தருச்சித்து மணிகைக்கொண் டெதிர்
மதுரைப் பரனை நோக்கா.

9. பவளம்

1274. 'வலன்' என்னும் அவுணன் தசை விழுந்த இடத்தில் தோன்றிய பவளம், பிரமன் சந்திக்கால வடிவ மாக இருந்து தென்புலத்தவரைப் படைக்கும்பொழுது அவன் உடலின் அழுக்கு வீழ்ந்த இடத்திலும், முகில் போன்ற நிறமுடைய திருமால் வலிமையுடைய "மது" "கைடவன்" என்னும் இருவரைக் கொன்றபோது ஒழுகிய குருதியுள்ள இடத்திலும், இந்திரன் மலையின் சிறகு அரிந்த போது ஒழுகிய குருதி சிதறிய இடத்திலும் வந்து விளங்கும்.

1275. அவ்விடங்களில் தோன்றிய பவளத்தின் நிறமானது, முருக்க மலரையும், கிளியின் மூக்கையும், செவ்வரத்த மலரையும், கொவ்வைக் கனியையும் ஒக்கும். திருகிக் கோணுதல், புழு அரித்தல், முகம் வடிதல் ஆகியவை அதற்குரிய குற்றங்களாகும். அப்பவளங்களைப் பெரும் பாலும் வளையல் அணியும் பெண்களே தரித்துக்கொள்வர். பெண்கள் அணிவதால் மகட்பேறு முதலிய நன்மைகள் உண்டாகும்.

1276. சூரியன் முன் தீயை உமிழும் சூரிய காந்தக் கல்லும், சந்திரன் முன் குளிர்ந்த நீரைச் சிந்தும் சந்திர காந்தக் கல்லும், முன் கூறிய ஒன்பான் மணிகளில் அடங்கும்" என்று நவமணிகளின் வெவ்வேறாகிய தன்மைகளை, வணிகராக வந்த இறைவர் கூறினார். அவர் வடக்குப் பக்கமாகப் பார்த்துத் துதித்து, மணிகளைக் கையில் எடுத்து மதுரைச் சொக்கலிங்க மூர்த்தியை எதிரே பார்த்தார்.

1277. அஞ்சலிசெய் தகநோக்கால் இக்குமரற்கு அளவிறந்த
ஆயுள் செல்வம்
விஞ்சுகவென் றளித்தருள இறைமகனும் விண்ணிழிந்த
விமான நோக்கிச்
செஞ்சரணம் பணிந்திருகைத் தாமரையும்
விரித்தேற்றான் செல்வ நாய்கர்
மஞ்சனையும் புடைநின்ற அமைச்சரையு நோக்கிமுக
மலர்ந்து சொல்வார்.

1278. இம்மணியால் இழைத்துநவ முடிசூட்டி யிச்சிங்க
விளவே றன்ன
செம்மல்தனை யபிடேக பாண்டியனென் றியம்பு
மெனச் செம்பொன் றூக்கிக்
கைம்மறியில் வணிகருக்கு விலைகொடுப்பான்
வருவார்முன் கருணை நாட்டம்
அம்மகன்மே னிரப்பியிள நகையரும்பி நின்றாரை
யங்குக் காணார்.

1279. ஒருருவாய் தேர்நின்ற வணிகேசர் விடையின்மேல்
உமையா ளோடும்
ஈருருவாய் முக்கண்ணு நாற்கரமு மஞ்சமா றிறவா
வாறு
காருருவா யெழுமிடறுங் காட்டித்தம் கோயில்புகக்
கண்டா ரின்று
பாருருவாய் நின்றவணி கேசரிவ ரெனவேபின்
பற்றிப் போவார்.

1277. அவரை வணங்க, திருவுளக் குறிப்போடு அரசிளங் குமரனுக்கு நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும், பெருகுக என்று சொல்லிக் கொடுத்தருளினார். அரச குமாரனும் வானுலகில் இருந்து இறங்கிய விமானம் பார்த்து சொக்கலிங்க மூர்த்தியின் சிவந்த திருவடிகளை வணங்கித் தாமரை மலர் போன்ற இரண்டு கைகளையும் நீட்டி வாங்கினான். அப்போது செல்வத்தையுடைய வணிகராகிய இறைவர், அப்புதல்வனையும் அருகில் இருந்த மந்திரிகளையும் நோக்கி முகமலர்ச்சியுடன் கூறினார்.

அபிடேக பாண்டியர்

1278. "இந்த மணிகளைக் கொண்டு புதிய மகுடம் செய்து சூட்டி, இளமையான ஆண் சிங்கம் போன்ற இவனை 'அபிடேக பாண்டியன்' என்று பெயரிட்டழையும் என்று சொன்னார். செம்பொன்னை எடுத்து வணிகருக்கு விலை கொடுப்பதற்கு வந்த அமைச்சர்கள் முன்பு, அவ்வரசிளம் குமரன் மேல் அருள் செலுத்தி, புன்னகையோடு நின்ற வணிகரை அவ்விடம் காணாதவராயினர்.

1279. ஓர் உருவாகி நேரே தோன்றிய வணிகர் இப்போது இடபவூர்தியில் உமாதேவியாரோடு இரண்டு உருவமாய், மூன்று கண்களையும், நான்கு கைகளையும், அஞ்சி இறவாத வண்ணம், திருமிடற்றினையும், தோன்றச் செய்து தமது திருக்கோயிலினுள் புகுதலைக் கண்டவர்கள், இன்று உலகில் வணிகர் தலைவராய் வந்தவர் இவரே என்று அறிந்து பின் தொடர்ந்து சென்றனர்.

1280. தேன்செய்த கொன்றைநெடுஞ் சடையார்முன்
தாழ்ந்தெழுந்து செங்கைகூப்பி
யான்செய்யுங் கைம்மாறாய் எம்பிராற் கொன்றுண்டோ
யானு மென்னது
ஊன்செயுட லும்பொருளு முயிருமெனி னவையாவும்
உனவே யையா
வான்செய்யு நன்றிக்கு வையகத்தோர் செய்யுங்கைம்
மாறுண் டேயோ.

1281. என்னாமுன் வழுத்தலுறும் விறன்மாறன்
கோக்கொழுந்தை இகல்வேல் விந்தை
மன்னாகு மிவற்குமன வாக்கிறந்த பூரணமா
மதுரை நாதன்
பொன்னாரு மணிமகுடஞ் சூடமணி நல்குதலாற்
புவிய நேகம்
பன்னாளு முறைபுரியத் தக்கதென வாழ்த்தினார்
பல்சான் றோரும்.

1282. ஏத்திவலங் கொண்டிருநான் கிபந்தழுவப் பெற்றோங்கி
யிருக்கும் அட்ட
மூர்த்திவிடை யருள்பெற்று மூவாநன் மலையாசி
முனிவர் கூறப்
பார்த்திவன்றன் பொலன்மாட மனைபுகுந்தான்
இறைமணிப்பண் பாயுங் கேள்விச்
சாத்திரரு மந்திரரு மணிநோக்கி வியப்படைந்தார்
சங்கை கூர்ந்தார்.

வேறு

1283. வேளென வந்த நாய்கர் சுந்தர விடங்க ரானால்
நாள்களுங் கோளும் பற்றி நவமணி யாக்கினரோ
தாள்களுந் தோளு மார்புந் தரித்தநீ ணாகம் ஈன்ற
வாள்விடு மணியோ வீந்தார் யாதென மதிக்கற்
பாலேம்.

அரச குமாரர் இறைவனை வணங்குதல்

1280. தேன் பொருந்திய கொன்றை மாலை அணிந்த நீண்ட சடையை உடைய சொக்கலிங்கக் கடவுளின் திருவடி முன், விழுந்து வணங்கி எழுந்து, கைகளைத் தலை மேல் குவித்து, "எம்பெருமானாகிய தங்களுக்கு என்னால் செய்யப்படும் எதிருதவி ஏதேனும் உண்டோ? நானும் என்னுடைய தசையமைந்த உடலும், பொருளும், உயிரும் உன்னுடையதே. மேகம் செய்கின்ற உதவிக்கு உலக மக்கள் செய்கின்ற கைம்மாறு உண்டோ? இல்லை அல்லவா?"

1281. என்று இவ்வாறு சொல்லி வணங்கும் வீர பாண்டியனின் புதல்வனை, பல அறிவு நிறைந்த பெரியோரும், "வீரமகளின் தலைவனாகிய இவ்வழுதிக்கு, மனம் வாக்கு இவை கடந்த முழுநாயகனாகிய சொக்கலிங்கப் பெருமான் அழகு பொருந்திய மணிமுடியினைச் சூடுவதற்கு மணிகளை அளித்தருளினமையால் உலகம் முழுவதும் எக்காலமும் ஆட்சி செய்வான்," என்று வாழ்த்தினார்கள்.

1282. அரசகுமாரன் துதித்து வலம் வந்து, அட்ட மூர்த்தியாகிய சொக்கலிங்கப் பெருமானின் அருள் விடை பெற்று, மறைகளை உணர்ந்த அந்தணர்கள் வாழ்த்துக் கூற, தன்னுடைய பொன்னால் அமைந்த அரண்மனை சென்றடைந்தான். இலக்கணம் நிறைந்த மணிகளின் குணங்களை ஆராயும் வல்லுநரும், அமைச்சரும் அம்மணிகளைப் பார்த்து வியப்படைந்தனர்.

1283. "முருகனைப் போல் அழகுடைய தோற்றத் துடன் வந்த வணிகர் சோமசுந்தரக் கடவுளானால், அவர் நாண் மீன்களையும், கோள்களையும் பிடித்து நவமணி களாகச் செய்து கொடுத்தாரோ! அல்லது திருவடிகளிலும், திருத்தோள்களிலும் மார்பிலும் அணிந்த நீண்ட பாம்புகள் கக்கிய மணிகளைத் தந்து அருளினாரோ? யாது என்றும் அறிய முடியவில்லையே?" என்று கூறி ஐயமடைந்தனர்,

1284. இந்திரக் கடவுள் நாட்டும் இம்மணி அரிய வென்னா
மந்திரக் கிழவர் நல்கி மயனினு மாண்ட கேள்வித்
தந்திரக் கனகக் கொல்லர்க் குவப்பன ததும்ப வீசிச்
செந்திரு மார்பி னாற்குத் திருமணி மகுடஞ் செய்தார்.

1285. மங்கல மரபால் மாலை மணிமுடி சூட்டி நாமஞ்
செங்கணே றுயர்த்த நாய்கர் செப்பிய முறையால் வேத
புங்கவர் இசைப்ப வீதி வலஞ்செய்து புனிதன்பாத
பங்கய மிறைஞ்சி வேந்தன் பன்மணிக் கோயி லெய்தா.

1286. போர்மகட் குறையு ளான புயத்தபி டேகத் தென்னன்
தேர்முதல் கருவித் தானைத் தெவ்வர்நீண் முடியெ
லாந்தன்
வார்கழற் கமலஞ் சூட மனுமுறை பைங்கூழ் காக்குங்
காரெனக் கருணை பெய்து வையகங் காக்கு நாளில்.

வேறு

1287. தந்தைதன் காமக் கிழத்தியர் ஈன்ற தனயராய்த்
தனக்குமுன் னவராய்
முந்தைநா ளரசன் பொன்னறை முரித்து
முடிமுதற் பொருள்கவர்ந்து உட்குஞ்
சிந்தைய ராகி மறுபுலத் தொளித்த தெவ்வரைச்
சிலர்கொடு விடுப்ப
வந்தவர் கவர்ந்த தனமெலா மீள வாங்கினா
னீர்ங்கதிர் மருமான்.

மாணிக்கம் விற்ற படலம் முற்றிற்று.

அரசிளங் குமாரனுக்கு முடிசூட்டல்

1284. இந்திரன் உலகத்திலும், இம்மணிகள் கிடைக்காது என்று வியப்படைந்த அமைச்சர், மயனை விடச் சிறந்த சிற்ப நூலில் வல்ல பொற்கொல்லர்க்கு, அவர் மகிழும்படி பரிசுகள் அளித்துச் சிவந்த திருமகள் தங்கும் மார்பினை உடைய அரச குமாரனுக்கு உரிய தெய்வத் தன்மை பொருந்திய மணிகள் பதிக்கப்பட்ட முடியினைச் செய்வித்தனர்.

1285. மங்கலமுறையோடு மாலை மணிமுடி சூட்டி, வணிகர் கூறிய முறைப்படி, மறைகளை உணர்ந்த அந்தணர், "அபிடேக பாண்டியர்" என்னும் பெயர் கூறினார். அவ்வரசன் வீதி வலம் வந்து, தூயனாகிய சோமசுந்தரப் பெருமானின் பாதங்களில் வணங்கி அரண்மனை அடைந்தான்.

1286. போருக்குரிய வீரமகளுக்கு இருப்பிடமாகிய தோளையுடைய அபிடேக பாண்டியன், பகைவருடைய நீண்ட முடிகள் அனைத்தும், தன் வீரக் கண்டையை அணிந்த அடியாகிய தாமரை மலரைச் சூட மனுநூல் வழியே பயிரைக் காக்கும் மேகம் போலக் கருணை சொரிந்து உலகைக் காத்து வந்தான்.

1287. தன் தந்தையின் காமக் கிழத்தியர் பெற்ற புதல்வராய், தனக்கு மூத்தவர்களாய், முன்னொரு நாளில் மன்னனது கருவூலத்தின் தாழ் முரித்து, முடி முதலிய பொருள்களைக் கவர்ந்து அஞ்சிய நெஞ்சுடன் வேற்றூரில் புகுந்து மறைந்தவரைச் சிலர் பிடித்துக் கொண்டு வந்து விட்டனர். வந்தவர்கள் கவர்ந்து சென்ற பொருள்கள் அனைத்தையும் திரும்பவும், திங்களின் மரபில் வந்த அபிடேகப் பாண்டியன் வாங்கிக் கொண்டான்.

மாணிக்கம் விற்ற படலம் முற்றிற்று

18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

1288. காழ்கெழு கண்டத் தண்ணல் கௌரியன் மகுடஞ் சூட
வீழ்கதிர் மணிகள் ஈந்த வியப்பிது விடையோன் சென்னி
வாழ்கரு முகிலைப் போக்கி மதுரைமேல் வருணன் விட்ட
ஆழ்கடல் வறப்பக் கண்ட ஆடலைப் பாடல் செய்வாம்.

1289. சித்திரை மதியிற் சேர்ந்த சித்திரை நாளில் தென்னன்
மைத்திரள் மிடற்று வெள்ளி மன்றுளாற் களவு மாண்ட
பத்திமை விதியிற் பண்டம் பற்பல சிறப்ப நல்கிப்
புத்தியும் வீடு நல்கும் பூசனை நடத்தல் உற்றான்.

1290. நறியநெய் யாதி ஆர நறுங்குழம்பு ஈறா வாட்டி
வெறியகர்ப் புரநீ ராட்டி யற்புத வெள்ளம் பொங்க
இறைவனை வியந்து நோக்கி யேத்துவா னெறிநீர் வைகைத்
துறைவநீ யென்கர்ப் பூர சுந்தர னேயோ வென்றான்.

1291. பூசனை புரியும் எல்லைப் பொன்னகர்ப் கிறைமை பூண்ட
வாசவன் வருடந் தோறும் பூசித்து வருவா னன்ன
காசறு மனத்தான் பூசை கழிவுறு மளவுந் தாழ்த்துத்
தேசமை சிறப்பார் பூசை செய்துதன் னாடு புக்கான்.

18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

1288. கருமையான திருமிடற்றினை உடைய சோம சுந்தரப் பெருமான், பாண்டியன் முடிசூட நவமணிகளை அளித்தருளிய திருவிளையாடல் இது. இனி அப்பெருமான் தம் திருமுடியில் சூடிய கரிய முகில்களை விடுத்து மதுரை யின் மேல் வருணன் ஏவிய ஆழந்த கடலானது வற்றுமாறு செய்தருளிய திருவிளையாடலைப் பாடுவோம்.

1289. அபிடேக பாண்டியன் சித்திரை மாதம் சித்திரை நாளில், கருமையான திருமிடற்றினையுடைய வெள்ளியம் பலவாணனுக்கு, அளவற்ற அன்பினால் ஆகம நெறிப்படி, பூசைப் பொருள்கள் பலவற்றைச் சிறக்க அளித்து போகத்தையும், வீடு பேற்றையும் அளிக்கும் பூசையை நடத்தத் தொடங்கினான்.

1290. நறுமணம் உடைய நெய்முதல், சந்தனம், ஈறாக உள்ள எல்லாப் பொருள்களாலும் அபிடேகம் செய்து, வாசனையுடைய கர்ப்பூர நீரினால் ஆட்டி, அன்பின் பெருக்கோடு சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்துத் துதிப்பவன். "அலை வீசும் வையை ஆற்றின் நீர்த்துறையை உடைய பெருமானே! நீ என் கர்ப்பூர சுந்தரனோ?" என்று துதித்தான்.

1291. இவ்வாறு பூசை செய்யும் பொழுது, ஆண்டு தோறும் சித்திரை மாதம் சித்திரை நாளில் பூசித்து வருபவ னாகிய பொன்னுலகத்திற்குத் தலைவனாகிய இந்திரன், அக்குற்றமற்ற பாண்டியனது, பூசை முடியும் வரை தாமதித்து, பின் சிறப்பான பூசையைச் செய்து முடித்து தன் நாட்டிற்குச் சென்றான்.

1292. அன்றுநீர்க் கடவுள் வேள்வி நாயகன் அவையத் தெய்தி
நின்றவன் தன்னோய் தீருஞ் செவ்வியி னிகழ்ச்சி தோன்றக்
குன்றவன் சிறக ரீர்ந்த கொற்றவன் முகத்தை நோக்கி
இன்றுநீ சிறிது தேம்பி இருத்தியால் இதென்கொ லென்றான்.

1293. சிலைப்படு முகிலூர் அண்ணல் செப்புவா னிருடீ ரன்பின்
வலைப்படு பெருமா னெம்மான் மதுரையெம் பிரானை யன்பு
தலைப்படு பூசை செய்யத் தாழ்த்தநின் றதனா லிப்போது
அலைப்படச் சிறிதெ னுள்ள மாகுல மடைந்த துண்டால்.

1294. என்னவன் விலிங்கந் தான்மா விலிங்கமோ என்று முந்நீர்
மன்னவன் வினவ லோடு மகபதி மொழிவான் முன்பென்
றன்னரும் பழியும் வேழச் சாபமுந் தொலைத்த தன்றோ
அன்னதை யறிந்தி லாய்கொல் என்னநீ ரண்ணல் கூறும்.

1295. அற்றது வாகில் தெய்வ மருத்துவ ராலுந் தீரச்
செற்றிட வரிதா யென்னைத் தெறும்பெரு வயிற்று நோயை
வற்றிடு மாறு தீர்க்குங் கொல்லென வலாரி யையம்
உற்றுநீ வினாய தென்என் றுண்ணகை யரும்பிச் சொல்வான்.

வருணனும் இந்திரனும்

1292. அப்போது வருணதேவன் இந்திரனுடைய சபைக்குச் சென்று நின்று,தன் நோய் தீரும் மகிழ்ச்சி தோன்ற இந்திரன் முகத்தை நோக்கி, "இன்று நீ சற்று வாடி இருக்கின்றாய்; இதற்குக் காரணம் யாது?" என்று வினவினான்.

(நோய் தீரும் மகிழ்வு உண்டாகக் காரணம் நன் நிமித்தம் என்று பின்பாடலில் காணப்படுகிறது.)

1293. வில்லுடன் கூடிய முகிலைத் தன் வாகனமாகக் கொண்ட இந்திரன் சொன்னான். "அன்பாகிய வலையில் படுகின்ற பெருமானும் எம்மானும் மதுரை நாயகனுமாகிய சோமசுந்தரக் கடவுளை, அன்போடு கூடிய பூசனை செய்ய இன்று காலம் தாழ்ந்தது. அக்காரணத்தினால், என் மனம் சற்று அலைப்புண்டு துன்பமடைகிறது" என்றான்.

1294. இதனை இந்திரன் கூறவும், அச்சொக்கலிங்கம் சிறந்த லிங்கமோ என்று கடல் தலைவனாகிய வருணன் கேட்க, உடனே இந்திரன், "முன்னாளில் என்னுடைய பழியையும், வெள்ளை யானையின் சாபத்தையும் இச்சிவலிங்கம் போக்கியதல்லவா? அச்செய்தியை நீ அறியாயோ?" என்றான். உடன் வருணன் சொல்லத் தொடங்கினான்.

1295. "அந்த லிங்கம் அத்தன்மை உடையதானால் தேவ மருத்துவர்களும் தீர்க்க முடியாத என்னை வருத்திக் கொண்டிருக்கின்ற பெரிய வயிற்று வலியைத் தீர்க்குமா?" என்று கேட்டான். "நீ சந்தேகத்துடன் கேட்பது என்ன?" என்று இந்திரன் புன்முறுவலோடு கேட்டான், தொடர்ந்து,

1296. அரிஅய ராலுந் தீராப் பிறவிநோய் அறுக்க வல்ல
பெரியவ னிந்த யாக்கைப் பெரும்பிணி பிறவுந் தீர்த்தற்
கரியனோ வையன் செய்யுந் திருவிளை யாட்டை
இன்னே
தெரியநீ சோதி என்னத் தெண்கடற் சேர்ப்பன்
சொல்வான்.

1297. கல்லிற கரிந்தோ யிங்கு நான்வருங் காலை வேட்டார்க்
கெல்லையில் காம நல்குஞ் சுரபியும் இன்பால் சோரப்
புல்லிய கன்று மாற்றப் பட்டவப் போது கண்ட
நல்லசோ பனத்தா லிந்த நன்மொழி கேட்டே னென்னா.

1298. வருணனும் ஏகி வெள்ளி மன்றுடை யடிகள் செய்யுந்
திருவிளை யாடல் கண்டு வயிற்றுநோய் தீர்ப்பான்
எண்ணி
முரசதிர் மதுரை மூதூர் முற்றுநீ யழித்தி யென்னாக்
குரைகடல் தன்னை வல்லே கூவினான் ஏவி னானே.

வேறு

1299. கொதித்தெழுந்து தருக்களிறக் கொத்தியெடுத்
தெத்திசையும்
அதிர்த்தெறிந்து வரைகளெல்லாம் அகழ்ந்துதிசைப்
புறஞ்செல்லப்
பிதிர்த்தெறிந்து மாடநிரை பெயர்த்தெறிந்து பிரளயத்தில்
உதித்தெழுந்து வருவதென ஓங்குதிரைக்
கடல்வருமால்.

1296. “திருமால் பிரமன் போன்றவர்களாலும் தீர்க்க முடியாத பிறவி நோயைத் தீர்க்க வல்ல சொக்கலிங்கப் பெருமானது பெரும் கருணை, இந்த உடலில் உள்ள பெரும் பிணியை நீக்காமலா போய்விடும்? இறைவன் திருவிளை யாடலை இப்பொழுதே சோதிப்பாய்” என்று இந்திரன் கூறினான். வருணன் சொல்லத் தொடங்கினான்.

1297. “மலைகளின் சிறகுகளை அறுத்த இந்திரனே! நான் இங்கு வரும் போது, விரும்பிய பொருளைக் கொடுக்கும் தேனும், இனிய பால் ஒழுக அதனால் மகிழ்ந்த கன்றும், வழியில் எதிர்ப்பட்டன. அப்போது பார்த்த இந்த நல்ல சகுனத்தால் இந்தச் சொல்லைக் கேட்டேன்” என்று கூறினான்.

1298. வருணன் சென்று, வெள்ளியம் பலத்துள் ஆடும் பெருமானின் திருவிளையாடலைக் கண்டு, வயிற்று நோயை நீக்கிக் கொள்ளக் கருதி, ஒலிக்கின்ற கடலை விரைந்து அழைத்து “மதுரை நாட்டை அழிப்பாய்” என்று கட்டளை இட்டான்.

கடல் வெள்ளம் மதுரையை அழிக்க வருதல்

1299. உடனே உயர்ந்த அலைகளை உடைய கடலானது, பொங்கி மேலே எழுந்து மரங்களை முறித்து எல்லாத் திசைகளிலும் ஆரவாரத்துடன், சென்று வீசி, மலைகளைத் தோண்டிப் பொடி செய்து, எட்டுத் திசைகளிலும் அதை எடுத்து எறிந்து, மாடங்களைப் பெயர்த்து ஊழிக் காலத்தில் பொங்கி வருவது போல் வந்தது.

1300. கந்தமலர்த் தனிக்கடவுள் கற்பத்து மழியாத
இந்தவளம் பதிக்கிடையூ றெய்தியதெம் பதிக்குமினி
வந்ததெனச் சுந்தரனை வந்திறைஞ்சி வானவருஞ்
சிந்தைகலங் கிணர்வருணன் செய்தசெயல் தெளியாதார்.

1301. சூலமோ டழலேந்துஞ் சொக்கர்திரு விளையாட்டின்
சீலமோ நாமிழைத்த தீவினையின் றிறமிதுவோ
ஆலமோ உலகமெலாம் அழியவரும் பேரூழிக்
காலமோ எனக்கலங்கிக் கடிநகரம் பனிப்பெய்த.

1302. மண்புதைக்கத் திசைபுதைக்க மயங்கிருள்போல் வருநீத்தம்
விண்புதைக்க எழுமாட வியனகரின் புறத்திரவி
கண்புதைக்க வருமளவிற் கண்டரசன் நடுநடுங்கிப்
பெண்புதைக்கும் ஒருபாகப் பிரானடியே சரணென்னா.

1303. ஆலமெழுந் திமையவர்மே லடர்க்கவரும் பொழுதஞ்சும்
மாலெனவுந் தன்னுயிர்மேன் மறலிவரும் பொழுதஞ்சும்
பாலனென வுங்கலங்கிப் பசுபதிசே வடியில்விழுந்து
ஓலமென முறையிட்டான் உலகுபுகழ் உறையிட்டான்.

1300. வருணன் செய்த சூழ்ச்சியை அறியாதவர்களான தேவர்கள் மணம் பொருந்திய தாமரை மலரில் இருக்கும் பிரமனது கற்பத்தினும் அழியாத இவ்வளம் பொருந்திய மதுரைக்கு அழிவு வந்தது. இனி எமது நாட்டிற்கும் அழிவு வரும் என்று அஞ்சி மனம் கலங்கிச் சோம சுந்தரக் கடவுளை வணங்கினர்.

1301. கடல் பொங்கி வருவதைக் கண்டு, "இந் நிகழ்ச்சி சூலப்படையையும், அங்கியையும் உடைய சோம சுந்தரப் பெருமானுடைய திருவிளையாடலின் செய்கையோ? அன்றி நாம் செய்த தீவினையின் திறமோ? அன்றித் தேவர்களை அழிக்க வந்த ஆலகால விடமோ. உலகமெல்லாம் அழியும்படி வரும் பெரிய ஊழிக்காலமோ?" என்று காவலையுடைய மதுரை நகரில் உள்ள அனைவரும் கலங்கி நடுங்கினர்.

1302. மண்ணுலகை மறைக்கவும், திசைகளை மறைக்கவும் இருளைப் போல் வருகின்ற கடலின் வெள்ளம் விண்ணுலகை மறைக்குமாறு மேல் ஓங்கிய மாடங்களையுடைய மதுரை நகரின் புறத்தில், சூரியனும் அச்சத்தோடு கண் மூடி வரும் போது, அபிடேக பாண்டியன் அதனைப் பார்த்து நடுநடுங்கி உமை அன்னையை ஒரு பாகத்தில் உடைய சிவபெருமானுடைய திருவடிகளில் அடைக்கலம் புகுந்தான்.

1303. புகழாகிய கவசம் அணிந்த அபிடேக பாண்டியன், நஞ்சானது பாற்கடலில் இருந்து தோன்றித் தேவர்களைக் கொல்ல வரும் பொழுது, அஞ்சிய திருமாலைப் போலவும், கவர்ந்து செல்ல வந்த எமனைக் கண்டு அஞ்சிய மார்க்கண்டேயனைப் போலவும் மனம் கலங்கிச் சோம சுந்தரப் பெருமானின் திருவடிகளில் விழுந்து 'அடைக்கலம்' என்று முறையிட்டு அழுதான்.

1304. முறையிட்ட செழியனெதிர் முறுவலித்தஞ்
சலையென்னாக்
கறையிட்டு விண்புரந்த கந்தரசுந் தரக்கடவுள்
துறையிட்டு வருகடலைச் சுவறப்போய்ப் பருகுமெனப்
பிறையிட்ட திருச்சடையிற் பெயனான்கும் வரவிடுத்தான்.

வேறு

1305. நிவப்புற எழுந்த நான்கு மேகமு நிமிர்ந்து வாய்விட்
டுவர்ப்புறு கடலை வாரி யுறிஞ்சின வுறிஞ்ச லோடுஞ்
சிவப்பெருங் கடவுள் யார்க்குந் தேவெனத் தெளிந்தோர்
ஏழு
பவப்பெரும் பௌவம் போலப் பசையற வறந்த தன்றே.

1306. அந்நிலை நகரு ளாரும் வானவர் ஆதி யோருந்
தென்னவர் பிரானு மெந்தை திருவிளை யாடல்
நோக்கிப்
பன்னரு மகிழ்ச்சி பொங்கப் பன்முறை புகழ்ந்து பாடி
இன்னல்தீர் மனத்த ராகி ஈறிலா வின்பத் தாழ்ந்தார்.

வருணன்விட்ட கடலை வற்றச்செய்த படலம் முற்றிற்று.

மதுரைக்காண்டம் முற்றிற்று.

பெருமான் கடலை வற்றச் செய்தல்

1304. அங்ஙனம் முறையிட்ட பாண்டியன் எதிரே திருமிடற்றையுடைய சோமசுந்தரக் கடவுள் புன்னகை புரிந்து "அஞ்சாதே" என்று அருளி, பல துறைகளை இட்டு வருகின்ற கடலை அது வற்றும்படி போய் உண்ணுங்கள்" என்று திங்களை அணிந்த சடையில் உள்ள முகில் நான்கினையும் செல்லவிட்டான்.

1305. உயர எழுந்த அந்த நான்கு முகில்களும், நிமிர்ந்து முழங்கி உவர்ப்பினை உடைய கடல் நீரினை வாரி உறிஞ்சின. சிவமாகிய பெரும் கடவுளே யாவர்க்கும் தேவன் என்று தெளிந்தவரின் எழு வகைப்பட்ட பிறவியாகிய பெரிய கடல் வற்றுவது போன்று அக்கடல் பசையின்றி வற்றியது.

1306. அப்போது நகரில் உள்ளவர்களும் தேவர்களும் அபிடேக பாண்டியனும் தம் தந்தையாகிய சோம சுந்தரக் கடவுளைப் பார்த்துப் பெரிய மகிழ்ச்சி பொங்கப் பல முறை புகழ்ந்து துதித்து, துன்பம் நீக்கிய மனம் உடையவராகி முடிவில்லாத இன்ப வெள்ளத்தில் மூழ்கினார்கள்.

வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம் முற்றிற்று

மதுரைக் காண்டம் முற்றிற்று

திருவிளையாடற் புராணம்

கூடற் காண்டம்

19. நான்மாடக் கூடலான படலம்

பரமசிவம்

1307. பூதங்கள் அல்ல பொறியல்ல வேறு புலனல்ல உள்ள மதியின்
பேதங்க ளல்ல வினையன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்
வேதங்கி டந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடன் மறுகிற்
பாதங்க ணோவ வளைஇந்த னாதி பகர்வாரை ஆயு மவரே.

சிவசக்தி

1308. திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழை யிடக்கண் ஞானப்
பெருமக ணுதற்க ணாகப் பெற்றுவான் செல்வங் கல்வி
அருமைவீ டளிப்பாள் யாவள் அவளுயிர்த் துணைவன் காண
ஒருமுலை மறைந்து நாணி யொசிந்தபூங் கொம்பின் நின்றாள்.

திருவிளையாடற் புராணம்

கூடற் காண்டம்

19. நான்மாடக் கூடலான படலம்

பரமசிவம்

1307. ஆராய்ந்து அறியும் அறிவுடையார், மதுரை வீதியில் பாதங்கள் நோவ வளையலும் விறகும் விற்கும் சோமசுந்தரக் கடவுளை, வானம் முதலிய ஐம்பூதங்களும் செவி முதலிய பொறிகளும் அல்ல, ஏனைய ஒலி முதலிய ஐம்புலன்களும் அல்ல, மனம் புத்தி முதலிய அந்தக் காரணங்களின் விகற்பங்களும் அல்ல, இவைகட்கு அப்பாற்பட்ட ஆன்மாவுமல்ல-என்று பெருநூலாகிய வேதம் இது எனத் துணிய முடியாமல் கிடந்து தடுமாறுவதற்கு ஏதுவாகிய வஞ்ச வெளி என்று கூறுவர். (இதில் உள்ள புராண வரலாறு 32, 41 படலங்களில் காண்க).

சிவசக்தி

1308. தன் உயிர்த்துணைவன் கண்ட அளவில் ஒரு கொங்கை மறையப் பெற்றுத் துவண்ட பூங்கொடி போன்று நின்றவளும் பூமகளை வலக் கண்ணாகவும், நாமகளை இடக் கண்ணாகவும், ஞானப் பெருமகளை நெற்றிக் கண்ணாகவும் பெற்றுள்ளவளும் ஆன அச்சிவ சக்தியே சிறந்த செல்வத்தையும், கல்வியையும் அடைதற்கரிய வீடு பேற்றையும் அருளுபவள் ஆவாள்.

1309. கதிர்மதி மிலைந்த வேணிக் கண்ணுதல் வருணனேய
அதிர்கடல் வறப்பச் செய்த வாடலீ தனையான் ஏய
முதிர்மழை யேழின் மேலு முன்னைநான் முகிலும் போக்கி
மதுரைநான் மாடக்கூடல் ஆக்கிய வண்ணஞ் சொல்வாம்.

1310. எற்றுதெண் டிரைநீர்ச் சேர்ப்பன் தன்செயல் இழுக்கி நாணம்
உற்றிரு கண்ணுஞ் சேப்ப உடன்றெழு கோபச் செந்தீப்
பற்றிட வாகம் வெம்பிப் பரவையும் யாறும்வெந்து
வற்றிட வெகுண்டு நின்றான் மானமும் வலியுங் குன்றான்.

1311. நளிர்புனல் மதுரை மூதூர் நாயக னாட றன்னைத்
தெளிகிலன் ஆகிப் பின்னுஞ் செழுமுகி லேழுங் கூவிக்
குளிர்கடல் வறந்த தென்னக் குடித்தெழுந் திடித்துப் பெய்யா
ஒளிவளர் மதுரை முற்றும் ஒல்லெனக் களைமி னென்றான்.

1312. பொள்ளென மேக மேழும் புகுந்துபார் தெரிய முந்நீர்ப்
பள்ளமும் வறப்ப முற்றப் பருகிமெய் கருகி மின்னித்
தெள்ளருந் திசையும் வானுஞ் செவிடுறப் பிலமும் பாரும்
விள்ளாமல் வரைகள் எட்டும் வெடிபட மேருச் சாய.

வருணன் மேகங்களை மதுரையில் மழை பெய்யச் செய்தல்

1309. ஒளி மிக்க சந்திரனை அணிந்த சடையினை யுடைய சோமசுந்தரக் கடவுள் வருணன் ஏவிய கடலை வற்றச் செய்த திருவிளையாடல் இது. இனி அவ்வருணன் ஏவிய சூல் முதிர்ந்த ஏழு முகிலின் மேலும் முன் விடுத்த நான்கு முகிலையும் போகவிட்டு மதுரையை நான் மாடக் கூடலாகச் செய்தருளிய திருவிளையாடலைக் கூறுவோம்.

1310. மோதும் தெள்ளிய அலைகளையுடைய கடல் தலைவனாகிய வருணன் தன் செயல் தவறினமையால் நாணமுற்று மானமும் வலியும் கொண்டு இரண்டு கண்களும் சிவப்படைய மாறுபட்டெழுந்த சினமென்னும் செந்நெருப்பு மூளுதலால் உடல் கருகி, கடலும் ஆறும் வெந்து வற்றுமாறு வெகுண்டு நின்றான்.

1311. மதுரைப் பதியில் எழுந்தருளியுள்ள சோம சுந்தரக் கடவுளின் திருவிளையாடல் இது என்று தெளிவடையாதவனாய் மீண்டும் திரண்ட ஏழு முகில்களையும் அழைத்து, "நீங்கள் குளிர்ந்த கடல் வற்றியது என்று சொல்லுமாறு நீரினைக் குடித்து மேலெழுந்து இடித்து மழையினைப் பொழிந்து புகழ் மிக்க மதுரைப்பதி முழுவதையும் விரைந்து அழியுங்கள்" என்று கூறினான்.

1312. உடனே ஏழு மேகங்களும் விரைந்து சென்று பூமி தெரியும்படி கடல்நீர் முழுவதும் வற்ற நீரினை முடியக் குடித்து, உடல் கறுத்து மேலே எழுந்தன. மின்னலை வீசின. திசைகளும், வானுலகும் செவிடுபடவும், பாதாளமும் நிலவுலகும் பிளக்கவும், பெரிய மலைகள் எட்டும் வெடிக்கவும் மேருமலை சாயவும்,

1313. ஊழிநாள் வெடிக்கும் அண்ட கடாகத்தி னொலிபோ
லார்த்துப்
பாழிவா னுருமு வீழப் பணாடவி மணிகள் சிந்தி
ஆழிநீர் ஞாலந் தாங்கு மராவுட னெளியத் திக்கிற்
சூழிமால் யானை நின்ற நிலைகெடத் துணுக்கங்
கொள்ள.

1314. வெள்ளிய நீறு பூத்து முழவென வீங்கு காய் போற்
றெள்ளிய ஆலி சிந்தத் திரண்டதிண் பளிங்குத்
தூண்போல்
ஒள்ளிய தாரை சோர உம்பர்மீன் கணங்க ளோடும்
துள்ளிய திரையில் ஆடு மீன்கணம் துடித்து வீழ.

1315. ஆர்த்தெழு கொண்மூ ஏழுஞ் சராசர மனைத்துஞ்
சூழ்ந்து
போர்த்தன ஞால முண்ணப் புக்கதோர் வடிவங் கொண்ட
தீர்த்தனில் விசும்பும் பாருந் திசைகளுந் தெரியா ஆகப்
பார்த்தகண் நுழையா வாகப் பரந்திருள் கான்ற
வன்றே.

1316. பைஞ்சுடர் எறிக்கும் பச்சை காரொளி பரப்பு நீலம்
புஞ்சவா ளுடுக்க ளன்ன நித்திலம் பொன்னங் குப்பை
செஞ்சுடர் மணிக டுப்புச் சிதறுவ கணவ ரோடும்
விஞ்சையர் மகளி ரூடி வெறுத்தெறி கலன்கள் போல.

1313. ஊழிக்காலத்தில் வெடிக்கும் அண்ட கடாகத்தின் ஒலிபோல் ஒலித்து வலிய இடியேறுகள் விழுந்தன. அப்போது கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகைத் தாங்கி நிற்கின்ற ஆதிசேடன் ஆயிரம் படங்களிலும் உள்ள மணிகளைச் சிதறி உடலை நெளித்தான். எட்டுத் திசைகளில் உள்ள முகபடாத்தையுடைய பெரிய யானைகள் தங்கள் நிலை கெட்டு நடுநடுங்கின.

1314. வெண்மையான நீறு பூக்கப்பெற்ற, மத்தளம் போல் பருத்த, சாம்பற் பூசணிக் காய்கள் போல் ஆலங் கட்டிகள் (பெரிய மழைத் துளிகள்) விழுந்தன. திரண்ட வலிய பளிங்குத் தூண்களைப் போல் மழைத் தாரைகள் சொரிந்தன. வானில் உள்ள் விண்மீன்களோ என்று எண்ணும்படி அலைகள் தூக்கி எறிந்ததால் மீன் கூட்டங்களும் துள்ளித் துடித்தன.

1315. ஆரவாரத்துடன் எழுந்த ஏழு மேகங்களும் சராசரம் அனைத்தையும் சூழ்ந்து மூடின. உலகினை அழிக்கப் புகும் ஊழிக்கால உருத்திரமூர்த்தியைப் போல ஆகாயமும், பூமியும், திசைகளும் தெரியா வண்ணம் பரவி, நோக்கிய கண்கள் பார்த்தறிய முடியாத இருளைத் தோற்றுவித்தன.

1316. பின்னர் மேகங்கள் பசுமையான ஒளிவீசும் மரகதங்களையும், கரிய ஒளியினைப் பரப்பும் நீல மணிகளையும், திரண்ட ஒள்ளிய விண்மீன்களையொத்த முத்துக்களையும், பொற்குவியல்களையும், சிவந்த ஒளியினையுடைய மாணிக்க மணிகளையும், பவளங்களையும் விஞ்சை மகளிர் தம் கணவரோடு ஊடல் கொண்டு வெறுத்து எறிகின்ற அணிகலன்கள் போல எங்கும் சிந்தின.

1317. கடியகால் உதைப்பப் பெய்யுங் கடுஞ்செல வெழிலி மாடக்
கொடியநீ ணகரைச் சூழ்ந்து புதைத்தலுங் கோலொன் றோச்சிப்
படியெலாம் புரக்குங் கோனு நகருளார் பலரு ஞாலம்
மடியுநா ளிதுவே என்னா மயங்கினார் உயங்கி னாரே.

1318. கண்ணுதன் மூர்த்தி தானே யின்னமுங் காக்கு மென்னாப்
புண்ணிய நகரா ரோடும் பொருக்கெனக் கோயி லெய்தி
விண்ணிழி விமான வாழ்க்கை விடையவ னடிக்கீழ் வீழ்ந்தான்
அண்ணலா ராடல் முன்னும் அறிந்துகை கண்ட வேந்தன்.

1319. விடையினை ஆல முண்ட மிடற்றினை கங்கை தாங்கும்
சடையினை கூற்றை வென்ற தாளினை மேரு சாபப்
படையினை யடியேம் துன்பப் பாட்டினை நீக்கி யாளும்
நடையினை யாகி யெங்கள் நல்லுயிர் காத்தல் வேண்டும்.

1320. என்னலுந் தென்னர்க் கென்று மெய்திய விடுக்கண் தீர்க்கும்
முன்னவன் முன்போல் நான்கு முகிலையு நோக்கி இன்ன
தொன்னகர் எல்லை நான்குஞ் சூழ்ந்துநான் மாட மாகி
வின்னெடு மாரி யேழும் விலக்குமி னெனவி டுத்தான்.

பாண்டியன் முதலியோர் வருந்துதல்

1317. பெரிய கொடிய காற்றும் சூழ்ந்து தாக்கி அடித்தது. மழையைப் பொழிந்தபடி விரைந்து செல்லும் மேகங்கள் கொடிகளையுடைய மாடங்கள் நெருங்கிய நீண்ட நகரைச் சூழ்ந்து மூடிக்கொண்டன. உலக மனைத்தையும் தனிச் செங்கோல் நடத்திப் பாதுகாக்கும் அபிடேக பாண்டியனும், நகரத்தில் உள்ள மக்கள் பலரும் இதனைக் கண்டு, "உலகம் அழியும் நாள் இதுவே" என்று மனம் மயங்கி வாடினார்கள்.

1318. சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலை முன்னரும் உணர்ந்து கைவந்த பாண்டிய மன்னன், "கண்ணுதற் பெருமானே இன்னமும் காத்தருள்வார்" என்று, அறம் மிக்க அந்நகர மக்களோடு திருக்கோயிலை அடைந்து, வானுலகினின்றும் இறங்கிய விமானத்தில் அமர்ந்தருளும் இடபவூர்தியையுடைய சொக்கலிங்கப் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்தான்.

நான்மாடக் கூடல்

1319. "இடபவூர்தியையுடையவனே! நஞ்சை உண்டருளிய திருமிடற்றினை உடையவனே! கங்கை தங்கிய சடையையுடையவனே! கூற்றுவனை உதைத்த திருவடியை யுடையவனே! மேருமலையை வில்லாக உடையவனே! அடியேங்களின் துன்பத்தினைப் போக்கி ஆளுகின்ற அருட் செயலை உடையவனே! எங்கள் இனிய உயிரைப் பாதுகாத்து அருளல் வேண்டும்."

1320. என்று முறையிட்ட அளவில், பாண்டியர்கட்கு உண்டாகும் துன்பத்தை எப்போதும் போக்கியருளும் முன்னவனான சோமசுந்தரக்கடவுள் நான்கு முகில்களையும் முன்போலவே பார்த்து, நீங்கள் இம் மதுரைப் பதியின் நான்கு எல்லைகளையும் சூழ்ந்து நான்கு மாடங்களாகி ஏழு மேகங்களையும் விலக்குங்கள்" என்று விடுத்தருளினார்.

1321. வந்துநான் மாட மாகி வளைந்துநாற் றிசையுஞ் சூழ்ந்து
சந்துவாய் தெரியாது! ஒன்றித் தாமொரு குடிலாய் மாடப்
பந்திகோ புரஞ்செய் குன்றங் கால்கள்போற் பரிப்பப் போர்த்த
இந்துவார் சடையோன் ஏய வெழிலிமா நகர மெங்கும்.

1322. அன்னநான் மாடத்துள்ளு நகருளார் அமைச்சர் வேந்தன்
தன்னநாற் கருவித் தானை சராசரம் பிறவுந் தாழ்ந்து
முன்னைநாள் தனினு மின்ப மூழ்கிநன் கிருந்தா ரூழிற்
பொன்னனாள் பாகன் தாளிற் புக்கமர்ந்திருந்தா ரொத்தார்.

1323. கழைகெழு வரையின் உச்சி கவிழ்கின்ற புயல்போற் கார்சூழ்ந்
திழைமணி மாடத்தும்ப ரெறிதுளி யுடைந்து துள்ளத்
தழைகடல் வறப்ப வாங்கித் தம்முடல் வறப்பப் பெய்து
மழைகளும் வெள்கி நின்ற வருணனும் வெள்கி நின்றான்.

1321. சந்திரனையுடைய சடையை அணிந்த சோம சுந்தரக்கடவுள் ஏவிய முகில்கள் வந்து நான்கு மாடமாய் வளைந்து நான்கு திசைகளிலும் சூழ்ந்து மூட்டுவாய் தெரியாத வண்ணம் ஒன்றுபட்டுத் தாம் ஒரு குடிசையாகி மாடங்களும், கோபுரங்களும், செய்குன்றுகளுமாகிய இவை தூண்களைப் போல நின்று தாங்க, பெருமையுடைய அம்மதுரை மாநகரம் முழுவதையும் மூடிக்கொண்டன.

1322. அந்த நான்கு மாடங்களினுள்ளும், நகரில் உள்ளவர்களும், மந்திரிகளும், மன்னனும் அவனுடைய நான்கு வகைச் சேனைகளும், இயங்கியற் பொருளும், நிலையியற் பொருளும் ஆகிய பிற உயிர்களும் தங்கி முன்னை நாளினும் இன்பக் கடலில் திளைத்து மகிழ்ந்து இருந்தனர். அவர்கள் சிவபுண்ணிய முதிர்ச்சியால் இருவினையொப்பு முதலியன எய்தப் பெற்று இறைவன் திருவடி நிழலில் புகுந்து மகிழ்வுடன் இருப்பவரை ஒத்தனர்.

1323. மூங்கில்கள் நிறைந்த மலையின் உச்சியில் பெய்கின்ற மழை உடைந்து சிதறுதல்போல் சிவபெருமான் விடுத்த நான்கு மேகங்களால் சூழ்ந்து இயற்றப்பட்ட அழகிய மாடத்தின்மேல் எறியப்படுகின்ற மழைத்துளிகள் உடைந்து சிதறக் கடலானது வறண்டு போகும் வண்ணம் நீரினை முகந்து, தன் உடல் பசை வறளுமாறு பொழிந்து, வருணன் விடுத்த மேகங்ள் நாணம் கொண்டு நின்றன. அது கண்ட வருணதேவனும் நாணம் கொண்டு நின்றான்.

1324. நடுங்கினன் கழிந்த வச்ச நாணமீ தூர மானம்
ஒடுங்கினன் உள்ளத் துள்ளத்தோ ருவகைவந் தெய்தப் பொற்பூத்
தடங்கரை குறுகா முன்நோய் தணிந்துபின் தோய்ந்து பாசம்
மடங்கினன் மடங்கா அன்பின் வள்ளலைப் பூசை செய்வான்.

1325. புனிதநீ றாடிக் கண்டி பூண்டுவான் கங்கை யாதி
வனிதையர் பசும்பொற் கும்ப வாசநீர் வடித்து நீட்டப்
பனிமலர் சந்தங் கந்த மணிக்கலன் பசும்பொன் னாடை
இனையன பிறவும் ஈன்று கற்பக மெடுத்துக் காட்ட.

1326. ஐங்கனி யமுதம் ஐந்து கௌவியம் அமுது தூபஞ்
செங்கதிர் விளக்க மின்ன தேவரான் கொடுப்பச் சேற்கண்
நங்கைதன் பதியைப் பூசித் தாயிர நாமங் கூறிப்
பைங்கதிர் முத்தஞ் சாத்தித் தொழுதடி பணிந்து நின்றான்.

1327. அருச்சனை யுவந்த வாதி யமலனீ யாது வேண்டிற்று
உரைத்தியென் றோத நீர்க்கோன் ஒல்லைதாழ்ந் தொன்றி னாலுங்
கரைத்திட வரிய விந்தக் கடியவென் வயிற்று நோய்நின்
திரைத்தட மாடு முன்னே தீர்ந்திடப் பெற்றேன் எந்தாய்.

வருணன் வயிற்றுநோய் நீங்கப்பெற்று பூசித்தல்

1324. அவ்வாறு நின்ற வருணன் உடல் நடுங்கி, மிகுந்த அச்சமும் நாணமும் கொண்டு, மானம் ஒடுங்க, உள்ளத்துள்ளே ஒரு மகிழ்ச்சி வந்தெய்த பொற்றாமரைத் தீர்த்தத்தை அடைந்தான். அதனை அடையுமுன்னரே அவன் வயிற்றுநோய் நீங்கிற்று. பின்னர் நீராடி ஆணவம் நீங்கப்பெற்று மிகுந்த அன்போடு வள்ளலாகிய சோமசுந்தரக் கடவுளைப் பூசிக்கத் தொடங்கினான்.

1325. தூய்மையான திருநீறு அணிந்து, உருத்திராட்ச மாலையும் அணிந்து, ஆகாய கங்கை முதலிய மாதர்கள் பசும்பொற் குடங்களிலே நறுமணம் கமழும் திருமஞ்சனம் கொண்டு வந்து தரவும், கற்பகத் தருக்கள் குளிர்ந்த மலர், சந்தனம், ஏனைய மணப்பொருட்கள், மணிக்கலன்கள், பசிய பொன்னாடை இவை போன்ற பொருட்கள் பிறவற்றைப் பெற்றுத் தரவும்,

1326. காமதேனு, ஐந்து கனிகள், ஐந்து அமிர்தம், ஐந்து கௌவியம், திருவமுது, தூபம், செவ்வொளியையுடைய தீபம் இவை போன்ற பிறவற்றை வழங்கவும், அங்கயற் கண்ணம்மையின் நாயகனான சோமசுந்தரக் கடவுளைப் பூசித்து ஆயிரம் திருநாமங்களைக் கூறிப் பசுமையான ஒளியுடைய முத்துக்களைச் சாத்தி திருவடியைத் தொழுது கும்பிட்டு நின்றான்.

இறைவனும் வருணனும்

1327. சோமசுந்தரக் கடவுள் வருணன் செய்த வழி பாட்டிற்குத் திருவுளம் மகிழ்ந்து, "வருணனே! நீ, வேண்டுவது யாது அதனை உரைப்பாயாக" என்று கூற, கடல் தலைவனாகிய வருணன் விரைந்து வணங்கி "எந்தையே! ஒன்றாலும் போக்குதற்குரிய இக்கொடிய வயிற்று நோயானது உன்னுடைய அலைகளையுடைய பொற்றாமரைக் குளத்தில் நீராடுவதற்கு முன்னே நீங்கப் பெற்றேன்.

வேறு

1328. வேதமுதற் கலைகாட்சி முதலளவை விரிஞ்சன் முதல்
விண்ணோர் செய்யுஞ்
சோதனையு ளகப்படாச் சோதியுனைச் சோதிக்கத்
துணிந்தேன் அந்தோ
பேதைமையோ னிடத்தென்ன குணங்கண்டென்
பிணிதீர்த்தென் பெற்றா யாசை
கோதமிலாய் குற்றமே குணமாகக் கொள்வதுநின்
குணமோ ஐயா.

1329. பொன்னகரான் காலந்தாழ்த் துனையருச்சித்
தயர்ச்சியொடும் போன வாறும்
என்னெனயான் வினவியதும் வலாரியிறை
கொடுத்ததுமவ் விறைக்கு நேர்யான்
பின்னைவினா யதுமவன்சொல் வழியுன்னைச்
சோதித்த பெற்றி தானும்
முன்னவனே உன்னருளால் என்பிணிக்கு மருந்தாகி
முடிந்த வாறே.

1330. ஆறுமதி முடியணிந்த அருட்கடலே வயிற்றுநோய்
அன்றி மேனாள்
மாறுபடு மிருவினையு மலவலியுங் கெடவீட்டின் வழியும்
பெற்றேன்
வேறினிமந் திர மென்னை மணியென்னை மருந்
தென்னை மெய்ம்மை யாகத்
தேறுமலர்க் கிப்புனிதத் தீர்த்தமே பிணியனைத்தும்
தீர்ப்ப தன்றோ.

1328. "வேதம் முதலிய கலைகளினுள்ளும், காட்சி முதலிய ஏனைய அளவைகளுள்ளும், பிரமன் முதலிய தேவர்கள் செய்யும் ஆராய்ச்சியுள்ளும் அகப்படாத பரஞ் சோதியே! ஐயோ! உன்னை ஆராயத் துணிந்தேனே! அறிவிலியாகிய என்னிடத்தில் என்ன குண நலத்தினைக் கண்டு என் நோயைத் தீர்த்தீர்? அதனால் என்ன பயன் பெற்றீர்? விருப்பு வெறுப்பற்ற பெருமானே! அடியார் செய்யும் குற்றத்தையே குணமாகக் கொள்வது நினது அருட் குணமோ?

1329. "பொன்னுலகை உடையவனாகிய இந்திரன் காலம் தாழ்ந்து உன்னை பூசித்தலால் அயர்ச்சியுடன் தன் நகருக்குத் திரும்பியதும், இஃது என்ன? என்று நான் கேட்டதும், இந்திரன் அதற்கு விடை கூறியதும், அவ்விடைக்குப் பின் நான் வினவியதும், அவன் சொல்லிய படியே நான் உம்மைச் சோதித்ததும் ஆகிய இவை அனைத்தும், எம்பெருமானே! உமது திருவருளினால் எனது நோய்க்கு மருந்தாய் முடிந்தன.

1330. "கங்கையையும், சந்திரனையும் முடியில் தரித்த கருணைக் கடலே! என் வயிற்று நோயே அல்லாமல் தொன்று தொட்டு என்னுடன் மாறுபட்டுவரும் இருவினைகளும், ஆணவ மலத்தின் வலியும் கெட வீட்டு நெறியையும் பெற்றுக் கொண்டேன். இனி எனக்கு மந்திரம் எதற்கு? மணி எதற்கு? மருந்து எதற்கு! உண்மையாகத் தெளிய வல்லோர்க்கு இம்பொற்றாமரைத் தீர்த்தமே பிணியனைத்தையும் தீர்க்கும்.

வேறு

1331. அடியனேன் முன்னஞ் செய்த அபராதம் இரண்டுந் தீரும்
படிபொறுத் தருள்வா யென்று பன்முறை பரவித் தாழ்ந்து
மடிவிலா மகிழ்ச்சி பொங்க வரங்களுஞ் சிறிது வேண்டிக்
கடியதன் நகரம் புக்கான் குடதிசைக் காவல் வேந்தன்.

1332. வன்திறல் வருணன் விட்ட மாரியை விலக்க ஈசன்
மின்றிகழ் சடையி னின்று நீங்கிய மேக நான்கும்
குன்றுபோ னிவந்து நான்கு கூடமாக் கூட லாலே
அன்றுநான் மாடக் கூடல் ஆனதால் மதுரை மூதூர்.

நான்மாடக் கூடலான படலம் முற்றிற்று

20. எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற் படலம்

1333. சத்த நான்மறைப் பொருள்வரை தள்ளுநீண் முடிமேல்
வைத்த கார்கள்நான் மாடமாய் மதுரைமேல் வருணன்
உய்த்த மாரியைத் தடுத்தவா றுரைத்தும்ஏ றுயர்த்தோர்
சித்த ராய்வினை ஆடிய செயல்சிறி துரைப்பாம்.

1331. "அடியேன் முன்னர் செய்த குற்றம் இரண்டும் நீங்குமாறு பொறுத்தருள வேண்டும்" என்று பலமுறை துதித்து வணங்கி அழிவில்லாத மகிழ்ச்சி மேலிட, சில வரங்களை விரும்பிப் பெற்றுக் கொண்டு மேற்றிசைக் காவலனாகிய வருணன் காவலையுடைய தன் நகரத்தில் புகுந்தான்.

நான்மாடக்கூடல் என்னும் பெயர் வரக் காரணம்

1332. மிக்க வலியினையுடைய வருணன் ஏவிய முகில்களைத் தடுக்கும் பொருட்டு, சிவபெருமானுடைய மின்போல் விளங்கும் சடையினின்று நீங்கிய நான்கு மேகங்களும் மலை போல் உயர்ந்து நான் மாடமாகக் கூடுதலால் மதுரையாகிய பழைய நகரமானது அந்த நாள் முதற் கொண்டு நான்மாடக் கூடல் என்னும் பெயருடையதாயிற்று.

நான்மாடக் கூடலான படலம் முற்றிற்று

20. எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற் படலம்

1333. ஒலிக்கும் நான்கு மறைகளின் பொருளின் எல்லையைக் கடந்த நீண்ட திருமுடியின் கண் வைத்த முகில்கள், நான்கு மாடங்களாகி மதுரையின் மேல் வருணன் ஏவிய முகில்களை விலக்கிய திருவிளையாடலைக் கூறினோம். இனி இடபக் கொடியையுடைய சொக்கலிங்கப் பெருமான் எல்லாம் வல்ல சித்தராகிச் செய்த திருவிளையாடலைச் சிறிது கூறுவோம்.

1334. தேட ருங்கதிர் மணிமுடிச் செழியனும் பாண்டி
நாட ருந்திரு வெய்திமே னல்லவீ டெய்தக்
கூட லம்பதி மேவிய குணங்குறி கடந்த
வேட ரங்கொரு சித்தமெய் வேடராய் வருவார்.

1335. வட்ட வார்சடைக் குஞ்சியும் பூணநூன் மார்பும்
இட்ட நீறணி திலகமும் இணைக்குழை தூங்க
விட்ட வெள்ளைமுத் திரை யுந்தோல் விரித்தபட்டிகையுஞ்
சுட்ட வெண்பொடிப் பொக்கணந் தூக்கிய தோளும்.

1336. துய்ய வெண்பொடி யழிந்துமெய் சிவந்திடச் சுவடு
செய்யும் வெண்டிரட் படிகநீண் மாலையுஞ் சிவந்த
கையி லங்குகட் டங்க முங் கண்டவர் மனஞ்சென்று
உய்ய வன்புற வீக்கிய வுதரபந் தனமும்.

1337. அட்ட வேங்கையீ ருரிவைகீண் டசைத்தகோவணமும்
ஒட்ட வீக்கிய புலியத ளுடுக்கையும் இடத்தோள்
இட்ட யோகபட் டிகையும்பொன் னிடையிடை கட்டப்
பட்ட கஃறொலி வேத்திரப் படைக்கையும் படைத்து.

1338. வேத கிங்கிணி சிலம்புசூழ்ந் தடிகளின் மிழற்ற
ஓத ரும்பத முளரியூ றருண்மது வொழுக
போத ஆனந்த மதுநுகர்ந்து அலர்முகம் பொலிய
பாத பங்கய முபநிடப் பாதுகை சூட.

சோமசுந்தரக் கடவுள் சித்தராய்த் தோன்றுதல்

1334. தேடுதற்கரிய ஒளி பொருந்திய நவமணிகள் பதித்த முடியினைத் தரித்த அபிடேக பாண்டியனும், பாண்டிய நாட்டிலுள்ளவர்களும் இம்மைச் செல்வத்தை அடைந்து பின் வீடு பேற்றினை அடைய, கூடலாகிய அழகிய நகரில் எழுந்தருளியுள்ள குணக்குறி கடந்த உருவினையுடைய சோமசுந்தரக் கடவுள் ஒரு சித்த வடிவமாகிய திருவேடம் கொண்டு அருள்வாராயினர். (இப்படலம் முழுதும் இனி குளகம்.)

1335. அப்போது அவர் வட்டமாகக் கட்டிய நீண்ட சடையாகிய சிகையும், விபூதியின் மேல் திலகம் தரித்த திரு நெற்றியும், வெள்ளிய இரு குண்டலங்கள் தரித்த திருச் செவியும், பூணூலணிந்த திருமார்பும், தோலாகிய விரிந்த அரைப்பட்டிகையும், சுட்ட வெண்மையான திருநீற்றுப் பையைத் தொங்கவிட்ட தோள்களும்,

1336. தூய திருநீறு அழிந்து மேனி சிவக்குமாறு தழும்பினைச் செய்யும் வெண்மையான திரண்ட படிகத்தாலாகிய நீண்ட மாலையும், சிவந்த திருக்கரத்தில் மழுப்படையும், கண்டவர் உள்ளமானது சென்று பதிந்து உய்தி கூடச் சிக்கெனக் கட்டிய உதரபந்தனமும்,

1337. வேங்கைப் புலியை உரித்துத் தோலைக் கிழித்துக் கட்டிய கோவணமும், இறுகக் கட்டிய புலித்தோல் ஆடையும், இடத்தோளில் இடப்பட்ட யோக பட்டிகையும், பொற்கம்பியால் இடை இடையே கட்டப்பட்ட கஃறென்னும் ஒலியினையுடைய பிரப்பம் படையை ஏந்திய திருக்கையும் ஆகிய இவற்றை உடையவராய்,

1338. வேதமாகிய கிங்கிணியும் சிலம்பும் சூழ்ந்து திருவடிகளில் ஒலிக்கவும், திருவடித் தாமரையில் சுரக்கின்ற அருள் தேனானது ஒழுகவும், ஞானானந்தமாகிய தேனைப் பருகி மலர்ந்த திருமுகமானது விளங்கவும், திருவடித் தாமரைகளை உபநிடதமாகிய பாதுகை முடியில் அணியவும்,

1339. சிறிது மூரலும் வெயர்வையுந் திருமுகத் தரும்பக்
குறுகி ஆவணஞ் சித்திர கூடநாற் சந்தி
மறுகு சூளிகை யுபரிகை மாளிகை வாயில்
அறுகு சூழ்நிரைத் தெற்றியிவ் விடந்தொறும் அடைந்து.

1340. தெற்கி ருப்பவர் போல்வட திசைவயிற் சென்று
புக்கி ருப்பதுங் கிழக்குள்ளார் போலமேற் றிசையில்
நக்கி ருப்பதும் யாவரு நாடினர் அறியத்
தக்க தன்றியே இந்திர சாலமாத் தணந்தும்.

1341. சேய வெற்பினை யணியதாச் செய்து மற் றணித்தாய்
மேய வெற்பினைச் சேயதா விடுத்துமெய்ம் முதுமூப்
பாய மக்களை யிளையவர் ஆக்கியுங் குதலை
வாய மக்களைக் கழிமுது மக்களா வகுத்தும்.

1342. ஆணைப் பெண்ணுரு வாக்கியும் பெண்ணையா
ணுருவா
மாணக் காட்டியு மலடியை மகப்பெறச் செய்துங்
கோணற் கூன்செவி டூமைகண் குருடுபங் கெவருங்
காணத் தீர்த்துநா லுலோகமுங் கனகமாச் செய்தும்.

1343. செல்வர் தம்மனைப் பொருளெலாம் வறுமையிற்
சிறந்தோர்
இல்லம் எய்தவு நட்டவ ரிகலின்றித் தம்மின்
மல்லுவெஞ்சம ரிழைப்பவுங் காஞ்சிர மரத்தின்
நல்ல தீங்கனி பழுப்பவும் விஞ்சைகள் நயந்தும்.

1339. திருமுகத்தில் சிறிது புன்னகையும் வியர்வையும் தோன்ற சித்த வடிவம் கொண்டு விளங்கினார். கடை வீதியும், சித்திரக்கூடமும், நாற்சந்தி கூடுமிடமும், வீதியும், மேல் மாடமும், மாளிகையின் வாயிலும், சிங்க வரிசைகள் சூழ்ந்த திண்ணையும் ஆகிய இவ்விடங்கள் தோறும் போய், விளக்குவார்.

1340. தெற்கில் இருப்பவர் போல் காட்டி வட திசைக் கண்ணே சென்று அமர்ந்திருப்பதும், கிழக்கில் இருப்பவர் போல் காட்டி மேற்குத் திசையில் சென்று மகிழ்ந்திருப்பதும் எவரும் ஆராய்ந்து அறியமுடியாத இந்திரசாலமாக மறைவார்.

1341. தூரத்தில் உள்ள மலையை அண்மையில் உள்ளதாகச் செய்தும், அதற்கு மாறாக அண்மையில் உள்ள மலையைத் தூரத்தில் செல்ல விடுத்தும், உடல் முதுமை யடைந்த விருத்தர்களை இளைஞர்களாக்கியும் குதலைச் சொற்கள் பேசும் பாலர்களை விருத்தர்களாகவும் செய்தார்.

1342. ஆணைப் பெண் உருவாக்கியும், பெண்ணை ஆண் வடிவமாக மாட்சிமைபடக் காட்டியும், மலடியை பிள்ளைப்பேறு அடையச் செய்தும், வளைந்த கூனும் செவிடும் ஊமையும், விழிக்குருடும், முடமும் ஆகிய இவற்றை யாவரும் காணப் போக்கியும், நான்கு உலோகங்களைப் பொன்னாகச் செய்தும் அருளினார்.

1343. செல்வர்களின் வீட்டுப் பொருள் வறுமை யுடையோர் வீட்டில் சென்றடையவும், நட்பினை யுடையோர் பகையின்றித் தம்முள் மற்போர் புரியவும், எட்டி மரத்தில் நல்ல சுவையினையுடைய பழங்கள் பழுக்கவும், வித்தைகள் செய்து காட்டினார்.

1344. பருவ மாறிய பருவத்தில் வைகைநீர் பரந்து
வருவ தாக்கியு மீளவும் வறந்திடச் செய்தும்
பொருவில் தீஞ்சுவை யோடையும் பொய்கையும் உவர்ப்புத்
தருவ ஆக்கியு முவரியின் சுவையவாத் தந்தும்.

1345. வீசி மாத்திரைக் கோலினை விண்ணில்நட் டதன் மேல்
ஊசி நாட்டியிட் டூசிமேற் பெருவிர லூன்றி
ஆசில் ஆடியு மூசிமேற் றவைகிழக் காக
மாசில் சேவடிப் போதுவான் மலர்ந்திடச் சுழன்றும்.

1346. சண்ட வெம்பணிப் பகையெனப் பறந்துவிண் தாவிக்
கொண்ட லைப்பிடித் திடியொடுங் குடித்தநீர் பிழிந்து
கண்ட வர்க்கதி சயம்பெறக் காட்டியுங் காண
விண்ட லத்தினிற் பண்டுபோல் இறைகொள விடுத்தும்.

1347. எல்லி டைப்படும் பொருள்களை இராவெழப் பார்த்தும்
அல்லி டைப்படும் பொருள்களைப் பகல்வர வமைத்தும்
வல்ல முற்புன லுளர்வளி வலிகெடப் பார்த்தும்
நல்ல போதுகாய் கனியிலா நாள்படக் கண்டும்.

1348. பீளை கால்விழிக் கிழவரைப் பிரம்பினால் வருடிக்
காளை யாடவர் ஆக்கியக் கணவருக் கிசைய
ஈளை வாய்முது கற்பினார் கருவடைந் திளமை
ஆள வேத்திரம் வருடிநீ றளித்தருள் செய்தும்.

1344. காலமல்லாத காலத்தில் வையையாறு பெருகி நீர் வரச்செய்தும், திரும்பவும் வற்றச் செய்தும், ஒப்பில்லாத இனிய சுவையினையுடைய ஓடையும், பொய்கையும் உப்புத் தன்மையுடையதாகச் செய்தும், கடல் இனிய சுவையுடைய தாகச் செய்தும், காட்டினார்.

1345. அளவுகோலை வானிலே வீசி நிறுத்தி அக்கோலின் மேல் ஊசியை நாட்டி வைத்து, அந்த ஊசியின் மேல் பெருவிரலை ஊன்றி ஆட்டியும், அவ்வூசியின் மேல் தலையை வைத்துத் திருவடித் தாமரைகளை மேலே தூக்கிய வண்ணம் சுழன்று ஆடியும் காண்பித்தார்.

1346. விரைந்து செல்லக்கூடிய கொடிய பாம்பின் பகையாகிய கருடனைப் போலப் பறந்து, வானில் தாவி மேகத்தைப் பிடித்து, இடியோடு கடலில் பருகிய நீரைப் பிழிந்து, பார்த்தவர் வியப்படையும்படி, தோன்றக் காண்பித்து, அவர்கள் காண விண்ணில் முன்போலவே தங்கும்படி அதனை விடுத்தும் காட்டினார்.

1347. பகலில் தோன்றும் சூரியன் முதலிய பொருள் களை இரவில் தோன்றுமாறு செய்தும், இரவில் தோன்றும் பொருள்களைப் பகலில் வரச் செய்தும், வலிய நெருப்பு, நீர், காற்று இவைகளின் வலிமை நோக்கியும், நல்ல மலரும் காயும், கனியும் இல்லாத நாளில் உண்டாகச் செய்தார்.

1348. பீளை ஒழுகும் விழியினைக் கொண்ட கிழவர்களைத் தன் கைப்பிரம்பினால் தடவி, காளை பருவத்தினை யுடைய ஆடவராகச் செய்தும், அவர்களுக்குத் தகுதியாக அவர்களின் முதுமைப் பருவமுடைய மனைவியர்களை இளமங்கையராக்கிக் கருப்பமும் உண்டாகப் பிரம்பினால் தடவித் திருநீறு அளித்தும் கருணை புரிந்தார்.

1349. அகர மாதிமூன் றாகிய ஆகரு டணமே
புகரி லாவதி ரிச்சிய மஞ்சனம் பொருவில்
வகர மாதிமூன் றாகிய வசியமே வாதம்
இகலி லாவயத் தம்பம் என் றின்னவை செய்தும்.

1350. வேத நூல்தெளி யார்களெக் கலைகளும் விளங்கப்
பூதி நாவினிற் சிதறியும் பூழியன் காதல்
மாத ராரொடும் பயில்புது மணமலர்க் காவிற்
காத நீண்டகோள் தெங்கினைக் கரும்பனை செய்தும்.

1351. ஏனை வான்றருக் குலங்களைப் புட்களை யிருகோட்
டானை யாதிபல் விலங்கினை யொன்றை யொன்றாக
ஞான நோக்கினால் நோக்கியு நாடிய விளையோர்
மானி னோக்கிய ராகிலோம் எனவெழில் வாய்த்தும்.

1352. நாக நாடுபொன் னாட்டுள பொருளுமந் நகருள்
ஆக வாக்கியு மின்னணம் விச்சைகள் அனந்தம்
மாக நாயகன் மலைமக ணாயகன் மதுரை
ஏக நாயகன் திருவிளை யாடல்செய் திருந்தான்.

1349. அகரத்தை முதலாக உடைய ஆகருடணம், குற்றமில்லாத அதிரிச்சயம், அஞ்சனம் என்ற மூன்றாகியும், வகரத்தை முதலாக உடைய வசியம், வாதம், மாறுபாடில்லாத வயத்தம்பம் என்ற மூன்றாகிய இவைகளைச் செய்தார்.

(ஆகருடணம் — தூரத்தில் உள்ளதை அண்மையில் வர இழுத்தல்; அதிரிச்சயம் — கண்ணுக்குப் புலப்படும் பொருளை மறையச் செய்தல்; அஞ்சனம் — மறைந்துள்ள பொருளை வெளிப்படுத்திக் காட்டல்; வசியம் — பகைவரையும் தன் வசப்படுத்துதல்; வாதம் — இரும்பு முதலானவற்றைப் பொன்னாக்குதல்; வயத்தம்பம் — முதியோரை இளையோராகவும், இளையோரை முதியோராகவும் செய்தல்.)

1350. வேதநூல் முதலிய தெளியாதவர்களுக்கு எல்லாக் கலைகளையும் விளங்க, அவர் நாவிலே திருநீற்றைச் சிதறுவார். பாண்டியன் தன் காதல் மகளிரோடு விளையாடும் பூங்காவிலுள்ள காதம அளவு நீண்டுயர்ந்த தென்னை மரத்தினைப் பனை மரமாக மாற்றுவார்.

1351. மற்றைய உயர்ந்த மரக்கூட்டங்களையும், பறவைகளையும், இரண்டு கொம்பினையுடைய யானை முதலிய பல விலங்குகளையும் ஒன்று மற்றொன்றாக மாறுமாறு ஞானப் பார்வை பார்த்தருளுவார். கண்ட இளைஞர் 'நான் பெண்ணாகப் பிறக்கவில்லையே' என்று வருந்தும் வண்ணம் பேரழகோடு கூடிய ஆண் வடிவோடு அமர்ந்திருப்பார்.

1352. பாதாளத்திலும், பொன்னுலகத்திலும் உள்ள பொருள்கள் இம் மண்ணுலகில் உண்டாகுமாறு செய்வார். இவ்வாறு அளவில்லாத வித்தைகளைச் சிவலோக நாயகனும், பார்வதி தலைவனும் மதுரை நாயகனுமாகிய சோமசுந்தரக் கடவுள் திருவிளையாடலாகப் புரிந்து இருந்தருளினார்.

1353. சித்த யோகிகள் செய்கின்ற ஆடன்மேற் செலுத்தி
வைத்த கண்களுஞ் சிந்தையும் வாங்கலர் திகைத்துத்
தத்த மாள்வினைத் தொழின்மறந் திருந்தனர்
தகைசால்
முத்த வேதியர் ஆதிய முதுநகர் மாக்கள்.

1354. இனைய செய்தியை உழையரால் இறைமக னறிந்தான்
அனைய சித்தரை அங்ஙனங் தருகென வடுத்தார்
தனைய கற்றினன் சித்தரைச் சார்ந்தவர் தாமும்
வினைய வென்றவ ராடலை வியந்துகண் டிருந்தார்.

1355. அமைச்சர் தங்களை விடுத்தனன் அமைச்சருஞ் சித்தர்
தமைச்ச ரண்பணிந் தரசன்முன் வருகெனத் தவத்தோர்
எமக்கு மன்னனா லென்பய னெனமறுத் திடமண்
சுமக்கு மன்னவன் நம்மவர் தொழுதனர் போனார்.

வேறு

1356. மன்னன்மு னமைச்சர் சித்தர் மறுத்துரை மாற்றங் கூற
முன்னவன் அருள்பெற்று இம்மை மறுமையு முனிந்த
யோகர்
இந்நில வேந்தர் மட்டோ இந்திர னயன்மா லேனோர்
தன்னையு மதிப்ப ரோஎன் றிருந்தனன் றரும
வேந்தன்.

எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற் படலம்
முற்றிற்று

1353. மதுரைப் பகுதியில் உள்ள மாந்தர்கள் யாவரும், யோக சித்தமூர்த்திகள் செய்தருளும் திருவிளையாடல் மேல் செலுத்தி வைத்த கண்களையும் உள்ளத்தையும் மீட்க முடியாதவர்களாய்த் திகைப்புற்றுத் தத்தமக்குரிய தொழில் முயற்சிகளை மறந்திருந்தனர்.

சித்தமூர்த்தி அரசன் முன்வர மறுத்தல்

1354. இந்தச் செய்தியை அபிடேக பாண்டியன் ஒற்றர் மூலம் அறிந்தான். "அந்த வித்தகச் சித்தரை இங்கு அழைத்து வாருங்கள்." என்று அருகில் இருந்த சிலரை விடுத்தான். அவர்கள் சித்தரை அடைந்து, இயல்பாகவே பாசங்கள் நீங்கிய அச்சித்தரின் திருவிளையாடல்களைப் பார்த்து வியந்து தம்மை மறந்திருந்தனர்.

1355. அவர்கள் வராமையைக் கண்ட பாண்டியன் பின்னும் அமைச்சர்களை விடுத்தான். அமைச்சர்கள் சித்த மூர்த்தியை அடைந்து வணங்கி, "அரசன் முன் எழுந்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சித்தமூர்த்தி, "எனக்கு மன்னவனால் எய்தும் பயன் யாது?" என்று கூறி மறுத்து விட்டார். அமைச்சர்கள் சித்த மூர்த்தியைத் தொழுது சென்றனர்.

1356. அமைச்சர்கள் பாண்டியன் முன் சென்று, சித்த மூர்த்திகள் வர மறுத்த செய்தியினைக் கூறினார்கள். அதைக் கேட்ட அறநெறி மாறாத பாண்டியன், அமைச்சர் களை நோக்கி, ''முதல்வனாகிய சிவபெருமான் திருவருளைப் பெற்று, இம்மை மறுமைப் பயன்களை வெறுத்த யோகிகள் இந்திரன், பிரம்மன், திருமால், தேவர்கள் முதலியவர்களையும் மதியாரே! இப்பூமியை ஆளும் மன்னரையா மதிப்பார்!'' என்று சொல்லிக் கொண்டு வாளா இருந்தான்.

எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற் படலம் முற்றிற்று.

21. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்

1357. செல்லார் பொழில்சூழ் மதுராபுரிச் சித்தர் எல்லாம்
வல்லா ரவரா டலையா ருரைசெய்ய வல்லார்
எல்லாரும் வியப்புற வித்தனிச் சித்த சாமி
கல்லானை தின்னக் கரும்பீந்த கதையுஞ் சொல்வாம்.

1358. பின்நேயம் அச்சம் பெருகப்பெரி யோரை எண்ணா
தென்னே யெளியார் எனயானிகழ்ந் திங்ங னீண்டச்
சொன்னே னவர்க்கென் குறைஎன்னில் துருவி நானே
தன்னே ரிலாதார் தமைக்காணத் தகுவனென்னா.

1359. ஆனந்த சித்தர் தமைக்காண்பலென்று அன்பு கூர்ந்த
மீனந் தரித்த கொடிவேந்தன் குறிப்பு நோக்கி
மோனந் தரித்த சிவயோகரு முந்தித் தம்பொன்
மானந் தனக்கு வடமேற்றிசை வந்தி ருந்தார்.

21. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்

1357. மேகங்கள் தவழும் சோலைகள் சூழ்ந்த மதுரைப் பதியில் எழுந்தருளியுள்ள சித்த மூர்த்திகள் எல்லாம் செய்ய வல்லார் ஆகலின், அவர் செய்தருளும் திருவிளையாடலை உரைக்க வல்லார் யார்? இனி அதிசயமடைய ஒப்பற்ற சித்த மூர்த்திகள் கல்லானை, கரும்பினைத் தின்னுமாறு கொடுத்தருளிய திருவிளையாடலைக் கூறுவோம்.

பாண்டியன் சித்தமூர்த்தியைக் காணுதல்

1358. பின்பு அபிடேக பாண்டியன், தன் அன்பும் அச்சமும் பெருக, "நான் பெரியோரை நன்கு மதியாது எளியாரைப் போலக் கருதி அவமதித்து இங்கு வரும்படிச் சொல்வித்தேன். என் அறியாமை இருந்தவாறு என்னே! என்னை நாடி வரத்தக்க குறைபாடு அவருக்கு யாதுளது? ஆதலின் அச்சித்தமூர்த்திகளை நானே தேடிச் சென்று காணத் தக்கவனாவேன்" என்று கருதினான்.

1359. ஆனந்த வடிவாகிய சித்தமூர்த்திகளை தரிசிப்பேன் என்று அன்பு மிகுந்த அபிடேக பாண்டியனது உள்ளக் குறிப்பினை அறிந்த, மௌனம் நிலையினைப் பூண்ட சிவயோகியாகிய சித்தமூர்த்திகளும் முன்னதாகவே தமது இந்திர விமானத்திற்கு வடமேற்குத் திசையின்கண் எழுந்தருளியிருந்தார்.

1360. அருகாத செல்வத் தவனன்றுதைத் திங்க டோற்றம்
வருகால மாக மதுரேசனை வந்து வந்தித்
துருகு ஆதரத்தாற் கழிந்துள்வல மாக மீள
வருவான் அவன்முன் வருகாஞ்சுகி வன்கண் மாக்கள்.

1361. சீறிட்ட வேங்கை யதள்சேக்கையர் சீறி ஐந்தும்
பாறிட்ட வேடர் யோகபட்டத்தர் கட்டங் கத்தில்
ஏறிட்ட கைய ரிறுமாந்திருப் பாரை நோக்கி
மாறிட்டு நீக்கி யெழப்போகென வந்து சொன்னார்.

1362. பின்னா வருதென் னர்பிரான்பெரி யோரை நோக்கி
என்னாடு நும்மூ ரூமக்கென்வரும் யாது வேண்டும்
நுந்நாம மேது நுவல்மின்என வைய ரெந்த
நன்னாடு மெந்த நகருள்ளுந் திரிவம் அப்பா.

1363. ஆனாலு மிப்போ தணிகான்மிர நாட்டிற் காசி
தானா மிருக்குந் தலமாகும் அநாதர் ஆகி
ஆனாத பிச்சைப் பெருவாழ் வுடையார் நமரா
நாணாளும் விஞ்சை நடாஅய்த்திரி சித்த ரேம்யாம்.

1364. ஆனந்த கானந் தொடுத்திங்குள ஆன சைவத்
தானம் பலவுந் தொழுகிற்பா மாகி வந்தேம்
ஞானந் தருமிந் நகரிம்மையிற் சீவன் முத்தி
மானந்த மான பரமுத்தி மறுமை நல்கும்.

பாண்டியனும் சித்த மூர்த்திகளும்

1360. அன்று தை மாதம் தோன்றும் முதல் நாள். (தைச்சங்கராந்தி புண்ணிய காலம்) ஆதலின், குறையாத செல்வத்தையுடைய பாண்டியன், வந்து மதுரை நாயகனை வணங்கி, உருகும் அன்புடன் உள்ளே வலமாக வரும்போது, அவனுக்கு முன்னர் வருகின்ற சட்டையிட்ட மெய்க் காப்பளர்,

1361. சீரிய வேங்கைத் தோல் ஆசனத்தில் அமர்ந்து, ஐம்புலன்களையும் வென்ற திருவேடம் தாங்கி, யோக பட்டிகை அணிந்து, மழுப் படையின்மேல் திருக்கரத்தினை வைத்துக்கொண்டு இறுமாப்புடன் வீற்றிருக்கும் சித்த மூர்த்தியைப் பார்த்து, அவர் அருகில் வந்து தம்பிரானை நீட்டி, "இவ்விடத்தை விட்டு எழுந்து போகக் கடவீர்" என்றனர்.

1362. பின்னாக வரும் தென்னவர் தலைவனான பாண்டியன் அச்சித்தமூர்த்திகளை நோக்கி, "நுமது நாடும் ஊரும் எவை? உமக்கு என்ன கைவரும்? உமக்கு வேண்டியது யாது? உமது பெயர் யாது? சொல்வீராக" என்று வினவினான். அதற்குச் சித்த மூர்த்திகள் "அப்பா!" நாம் எந்த நாட்டிலும், எந்த நகரிலும் திரிவோம்.

1363, "ஆயினும் இப்போது நாம் இருக்கும் இடம் காஷ்மீர நாட்டின்கண் உள்ள காசி மாநகரம் ஆகும். ஒன்றும் பற்றும் இல்லாதவராய்ப் பிச்சை எடுக்கின்ற பெரு வாழ்வினையுடைய அடியார்களே நம் உறவினர் ஆவர். நாம் எந்த நாளும் வித்தை செய்து திரிகின்ற சித்தராவோம்.

1364. "தில்லைவனம் முதல் இங்குள்ள சிவத்தலங்கள் பலவற்றையும் வணங்க வந்தோம். ஞானத்தைப் பாலிக்கும் இம் மதுரைநகர் இம்மையிலே சீவன் முக்தியையும், மறுமையிலே பரமுக்தியையும் அளிக்கும்.

1365. ஈண்டுள்ள வர்க்கெம் விளையாடலைக் காட்டி இச்சை
வேண்டும் பலசித் தியுநல்குவம் வேதம் ஆதி
மாண்டங்கும் எண்ணெண் கலைஞானமும் வல்லம் அல்லாற்
சேண்டங்கு மெல்லாப் பொருளும்வல சித்த ரேம்யாம்.

1366. உன்னால் நமக்குப் பெறல்வேண்டுவ தொன்றும் இல்லை
தென்னா எனஉண் ணகைசெய்தனர் சித்த யோகர்
மன்னா மிவர்தம் மிறுமாப்புஞ் செருக்கும் வீறும்
என்னா ளவிட் டறிவேனென எண்ணித் தேர்வான்.

1367. தேரும் பொழுதோ ருழவன்னொரு செல்வக் கன்னல்
ஆருங் கமுகென்ன வயிர்ப்புறக் கொண்டு தாழப்
பாருந் திசையும் புகழ்பங்கயச் செங்கை தாங்கி
நீரும் பிறையுங் கரந்தார்தமை நேர்ந்து சொல்வான்.

1368. வல்லாரில் வல்லேம் எனஉம்மை மதித்த நீரிக்
கல்லானைக் கிந்தக் கரும்பை யருத்தின் எல்லாம்
வல்லாரு நீரே மதுரைப்பெரு மானுநீரே
அல்லா லெவர்நும் மனம்வேட்டதளிப்பனென்றான்.

1365. "இங்குள்ளவர்களுக்கு எமது விளையாடலைக் காண்பித்து, அவர்கள் விரும்பும் பல பேறுகளை அவர் விருப்பத்தின்படியே அருளுவோம். மறை முதலிய அறுபத்து நான்கு கலை ஞானங்களிலும் வன்மை யுடையோம். அன்றியும் சேய்மையில் உள்ள பொருள் களனைத்தையும் அண்மையில் வரச் செய்தலில் வல்ல சித்தர் யாம்.

1366. "பாண்டியனே! உன்னிடத்தே நாம் பெறத்தக்க பொருள் ஒன்றும் இல்லை" என்று கூறிப் புன்னகை புரிந் தருளினார். சித்தமூர்த்திகள் மொழிந்தவற்றைக் கேட்ட பாண்டியன், "இவருடைய இறுமாப்பும் செருக்கும் பெருமிதமும் ஆகிய இவற்றை யாதினால் அளந்து அறிவேன்?" என்று எண்ணி ஆராய்ந்தறிவானாயினான்.

கல்லானைக்குக் கரும்பு அளித்தல்

1367. அப்பொழுது ஓர் உழவனானவன், இது கமுகோ என்று எண்ணும்படி செழுத்தோங்கிய ஒரு கரும்பினைக் கையிற் கொண்டு வந்து வணங்க, அரசன் அக்கரும்பினை, புவியும் திசைகளும் புகழும்படியான தாமரை மலர் போன்ற சிவந்த கையில் வாங்கிக்கொண்டு, கங்கையையும் மதியையும் ஒளித்து வந்த சித்த சுவாமிகளைப் பார்த்து கூறத் தொடங்கினான்.

1368. "வல்லோர்களில் வல்லோம் என்று உம்மை மதித்துக் கொண்டவரே! நீர் இங்கு நிற்கும் இக்கல்லானைக்கு இக்கரும்பினை உண்பித்தால், எல்லாம் வல்ல சித்தரும் நீரே! மதுரையில் எழுந்தருளி இருக்கும் சோம சுந்தரக் கடவுளும் நீரே! அன்றி வேறு யாவர்? மேலும் நமது மனம் விரும்பியதை அளிப்பேன்" என்று கூறினான்,

1369. என்னா முகிலைத் தளையிட்டவன் கூறக் கேட்டுத்
தென்னா வருதி யெனப்புன்னகை செய்து சித்தர்
நின்னால் வருவ தெமக்கேது நினக்கு நாமே
உன்னாசை தீரத் தருகின்ற தலாமல் உண்டோ.

1370. செல்லா வுலகத் தினுஞ்சென்றொரு விஞ்ஞை கற்றோர்
பல்லாரு நன்கு மதிக்கப்பயன் எய்து வார்கள்
எல்லா மறிந்த வெமக்கொன்றிலு மாசை யில்லை
கல்லானை கன்னல் கறிக்கின்றது காண்டி யென்றார்.

1371. கடைக்கண் சிறிதே குறித்தார்முன் கடாக்கல் யானை
மடைக்கண் டிறந்து மதமூன்றும் வழிய விண்வாய்
அடைக்கும் படிவாய் திறந்தார்த்துப் புழைக்கை நீட்டித்
தொடைக்குன் றனான்கைச் சுவைத்தண்டைப் பறித்த
தன்றே.

1372. பறித்துக் கடைவாய் வழிசாறளி பாய்ந்து நக்கக்
கறித்துக் குதட்டிப் பருகிக்கரம் ஊச லாட
நெறித்துத் தருக்கி நிழல்சீறி நிமிர்ந்து நிற்ப
மறித்துக் கடைக்கண் குறித்தார்பினு மாயம் வல்லார்.

1369. இவ்வாறு மேகத்தைச் சிறையிட்ட பாண்டிய மன்னன் சொன்னவுடன், அம்மொழியைச் சித்த மூர்த்திகள் புன்னகை புரிந்து, "பாண்டியனே! வருக! எமக்கு உம்மால் வரும் பயன் யாது உளது? உமது ஆசை தீரும் வண்ணம் நாமே உமக்கு வேண்டுவனவற்றைத் தருகின்றதல்லாமல் வேறு உண்டோ?

1370. ஏதேனும் ஒரு விந்தையினைக் கற்றோர் செல்லுதற்கரிய உலகத்திலும் சென்று பல்லோரும் நன்கு மதிக்க அவ்வித்தையைக் காட்டிப் பயன் அடைவர்; ஆனால் எல்லா வித்தைகளும் அறிந்து எமக்கு ஒன்றிலும் ஆசை இல்லை. கல்லானை இதோ கரும்பினைக் கடிக்கின்றதைக் காண்பாய்" என்று கூறினார்.

கல்லானை கரும்பு தின்னுதல்

1371. பின்பு அந்தக் கல்லானை மீது சித்தமூர்த்திகள் சிறிது கடைக்கண் சார்த்தியருளினார். என்ன ஆச்சரியம்! உடனே மதத்தினையுடைய அக்கல்லானையானது மடை போல் கண் திறந்து மூன்று மதங்களும் ஒழுக மேகத்தின் வாய் அடைக்குமாறு வாய் திறந்து பிளறியது; தொளை யினையுடைய துதிக்கையினை நீட்டி, மாலையை அணிந்த மலையை ஒத்த பாண்டியனது கையில் இருந்த கரும்பைப் பிடுங்கியது.

1372. அவ்வாறு பிடுங்கி, வண்டுகள் மொய்த்துப் பருகும்படி கடைவாயில் கருப்பஞ்சாறு வழிந்தோட கடித்து மென்று தின்றது. துதிக்கை ஊஞ்சல் போல ஆடத் தருக்குற்று நிழலைச் சீறி நிமிர்ந்து நின்றது. பின்னர் சித்த மூர்த்திகள் கல்யானையை மீண்டும் சிறிது கடைக்கண் சாத்தியருளினார்.

1373. மட்டுற்ற தாரான் கழுத்திற்கண்ட மாலை தன்னை
எட்டிப் பறித்தது இகல்காஞ்சுகி மாக்கள்சீறிக்
கிட்டிக் களிற்றைப் புடைப்பான்கிளர் கோல் கொண்டு ஓச்சச்
சிட்டத் தவர்கண் சிவந்துஆனையைச் சீறி நோக்க.

1374. கண்டா வளியைக் களிறுண்டது கண்கள் சேப்பக்
கொண்டான் அரசன் சிவயோகரிற் கோப மூளத்
தண்டா வரசன் தமருட்டறு கண்ணர் சீறி
வண்டா ரிதழி மறைத்தாரை அடிக்க வந்தார்.

1375. அப்போ திளமூ ரலரும்பியச் சித்த சாமி
கைப்போ தமைத்துக் கடிந்தோர்தமை நின்மின் என்ன
மைப்போ தகமன் னவர்வைத்தடி பேர்க்க லாற்றாது
ஒப்போ தரிய நிலையோவியம் போல நின்றார்.

1376. மத்தக் களிற்றான் வெகுளித்தழல் மாறி யன்பு
பொத்தப் புதைந்த மனத்தற்புதம் பொங்கிச் சோரச்
சித்தப் பெருமான் அடிமாமுடி தீண்டப் பாச
பெத்தத் தமியேன் பிழையைப்பொறு மென்று வீழ்ந்தான்.

கல்லானை அரசனின் கண்டமாலையைப் பறித்தல்

1373. உடனே கல்யானை, மணம்மிக்க மாலையை அணிந்த பாண்டியன் கழுத்திலுள்ள முத்தாலாகிய கண்ட மாலையை எட்டிப் பிடுங்கியது. கோபம் கொண்ட மெய்க் காப்பாளர் யானையை அடிப்பதற்கு நெருங்கிக் கோலினைக் கொண்டு ஓச்ச, சித்தமூர்த்திகள் கண்சிவந்து யானையைக் கோபத்துடன் பார்த்தார்.

1374., உடனே கல்யானை முத்துமாலையை உண்டு விட்டது. மன்னன் கண் சிவக்கக் கோபம் கொண்டான். அரசனை விட்டு நீங்காத மெய்க்காப்பாளர்கள் கோபத்துடனும் அஞ்சாமலும், செழுமிய கொன்றை மாலையை மறைத்து வந்த சித்தமூர்த்திகளை அடிக்கும் பொருட்டு நெருங்கி வந்தனர்.

1375. அவ்வாறு வரும்போது அச்சித்த மூர்த்திகள் புன்னகை புரிந்து கோபத்துடன் வந்தவரை கையமர்த்தி "நில்லுங்கள்" என்று கூறினார். உடனே கரிய யானையை ஒத்த அவ்வீரர்கள் வைத்த அடியைப் பெயர்க்கமுடியாது ஒப்புச் சொல்லமுடியாத ஓவியம் போன்று நின்றார்கள்.

பாண்டியன் வேண்டுகோள்

1376. மத மயக்கத்தையுடைய யானையையுடைய பாண்டியன் அதுகண்டு கோபம் மாறி, மனத்திலே அன்பும் அற்புதமும் பொங்கி வழிய, சித்த மூர்த்திகளின் திருவடி களில் தன் முடிபடும் வண்ணம் விழுந்து வணங்கி, "பாசத்தால் கட்டுண்ட எளியேன் பிழையைப் பொறுத்தருளுக" என்று விண்ணப்பம் செய்தான்.

1377. அன்புக் கிரங்குங் கருணைக்கட லான வையர்
இன்புற்று வேண்டும் வரங்கேளெனத் தாழ்ந்து வேந்தன்
தன்புத் திரப்பே றருள்வாயென நல்கிச் செங்கை
வன்புற்ற வேழ மிசைவைத்தரு ணாட்டம் வைத்தார்.

வேறு

1378. தழைக்கு நீள்கதிர்த் தண்முத்த மாலையைப்
புழைக்கை நீட்டிக் கொடுத்தது போதகம்
மழைக்கை நீட்டினன் வாங்கின னீதியிற்
பிழைக்க லாத பெருந்தகை வேந்தனே.

1379. முத்த மாலிகை வாங்குமுன் முன்னின்ற
சித்த சாமி திருவுருக் கண்டிலன்
மத்த யானை வடிவமும் ஏனைய
ஒத்த தாக உரவோன் வெருவினான்.

1380. இந்த வாடல் எமக்குயி ராயவிவ்
வந்த மில்லி யருள்விளை யாட்டெனா
முந்தை வேத முதலவனை மீளவும்
வந்து வந்தனை செய்தனன் மன்னனே.

1381. முழுது ணர்ந்த முதல்வநின் னாடலை
இழுதை யேனறி யாதளந் தேன்எனா
அழுதி றைஞ்சி யபராத மீந்துகை
தொழுது நின்று துதிக்கத் தொடங்கினான்.

1377. அன்புக்கு இரங்கும் அருட்கடலான பெருமான் மகிழ்வடைந்து, "நீ வேண்டும் வரத்தினைக் கேள்", என்று பணித்தருளினார். உடனே அபிடேக பாண்டியன், "நன்மை வாய்ந்த புதல்வர் பேற்றினை அளிப்பாயாக!" என்று வேண்டினான். சித்தமூர்த்திகளும் அவ்வாறே அருள் புரிந்து தமது திருக்கரத்தை வலிமை மிக்க யானையின் மேல் வைத்து அருள் நோக்கம் புரிந்தருளினார்.

1378. உடனே கல் யானையானது தனது தொளையை யுடைய துதிக்கையை நீட்டி, தழைக்கின்ற தண்ணிய ஒளியையுடைய முத்து மாலையைப் பாண்டியனிடம் கொடுத்தது. நீதியையுடைய பெருந்தன்மை மிக்க பாண்டிய மன்னன் முகில் போலும் தம் கையினை நீட்டி அதனை வாங்கினான்.

1379. அவ்வாறு வாங்குவதற்கு முன் எதிரே நின்ற சித்த மூர்த்தியின் திருவுருவத்தைக் காணாதவனாயினான். மத மயக்கத்தினையுடைய யானையின் உருவமும் அங்கு நின்ற கல் யானைகளின் உருவமே போன்றதாகியது. வலிமை மிக்க மன்னன் அஞ்சினான்.

பாண்டியன் சோமசுந்தரக் கடவுளைத் துதித்தல்

1380. அவ்வாறு அஞ்சிய பாண்டிய மன்னன், "இத் திருவிளையாடல் எம் உயிருக்கு உயிராக விளங்கும் அழிவில்லாத சோமசுந்தரக் கடவுளின் அருள் விளையாடலே" என்று தெளிவடைந்து முன்னவனாகிய வேத நாயகனை மீண்டும் வந்து வணங்கினான்.

1381. "முற்றும் உணர்ந்த முதல்வனே! அறிவில்லா தவனாகிய நான் அறியாமையால் உமது திருவிளை யாடலை அளந்தறியத் தொடங்கினேன்" என்று அழுது இறைஞ்சி அபராதம் கொடுத்துக் கைகூப்பி நின்று துதிக்கத் தொடங்கினான்.

வேறு

1382. வேதியாய் வேத விளைபொருளாய் வேதத்தின்
நீதியாய் நீதி நெறிகடந்த நீளொளியாய்
ஆதியா யீறாய் நடுவா யவைகழிந்த
சோதியாய் நின்றாயென் சோதனைத்தோ நின்னியல்பே.

1383. நின்னால் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும்
பன்னாள் அருச்சித்தும் பாதம் தலைசுமந்தும்
உன்னாமம் வாசித்து முன்னையறி யேனென்று
சொன்னா லடியனேன் சோதனைத்தோ நின்னியல்பே.

வேறு

1384. பெரியதினும் பெரியதுமாய்ச் சிறியதினுஞ் சிறியதுமாய்
அரியதினும் அரியதுமா யெளியதினு மெளியதுமாய்க்
கரியதுமாய்க் காண்பானுங் காட்சியுமா யவைகடந்த
துரியமுமாய் நின்றாயென் சோதனைத்தோ
நின்னியல்பே.

வேறு

1385. என்றுபல முறைபழிச்சி மனைஎய்தி விக்ரமனை ஈன்று
பன்னாட்
தொன்றுமுறை கோலோச்சி விக்கிரமன்
கவனமிசைப்பார் சுமத்திப் பாசம்
வென்றுகளைந் தருட்சித்த சாமிதிரு வருணோக்கால்
விளைபே ரின்ப
மன்றல்மது வீழ்வண்டிற் கலந்திருந்தான் அபிடேக
மாறன் மன்னோ.

கல்லானைக்குக் கரும்பருத்திய படலம் முற்றிற்று

1382. "வேதத்தை அருளியவனே! வேதத்தில் விளையும் பயனே! வேதம் கூறிய நீதியானவனே! அவ்வேத நெறியைக் கடந்த நீள் ஒளியானவனே! முதலாகியும், முடிவாகியும், இடையாகியும் நின்றவனே! இங்ஙனமாகிய நினது தன்மை என் சோதனையில் அகப்படக்கூடியதோ?

1383. "உன்னால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட வேதமானது உன் திருவடிகளை வணங்கியும், பல நாள் அருச்சனை புரிந்தும், நின் திருவடிகளைத் தலையில் சுமந்தும் உன் திருப் பெயர்களைக் கூறியும், 'உன்னை அறிகிலேன் என்று முறையிடும் தன்மையுடையதாய் உள்ளது. அங்ஙனம் இருக்க நினது தன்மை அடியேனது சோதனையில் அகப்படக் கூடியதோ?

1384. "பெரிதினும் பெரியதாகியும், சிறியதைவிடச் சிறியதாகியும், அரியதைவிட அரியதாகியும், எளியதைவிட எளியதாகியும், சான்றாகியும், காண்பவனும், காட்சியும் ஆகியும், அவற்றைக் கடந்த துரியமுமாகி நின்றவனே! இவ்வாறு உள்ள நினது தன்மை அடியேனுடைய சோதனையில் அகப்படக் கூடியதோ?"

பாண்டியன் இறைவன் திருவடி அடைதல்

1385. என்று பலமுறை துதித்துத் தனது அரண்மனையை அடைந்தான். "விக்கிரமன்" என்னும் புதல்வனைப் பெற்றான். பலநாள்வரை பழைய முறைப்படியே செங்கோலை நடத்தி விக்கிரமனுக்கு முடி சூட்டி அரசினை அளித்துவிட்டுப் பாசத்தினை வென்று, அருளுருவாகிய சித்த மூர்த்தியின் திருவருட் பார்வையால் விளைந்த பேரின்பத்தின் கண், மணம் மிக்க தேனில் விழுந்த வண்டினைப் போல் அபிடேகப் பாண்டியன் இரண்டறக் கலந்திருந்தான்.

கல்லாணைக்குக் கரும்பருந்திய படலம் முற்றிற்று.

22. யானை எய்த படலம்

1386. கட்டவிழ் கடுக்கையர் கலானைகழை தின்ன
இட்டதிது பஞ்சவன் இடத்தமண ரேவி
விட்ட மத யானைவிழ மேலவர் புரத்தைச்
சுட்டகணை விட்டுயிர் தொலைத்தமுறை சொல்வாம்.

1387. விக்கிரம பாண்டியன் வெலற்கரிய செங்கோல்
திக்குநில னுந்திறைகொள் செல்வநிறை வெய்த
அக்கிரம வெங்கலி அரும்பகை யொதுங்கச்
சக்கரம் உருட்டியிடர் சாய்த்துமுறை செய்வான்.

1388. புத்தரம ணாதிய புறக்களை அகழ்ந்து
நித்தமறை ஆகம நெறிப்பயிர் வளர்த்து
மெய்த்தவிதி பத்தியின் விளைந்தபயன் யாருந்
துய்த்திட மநுத்தொழில் நடத்திவரு தூயோன்.

1389. மருவிதழி யானுறையும் வானிழி விமானத்
தருகுவட பக்கமுற ஆலயம் எழுப்பி
உருவரு விரண்டினையு மொருவிவரு சித்தர்
திருவுருவு கண்டுபணி செய்தொழுகு நாளில்.

22. யானை எய்த படலம்

1386. முருக்கவிழ்ந்த கொன்றை மலர் மாலை அணிந்த சித்த மூர்த்திகள் கல்லானையானது கரும்பினைத் தின்னுமாறு அளித்தது இத்திருவிளையாடலாகும். இனி விக்கிரம பாண்டியன் மேல் சமணர்கள் ஏவிய மதயானை விழுமாறு பகைவரின் திரிபுரத்தையும் அம்பை விட்டு நீறாக்கி அதன் உயிரைப் போக்கிய திருவிளையாடலைக் கூறுவோம்.

விக்கிரம பாண்டியன் ஆட்சி

1387. பிறரால் வெல்லுதற்கரிய செங்கோலையுடைய விக்கிரம பாண்டியன் எட்டுத் திக்குகளிலும் புவி முழுவதிலும் உள்ள அரசர்களாலே திறையாகத் தரப்படும் செல்வம் நிறைவு எய்த, கொடிய கலியாகிய வறுமைத் தீமை முதலிய பகை ஓட, தனது ஆணையாகிய செங்கோலைச் செலுத்திக் குடிகளின் துன்பத்தைப் போக்கி முறை செய்வானாயினான்.

1388. அப்போது புத்தம், சமணம் முதலிய புறச் சமயங்களாகிய களைகளைக் களைந்து எறிந்து, அழியாத வேத நெறியிலும், சிவாகம நெறியிலும் உணர்த்தப்படும் சைவமாகிய பயிரைச் செழித்து வளரச் செய்தான். மெய்ம்மையுடைய விதி மார்க்கத்தினும், பக்தி மார்க்கத் தினும் யாவரும் வழுவாது ஒழுகி, அவற்றின் பயன்களை நுகர மனுமுறைப்படி தூயவனாகிய பாண்டியன் அரசு புரிந்து வந்தான்.

1389. மணம்மிக்க கொன்றை மலர் மாலையை அணிந்த சோமசுந்தரக் கடவுள் வீற்றிருக்கும் விண்ணுல கினின்றும் இறங்கிய விமானத்தின் அருகில் வடபாகத்தில் திருக்கோயில் ஒன்றை எடுப்பித்தான். அதனால் உருவத்தையும், அருவத்தையும் நீக்கி அருளுருக் கொண்டு வந்த சித்த மூர்த்திகளின் திருவுருவத்தை அமைத்து, அதற்குத் தொண்டு செய்து வந்தான்.

1390. செய்யகதி ரோன்வழிய செம்பியன் ஒருத்தன்
கையனவன் வென்றிபயில் காஞ்சிநக ருள்ளான்
பொய்யமணர் கட்டுரை புறத்துறையி னின்றான்
மையின்மதி மாறனொடு மாறுபட நின்றான்.

1391. முடங்கன்மதி செஞ்சடை முடித்துவிடை யேறும்
விடங்கரது சேவடி விழுங்கிய மனத்து
மடங்கனிகர் தென்னனெதிர் வந்துபொர லாற்றா
தடங்கலனொர் வஞ்சனையி னாலட மதித்தான்.

வேறு

1392. அஞ்சனங் கவுஞ்சங் கோவர்த் தனந்திரி கூடக் காஞ்சிக்
குஞ்சரஞ் சைய மேம கூடமே விந்தம் என்னும்
மஞ்சிவர் வரைக ளெட்டும் வைகுறு மமணர் தம்மில்
எஞ்சலில் குரவர்க் கோலை வேறுவே றெழுதி விட்டான்.

1393. வடிவுபோ லுள்ள மெல்லா மாசிருள் புதைய நின்ற
அடிகண்மா ராவா ரெண்ணா யிரவரு மார்த்தார் வேய்ந்த
முடிகெழு வேந்தன் விட்ட முடங்கலை நிமிர்த்து வாசித்
திடிகெழு கார்போற் குன்றின் இழிந்துவே றிடத்திற் செல்வார்.

சோழ மன்னனின் சூழ்ச்சி

1390. இவ்வாறு விக்கிரம பாண்டியன் ஒழுகு நாளில், சிவந்த கிரணங்களையுடையவனாகிய சூரியன் மரபில் வந்த சோழ மன்னன் ஒருவன் காஞ்சி நகரத்தில் இருந்தான். அவன் சமண மதமாகிய புறநெறியில் நின்று பொய்ம்மை யுடைய சமணர்கள் வழியில் ஒழுகுவானாயினான். வஞ்சக னாகிய அச்சோழன் குற்றமற்ற சந்திரன் மரபில் வந்த பாண்டியனோடு பகைமை பூண்டிருந்தான்.

1391. வளைந்த பிறையைச் சடையில் சூடி இடப ஊர்தியில் எழுந்தருளும் அழகராகிய சோம சுந்தரக் கடவுளின் சிவந்த திருவடிகளை எந்நாளும் மனத்தில் கொண்ட சிங்கத்தைப் போன்ற விக்கிரம பாண்டியனை நேரில் வந்து எதிர்த்துப் போரிட ஆற்றாது ஓடி, பகைவனாகிய அச்சோழன் ஒரு சூழ்ச்சியினால் கொல்லக் கருதினான்.

1392. அப்போது, அஞ்சனம், கிரவுஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், அத்தி வெற்பு, சையம், ஏமகூடம், விந்தம் என்று சொல்லப்பட்ட முகில்கள் தவழும் எட்டு மலைகளிலும் வசிக்கும் சமணர்களுள் குறைதலில்லாத ஆசிரியராயினோர்க்கும் தனித் தனியாக ஓலை எழுதி அனுப்பினான்.

1393. தம் வடிவு போன்றே உள்ள முழுதும் அஞ்ஞான மாகிய இருள்மூட நின்ற குரவரான எண்ணாயிரவரும், ஆத்தி மாலை அணிந்து முடிசூடிய சோழ மன்னன் விடுத்த ஓலையைப் பிரித்துப் படித்து, இடிமிக்க முகில்போல மலைகளில் இருந்து இறங்கிக் காஞ்சி நகரை நோக்கிப் புறப்பட்டனர்.

1394. யாவரு மொருங்கு கூடி யிருள்வழி கொள்வ தேய்ப்பக்
காவல்வல் லரணஞ் சூழ்ந்த காஞ்சிமா நகரத் தெய்திப்
பூவலர் தாரான் கோயிற் புறங்கடை புகுந்து வேந்தன்
ஏவலர் விடுப்ப உள்போ யிறைமகன் இருக்கை புக்கார்.

1395. மன்னவன் முடிமேற் பீலி வைத்தனர் ஆக்கங் கூற
அன்னவ னவரை நோக்கி வசியமுன் னாறும் வல்லீர்
தென்னனை யாபி சராஞ் செய்துயிர் செகுத்தா லுங்கட்
கென்னது நாடு பாதி தருவல் போ யியற்று
மென்றான்.

1396. தவம்புரிந் தவமே செய்வார் தாமதற் குடன்பட் டேகி
சிவந்ததெண் டிரைநீர்ப் பாலி நெடுங்கரைக் காத
மூன்றிற்
கவர்ந்தகன் சாலை கோலி யோசனை யகலங் கல்வி
அவம்படு வேள்விக் குண்டங் கோணம் எட்டாகக்
கண்டார்.

1397. விடம்பொதி காட்டம் பெய்து நிம்பநெய் விராய நஞ்சின்
உடம்புடை யுயிரின் கோழுன் கறிப்பொடி யூறு
எண்ணெய்
இடம்பட வாயங் காந்த எரிக்குழி புதையப் பெய்து
கொடும்பழி வேள்வி செய்தார் கொல்லாத விரதம்
பூண்டார்.

1394. அனைவரும் ஒன்று சேர்ந்து இருட் கூட்டம் போல் ஒன்று சேர்ந்து காவலையுடைய வலிய மதில் சூழ்ந்த பெரிய காஞ்சிப் பதியை அடைந்தனர். ஆத்தி மலர் மாலையை அணிந்த சோழனது அரண்மனையின் தலைவாயிலை அடைந்து அரசன் ஏவலர்கள் விடுக்க உள்ளே சென்று அரசன் இருப்பிடத்தை அடைந்தனர்.

1395. அப்போது சோழனுடைய முடியின் மேல் மயில் தோகையை வைத்து ஆசி மொழி கூறினர். சோழ மன்னன் அச்சமணக் குரவர்களைப் பார்தது, "வசியம் முதலிய ஆறு தொழில்களிலும் வன்மை மிகுந்தவர்களே! நீங்கள் அபிசார வேள்வி (மரண வேள்வி) செய்து அவ்விக்கிரம பாண்டியனைக் கொல்வீராகில் என்னுடைய நாட்டில் பாதியை உங்களுக்குத் தருவேன். சென்று அதனைச் செய்யுங்கள்" என்று கூறினான்.

அபிசார வேள்வி

1396. புறத்திலே தவம் செய்து, அகத்தில் அவமே செய்வாராகிய அச்சமணர்கள், சோழனின் அவ்விருப்பத் திற்கு உடன்பட்டுச் சென்று, உயர்ந்து வரும் தெள்ளிய அலை பொருந்திய நீரையுடைய பாலியாற்றின் நீண்ட கரையில் மூன்று காதம் அளவினையுடைய அகன்ற வேள்விச் சாலை ஒன்றை அமைப்பித்தனர். அதில் ஒரு யோசனை அகலம் தோண்டி எட்டுக் கோணமுடைய ஒரு ஓம குண்டத்தினைச் செய்தனர்.

1397. அங்ஙனம் செய்து, நஞ்சு பொதிந்த எட்டி முதலிய விறகுகளை இட்டு, வேம்பின் நெய் கலந்த நச்சுப் பிராணிகளின் கொழுவிய ஊனையும், மிளகுப் பொடி ஊறிய எண்ணெயையும் வாய் திறந்து, தீயினையுடைய வேள்விக் குண்டம் மறையுமாறு நிறையப் பெய்து, கொல்லாமையாகிய விரதத்தை மேற்கொண்ட சமணர்கள் கொடிய பழியினை விளைவிக்கும் அவ்வேள்வியினைச் செய்தார்கள்.

1398. மாடுள பொதும்பர் நந்தா வனமுள சோலை யுள்ள
காடுள கருகிச் சாயக் கயலுள வோடை யுள்ள
கோடுள வாவியுள்ள குளமுள வறப்பத் தாவிச்
சேடுள முகிலுந் தீயச் சிகையெழு குண்டத் தீயாய்.

1399. கூற்றெழு தோற்றம் போல அஞ்சனக் குன்றம் போலக்
காற்றெழு செவியு நால்வாய் கௌவிய மருப்பு மாறா
ஊற்றெழு மதமும் ஊச லாடிய ஒற்றைக் கையும்
ஏற்றெழு விடம்போற் சீறி யெழுந்ததோர் தறுகண்
யானை.

1400. அந்தமா வேள்வித் தீயு மவியமும் மதமுஞ் சோர
வந்தமா களிற்றை நீபோய் வழுதியை மதுரை யோடுஞ்
சிந்தவே தொலைத்தி யென்னாத் தென்றிசைச் செல்ல
வேவி
முந்தவே விடுத்த மாசு மூழ்குடல் அமணப் பேய்கள்.

வேறு

1401. அருளற்றிரு ளுடலிற்புதை அமணக்கய வர்களுள்
தெருளற்றரு மறையிற்படர் செயலற்றிக பரமெய்ப்
பொருளற்றவன் அனிகந்தொடு புறமொய்த்திட மதமா
வெருளற்றிடி குரலிற்படி வெடிபட்டிட வருமால்.

1398. தாவி எழுகின்ற சிகையினையுடைய வேள்வி குண்டத் தீயினால், பக்கத்தில் உள்ள மரச் செறிவினை யுடைய நந்தவனங்களும், சோலைகளும், காடுகளும், கருகித் தீய்ந்தன. கயல் மீன்கள் உள்ள ஓடைகளும், கரையுள்ள வாவிகளும், குளங்களும், வறண்டன. தூரத்தில் உள்ள மேகங்கள் கூடக் கருகின.

கொல்களிறு தோன்றுதல்

1399. அப்போது கடலின்கண் எழுந்த நஞ்சினைப் போலவும் வெகுண்டு, அஞ்சனக் குன்றம் போன்ற கூற்றுவன் எழுந்த தோற்றம் போலவும், நீலமலை எழுந்த தோற்றம் போலவும், காற்றினை எழுப்புகின்ற பெரிய் காதினையும், தொங்குகின்ற வாயினைப் பற்றிய கொம்பினையும், ஆறாகப் பெருகி ஒழுகும் மதத்தினையும், ஊஞ்சல் போன்று ஆடுகின்ற ஒற்றைத் துதிக்கையையும் உடைய அஞ்சாத யானை ஒன்று எழுந்தது.

1400. அந்த வேள்விக் குண்டத்தில் பெரிய தீயும் அவியுமாறு மூன்று மதங்களும் சொரிய எழுந்த பெரிய யானையை, அழுக்கில் மூழ்கிய உடலையுடைய சமணர்கள், "நீ சென்று விக்கிரமபாண்டியனை மதுரைப் பதியோடும் அழியும்படி செய்வாய்" என்று கூறித் தென்திசைக்கண் முற்படச் செல்லுமாறு ஏவி விடுத்தனர்.

1401. கருணை சிறிதுமின்றிக் கருமையற்ற புதைந்த உடல்போல மற இருளால் மூடப்பெற்ற கீழ்மக்கள் அகத்திலே தெளிந்த அறிவின்றி, அரிய வேதநெறியில் செல்லும் தொழிலின்றி, இம்மை மறுமைப் பயனும் வீடுபேறும் இல்லாதவனாகிய சோழனது சேனையுடன் புறத்தே நெருங்கிவர அந்த மதயானையானது அஞ்சுதலின்றி நிலவுலகம் பிளக்கும் வண்ணம் இடிபோல் பிளிறிக்கொண்டு புறப்பட்டது.

1402. அடியின்னள வகல்பாதல முடியின்னள வண்டம்
இடியின்னள வெழுகார்செவி எறிகாலள வகிலம்
மடியும்மள வுள்கான்மத மழையின்னள வுலக
முடி வின்எழு கடல்கண்ணழ லளவாமுது வடவை.

1403. கூற்றஞ்சிய வருமிக்கரி குரலஞ்செவி முழைவாய்
ஏற்றஞ்செய மடங்குஞ்செவி யெறிகால்வழி விழித்தீ
ஊற்றஞ்செய் மடைவாயுடைந்து ஒழுகுங்கட மதநீர்
நாற்றஞ்செயத் திசைவேழமு நடுக்கஞ்செய்து நலியும்.

1404. இடிக்கும்புயல் வயிற்றைக்கிழித் திடியேற்றினை
யுதிர்க்கும்
வெடிக்கும்பிளி றொலியால்திசை விழுங்கிச்செவி
டாக்குந்
துடிக்கும்புழைக் கையோச்சிவிண் டொடுகுன்றினைச்
சுற்றிப்
பிடிக்குங்கடல் கலக்குந்தனிப் பெருமத்தெனத் திரிக்கும்.

1405. உருமுக்குரல் ஒலியிற்றுள ரொலி விட்டெறி செவியிற்
றிருமுட்பிறை யெயிறிற்றழ லெரிகட்டிருள் உடலிற்
றருமுக்கட வருவித்துர லடியிற்றென நிலமேல்
வருமுக்கிர வடவைக்கனல் வரினொப்பதம் மதமா.

யானை மதுரையை அழிக்கச் செல்லும் காட்சி

1402. அந்த யானை பாதாளத்தைத் தொடும் கால்களையும், வானத்தை முட்டும் தலையையும் கொண்டது. ஏழு மேகங்களின் இடிபோல் பிளிறியது. ஊழிக்காலத்தில் வீசும் காற்றைப் போலக் காதுகளை அசைத்துக் காற்றை எழ வைத்தது. மதமாகிய மழையின் எல்லை உலகம் முடியும் காலத்தில் பொங்கி எழும் ஏழு கடலாகும். கண்களினின்றும் வடவாமுகாக்கினி போலத் தீயினைச் சிந்தியது.

1403. எமனும் அஞ்சும்படி வருகின்ற இந்த யானை, தனது குரலானது மேகத்தைச் சென்று தாக்கவும், அசைகின்ற காதுகள் வீசுகின்ற காற்றின் வழியே விழியின் தீ மூண்டு சென்று ஊறு செய்யவும், மத நீரானது மடைவாயிலிருந்து வெளிப்படும் வெள்ளம் போன்று மிகுந்து வெளிப்பட்டு நாறுதலை உண்டாக்கவும், இதனால் திக்கு யானைகள் நடுக்கமுற்று வருத்தமடைந்தன.

1404. செல்லும் வேகத்தில் அந்த யானையானது மேகத்தின் வயிற்றைக் கிழித்து இடியினை உதிர்க்கும். திசைகள் செவிடாகும்படி முழங்கிப் பிளிறும். துடிக்கின்ற தொளையுடைய துதிக்கையினை வீசி விண்தொடும். குன்றுகளைச் சுற்றிப் பிடிக்கும். கடலைக் கலக்குகின்ற பெரிய மத்தாகிய மந்தர மலையைப் போலச் சுழன்று நிற்கும்.

1405. இடிபோன்ற முழக்கத்தினையுடையது. சூரைக் காற்றை வீசும் செவியினையுடையது. இரண்டு முள் போலும் முனையையுடைய பிறை போன்ற மருப்புகளையுடையது. வெகுளித் தீ எரிகின்ற கண்களையுடையது. இருள்போன்ற உடலையுடையது. அரிய மூன்று மதங்களையுடையது, உரல்போன்ற அடியினையுடையது. அந்த மத யானையானது கொடுமையான வடவைத் தீ நடந்து செல்வது போல நிலவுலகில் நடந்து சென்றது.

1406. தெழிபட்டதிக் கயத்தின்செவி தீயப்பகை யோடும்
வழிபட்டொரு கடுங்கூற்றென வருகுஞ்சர வரவை
விழிபட்டவர் மொழியால் உணர் விரைபட்டலர் வேம்பன்
கழிபட்டவை புனல்போன்மனஞ் சுழன்றானினைந்
தழன்றான்.

1407. மைப்போதகம் பொறையாற்றிய மணிக்கோயில்முன் குறுகாக்
கைப்போதகம் உரித்தான்கழற் காற்போதக முறத்தாழ்ந்
திப்போதகந் தனையுந்தொலைத் தெனைக்காத்தியென் றிரந்தான்
அப்போதகல் வானின்றொரு திருவாக்கெழுந் தன்றே.

1408. விட்டார்வலி கெடநாமொரு விற்சேவக னாகி
ஒட்டார்விட வருவெங்கரி யுயிர்வௌவுது முதனின்
மட்டார்பொழிற் கடிமாநக ரயற்கீட்டிசை மருங்கோர்
அட்டாலைமண் டபஞ் செய்யென வதுகேட்டெழுந்து
அரசன்.

வழுதி வானொலி கேட்டு அட்டாலை மண்டபம் அமைத்தல்

1406. திசைகளின் செவிகள் கருக முழங்கி. பகைமையுடன் ஒரு கொடிய கூற்றுவன் வருகின்றதைப்போல வருகின்ற யானையினைக் கண்ணுற்றவர்கள் விரைந்து ஓடிப் போய் விக்கிரமபாண்டியனிடம் கூறினர். மணம் பொருந்திய வேப்பம்பூ மாலையை அணிந்த விக்கிரமபாண்டியன் அதனைக் கேட்டுச் சுழிபட்டு அலைகின்ற நீர்போல மனம் சுழன்று வருந்தினான்.

1407. உடனே கரிய யானைகளால் சுமக்கப்பட்ட மணிகள் அழுந்திய இந்திர விமானத்தின் முன் சென்று, துதிக்கையையுடைய யானையை உரித்தருளிய சோம சுந்தரக் கடவுளின் வீரக்கழல் அணிந்த திருவடி மலர்களை வணங்கி, "எம்பெருமானே! இந்த யானையைக் கொன்று அடியேனைக் காத்தருள வேண்டும்." என்று குறையிரந்தான். அப்போது அகன்ற வானிலிருந்து ஒரு திருவாக்கு தோன்றியது.

1408. "பாண்டியனே! யானையை ஏவியவர்களின் மனவன்மை கெடுமாறு, நாம் ஒரு வில் ஏந்திய சேவகனாய், பகைவர் ஏவலால் வந்துள்ள அக்கொடிய யானையின் உயிரைக் கவருவோம். முதலில் உனது தேன் நிறைந்த சோலை சூழ்ந்த காவலையுடைய பெரிய நகரத்தின் அருகில் கீழ்த் திசையில் ஓர் அட்டாலை மண்டபம் செய்வாய்" என்று அவ்வாக்கு அருள, அதனைக் கேட்டு அரசன் எழுந்தான்.

1409. அகங்கவ்விய களிப்பெய்திவந் தட்டாலைமண்
டபம்பொன்
நகங்கவ்விய தெனத்தூணொரு நானான்கினில்
எடுத்தே
சகங்கவ்விய புகழான்செய்த தறுகட்கணை மதமா
முகங்கவ்விய விற்சேவகன் வருவானது மொழிவாம்.

வேறு

1410. நீனிற நீத்த நீந்து நிழன்மதி யிரண்டுண்டு என்ன
வானிற வலயச் சங்க வார்குழை நுழைவித் தம்பூம்
பானிற எகினங் காணாப் படர்சடை மறைத்துத்
தோற்றுங்
கானிறை குஞ்சிச் சூட்டிற் களிமயிற் கலாபஞ் சூடி.

1411. கருங்கடன் முளைத்த செக்கர்க் கதிரெனக் குருதிக்
கச்சை
மருங்குற வீக்கிச் சோரி வாயுடை வாளுங் கட்டி
இரங்குநான் மறைகள் ஓங்க இருநிலந் தீண்டு தாளிற்
பொருங்கழல் வளைத்து வாளிப் புட்டிலும் புறத்து வீக்கி.

1412. வீங்கிய தடந்தோள் இட்ட வார்சிலை வில்லி னோடும்
பாங்குறை யிமயப் பாவை பாதியே யன்றி முற்றும்
வாங்கிய வண்ணம் போன்று மல்லது மாலு மோர்பால்
ஓங்கிய வண்ணம் போன்று மொளிநிறம் பசந்து
தோன்ற.

1409. உள்ளத்தைக் கவரும் பெரிய மகிழ்வடைந்தான். அட்டாலை மண்டபம் ஒன்றை, உலகத்தைக் தனதகப் படுத்திய பெருமையுடைய விக்கிரம பாண்டியன், பொன்மலையே உருமாறிச் சுமக்கின்றது என்று கண்டோர் எண்ணுமாறு பதினாறு தூண்களுடன் கட்டி முடித்தான். சோம சுந்தரக் கடவுள் கொலைத் தொழிலையுடைய அம்பானது அம்மத யானையின் முகத்தில் தைத்துருவ வில்லையேந்திய சேவகனாகி வருகின்றதை இனிக் கூறுவோம்.

இறைவர் வில்லை ஏந்திய சேவகராக வருதல்

1410. சோமசுந்தரக் கடவுள், நீலநிறக் கடலில் நீந்திச் செல்லும் இரண்டு குளிர் மதியங்களைப் போல் இரண்டு திருத் செவிகளிலும், வெண்ணிறத்தையுடைய வட்டமாகிய சங்கினால் ஆகிய நீண்ட குண்டலங்களைத் தரித்து, அழகிய தாமரை ம்லரில் வசிக்கும் வெண்ணிறத்தை யுடைய பிரமனாகிய அன்னப் பறவை காணாத படர்ந்த சடையினை மறைத்து மணம் நிறைந்த மயிர் முடியிலே களிக்கின்ற மயிலின் தோகையை அணிந்து,

1411. கரிய கடலில் தோன்றிய செவ்வொளியை யுடைய சூரியன் என்று சொல்லும்படி செந்நிறமுடைய கச்சையினை அரையில் கட்டி, குருதி ஒழுகும் உடைவாளை அதன் புறத்தே செருகி ஒலிக்கின்ற நான்மறைகள் ஏங்க, நிலத்தைத் தீண்டுகின்ற திருவடிகளில் போருக்குரிய வீரக் கழலை அணிந்து, அம்புக் கூட்டினையும் முதுகிலே கட்டி இருந்தார்.

1412. பூரித்த பெரிய தோளோடும் சாத்திய நீண்ட வில்லோடும், உமாதேவியார் இடப்புறமே அன்றி உடல் முழுவதும் பெற்றதைப் போலவும் அல்லது திருமால் வலப்புறம் பெற்றது போலவும், ஒளி வீசும் வடிவம் முழுவதும் பசுமை நிறம் கொண்டு விளங்கினார்.

1413. காமனுங் காமுற் றஞ்சுங் காளையாம் பருவந் தோன்றத்
தாமுல களந்த வென்றித் தனிவிற்சே வகனாய்த்
தோன்றி
மாமறை மகுட மன்ன மண்டபத் தேறித் தென்னர்
கோமகன் இடுக்கண் தீர்ப்பான் குஞ்சர வரவு நோக்கா.

1414. அஞ்சகூ விளிசேய்த் தென்ன வதுவர அறன் இலாதான்
வெஞ்சினக் கோலி னோன்றாள் மிதித்துமெய் குழைய
வாங்கிச்
செஞ்சிலை நெடுநாண் பூட்டித் திருவிரல் தெறித்துத்
தாக்கிக்
குஞ்சர மெட்டு மஞ்சக் கோளரி முழக்கங் காட்டி.

1415. இங்கித நெடுங்கோ தண்ட இடங்கையில் எடுத்து நார
சிங்கவெங் கணைதொட் டாகந் திருகமுன் னிடத்தாள்
செல்ல
அங்குலி யிரண்டா லையன் செவியுற வலித்து
விட்டான்
மங்குலின் முழங்கும் வேழ மத்தகங் கிழிந்த தன்றே.

1416. கொண்டலின் அலறிச் சீறி வீழ்ந்தது கொடிய வேழம்
பிண்டது பாருஞ் சேடன் சென்னியும் பிளந்த தண்டம்
விண்டது போலு மென்னத் துண்ணென வெருவிப்
போன
பண்டைய தருக்கும் வீறும் படைத்தன திசைமால்
யானை.

1413. காமனும் விரும்பி அஞ்சுதற்கேதுவாகிய காளைப் பருவம் தோன்றவும் உலகினைத் தன்னகப்படுத்திய வெற்றி மிக்க ஒப்பற்ற வில்லைத் தாங்கிய வேட்டுவ வீரனாகத் தோன்றி பெருமை மிக்க மறைகளின் முடியை ஒத்த அட்டாலை மண்டபத்தின் மீதேறி, பாண்டியர் தலைவனாகிய விக்கிரம பாண்டியனின் துன்பத்தைத் துடைக்கும் பொருட்டு அந்த யானையின் வரவை எதிர் நோக்கியவாறு நின்றருளினார்.

விற்சேவகர் யானையை வீழ்த்தல்

1414. ஐந்து கூப்பிடு தூரம் என்று சொல்லுமாறு அந்த யானையானது வர, அறநெறியல்லாத அச்சோழனுடைய கொடிய சினத்தினையுடைய கொடுங்கோலைப் போல வில்லைத் தனது வலிய தாளால் மிதித்து உடல் வளைய அதனை வளைத்து நீண்ட நாணினைப் பூட்டினார். அழகிய திருவிரலால் தெறித்துப் பேரொலி செய்து திசை யானைகள் எட்டும் அஞ்சும் வண்ணம் சிங்கத் தொனியைக் காட்டினார்.

1415. இனிய நெடிய வில்லை இடக்கையில் எடுத்து, கொடிய நரசிங்கக் கணையைப் பூட்டி, தனது உடல் திருகவும், இடக்கால் முன்னே செல்லவும், வலக் கால் மண்டலிக்கவும் இரண்டு விரல்களால் செவிவரை நாணினை இழுத்து விட்டார். அக்கணை, விரைந்து சென்று மேகம் போல் முழங்கி வந்த அந்த யானையின் மத்தகத்தைக் கிழித்தது.

1416. கொடிய அக்களிறானது மேகம் போலச்சீறி கதறி நிலத்தில் விழுந்தது. அந்த யானையைத் தாங்கலாற்றாது பூமியும் பிளவுபட்டது. ஆதிசேடனுடைய ஆயிரம் முடிகளும் பிளந்தன. முன்னர் அண்டம் வெடித்தது போலும் என்று கருதித் துணுக்குற்று அஞ்சி ஓடிய திசை யானைகள், பண்டைய செருக்கையும் இறுமாப்பையும் பெற்றன.

1417. புதைபடக் கரித்தோல் போர்த்த புண்ணிய மூர்த்தி தாளால்
உதைபடக் கிடந்த கூற்ற மொத்தது மத்த யானை
சுதைபடு மதிக்கோ வேந்தன் தொழுகுலச் சிறுவன் ஒத்தான்
பதைபடு மமணர் கால படரெனப் படரிற் பட்டார்.

1418. இருள்கிடந் தனைய தானை யிட்டசிந் துரங்கார் மாலை
இருள்முகத் தொதுங்கிச் செல்லும் இரவிசெங் கிரணம் போன்றது
இருண்முழு துண்ணக் காலை யெழுகதிர் வட்ட மன்னது
இருளினை மறைத்த கண்ட னெய்தவாய் பெய்யுஞ் செந்நீர்.

1419. பொய்யறா மனத்தார் தேற்றும் புன்னெறி யொழுக்கம் பூண்ட
வெய்யகோன் கொடுங்கோல் தன்னை வெண்மருப் பாகத் தாங்கி
மையன்மா வடிவங் கொண்டு வந்தவெங் கலியைத் தென்னன்
செய்யகோ லையன் சிங்க வாளியாய்ச் சிதைந்த தன்றே.

1420. உருமுவீழ்ப் புண்ட குன்றி னும்பன்மா னம்பு தொட்ட
பெருமுழை வாயும் வாயும் பெருகின வருவிச் சோரி
கருமுகின் மானச் சேனம் கழுதுகள் பூத மொய்த்த
திருமணித் தடந்தோள் வீங்கத் தென்னவன் உவகை பூத்தான்.

யானை இறந்து கிடந்த காட்சி

1417. மதமயக்கத்தையுடைய யானையானது இறந்து கீழே விழுந்து கிடந்த காட்சியானது, உடல் மறைய யானைத் தோலைப் போர்த்தருளிய அறவடிவினன் ஆகிய சிவபெருமானின் திருவடியால் உதை பட்டுக் கீழே விழுந்து கிடந்த இயமனை ஒத்திருந்தது. அமுதம் போன்ற சந்திரன் மரபில் தோன்றி விக்கிரம பாண்டியன், சிவபெருமானிடம் அடைக்கலமான அழகிய அந்தணச் சிறுவனாகிய மார்க்கண்டனை ஒத்தான். யானை இறந்தது கண்டு பதைக்கின்ற சமணர்கள் கால தூதர்களைப் போலத் துன்பத்தில் அழுந்தினர்.

1418. இறந்து கிடந்த யானையானது இருள் கிடந்தால் ஒத்தது. அதன் நெற்றியில் இட்ட சிந்தூரமானது கரிய மாலைக் காலத்தில் இருளில் ஒருபுறம் காய்ந்து மறையும் சூரியனது சிவந்த கிரணத்தை ஒத்தது, இருளை மறைத்த திருமிடற்றினையுடைய இறைவன் விட்ட கணையினாலே பிளக்கப்பட்ட இடத்திலிருந்து வெளிப்படும் குருதியானது, இருள் முழுவதையும் உண்ணுதற்குக் காலையில் எழுந்த இள ஞாயிற்றை ஒத்தது.

1419. பொய் நீங்காத உள்ளத்தினையுடைய சமணர்களின் மற நெறியில் ஒழுகுதலை மேற்கொண்ட கொடியனாகிய சோழனது கொடுங்கோலை வெள்ளிய கொம்பாக ஏந்தி, மதமயக்கத்தையுடைய யானையின் வடிவத்தைக் கொண்டு வந்த கொடிய கலியை, விக்கிரம பாண்டியனின் செங்கோலானது, சிவபெருமான் விடுத்தருளிய நரசிங்கக் கணை வடிவம் தாங்கி அழித்தது.

1420. இடி விழப்பட்ட மலையை ஒத்த யானையின் வாயினின்றும், அம்பினாலே தொளைக்கப்பட்ட இடத்தினின்றும் அருவி போலக் குருதி பெருகியது. அம்மலையில் தவழும் கரிய முகிலைப் போலப் பருந்துகளும் பிசாசுகளும், பூதங்களும் தசையை உண்ணுதற் பொருட்டு மொய்த்தன. இறந்து கிடந்த யானையைக் கண்ட விக்கிரம பாண்டியன் அழகிய பெரிய தோள்கள் பூரிக்கும்படி மகிழ்வடைந்தான்.

1421. ஆனையின் புண்ணீர் உண்ண அடுத்தகா ருடற்பே
யென்னச்
சேனைபின் செல்லப் போந்த திணியிரு ளமணர்
தம்மை
மீனவன் கண்டு சீற வேந்தவன் குறிப்பி னிற்கும்
மானவெஞ் சினவேன் மள்ளர் வல்லைபோய் முடுக்க
லுற்றார்.

1422. எடுத்தனர் கையிற் றண்ட மெறிந்தனர் மறிந்து
சூழ்போய்த்
தடுத்தனர் சரகந்தூளாத் தகர்த்தனர் பீலி யோடுந்
தொடுத்தனர் உடுத்த பாயைத் துணிபடக் கிழித்துக்
கால்வாய்
விடுத்தனர் மானம் போக்கி விட்டனர் சில்லோர்
தம்மை.

1423. எறியுண்டு செய்த மாயம் இழப்புண்டு சேனை யோடு
முறியுண்டு நடுக்கம் பாவ மூழ்குண்டு மாழ்கிச் சாம்பிப்
பறியுண்ட தலையர் யாரும் பழிப்புண்டு பாயுந் தாமும்
உறியுண்ட கரகத் தோடும் ஒதுங்குண்டு பதுங்கிப்
போனார்.

1424. மாதங்கந் தடிந்தட் டாலை மண்டபத் திருந்த வீரன்
பாதங்கள் கையாற் பற்றிப் பாண்டியன் இரந்து
வேண்டிப்
போதங்கள் கடந்தா யென்றும் பொலியவிங் கிருத்தி
யென்ன
வேதங்கட் கருத்தஞ் சொன்ன வேதிய னதற்கு
நேர்ந்தான்.

1421. யானையின் குருதியைக் குடிப்பதற்கு வந்த கரிய உடலையுடைய பேய்க் கூட்டம் போலச் சோழனது சேனை பின்னே வர, வந்த செறிந்த இருள் போன்ற அமணரைப் பாண்டியன் கண்டு சீறினான். மன்னனாகிய அவன் குறிப்பின்படி ஒழுகும் மானத்தையும் கொடிய சினத்தையும் உடைய வேற்படை வீரர்கள், விரைந்தோடிச் சென்று சமணர்களைத் துரத்தினர்.

1422. கையில் தண்டத்தை எடுத்துச் சிலரை அடித்தனர். சிலரை குறுக்காக வளைந்து தடுத்து அவர் கமண்டலத்தைத் தூளாக உடைத்தனர். சிலர் தொடுத்து உடுத்திய பாயை மயில் தோகையோடும் துண்டாகக் கிழித்து காற்றிலே பறக்க விட்டனர். சிலரை மானத்தைப் போக்கி ஓட்டினர்.

1423. மயிர் பறிக்கப்பட்ட தலையினையுடைய சமணர் அனைவரும், அடிபட்டு, செய்த மாயத்தை இழந்து படைகளோடும் முறிபட்டு நடுக்கத்திலும் பாவத்திலும் மூழ்கி, மயங்கி வாடி, பழிப்படைந்து, பாயும் தாமும் உறியிற் பொருந்திய கமண்டலத்தோடும் ஒதுங்கிப் பதுங்கி ஓடினர்.

1424. யானையைக் கொன்று அட்டாலை மண்டபத்தில் நிகரின்றி இருந்த வீரனாகிய இறைவனது திருவடிகளை விக்கிரம பாண்டியன் தன் கைகளாற் பிடித்துக் கொண்டு குறையிரந்து வேண்டி, “பசு ஞானம் பாச ஞானங்களைக் கடந்தவரே! நீர் இங்கே இக்கோலத்துடன் எப்போதும் வீற்றிருப்பீராக!” என்று வேண்டிப் பிரார்த்தித்தான். வேதங்களுக்குப் பொருள் அருளிச் செய்த அப்பெருமான் அதற்கு இசைந்தருளினான்.

1425. பின்னுஞ்சில் வரங்கள் நல்கப் பெற்றுநான் மாடக் கூடல்
மன்னுஞ்சின் மயனை வந்து வந்தித்து வருநாட் காமன்
என்னுஞ்சின் மலர்ப்பூந் தண்டார் இராசசே கரனைப் பெற்று
மின்னுஞ்சில் லியந்தேர் வேந்தன் மேதினி புரக்கு மன்னோ.

1426 வம்புளாய் மலர்ந்த ஆரான் வரவிடு மத்தக் குன்றிற்
சிம்புளாய் வடிவங் கொண்ட சேவகன் ஏவல் செய்த
அம்புளாய்த் தூணம் விள்ள அன்றவ தரித்த வாபோற்
செம்புளாய்க் கொடிய நார சிங்கமா யிருந்த தன்றே.

வேறு

1427. உலகெலாம் அழித்து மீளவுண்டாக்கு முருத்திரன் வீரசத் தியினிற்
சிலதரித் திறவா வவுணன்மார் பிடந்த சிங்கநா யகனையங் கெய்தி
அலகின்மா தவஞ்செய் துரோமசன் றன்பே ரறியவோர் தீர்த்தமுண் டாக்கி
இலகுபே றடைந்தான் பிரகலா தனுநோற் றீறிலாப் பெருவர மடைந்தான்.

யானை எய்த படலம் முற்றிற்று

1425. பாண்டியன் பின்னும் சில வரங்களைப் பெற்றுக் கொண்டு அரண்மனை அடைந்தான். நான்மாடக் கூடலில் வீற்றிருக்கும் ஞான வடிவினனாகிய சோம சுந்தரக் கடவுளைக் காலம் தோறும் சென்று வழிபட்டு வந்தான். அப்போது மன்மதன் என்று சொல்லப்படும் அழகிய மெல்லிய மலர் மாலையை அணிந்த இராசசேகரன் என்னும் புதல்வனைப் பெற்று மகிழ்ந்தான். பின்னும் உருளைகள் அமைந்த அழகிய தேரினையுடைய விக்கிரம பாண்டியன் புவியினைப் பாதுகாத்து வந்தான்.

நரசிங்கப் பெருமான்

1426. மணம் வீசி மலர்ந்த ஆத்திமாலையை அணிந்த சோழன் வரவிட்ட மதயானையின் மேல் சிம்புட் பறவையாகத் திருவுருக் கொண்டருளிய சோமசுந்தரக் கடவுள் ஏவிய அம்பு, தூணின் உள்ளேயிருந்து அத்தூண் பிளவுபட அதிலிருந்து அப்போது தோன்றிய பெரிய திருவடியாகிய கருடன் தியானிக்கின்ற உக்கிர நரசிங்கமாய் வெளிப்பட்டிருந்தது.

1427. எல்லா உலகங்களையும் அழித்து அவற்றை மீளவும் படைத்தருளும் உருத்திர மூர்த்தியின் வீரசக்திகளுள் சிலவற்றை அவன் அருளால் பெற்று இறவாத அவுணனாகிய இரணியனது மார்பினைப் பிளந்த நரசிம்ம மூர்த்தியை, 'உரோமச' முனிவர் அங்கே வந்து வழிபட்டுப் பெரிய தவங்களைச் செய்து தமது பெயர் விளங்க ஒரு தீர்த்தம் உண்டாக்கிப் பெரும் பேற்றினை அடைந்தார். 'பிரகலாதனும்' அங்கே வந்து தவம் செய்து அழியாத பெரு வரங்களைப் பெற்றான்.

யானை எய்த படலம் முற்றிற்று.

23. விருத்த குமார பாலரான படலம்

1428. தழையு லாங்கையர் ஏவிய தந்திமேல் விடைமேல்
அழகர் சேவகஞ் செய்தவா றறைந்தன மவரே
கிழவ னாகிப்பின் காளையாய்க் கிஞ்சுகச் செவ்வாய்க்
குழவி யாய்விளை யாடிய கொள்கையைப் பகர்வாம்.

1429. தென்னன் விக்கிர மன்புயத் திருநிலச் செல்வி
மன்னி வாழுநாள் மதுரையின் மறையவன் ஒருவன்
அன்ன வன்விரு பாக்கனா மவன்குடி வாழ்க்கை
மின்ன னாள்வட மீனனாள் பெயர்சுப விரதை.

1430. அனையர் தங்களுக் கரும்பெறன் மகவின்றி யநந்தம்
புனித நல்லறஞ் செய்தொழில் ஒழுக்கமும் பூண்டு
நனைய வார்குழ லன்னையர் எழுவர்பா னண்ணி
இனிய மாதவஞ் செய்தொரு பெண்மக வீன்றார்.

1431. பேருங் கௌரியென் றழைத்தனர் பிராயமோர் ஐந்திற்
சாருங் கௌரியும் பிறவிநோய் தணிப்பதற் குறுதி
தேறுஞ் சிந்தையாள் தந்தையை வணங்கியிச் செனனம்
ஈருந் தெய்வத மந்திர மியாதென வினவ.

23. விருத்த குமார பாலரான படலம்

1428. மயில் தோகையை உடைய சமணர்கள் ஏவிய யானையின் மேல் இடப ஊர்தியில் ஏறியருளிய பேரழகரான சோமசுந்தரக்கடவுள் சேவகம் செய்த திருவிளையாடலைக் கூறினோம். இனி அவ்விறைவரே கிழவராகி, காளையாகிப் பின்னர், முருக்கிதழ்போல் சிவந்த வாயினையுடைய குழந்தையாகியும் விளையாடியருளிய திருவிளையாடலைக் கூறுவோம்.

1429. விக்கிரமபாண்டியன் தன் பெரிய தோள்களால் இந்தப் பெரிய நிலவுலகத்தைப் பாதுகாத்து ஆட்சி செய்து வரும் நாளில், அம்மதுரையில் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் 'விரூபாக்கன்'. அவனுடைய மனைவியானவள் அருந்ததி போன்று கற்பில் சிறந்தவள். அவள் பெயர் சுபவிரதை என்பதாகும்.

கௌரியின் சிறப்பு

1430. அவ்விருவரும் நெடுங்காலம் தங்களுக்கு மகப்பேறு இன்மையால் அளவறிந்த தூய புண்ணிய சிவ தருமங்களைச் செய்தனர். பல விரதங்களை மேற்கொண்டனர். தேனினையுடைய நீண்ட கூந்தலை யுடைய அன்னையராகிய 'ஏழு' மாதர்களை வழிபட்டுப் பெரிய தவத்தைச் செய்து ஒரு பெண் குழந்தையைப் பெற்றனர்.

கௌரி பராசக்தி மந்திரம் உச்சரித்தல்

1431. அக்குழந்தைக்குக் 'கௌரி' என்று பெயரிட்டு அழைத்தனர். கௌரிக்கு ஐந்தாண்டுகள் நிறையப் பெற்றன. அவள் பிறவிப் பிணியைப் போக்குவதற்குச் சிறந்த வழியை ஆராயும் சிந்தனையுடையவளாய்த் தன் தந்தையை வணங்கி, "ஐயா! இப்பிறவியைப் போக்கும் தெய்வத்தன்மை பொருந்திய மந்திரம் யாது?" என்று வினவினாள்.

1432. அந்த ணாளனும் அதிசயித் தரும்பெறல் மகட்குச்
சிந்தை யார்வமோடு இறைவிதன் மனுவினைச் செப்பத்
தந்தை பாலது தெளிந்துநாத் தழும்புறப் பயின்றாள்
முந்தை நாளருந் தவக்குறை முடித்திட வந்தாள்.

1433. தாதை தன்றவக் கொழுந்தினுக்கு இசையமா சைவ
மாத வத்தனா யாதியாச் சிரமத்தில் வழங்கும்
வேத வித்துமாய் மரபினான் மேம்படு வானெப்
போது போதுமென் றுளத்தொடு புகன்றுகொண்
டிருந்தான்.

1434. பருவ நாளிரண் டாகமேற் கடிமணப் பருவம்
வருவ தாகஅங் கொருபகல் வைணவப் படிவப்
பிரம சாரியாப்க் கடைதொறும் பிச்சைபுக் குண்பான்
ஒருவன் வந்தனன் பலிக்கவ ணயற்புலத் துள்ளான்.

1435. பிச்சை வேண்டினான் அவற்குத்தன் பெண்ணினைக்
கொடுப்பான்
இச்சை கூர்ந்தருந் தவத்தினால் வருந்திஈன் றெடுத்த
விச்சை வேதியன் மனையொடு சுற்றமும் வினவாது
அச்ச மின்றிநீ ரெடுத்தவ ணங்கையிற் பெய்தான்.

1432. விரூபாக்கன் அதைக்கேட்டு வியப்படைந்து பெறுதற்கரிய அப்புதல்வியின் உள்ளத்தில் எழுந்த வினாவிற்கு அன்புடன் மிக மகிழ்ந்து பராசக்தியின் திரு மந்திரத்தைக் கூறினான். முற்பிறவியில் செய்த அரிய தவத்தின் குறையினை இப்பிறவியில் நிரப்புவதற்கு வந்த கௌரியம்மை, தந்தையிடம் அதைக்கேட்டுத் தெளிந்து, அதனைச் சிரத்தையோடு நாத்தழும்பேற ஓதி வந்தாள்.

விரூபாக்கன் கௌரிக்குத் திருமணம் செய்ய எண்ணுதல்

1433. தந்தையாகிய விரூபாக்கன், 'நான் பெற்ற தவக் கொழுந்தாகிய புதல்விக்குப் பொருத்தமாக நன் மரபினனாய், பிரம்மசரிய நெறியில் ஒழுகுபவனாய், வேதங்களை அறிந்தவனாய், மாண்பு மிகுந்த மகா சைவனாய் உள்ள ஒருவன் எப்போது மணாளனாய் வருவானோ?' என்று தன் உள்ளத்தில் இடைவிடாது சிந்தித்துக் கொண்டு இருந்தான்.

1434. கௌரிக்கு எட்டு வயது ஆகவும் திருமணம் செய்யும் காலமும் வந்துற்றது. ஒருநாள் வேற்றூரில் உள்ளவனும் வீடுகள் தோறும் பிச்சை ஏற்று உண்பவனுமாகிய வைணவப் பிரமசாரி ஒருவன் கௌரியின் வீட்டிற்கு வந்து பிச்சை வேண்டி நின்றான்.

கௌரியின் திருமணம்

1435. அவ்வாறு பிச்சை வேண்டி நின்ற அவனுக்குத் தன் பெண்ணினைக்க கொடுக்க விருப்பம் கொண்ட அரிய தவத்தினால் வருந்தி ஈன்றெடுத்த கற்றுவல்ல மறையவனாகிய விரூபாக்கன் தன் மனைவியையும் சுற்றத்தாரையும் கேளாது சிறிதும் அச்சமின்றித் துணிந்து நீரினை எடுத்து அவனுடைய அங்கையில் வார்த்தான்.

1436. கலிக்கு நூபுரச் சீறடிக் கன்னிதன் விதியும்
பலிக்கு வந்தவ னல்வினைப் பகுதியுந் தூரப்ப
ஒலிக்கு மந்திரக் கிரகநீர் ஒழுக்கினான் முந்திச்
சலிக்கு அன்னையுந் தமர்களுங் கேட்டுளந் தளர்வார்.

1437. குலனு மோர்கிலன் கோத்திர மோர்கிலன் குடிமை
நலனு மோர்கிலன் ஒழுக்கமுங் கல்வியு நண்ணும்
தலனு மோர்கிலன் கன்னியைத் தத்தஞ்செய் தானெப்
புலனு மோர்ந்தவன் விதிவழி மதியெனப் புலர்ந்தார்.

1438. மற்ற வன்குடி கோத்திரஞ் சூத்திர மற்றும்
உற்ற றிந்துநம் மரபினுக் கொக்குமான் மாயோன்
சொற்ற தந்திர வைணவத் தொடக்குண்டு திரியுங்
குற்றம் ஒன்றினி மறுப்பதென் கொடுப்பதென்
றிசைந்தார்.

1439. தாயு மொக்கலும் ஒத்தபின் தாதையும் வேதத்
தாயு மென்மணத் தாதியா மறநிலை யாற்றால்
தேயு நுண்ணிடைக் கன்னியைச் செம்பொனாற்
புதைத்துக்
காயு மாரழன் முன்னரக் காளைகைக் கொடுத்தான்.

1440. தெய்வ மங்கல வரிசைகள் செய்துதான் பயந்த
மௌவ லங்குழற் கன்னியை மணமக னோடுங்
கௌவை யம்புனல் வேலிசூழ் கடிநகர் விடுத்தான்
சைவ மங்கல வேதியத் தாபதன் இப்பால்.

1436. ஒலிக்கின்ற சிலம்பினை அணிந்த சிறிய அடியை யுடைய கௌரியின் ஊழ்வினையும், பிச்சைக்கு வந்த பிரம சாரியின் நல்வினையும் ஒன்று சேர்ந்ததனால் விரூபாக்கன் மந்திரத்துடன் கமண்டலத்திலுள்ள நீரைத் தாரை வார்த்தான். அதனைக் கேட்டு தாயும் உறவினரும் மனம் தளர்ந்து வருந்துவாராயினர்.

1437, 'குலத்தையும் பார்க்காமல், கோத்திரத்தையும் பார்க்காமல், குடிப்பிறப்பின் மேன்மையையும் பார்க்காமல், ஒழுக்கத்தையும் கல்வியையும், இருக்கும் இடத்தினையும் பார்க்காமல் எல்லா நூல்களையும் கற்ற வல்லவன் தன் புதல்வியைத் தத்தம் செய்து விட்டான். யாவர்க்கும் விதியின் வழியே மதி செல்லும்' என்று எண்ணி வாடினர்.

1438. பிறகு பிரமசாரியின் குடி கோத்திரம் சூத்திரம் முதலானவற்றைப் பொருத்தி ஆராய்ந்து அறிந்து, "இவன் குடி முதலியதெல்லாம் நம் மரபுக்குப் பெரிதும் ஒத்திருக்கின்றன. ஆயினும் மாயோன் செய்த நூலின் வழிபட்ட வைணவமதக் கட்டுண்டு ஒழுகும் குற்றம் ஒன்றுதான் அவனிடம் உள்ளது. முன்னரே நீர் வார்த்துத் தத்தம் செய்ததால் இனி எங்ஙனம் மறுப்பது ஆதலால் அவனுக்கு மணம் செய்து கொடுப்பதே தகுதி" என்று உடன்பட்டனர்.

1439. இவ்வாறு தாயும் சுற்றத்தாரும் உடன்பட்ட பின்னர் விரூபாக்கன் வேதத்தில் ஆராயப்பட்ட எண் வகை மணங்களுள் முதற்கண் உளதாகிய பிரம மணத்திற்குக் கூறிய விதிப்படி, நுண்ணிய இடையையுடைய கௌரியை, சிவந்த பொன்னணிகளால் உடல் மறைய அலங்கரித்து, சுடுகின்ற நிறைந்த ஓமத்தீயின் முன் அக்காளைப் பருவத்தையுடைய பிரமசாரியின் கையில் கொடுத்தான்.

1440. நன்மைமிக்க சைவ தவ ஒழுக்கத்தையுடைய மறையோனாகிய விரூபாக்கன் தெய்வத்தன்மை மிக்க மங்கல வரிசைகள் பலவற்றைச் செய்தான். தான் பெற்ற முல்லை மலர் மாலையைச் சூடிய அழகிய கூந்தலையுடைய கன்னியை மணவாளனோடும், ஒலிக்கின்ற நீர் வேலியாகச் சூழ்ந்த காவலையுடைய அவளுடைய நகருக்கு அனுப்பி வைத்தான்.

வேறு

1441. இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டா லெனப்பல்லார்
இல்லந் தோறுஞ்
செல்லாநின் றிரந்துண்டு திரிந்தமகன் மணமகனாய்ச்
செல்வ நல்க
வல்லாளை மணந்துவரு வான்போற்றும் மனைபுகுந்த
வன்கட் சீலப்
பொல்லாராய் வைணவத்துப் புக்கொழுகு தாய்தந்தை
பொறார் களாகி.

1442. வந்தமண வாட்டிசிவ சிந்தனையுஞ் சைவதவ வடிவு
நோக்கி
வெந்தவுடன் போன்மனமும் வெந்தவளை வேறொதுக்கி
வேண்டார் ஆகி
நிந்தனைசெய் தொழுகுவா ரவளையொரு நாள்நீத்து
நீங்கி வேற்றூர்த்
தந்தமர்மங் கலங்காண்பார் தனியேவைத் தகம்பூட்டித்
தாங்கள் போனார்.

1443. உண்மாசு கழுவுவது நீறென்றே யுபநிடத முரைப்பக்
கேட்டும்
மண்மாசு படப்பூசும் வடிவுடையார் அகன்றதற்பின்
மனையில் வைகும்
பெண்மாசு கழியவொரு சிவனடியார் தமைக் காணப்
பெறாம லின்றென்
கண்மாசு படுவதெனக் கனிந்தொழுகு தலைஅன்பாற்
கவலை கூர்வாள்.

1444. சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே யிரும்புஏவல்
செய்து நாளும்
அவனடியார் திறத்தொழுகா ராக்கையே மரஞ்செவிகண்
ஆதி யைந்தும்
பவனடியார் இடைச் செலுத்தாப் படிவமே பாவைமறை
பரவுஞ் சைவ
தவநெறியல் லாநெறியே பவநெறியான் றளியளாய்த்
தளர்வாள் பின்னும்.

கௌரியின் புக்ககத்தார் வெறுப்புக் கொள்ளல்

1441. வறுமையில் வாடுபவர்க்குப் பொற்கிழி கிடைத்தாற் போலவும், பலர் இல்லந்தோறும் சென்று பிச்சை பெற்று உண்டு திரிந்த மகன் மணமகனாகத், திருமகளை மணம் செய்து வருவான் போலவும், வைணவப் பிராமணன் கௌரியோடு தன் இல்லத்திலனை வந்தடைந்தான். கொடுமையே சீலமாகக் கொண்டு பொல்லாதவராய் வைணவ மதத்தை மேற்கொண்டு ஒழுகுகிறவராய் உள்ள அவனுடைய தாய் தந்தையர் அதைக் கண்டு மனம் பொறாதவராய் வாடினர்.

1442. தமது இல்லத்திற்கு மருமகளாய் வந்த கௌரியின் சிவவேடத்தையும் சிவ சிந்தனையையும் கண்டு பொறாமையினாலே தமது கருகிய உடல்போல் மனமும் வெந்து அவளை வேறாக ஒதுக்கி வைத்துச் சிறிதும் விரும்பாதவராய் நிந்தித்து ஒழுகுவாராயினர். அவர்கள் ஒருநாள் அயலூரில் நடக்கும் தம் உறவினரின் திருமணத்திற்குச் செல்ல நினைத்து, கௌரியைத் தனியே வைத்து விட்டு, வீட்டைப் பூட்டிக் கொண்டு சென்றனர்.

1443. திருநீறே அகத்தில் உள்ள அழுக்கைப் போக்கித் தூய்மை செய்வது என்று உபநிடதம் கூறுவதைக் கேட்டும், மண்ணை அழுக்குண்டாகப் பூசுகின்ற வடிவினை யுடைய அவர்கள் போனபின் வீட்டில் இருக்கும் கௌரியானவள், குற்றம் நீங்குமாறு ஒரு சிவனடியாரையும் காணப் பெறாமல், 'இன்று என் கண் மாசடைகின்றது' என்று முதிர்ந்த தலையன்பினால் கவலையுறுவாளாயினாள்.

1444. சிவனடியார்களிடத்தில் அன்பு இல்லாத மனமே இரும்பு. அவ்வடியார்களுக்குத் தொண்டு செய்யாத உடலே மரம். அச்சிவபெருமான் அடியார்களிடத்தில் காது கண் முதலிய ஐம் பொறிகளையும் செலுத்தாத வடிவமே பாவை. வேதத்தில் துதிக்கப்படும் சைவமாகிய தவநெறி அல்லாத பிற நெறிகளே பிறவிக்கு ஏதுவாகிய நெறிகள். என்று அன்பு உடையவளாய்த் தளர்கின்றாள். பின்னும்,

1445. எனைத்துயிர்க்கு முறுதியிக பரமென்ப
அவைகொடுப்பார் எல்லாந் தானாய்
அனைத்துயிர்க்கு முயிராகு அரனென்ப அவனறிவார்க்
கங்கம் வாக்கு
மனத்துமெய்ப் பத்திவழி வருமென்ப அப்பத்தி வழிநிற்
பார்க்கு
வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்பது
அவனடியார் வேட மன்றோ.

1446. என்னவிருந் தலமருவா ளிருக்குமிடத் தவளுள்ளத்து
எண்ணி யாங்கே
தென்னவனாய் இருந்தரசு செய்தபிரா னவட்கருளுஞ்
செவ்வி நோக்கிக்
கன்னமுரங் கரஞ்சிரந்தோள் கண்டமுங்கண்
டிகைபூண்டு கையில் தம்போற்
பன்னெடுநாட் பழகியதோர் தனிப்பெரிய புத்தகமும்
பக்கஞ் சேர்த்தி.

1447. கரிந்தநீள் கயன்முள்ளி னரையுமுது திரைகவுளுங்
கனைக்கு நெஞ்சுஞ்
சரிந்தகோ வணவுடையுந் தலைப்பனிப்பும் உத்தரியந்
தாங்கு தோளும்
புரிந்தநூல் கிடந்தலையும் புண்ணியநீ றணிமார்பும்
பொலிய நீழல்
விரிந்ததோர் தனிக்குடையுந் தண்டூன்றிக்
கவிந்தசையு மெய்யுந்தாங்கி.

1445. “எல்லா உயிர்களுக்கும் உறுதியாய் உள்ளவை இம்மை மறுமை இன்பங்களே என்று கூறுவர். அவற்றை அருள வல்லவர் எல்லாமும் தாமேயாகி எவ்வுயிர்க்கும் உயிராய் உள்ள சிவபெருமானே என்பர். அவரைச் சிந்திப்பவர்க்கு மனம் வாக்கு காயம் என்னும் மூவகையாலும் செய்யப்படும் உண்மையாகிய பக்தி நெறி வந்து கைகூடும் என்பர். அப்பக்தி வழியில் நிற்பவருக்கு வினைகளால் வரும் துன்பங்களைப் போக்குதற் பொருட்டு எடுத்த வடிவம் அச் சிவபெருமானின் அடியார்களுடைய திருவேடம் அல்லவா?”

சிவபெருமான் கிழவேதியராய் வருதல்

1446. என்று கௌரி பலவாறு சிந்தித்துக் கவலை கொண்டிருந்தாள். இவ்வாறு கௌரி மனத்தில் எண்ணிய வாறே, சுந்தரபாண்டியனாய் வீற்றிருந்து ஆட்சி புரிந்த சோமசுந்தரக் கடவுள், அவளுக்கு அருள் புரியும் நோக்கம் கொண்டு, சிரசிலும் காதுகளிலும், கழுத்திலும், மார்பிலும், புயங்களிலும், கைகளிலும் உருத்திராட்சம் தரித்துக் கையில் தம்மைப் போல் பன்னெடும் காலம் பழகியதாகிய ஒரு பெரிய புத்தகம் வைத்துக் கொண்டார்.

1447. கரிய நீண்ட கயல் மீனின் முள்ளைப் போன்ற நரையும், மிகவும் திரைந்த கபோலமும், அடிக்கடி கனைக்கின்ற நெஞ்சும், ஒருபுறம் சரிந்த கௌபீன உடையும், தலை நடுக்கமும், மேலாடை தாங்கிய தோளும், முப்புரி நூல் தவழும் புண்ணிய வடிவாகிய திருநீறு அணிந்த மார்பும், ஒரு கையில் பிடித்த நிழல் விளங்கும் குளிர்ந்த ஒப்பற்ற குடையும், தண்டினை ஊன்றி அதனோடு குனிந்து அசைகின்ற திருமேனியும் கொண்டவரானார்.

1448. ஒருத்தரா யுண்டிபல பகல்கழிந்த பசியினர்போ லுயங்கி
வாடி
விருத்தவே தியராய்வந் தகம்புகுதக் கண்டெழுந்து
மீதூர் அன்பின்
கருத்தளாய்த் தவிசிருத்திக் கைதொழுது
சிவனையிங்குக் காண வென்ன
வருத்தமா தவமுடையே னெனமுனிவர் பசித்துன்பால்
வந்தே மென்றார்.

1449. இற்பூட்டிப் போயினார் எமரங்கள் எனக்கௌரி யியம்ப
மேரு
விற்பூட்டிப் புரம்பொடித்த வேதியர்நின் கைதொட்டு
விடுமுன் யாத்த
கொற்பூட்டு விடுந்திறந்து கடிதடிசில் சமைத்தியெனக்
குமரி தாளில்
அற்பூட்டு மடவரலு மவ்வாறே யட்டில்புகுந் தடிசி
லாக்கி.

1450. தையன்மா தவக்கொழுந்து புறம்போந்து சிரகநீர்
தளிர்க்கை தாங்கி
ஐயனே யமுதுசெய வெழுந்தருளும் எனவெழுந்த
வடிகள் பாதச்
செய்யதா மரைவிளக்கி யந்நீர்தன் சென்னியின்மேற்
றெளித்துப் பாச
மையல்மா சிருள்கழுவி யகம்புகுவித் தாசனமேல்
வைத்துப் பின்னர்.

1448. தனியராக, பல நாட்கள் உணவு இல்லாமல் பசியுடையவர் போல, மிக வருந்தி வாட்டமுடன் கௌரி இருக்கும் வீட்டின்கண் வந்து புகுந்தார். அது கண்ட கௌரி அவரைப் பார்த்து எழுந்து மிகுந்த அன்புடையவளாய் ஆசனத்தில் அமர்த்தினாள். பின் கை கூப்பி வணங்கி நின்று, "எம்பெருமானே! தங்களை இங்குத் தரிசிக்க நான் என்ன மாதவம் செய்தேனோ!" என்று முகமன் கூறினாள். விருத்த வேதியர், "நாம் பசியுற்று உம்மிடத்தில் வந்தோம்" என்றார்.

கௌரி வேதியர்க்கு அமுது படைத்தல்

1449. அதற்குக் கௌரி, "அந்தோ! எம்மவர்கள் வீட்டைப் பூட்டிக் கொண்டு போய் விட்டார்களே!" என்றாள். மேருவில்லில் நாணைப் பூட்டி திரிபுரத்தை நீறாக்கிய சிவபெருமானாகிய அந்தணர் கௌரியை நோக்கி, "நீ உன் கையால் தொட பூட்டு நெகிழ்ந்துவிடும். நீ கதவைத் திறந்து விரைவில் உணவு சமைக்கக் கடவாய்" என்று கூறினார். இறைவியின் திருவடியில் அன்பு செலுத்தும் கௌரி அவ்வாறு அடுக்களையில் நுழைந்து அமுது சமைத்தாள்.

1450. பின்னர் பெரிய தவக்கொழுந்தாகிய கௌரி, வெளியே வந்து, தன் தளிர்போன்ற கையிலே தண்ணீரை எடுத்துக்கொண்டு, "ஐயனே! திருவமுது செய்ய எழுந்தருள் வீராக!" என்று வேண்டினாள். அங்ஙனமே எழுந்த பெரியாரின் திருவடியாகிய செந்தாமரை மலர்களை கமண்டல நீரால் விளக்கி, அந்த நீரைத் தன் தலையில் தெளித்துக் கொண்டு, பாசமாகிய மயக்கத்தை விளைவிக்கும் மல இருளைப் போக்கி அவரை உள்ளே அழைத்துச் சென்று ஆசனத்தின் மீது அமர்வித்தாள்.

1451. நகைமலரிட் டருச்சித்து நல்லபரி கலந்திருத்தி நறுவீ
முல்லை
முகை யனைய பாலடிசில் வெள்ளிமலை யெனப்பருப்பு
முதுகிற் செம்பொற்
சிகரமெனப் பல்வேறு கருனைபுறந் தழீஇக்கிடந்த
சிறுகுன் றீட்ட
வகையெனநெய் யருவியெனப் படைத்தனைய
சிற்றுண்டி வகையும் பெய்து.

1452. செய்யவா யிடையிடையே முகமனுரை யின்னமுது
செவியில் ஊட்டத்
தையலாள் வளைக்கையறு சுவைபமுது வாயூட்டத்
தளர்ந்த யாக்கை
ஐயர்தாம் திருவமுது செய்தமுதுண் டவரெனமூப்
பகன்று பூவிற்
கையதே மலர்வாளிக் காளை வடி வாயிருந்தார் கன்னி
காண.

1453. பூசியவெண் ணீறுபோய்க் கலவையாய்க்
கண்டிகைபோய்ப் பொன்செய் பூணுங்
காசணிபொற் குண்டலமுங் கடகமுமாய் மூப்புப்போய்க்
காளை யான
தேசுருவங் கண்டுநடு நடுங்கிவளைக் கரநெரித்துத்
திகைத்து வேர்த்துக்
கூசியொரு புறத்தொதுங்கி நின்றாளக் கற்புமலர்க்
கொம்பர் அன்னாள்.

1451. விளக்கமாகிய நல்ல மலர்களால் அர்ச்சனை செய்தாள். பின்பு நல்ல உண் கலத்தைத் திருத்தி வைத்து, நறுமணம் மிக்க முல்லை அரும்பு போன்று பால் வார்த்துச் சமைத்த சோற்றை வெள்ளி மலை போலவும், பருப்பினை அம்மலையின் பொன்முடி போலவும், பல்வேறு பொரிக் கறிகளை அம்மலையின் புறத்தில் சூழ்ந்து கிடந்த சிறு மலைகளின் கூட்டம் போலவும், நெய்யினை அம்மலையி லிருந்து ஓடிவரும் அருவி போலவும் சமைத்தாள். வேறு வேறு சிற்றுண்டிகளையும் அவ்வாறே சமைத்தாள்.

1452. சிவந்த வாயானது இடைஇடையே இனிய மொழிகளாகிய அமுதினைச் செவியில் உண்பிக்கவும், வளையலணிந்த கையானது அறுசுவை உணவினை உண்பிக்கவும், மூப்பு காரணமாகத் தளர்ச்சியுற்ற திரு மேனியையுடைய அவ்வேதியர் உண்டருளினார். அப்பொழுது அக்கிழ வேதியர் தேவாமுதம் உண்டவர் போல மூப்பு நீங்கப் பெற்று, மலர்வில் ஏந்திய மலர்க்கணையுடைய மன்மதனை வென்ற கட்டழகு பெற்றவராய் கௌரி பார்க்குமாறு இருந்தார்.

1453. அச்சமயம் அவர் திருமேனியில் அணிந்த திருவெண்ணீறு மாறிக் கலவைச் சந்தனமாகியது உருத்திராக்கங்கள் மாறி பொன்னாற் செய்த அணிகளும், மணிகள் அழுத்திய பொன்னாலாகிய குண்டலங்களும் கடகங்களும் ஆயின. முதுமை மாறிக் கட்டிளமை ஆகிய ஒளி பொருந்திய உருவமாகியது. அவ்வழகிய உருவத்தைக் கற்பினையுடைய பூங்கொம்பு போன்ற அக் கௌரியம்மை பார்த்து நடுநடுங்கினாள். வளையல் அணிந்த கைகளை நெறித்தாள். மனம் திகைத்து உடல் வெயர்த்தாள். அச்சமுடையவளாய் ஒருபுறம் ஒதுங்கி நின்றாள்.

1454. ஆனபொழு தருங்கடிநன் மணங்குறித்து மனையிற்றீர்ந்
தயலூர் புக்க
தேனொழுகு துழாயலங்கல் தீர்த்தனுக்கன்
புடையார்போற் றிரியும் வஞ்ச
மானமுடை யார்மீண்டு மனைபுகலும் பதினாறு வயதின்
மேய
பானன்மணி கண்டனுதற் காப்பணிந்தோர் பசுங்குழவிப்
படிவம் கொண்டான்.

1455. எழுதரிய மறைச்சிலம்பு கிடந்துபுறத் தலம்பஅன்பர்
இதய மென்னுஞ்
செழுமலரோ டையின்மலர்ந்து சிவானந்தத்
தோன்ததும்பு தெய்வக் கஞ்சத்
தொழுதகுசிற் றடிப்பெரிய விரல்சுவைத்து மைக்கணீர்
துளும்ப வாய்விட்
டழுதணையா டையிற்கிடந்தான் அனைத்துயிரு
மீன்றுகாத் தழிக்கு மப்பன்.

1456. தாய்விட்டுப் போனதொரு தனிக்குழவி
எனக்கலங்கித் தாங்கி தேடி
ஆயவிட்டுப் பிரமனழ மறைகளழ வன்புடையா ளன்பிற்
பட்டு
வாய்விட்டுக் கிடந்தழுத மகவினைக்கண்
டணங்கனையாள் மாமி யென்னுங்
காய்விட்டு மதக்கொடியாள் இம்மகவே
தெனக்கேட்டாள் கௌரி தன்னை.

குமரர் குழவியாக மாறுதல்

1454. அப்பொழுது திருமணத்தின் பொருட்டு வீட்டை விட்டு வெளியூர் சென்றிருந்த, தேன் ஒழுகும் துழாய் மாலையை அணிந்த திருமாலுக்கு அன்பு உடையார் போல் நடித்துத் திரிகின்ற தீய மனமுடைய மாமி முதலியோர் திரும்ப வந்து வீட்டிற்குள் புக, பதினாறு வயதுடன் திகழ்ந்த நீலோற்பல மலர் போன்ற அழகிய மிடற்றினையுடைய இறைவன், நெற்றியில் விபூதி அணிந்த ஒரு பசும் குழவியின் வடிவத்தைக் கொண்டருளினார்.

1455. எல்லா உயிர்களையும் படைத்துக் காத்துத் துடைத்தருளும் ஐயன் எழுதுதற்கரிய வேதமாகிய சிலம்புகள் புறத்தே சூழ்ந்து கிடந்து ஒலிக்க, அன்பர்களின் இதயமாகிய செழிய மலரோடையில் மலர்ந்து, சிவானந்த மாகிய தேன் ததும்பி வழியும் தெய்வத்தன்மை பொருந்திய தாமரை மலர் போன்ற யாவராலும் வணங்கத்தக்க சிறிய திருவடியின் பெருவிரலை வாயில் வைத்துச் சுவைத்துக் கொண்டு மைதீட்டிய நீண்ட கண்களில் நீர் ததும்ப வாயினைத் திறந்து அழுது விரித்த ஆடையின்மீது கிடந்தருளினார்.

மாமியும் கௌரியும்

1456. தாய் கைவிட்டுப் போனதொரு குழந்தையைப் போலக் கலங்கி, முடியில் தாங்கி ஆராய்ந்து தேடிப் பிரமன் ஒரு பக்கம் அழவும், வேதங்கள் ஒரு பக்கம் அழவும், அன்புடைய கௌரியின் அன்பிலகப்பட்டு வாய் திறந்து அணை ஆடையிற் கிடந்து அழுகின்ற குழந்தையைப் பார்த்து, திருமகளை ஒத்த கௌரியின், பெரும் சினத்தை யுடைய வைணவ மதத்தைக் கொண்ட மாமியானவள் கௌரியை நோக்கி, "இந்தக் குழந்தை ஏது?" என்று கேட்டாள்.

1457. நத்தன்அயன் றனக்கரிய நாயகனுக் கன்புடையாள்
நவில்வா டேவ
தத்தனயன் றருமனைவி யொடுபோந்து சிறுபோது
தையல் ஈயீண்
டித்தனயன் றனைப்பார்த்துக் கோடியென வைத்தகன்றா
னென்னா முன்னஞ்
சித்தநய னங்கலங்கச் சீறிமண வாட்டிதன்மேற்
செற்றங் கொண்டாள்.

1458. என்புபூண் டிடுகாட்டிற் பொடியாடும் உருத்திரனுக்
கிடைய றாத
அன்புபூண் டான்மகவுக் கன்புடையாய் நீயும்எமக் காகா
யென்னாக்
துன்புபூண் டயர்வாளை மகவையுங்கொண்
டகத்தைவிடத் துரத்தி னார்கள்
வன்பூண் டொழுகுவைண வம்பூண்டு பொறையிரக்கம்
ஆன நீத்தோர்.

1459. தாயிலாப் பிள்ளைமுகந் தனைநோக்கித்
தெருவினிடைத் தளர்வாள் உள்ளங்
கோயிலாக் கொண்டுறையுங் கூடல்நா யகனைமனக்
குறிப்பிற் கண்டு
வேயிலாக் கியதடந்தோட் கௌரிதிரு மந்திரத்தை
விளம்ப லோடுஞ்
சேயிலாய்க் கிடந்தழுத குழவிவிசும் பிடைவிடைமேல்
தெரியக் கண்டாள்.

1460. மழவுருநீத் தடலேற்றின் வருவார்தம் மிடத்தணங்கின்
மனுவை யோதிப்
பழகியபார்ப் பனமகளைப் பார்ப்பதியின் வடிவாக்கிப்
பலருங் கண்டு
தொழவிடைமேல் ஏற்றிவிசும் பாறாக மலர்மாரி சுரர்கள்
தூற்ற
அழகரெழுந் தருளினார் களிதூங்கி யதிசயித்தா
ரவனி மாக்கள்.

விருத்த குமார பாலரான படலம் முற்றிற்று.

1457. சங்கினை ஏந்திய திருமாலும், பிரமனும் காண முடியாத அரிய சிவபெருமானிடம் அன்பு கொண்ட கௌரி, "தேவதத்தன் என்பவன் தன் இனிய மனைவி யோடு இங்கு வந்து, பெண்ணே! இக்குழந்தையைச் சிறிது நேரம் பார்த்துக் கொள்வாயாக, என்று வைத்துச் சென்றான்" என்றாள். இதனைச் சொல்லு முன்னரே, கண்களும் மனமும் கலங்குமாறு கௌரியின் மாமியானவள் மருமகள் மேல் சினம் கொண்டாள்.

1458. "எலும்பினை அணிந்து சுடுகாட்டின் சாம்ப ரைப் பூசி ஆடுகின்ற உருத்திரனுக்கு இடையறாத அன்பு பூண்டவனுடைய குழந்தையின் மேல் அன்புடையவளே! நீயும் எங்களுக்கு ஆகாதவளாயினை" என்று சொல்லி, வைணவ நெறியினைக் கைக்கொண்டு பொறுமை, கருணை, மானம் இவற்றைக் கைவிட்ட மாமியும் மாமனும் துன்பத்தில் ஆழ்ந்து சோருகின்ற கௌரியை, அக்குழந்தை யுடன் வீட்டை விட்டு வெளியே போகும்படித் துரத்தினார்கள்.

1459. வீட்டிலிருந்து வெளியேறிய கௌரி, தெருவில் நின்று திகைத்தாள். தாயில்லாப் பிள்ளையின் திருமுகத்தை நோக்கி உளம் தளர்ந்தாள். தனது உள்ளத்தை கோயிலாகக் கொண்டு எழுந்தருளி இருக்கும் கூடல் நாயகனாகிய சோம சுந்தரக் கடவுளை மனத்தின் உள்ளே தியானித்துக் கொண்டு மூங்கில் போன்ற திருத் தோள்களையுடைய உமா தேவியாரின் திருமந்திரத்தை உச்சரித்தாள். என்னே! வியப்பு! அருகில் குழந்தையாய்க் கிடந்து அழுத அவ்விறைவர் ஆகாயத்தில் இடபவூர்தியில் காட்சி தந்தருளினார். அக்காட்சியைக் கௌரி தரிசித்தாள்.

1460. குழந்தை வடிவத்தை நீக்கி வெற்றிமிக்க இடப வாகனத்தில் வருகின்றவராகிய சோமசுந்தரக் கடவுள், தமது இடப் பாகத்தில் அமர்ந்துள்ள உமாதேவியாரின் திருமந்திரத்தை உச்சரித்துக் கைவந்த அக்கௌரியை உமா தேவியின் சாரூப வடிவத்தை அளித்தருளி, பலரும் கண்டு வணங்க, தேவர்கள் மலர் மழை பொழிய இடபவூர்தியில் ஏற்றிக் கொண்டு வான் வழியாக எழுந்தருளினார். புவியி லுள்ளோர் அதனைக் கண்டு களிப்புற்று அதிசயித்தார்கள்.

விருத்த குமார பாலரான படலம் முற்றிற்று.

24. கான் மாறி யாடின படலம்

1461. திருத்த ராய்மது ராபுரி மேவிய சித்தர் ஆகிய செல்வர்
விருத்த ராயிளை யவருமாய் மழவுமாய் வேடங்கொண்
டடலேற்றின்
ஒருத்த ராய்விளை யாடிய ஆடலை யுரைத்தன
மினிமன்றுள்
நிருத்த ராயவர் மாறிநின் றாடிய நிலைசிறி
துரைசெய்வாம்.

1462. வேந்தன் மீனவண் கொடியவன் ஆகிய விக்கிர
மன்தன்றோள்
வந்து மண்பொறை யிராசசே கரன்புயத் திறக்கியைந்
தருநாடன்
பூந்தண் மாமலர் வேதியன் மாதவன் புரத்தின் மேற்
பொலிந்தோங்குஞ்
சாந்த நீறெனச் சண்ணித்த புண்ணியத் தனிமுத
னகர்சார்ந்தான்.

1463. கண்ண கன்புவி யிராசசே கரன்பொதுக் கடிந்துசெங்
கோலோச்சி.
வண்ண வெண்குடை நிழற்றுவான் ஆனந்த
வடிவமாய்த் தனிமன்றுள்
அண்ண லாடிய திருநடத் தன்பினா லாடனூ
லொழித்தேனை
எண்ணி மூவிரு பத்துமுக் கலையுங்கற் றிறைமுறை
செயுநாளில்.

24. கான் மாறி யாடின படலம்

1461. நின்மலராய் மதுரையில் எழுந்தருளிய எல்லாம் வல்ல சித்தரான சோமசுந்தரக் கடவுள், கிழவராய், காளையாய், குழந்தையாய்த் திருவேடங்களைக் கொண்டு இடப வூர்தியின் மேல் ஒருவராய் நின்று விளையாடிய ஆடலை உரைத்தனம். இனி வெள்ளியம்பலத்தில் நிருத்தராகிய பெருமான், கான்மாறியாடியருளிய திருவிளையாடலைச் சிறிது கூறுவோம்.

இராசசேகரன் ஆட்சி

1462. கயல் எழுதிய விக்கிரம பாண்டியன் என்னும் பாண்டிய மன்னன், தன், தோளால் சுமந்திருந்த இராஜ்ய பாரத்தைத் தன் மகனான இராசசேகரனிடம் அளித்து விட்டுப் பஞ்ச தருக்களையுடைய இந்திரன், குளிர்ந்த தாமரை மலரில் வசிக்கும் பிரமன், திருமால் இவர்கள் உலகத்தின் மேலே பொலிந்து விளங்கும் திருநீற்றினைச் சந்தனமாகப் பூசிய அறவடிவையுடைய ஒப்பற்ற முதற் கடவுளாகிய சிவபெருமான் உலகத்தை அடைந்தான்.

இராசசேகரன் பல நூல் கற்க எண்ணுதல்

1463. இராசசேகர பாண்டியன் பெரிய இந்நில வுலகத்தில் குற்றமற்ற ஆட்சி செய்து, தன் அழகிய வெண் கொற்றக் கொடையால் நிழல் செய்து, இன்ப வடிவாய் ஒப்பற்ற வெள்ளியம்பலத்துள் நின்று புரிந்தருளும் திரு நடனத்தில் வைத்த பேரன்பினால் பரத நூல் ஒன்றை நீக்கி மற்ற அறுபத்து மூன்று கலைகளையும் கற்று அரசியலை முறைப்படி நடத்தி வந்தான்.

1464. சிலம்பி வாயினூல் இழைத்திடு பந்தரிற் செங்கண்மா
றொழுவைகும்
அலம்பு தெண்டிரைப் பொன்னியந் தண்டுறை
ஆனைக்கா விறைக்கன்பு
கலந்த சிந்தையான் மூவிரு பத்துநாற் கலைகளும்
பயின்றுள்ளம்
மலர்ந்த வன்கரி காற்பெரு வளத்தவன் வையகம்
புரக்கின்றான்.

1465. பொன்னி நாடவன் வாயிலுள் ளானொரு புலவன்வந்
தலர்வேம்பின்
கன்னி நாடனைக் கண்டுமுன் பரவுவான் கனைகழற்
கரிகாலெம்
மன்ன வற்கறு பத்துநாற் கலைகளும் வரும்வரா
துனக்கொன்று
தென்னர் ஏறனை யாயது பரதநூ றெரிந்திலை
யெனச்சொன்னான்.

1466. கேட்ட மீனவன் மறுபுல விஞ்சையன் கிளத்து சொல்
லிகன்மானம்
மூட்ட வாகுல மூழ்கிய மனத்தனாய் முதுமறைச்
சிரமன்றுள்
நாட்ட மூன்றுடை நாயகன் ஆடலை நானுமா
டுதற்குள்ளம்
வேட்ட தேகொலா மிதுவுமெம் பிரானருள் விதியென
அதுகற்பான்.

வேறு

1467. ஆடனூல் வரம்பு கண்டவர் ஆகி யவ்வழி யாடலும்
பயின்ற
நாடக நடைதேர் புலவரைத் துருவி நண்ணிய
வவர்க்கெலா மகிழ்ச்சி
வீடருஞ் சிறப்பா லறுவையும் பூணும் வெறுக்கையும்
வெறுத்திடக் கொடுத்துப்
பாடல்வண் டரற்றுந் தாரினான் பரதப் பனுவலுங்
கசடறப் பயில்வான்.

1464. அக்காலத்தில் சோழ நாட்டைக் கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழ மன்னன் ஆண்டு வந்தான். அவன் ஒலிக்கின்ற தெள்ளிய அலைகளையுடைய காவிரியாற்றின் வடகரையில் உள்ள தண்ணிய நீர்த்துறையுடைய திருவானைக்கா என்னும் தலத்தில் சிலந்தி, வாயின் நூலாற் செய்த பந்தரின் கண் சிவந்த கண்களையுடைய திருமால் வணங்க வீற்றிருக்கும் சிவபெருமானிடம் பேரன்பு கொண்டவன். அறுபத்து நான்கு கலைகளையும் கற்று அறிவால் மேம்பட்டவன்.

1465. காவிரி நாட்டையுடைய அக்கரிகால் சோழனுடைய வாயிலில் உள்ளவனாகிய அரண்மனைப் புலவன் ஒருவன், பாண்டிய நாட்டிற்கு வந்து, வேப்ப மலர் மாலையை அணிந்த இராச சேகரப் பாண்டியனைக் கண்டான். அவனை முன்னின்று துதிக்கும் போது, "பாண்டியருள் ஆண் சிங்கம் போன்றவனே! ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த எம் கரிகாலனுக்கு அறுபத்து நான்கு கலைகளும் கைவரும். உனக்கு அவற்றுள் ஒன்று வராது. அது பரதநூல் ஆகும். ஆதலால் நீ கலைகள் முற்றும் அறிந்திலை" என்று சொன்னான்.

இராசசேகரன் பரதநூல் கற்க எண்ணுதல்

1466. அதனைக் கேட்ட பாண்டியன், வேற்றரசன் நாட்டுப் புலவன் கூறிய கூற்று, பகைமையையும் மானத்தையும் மூட்டத் துன்பத்துள் மூழ்கிய மனத்தனாகி, "பழைமையாகிய வேத முடியின் வடிவாகிய மன்றத்தில் மூன்று கண்களையுடைய பெருமான் ஆடியருளும் திருக்கூத்தினை, ஒன்றுக்கும் பற்றாத சிறியேனாகிய யானும் ஆடுதற்கு என் உள்ளம் விரும்பியதோ? இதுவும் எம்பெருமானுடைய திருவருளேபோலும்?' என்று எண்ணினான். அதனைக் கற்க எண்ணினான்.

பரத நூலைக் கற்றல்

1467. பின்பு வண்டுகள் ஒலிக்கும் மாலையை அணிந்த இராசசேகரன் நாடக நூலின் எல்லையைக் கண்டவராய், அந்நூலில் கூறிய வழியே ஆடுதலிலும் பழகிய நாடக நடையில் தேர்ச்சி பெற்ற புலவர்களைத் தேடி, அந்தப் புலவர்கள் அனைவருக்கும் அவர்கள் மகிழும் வண்ணம் ஆடை அணிகலன்கள், பொன் முதலியவற்றை அவர் போதுமென்று சொல்லுமளவும் கொடுத்து, அவர்களிடம் நாடக நூலைக் குற்றமறக் கற்கத் தொடங்கினான்.

1468. பாவமோ டராகந் தாளமிம் மூன்றும் பகர்ந்திடு
முறையினாற் பரதம்
ஆவயின் அங்க முபாங்கமே பிரத்தி யாங்கமே
யலர்முக ராகம்
ஓவறு சீர்சால் கரப்பிர சார முவமையில் சிரக்கர
கருமந்
தாவறு கரகேத் திரங்கர கரணந் தானக மேசுத்த சாரி.

1469. விண்டிடாத் தேசி சாரியே நியாயம் விருத்தியே
பிரவிசா ரம்பூ
மண்டலம் உடனா காசமண் டலமே மாசில்சத் தக்கர
ணஞ் சீர்
கண்டவுற் புலித கரணமே அங்க காரமே இரேசித
மென்னக்
கொண்டநா லைந்து பேதமுங் கற்றுக் கோதறப்
பயின்றபி னவற்றுள்.

1470. வருத்தமின் மனோபா வாதியா மெட்டு வகைநிருத்
தங்களிற் சாரி
நிருத்தமா கியதாண் டவமக மார்க்க நிகழ்த்திடுந்
தேசி வடுகே
அருத்தமா கியசிங் களமென மூன்றா மதுநிலை யாறு
மூவிரண்டு
திருத்தமாம் பதமுந் திகழிரே காதி செப்பிய வங்கம்
ஈரெட்டும்.

1471. நால்வகைத் தாகுங் கரணமு மேலோர் நாட்டிய
விருவகைக் கரமுங்
கால்வகை புரிகை முதற்பதினாறுங் கவான்மனை
யாதியாம் இரண்டும்
பாலது மடிப்பு வகையெழு நான்கும் பழிப்பறு சுத்தசா
ரியெனும்
ஏலுறு பூசா ரிகள்பதி னாறு மித்துணைக் ககனசா
ரிகளும்.

1468. பாவம், அராகம், தாளம் ஆகிய இம்மூன்றும் கூறும் மரபினால் அந்நூல் 'பரதம்' என்னும் பெயருடைய தாகும். அந்நூலுள் கூறப்படும் அங்கம், உபாங்கம், பிரத்தி யாங்கம், தன்மை மிக்க முகாரகம், நீங்காத சிறப்புடைய கரப்பிரசாரம், ஒப்பில்லாத சிரக்கர கருமம், கெடுதல் இல்லாத கரக்ஷேத்திரம், கரகரணம், தானகம், சுத்த சாரி.

1469. நீங்காத தேதிசாரி, நியாயம், விருத்தி, பிரவி சாரம், பூ மண்டலம், ஆகாச மண்டலம், குற்றமற்ற சுத்தக் கரணம் சிறப்புடைய உற்புவித கரணம், அங்ககாரம், இரேசிதம் என்று சொல்லப்பட்ட இருபது பேதங்களையும் கற்று, குற்றமறப் பழகினான். அவைகளுள்,

1470. வருத்தமில்லாதத மனோபாவம் முதலிய எண் வகை நிருத்தங்களில் சாரி நிருத்தமாகிய தாண்டவம் அக மார்க்கமாகும். தேசியும் வடுகும் பொருளமைந்த சிங்களமும் என்னும் மூன்று வகையாக அவ்வக மார்க்கம் கூறப்படும். அவ்வக மார்க்கத்திற்குரிய அறுவகை நிலையும், மூன்றும் இரண்டும் சேர்ந்த, திருத்தமாகிய ஐந்து பதமும் விளக்கமுடைய இரேகை முதலாகச் சொல்லிய அங்கங்கள் பதினாறும்.

1471. நான்கு வகைப் பட்டதாகிய கரணமும், மேலோர் நிலை பெறுத்திய இருவகைக் கைகளும், புரிகை முதலிய காலின் செய்கை பதினாறும், மணை முதலிய தொடையின் தொழில் இரண்டும், பக்கங்களின் தொழி லாகிய மடிப்பு வகை இருபத்தெட்டும், குற்றமற்ற சுத்த சாரி எனப்படும் பொருந்திய பூ சாரிகள் பதினாறும், பதினாறு ககன சாரிகளும்.

1472. ஏற்றதிக் கிராந்த மாதியா முப்பத் திருவகைத் தேசிசா
 ரிகளுங்
காற்றினுங் கடுந்தேர்ச் சக்கர முதலாங் ககனசா
 ரிகைகளே ழைந்துஞ்
சாற்றுவித் துவற்பி ராந்தமா தியவாஞ் சாரிபத்
 தொன்பது மாகப்
போற்றிவை யனைத்து முட்படப் புட்ப கடத்திலக் கண
 முதற் பொருள்கள்.

1473. ஆசவாத் தியமுன் பொருள்முதற் களாச மாதியாம்
 பாடபே தங்கள்
பேசிய பதினா றொன்பதும் படக பேதமொன் றொழிந்த
 நாலைந்தும்
மாசறும் அளக மாதியாம் பாட வகைகணா லேழுமற்
 றவற்றிற்
பூசல்வார்த் திகந்தொட் டைவகைச் சச்ச புடாதியாந்
 தாளமாத் திரையும்.

1474. கிளந்தமாத் திரையின் கதிகளுஞ் சொல்லுங் கீதமும்
 பாடமும் எழுத்தும்
வளந்தரு மணிபந் தாதிகீ தத்தின் வகுத்தகட்
 டளையெழு நான்கும்
அளந்திடு சரளை அதிகட் டளையே ழைந்துநன்
 கமைந்தபா வாதி
விளம்பிய மூன்று கலப்பு மீறாக விளைத்திடுங் கூத்தக
 மார்க்கம்.

வேறு

1475. உரைத்தவிக் கூத்துக் கற்கும் போதுதன் னுடம்பிற்
 சால
வருத்தநோய் எய்தி யிந்த வருத்தநான் மறையுந் தேறா
அருத்தமா யறிவாய் வெள்ளி யம்பலத் தாடி நின்ற
நிருத்தனார் தமக்கு முண்டே யென்பது நினைவிற்
 கொண்டான்.

1472. திக்கிராந்தம் முதலிய முப்பத்திரண்டு வகைப் பட்ட தேசி சாரிகளும், காற்றினும் வேகத்தையுடைய தேர்ச் சக்கரம் முதலாகிய ககன சாரிகைகள் முப்பத்தைந்தும், சொல்லப்பட்ட வித்துவற் பிராந்தம் முதலாகிய சாரி பத்தொன்பதும், ஆக இளையனைத்தும் உட்பட்ட புட்ப புடத்தின் இலக்கணங்களாகிய முதன்மையுள்ள பொருள் களாம்.

1473. ஆச வாத்தியமும் முன் பொருளும் முதன்மை யாகிய களாசமும் முதலாகிய பாட பேதங்கள் கூறப்பட்ட இருபத்தைந்தும், படகபேதங்கள் பத்தொன்பதும், குற்ற மற்ற அளகம் முதலாகிய பாடவகைகள் இருபத்தெட்டும், அவைகளுள் பூசல் வார்த்திகம் தொட்டு ஐந்து வகைப்பட்ட சச்சபுட முதலாகிய தாள மாத்திரைகளும்,

1474. மாத்திரையின் கதிகளும், சொற்களும், கீதங் களும், பாடங்களும், எழுத்துகளும், வளம்தரும், மணிபந்தம் முதலாகக் கீதத்தின்கண் வகுத்த கட்டளைகள் இருபத் தெட்டும், அளவிடப்பட்ட சரளை முதலிய கட்டளைகள் முப்பத்தைந்தும், நன்றாக அமைந்த பவமும் தாளமும் அராகமும் ஆகப் பரதநூலுள் கூறப்பட்ட இம்மூன்றும் தம் முள் பிளவு படாமல் ஒத்த பான்மை இறுதியாகச் செய்யப் படும் கூத்து அகமார்க்கமாகும்.

1475. இராஜசேகரப் பாண்டியன் பரதநூலிற் கூறிய கூத்தினைப் பயிலும்போது தனது உடம்பில் மிகவும் துன்பமாகிய அயர்வு நோய் உண்டாவதை அறிந்தான். 'இத்துன்பமானது நான்கு மறைகளாலும் அறிய முடியாத பொருளாயும், ஞான வடிவாயும் உள்ள வெள்ளியம் பலத்துள் ஆடியருளும் சிவபெருமானுக்கும் உண்டாகுமே' என்று மனத்தில் எண்ணினான்.

1476. கரியதா மரைக்கண் ணானுங் கமலநான் முகனுங் காண்டற்
கரியதாள் ஒன்றே நோவ ஆற்றநா ணிற்ப தந்தோ
உரியதா மிதனைக் கற்று வருத்தமுற் றோர்ந்து மீது
தெரியநா னிருப்ப தேயோ அறனெனச் சிந்தை நோவான்.

1477. வடுப்படு பிறவிப் பௌவ வரம்புகாண் கின்ற நாள்வந்
தடுப்பவர் யாவரேனும் அவர்க்கெலாம் போகம் வீடு
கொடுப்பவர் செய்யு மிந்தக் கூத்தையெப் படிநாஞ் சென்று
தடுப்பது தகாதன் றேனும் வருந்துமே சரணம் என்னா.

1478. இதற்கிது துணிவென் றுன்னி யெழுந்துபோய்ச் சிவன் இராவிற்
கதக்களிற் றொருத்த லேந்துங் கதிர்மணிக் குடுமிக் கோயில்
மதக்கரி யுரியி னாற்கு வரம்பறச் சிறந்த பூசை
விதப்பட யாம நான்கும் விதிவழி இயற்றல் செய்யா.

1479. விண்டக மலர்த்தாள் ஏத்தி வெள்ளியம் பலத்து ளன்பர்
தொண்டக மலர நின்ற சோதிமெய்ஞ் ஞானக் கூத்தைக்
கண்டக மகிழ்ந்து தாழ்ந்து கட்புனல் சோரச் செங்கை
முண்டக முடிமே லேற்றி முகிழ்த்துநின் றிதனை வேண்டும்.

1476. கரிய நிறத்தினையுடைய, தாமரை மலர் போன்ற கண்கொண்ட திருமாலும், செந்தாமரை மலரில் வசிக்கும் பிரமதேவனும் காணுதற்கரிய திருவடிகளில் ஒரு திருவடியே துன்பமுறப் பல நாட்களாக ஆடி நிற்கின்றதே! அந்தோ! இப்பரத நூலைக் கற்று அதனால் வரும் வருத்தம் முழுவதும் அறிந்து வைத்திருந்தும் இதனை நான் உயிருடன் பார்த்துக் கொண்டிருப்பது தருமமோ? என்று மனம் வருந்துவானாயினான்.

1477. 'குற்றமுடைய பிறவிக்கடலை கடப்பதற்கரிய நன்னாள் வந்து பொருந்தப் பெற்றவர் யாவராயினும் அவர் அனைவர்க்கும் இன்பத்தையும் வீடு பேற்றையும் அளித்த ருளும் இறைவன் செய்கின்ற இக்கூத்தினை நான் எப்படிப் போய்த் தடுப்பது? இது தகாது. தடுக்காவிடில் அவருடை திருவடி வருந்துமே!' என்று பலவாறு சிந்தித்து வருத்த மடைந்தான்.

சிவபெருமான் கால் மாறி ஆடுதல்

1478. பின்பு பாண்டியன், "இதற்கு இதுவே துணிபு" என்று ஒன்றை மனத்தில் எண்ணி, எழுந்து போய்ச் சிவராத்திரியில் சினமுடைய எட்டுயானைகள் தாங்கும் மணிகள் இழைத்த சிகரத்தையுடைய இந்திர விமானத்தில் எழுந்தருளிய மதயானையின் தோலாகிய போர்வையை யுடைய சோமசுந்தரக் கடவுளுக்கு எல்லையில்லாத சிறந்த பூசையை ஆகம விதிப்படி முறையாக நான்கு யாமங்களிலும் செய்தான்.

1479. தாமரை மலர்போன்ற திருவடியைத் துதித்து, வெள்ளியம்பலத்திலே அன்பர்களின் தொண்டு பூண்ட உள்ளத் தாமரை மலர நின்ற பேரொளியாய் விளங்கும் பரம பதியின் மெய்ஞ் ஞானத்திருக் கூத்தினைத் தரிசித்து மனம் மகிழ்ந்து வணங்கிக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சிந்தி, சிவந்த கையாகிய தாமரையைத் தலையின் மேல் கூப்பி நின்று வேண்டத் தொடங்கினான்.

1480. நின்றதா ளெடுத்து வீசி யெடுத்ததா ணிலமீ தூன்றி
இன்றுநான் காண மாறி யாடிஎன் வருத்த மெல்லாம்
பொன்றுமா செய்தி யன்றேற் பொன்றுவ லென்னா வன்பின்
குன்றனான் சுரிகை வாள்மேற் குப்புற வீழ்வேன் என்னா.

1481. நாட்டினான் குறித்துப் பாய நண்ணுமுன் னிடத்தாள் ஊன்றி
நீட்டினான் வலத்தாள் வீசி நிருமலன் மாறி யாடிக்
காட்டினான் கன்னி நாடன் கவலையும் பாச மூன்றும்
வீட்டினான் பரமா னந்த வேலையுள் வீட்டி னானே.

1482. விளைகள்வாய் வீழ்ந்த வண்டின் மெய்யறி வின்ப மென்னும்
அளவிலா முந்நீர் வெள்ளத் தாழ்ந்தவன் எழுந்து பின்னும்
உளமும்வா சகமு மெய்யு முடையவ னதுவே யாகப்
பளகிலா வன்புதானே படிவமாய்ப் பழிச்ச லுற்றான்.

வேறு

1483. பெரியாய் சரணஞ் சிறியாய் சரணங்
கரியா கியவங் கணனே சரணம்
அரியா யெளியா யடிமா றிநடம்
புரிவாய் சரணம் புனிதா சரணம்.

1480. "ஐயனே! ஊன்றிய திருவடியை மேலெடுத்து வீசியும், தூக்கிய திருவடியை நிலத்தின் மேல் ஊன்றியும் இன்று அடியேன் காணுமாறு கால் மாறி ஆடுதலைச் செய்து என்துன்பமும் அழியுமாறு செய்தருள்க. அங்ஙனம் செய்தருளாவிடில் நான் இறந்துபடுவேன்'' என்று விண்ணப்பம் செய்து கொண்டு அன்பில் மனையை ஒத்த இராஜசேகர பாண்டியன், சிவபெருமான் எதிரே தன் உடைவாளை நாட்டி அதன் மேல் குப்புற விழப் புகுந்தான்.

1481. கீழே அவ்வுடை வாளை நாட்டி அதன் மேல் பாய்வதற்கு முன்னரே, அன்பிற்கெளியராகிய சிவபெரு மான் தனது இடத் தாளைக் கீழே ஊன்றி, வலக் காலை மேலே எடுத்து வீசிக் கால்மாறி யாடிக் காட்டியருளினார். கன்னி நாடனாகிய அப் பாண்டியனின் கவலையையும் மும்மலங்களையும் போக்கி அவனைப் பேரின்பக் கடவுள் வீழ்த்தினார்.

பாண்டியன் இறைவனைத் துதித்தல்

1482. இனிமை மிகுந்த மதுவின்கண் விழுந்த வண்டைப் போல உண்மையறிவின்பம் என்று சொல்லப் படும் அளவில்லாத கடல் வெள்ளத்தில் மூழ்கிய பாண்டியன் எழுந்தான். மனம் வாக்கு காயம் என்னும் மூன்றையும் தன்னை ஆளாக உடைய சிவபெருமானுக்கே உரிமையாக்கிக் குற்றமற்ற அன்பே வடிவமாய் நின்று துதிக்கத் தொடங்கினான்.

1483. "பெரியதினும் பெரியவனே வணக்கம்! சிறிய தினும் சிறியவனே வணக்கம்! அழகிய கண்களையுடைய வனே வணக்கம்! தேவர்க்கு அரியவனே, அடியார்க்கு எளியவனே, கால்மாறி நடம் புரிபவனே வணக்கம்! தூயவனே வணக்கம்!

1484. நதியா டியசெஞ் சடையாய் நகைவெண்
மதியாய் மதியா தவர்தம் மதியிற்
பதியாய் பதினெண் கணமும் பரவுந்
துதியாய் சரணஞ் சுடரே சரணம்.

1485. பழையாய் புதியாய் சரணம் பணிலக்
குழையாய் சரணங் கொடுவெண் மழுவாள்
உழையாய் சரணம் உருகா தவர்பால்
விழையாய் சரணம் விகிர்தா சரணம்.

1486. இருளாய் வெளியாய் சரணம் எனையும்
பொருளாக நினைந்து புரந்தரன் மால்
தெருளா தநடந் தெரிவித்து எனையாள்
அருளாய் சரணம் அழகா சரணம்.

1487. அயனத் தனெனப் படுமா டரவச்
சயனத் தவனைத் தருதத் துவநால்
வயனத் தவவா னவர்வா னவசேல்
நயனத் தவள்நா யகனே சரணம்.

1488. கதவெங் கரியின் னுரியாய் சரணம்
முதலந் தமிலா முதலே சரணென்று
றதிர்பைங் கழல்நூ புரவண் டலறும்
பதபங் கயமுன் புபணிந் தரசன்.

1484. "கங்கை விளையாடும் சடையுடையவனே, ஒளிமிக்க வெள்ளிய பிறையணிந்தவனே, மதியாதவர் கருத்தில் பொருந்தாதவனே, பதினெண் கணங்களாலும் துதிக்கப்படும் துதியினை உடையவனே வணக்கம்! பேரொளி யானவனே வணக்கம்!

1485. "பலவற்றினும் பழமையானவனே, எல்லா வற்றிலும் புதுமையானவனே வணக்கம். சங்குக் குழையை உடையவனே வணக்கம்! கொடிய வெள்ளிய மழுப்படை யையும் மானையும் உடையவனே வணக்கம்! நின்னை நினைந்து மனம் உருகாதவரிடம் செல்ல விரும்பாதவனே வணக்கம்! விகிர்தனே வணக்கம்!

1486. "இருளாய், வெளியாய் உள்ளவனே வணக்கம்! ஒன்றுக்கும் பற்றாத அடியேனையும் ஒரு பொருளாகக் கருதி இந்திரனும் திருமாலும் அறியாத திருக் கூத்தினைக் காண்பித்து என்னை ஆளும் அருளுடையவனே வணக்கம்! பேரழகனே வணக்கம்.

1487. "பிரமனையும், சங்கினை ஏந்தியவனென்று சொல்லப்படும், ஆடுகின்ற அனந்தனைப் பாயலாகக் கொண்ட திருமாலையும் தந்தருளிய தத்துவ வடிவாய் உள்ளவனே! நான்கு வேதங்களாகிய திருவாக்கினையுடைய வனே! தேவ தேவனே! அங்கயற்கண்ணம்மையின் நாயகனே! வணக்கம்.

1488. "சினத்தையுடைய கொடிய யானையின் தோலைப் போர்த்தவனே வணக்கம். முதலும் முடிவும் இல்லாத முதல்வனே வணக்கம்!" என்று வணங்கி ஒலிக்கின்ற ஒளிபொருந்திய வீரக்கழலும் சிலம்பும் ஆகிய ஆரவாரிக்கும் திருவடித் தாமரையின் முன்னர் மன்னன் விழுந்து வணங்கினான்.

வேறு

1489. என்றுமிப் படியே யிந்தத் திருநடம் யாருங் காண
நின்றருள் செய்ய வேண்டு நிருமல மான வெள்ளி
மன்றவ வடியேன் வேண்டும் வரமிது வென்று
தாழ்ந்தான்
அன்றுதொட் டின்று மெங்கோ னந்நட நிலையாய்
நின்றான்.

கான் மாறி ஆடின படலம் முற்றிற்று.

25. பழி அஞ்சின படலம்

1490. ஈறிலான் செழியன் அன்புக் கெளியவ னாகி மன்றுள்
மாறியா டியகூத் தென்சொல் வரம்பின தாமே கங்கை
ஆறுசேர் சடையான் றானோ ரரும்பழி யஞ்சித்
தென்னன்
தேறலா மனத்தைத் தேற்றுந் திருவிளை யாடல்
சொல்வாம்.

1491. இனையநாட் சிறிது செல்ல விராசசே கரன்றன் காதல்
தனையனாங் குலோத்துங் கற்குத் தன்னர சிருக்கை
நல்கி
வினையெலாம் வென்று ஞான வெள்ளியம் பலத்துள்
ஆடும்
கனைகழ னிழலிற் பின்னிக் கலந்துபே ரின்ப
முற்றான்.

1489. "வெள்ளியம்பலத்துள் ஆடும் பெருமானே! இந்த மாறியாடிய திருக்கூத்தினை யாவரும் தரிசிக்கும்படி எக்காலத்தும் இவ்வாறே நின்று தேவரீர் அருள் செய்ய வேண்டும். இதுவே அடியேன் வேண்டும் வரமாகும்" என்று விண்ணப்பம் செய்தான் அன்று முதல் இன்று வரையும் சோமசுந்தரக் கடவுள் 'கால்மாறி ஆடிய திருக்கோலத் தினராகவே நின்று அருள் புரிந்து வருகின்றார்.

கான் மாறி ஆடின படலம் முற்றிற்று.

25. பழி அஞ்சின் படலம்

1490. அழிவில்லாத இறைவன், இராஜசேகர பாண்டியன் அன்பிற்கு எளியனாய், வெள்ளியம்பலத்திலே கால்மாறி ஆடிய திருக்கூத்து என் சொல்லின் எல்லைக் குட்படுமோ? கங்கை ஆளுடைய சடையை உடையவ னாகிய சோமசுந்தரக் கடவுள் ஒரு கொடும்பழிக்கு அஞ்சிய குலோத்துங்க பாண்டியனுடைய தெளியாத மனத்தினைத் தெளிவித்த திருவிளையாடலைக் கூறுவோம்.

1491. இவ்வாறாக சில நாட்கள் கழிந்தபின் இராஜ சேகரபாண்டியன் தன் அன்பிற்குரிய புதல்வனாகிய குலோத்துங்க பாண்டியனுக்குத் தன் அரசியலைத் தந்து, பின்னர் வெள்ளியம்பலத்துள் ஆடும் வீரக் கழலணிந்த சோமசுந்தரக் கடவுளின் திருவடி நீழலில் இரண்டறக் கலந்து பேரின்பத்தை அடைந்தான்.

1492. குரவன் செங் கோல்கைக் கொண்ட குலோத்துங்க
வழுதி செங்கண்
அரவங்கம் பூண்ட கூட லாதிநா யகனை நித்தம்
பரவன்பின் வழிபா டானாப் பத்திமை நியமம் பூண்டான்
இரவஞ்சுங் கதுப்பின் நல்லா ரீரையா யிரவர் உள்ளான்.

வேறு

1493. அப்பதினா யிரவர்க்கும் ஒவ்வொருத்திக் கவ்வாறாய்
ஒப்பரிய வறுபதினா யிரங்குமர ருளரவருள்
செப்பரிய வல்லாண்மைச் சிங்கவிள வேறனையான்
வைப்பனையான் முதற்பிறந்த மைந்தன்பேர்
அனந்தகுணன்.

1494. கலைபயின்று பரிநெடுந்தேர் கரிபயின்று பலகைவாள்
சிலைபயின்று வருகுமரர் திறநோக்கி மகிழ்வேந்தன்
அலைபயின்ற கடலாடை நிலமகளை யடலணிதோள்
மலைபயின்று குளிர்தூங்க மகிழ்வித்து வாழுநாள்.

1495. செய்யேந்து திருப்புத்தூர் நின்றுமொரு
செழுமறையோன்
பையேந்தும் அரவல்குல் மனைவியொடும் பானல்வாய்க்
கையேந்து குழவியொடுங் கடம்புகுந்து மாதுலன் பால்
மையேந்து பொழின்மதுரை நகர்நோக்கி வருகின்றான்.

குலோத்துங்க பாண்டியன் ஆட்சி

1492. தந்தையினுடைய அரசாட்சியை மேற்கொண்ட குலோத்துங்க பாண்டியன் 'சிவந்த கண்களையுடைய பாம்புகளைத் திருமேனியில் அணிந்த, மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளை நாள் தோறும் அன்புடன் துதித்து வழிபடும் பக்தி நியமத்தை மேற் கொண்டான். அவனுக்கு இருளும் அஞ்சும் கூந்தலையுடைய மனைவியர் பதினாயிரவர் இருந்தனர்.

1493. அவர்கள் ஓவ்வொருவருக்கும் ஆறு ஆறு புதல்வர்கள் வீதம் அறுபதினாயிரம் புதல்வர்கள் பிறந்தார் கள். அப்புதல்வர்களுள் முதலில் தோன்றிய புதல்வன் சொல்லுதற்கரிய வலிய ஆண்மை மிக்க இளமையான ஆண் சிங்கத்தைப் போன்றவன். சேமநிதியைப் போன்றவன். அவன் பெயர் 'அனந்தகுணன்'.

1494. எல்லாக் கலைகளையும் கற்று, குதிரை, தேர் யானை இவற்றைச் செலுத்தும் திறத்தையும் கற்று வளர் கின்ற புதல்வர்களின் திறமையைக் கண்டு மன்னன் மகிழ் வடைந்தான். அலைகளையுடைய கடலை ஆடையாக உடைய நிலமகளை, தன் வெற்றியையே அணியாகப் பூண்ட தோளாகிய மலையின்கண் தங்கி இன்புறுமாறு மகிழ்வித்து வாழ்ந்து வந்தான்.

மறையவர் மதுரை நோக்கி வருதல்

1495. ஓர் அழகிய வேதியன் வயல்கள் சூழ்ந்த திருப்புத்தூரில் இருந்து படமுடைய பாம்பு போன்ற அல் குலையுடைய தன் மனைவியோடும், பால்மணம் மாறாத நல்ல வாயினையுடைய தன் குழந்தையோடும் தன் மாமன் வீட்டிற்கு மதுரையை நோக்கிக் காட்டின் மார்க்கமாக வந்து கொண்டிருந்தான்.

1496. வருவானுண் ணீர்வேட்டு வருவாளை வழிநிற்கும்
பெருவானந் தடவுமொரு பேராலி னீழலின்கீழ்
ஒருவாத பசுங்குழவி யுடனிருத்தி நீர்தேடித்
தருவான் போய் மீண்டுமனை யிருக்குமிடந்
தலைப்படுமுன்.

1497. இலைத்தலைய பழுமரத்தின் மிசைமுன்னாள்
எய்ததொரு
கொலைத்தலைய கூர்வாளி கோப்புண்டு கிடந்ததுகால்
அலைத்தலைய வீழ்ந்தும்மை வினைஉலப்ப ஆங்கிருந்த
வலைத்தலைய மானோக்கி வயிறுருவத் தைத்தன்றால்.

1498. அவ்வாறவ் வணங்கனையா ளுயிரிழந்தாள்
உவ்வேலைச்
செவ்வாளி யேறிட்ட சிலையுடையா னொருவேடன்
வெவ்வாளி யேறனையான் வெயிற்கொதுங்கு நிழல்தேடி
அவ்வால நிழலெய்தி யயனின்றா னிளைப்பாற.

1499. தண்ணீர்க்குப் போயாவி தலைப்பட்ட மறையவனும்
உண்ணீர்கைக் கொண்டுமீண் டொருங்கிருந்த
குழவியொடும்
புண்ணீர்வெள் ளத்துக்கால் தாழ்ந்துயிரைப்
புறங்கொடுத்த
பண்ணீர மழலைமொழிப் பார்ப்பனியைக் கண்ணுற்றான்.

1496. அங்ஙனம் வரும் அம்மறையவன் தண்ணீர் தாகம் கொண்டு வருந்துகின்ற தன் மனைவியை வழியிலே நிற்கின்ற வானளாவிய பெரிய ஆலமரத்தின் நிழற்கீழ் இளமை நீங்காத குழந்தையோடும் இருக்கச் செய்து தான் நீர் நிலையினைத் தேடிச் சென்றான். அவன் நீரினைக் கொண்டு திரும்பி மனைவி இருக்குமிடத்தை அடைதற்கு முன்,

பார்ப்பனி இறத்தல்

1497. இலைகள் நிறைந்த தலையை உடைய ஆல மரத்தின் மேல் முன்னொரு நாளில் ஒரு வேடனால் எய்யப் பெற்ற கொடிய கொலைத் தொழிலையுடைய ஒரு கூரிய அம்பு கோப்புண்டு கிடந்தது. அவ்வம்பு, காற்றினால் அலைக்கப்பட்டு மரம் அசைதலால் வீழ்ந்தது. முன்னை வினைப்பயன் முடிய, அங்கே தங்கி இருந்த, வலையகப் பட்ட மான்போன்ற கண்ணையடைய பார்ப்பனியின் வயிற்றிலே ஊடுருவத் தைத்தது.

1498. அதனால் தெய்வமகன் போன்ற அப்பார்ப்பனி உயிர் துறந்தாள். அப்பொழுது கொடிய ஆண் சிங்கத்தைப் போன்ற ஒரு வேடன் செவ்வாளியினை ஏறிட்ட வில்லை யுடையனாய் வெயிலுக்கு ஒதுங்கி இருக்கத் தக்க நிழலினைத் தேடி அந்த ஆலமரத்தின் நிழலையடைந்து, அம்மரத்தின் பக்கத்தில் நின்றான். (செவ்வாளி; சிவந்த அம்பு என்றும், குருதி தோய்ந்த அம்பென்றும் பொருள்.)

மறையவனின் துன்பம்

1499. தண்ணீர் கொண்டு வரச்சென்று நீரோடையை அடைந்த அவ்வந்தணன் உண்ணும் நீரை எடுத்துக் கொண்டு திரும்பினான். ஒருங்கு இருந்த குழந்தையோடு, இரத்த வெள்ளத்தில் அழுந்ததி உயிர் துறந்த பால் போன்ற இனிய மொழியையுடைய தன் மனைவியைக் கண்டான்.

1500. அயில்போலுங் கணையேறுண்டு அவ்வழிபுண்
ணீர்சோர
மயில்போல வுயிர்போகிக் கிடக்கின்றாள்
மருங்கணைந்தென்
உயிர்போல்வா யுனக்கிதுவென் னுற்றதென
மத்தெறிதண்
தயிர்போலக் கலங்கியறி வழிந்துமனஞ் சாம்பினான்.

1501. இனைய தோர் பெண்பழியை யாரேற்றார்
எனத்தேர்வான்
அனையதோர் பழுமரத்தின் புறத்தொருசா ரழல்காலும்
முனையதோர் கணையொடு முடக்கியகைச்
சிலையேந்தி
வினையதோர்ந் தெதிர்நின்ற விறல்வேடன்
தனைக்கண்டான்.

வேறு

1502. காப்பணி தாளன் வாளொடு வீக்கிய கச்சாளன்
கூர்ப்பக ழிக்கோ லேறிடு வில்லன் கொலை செய்வான்
ஏற்பன கைக்கொண் டிவ்விடை நின்றான்
இவனேயென்
பார்ப்பனி யைக்கொன் றின்னுயி ருண்டு பழிபூண்டான்.

1503. என்ன மதித்தே ஏடா வேடா என்னேழை
தன்னை வதைத்தாய் நீயே யென்னா தழல் கால்கண்
மின்னல் எயிற்றுக் கூற்றென வல்வாய் விட்டார்த்து
மன்னவ னாணைப் பாச மெறிந்து வலித்தேகும்.

1500. வேல்போன்ற கூரிய அம்பு தைத்து, அவ்வழியே குருதியொழுக, உயிர் நீங்கி மயில் போன்று கிடக்கின்ற மனைவியின் அருகில் சென்று, "என் உயிர் போன்றவளே! உனக்கு இத்தீமை நேர்ந்தது என்னையோ?" என்று மத்தி னால் கலக்கப்பட்ட தயிர்போலக் கலக்கமுற்று அறிவிழந்து மனம் சோர்ந்தான்.

வேடனே கொலையாளி என்றெண்ணுதல்

1501. அந்தணன் சிறிது மனம் தெளிந்து, 'இங்கு ஒரு பெண் பழியை ஏற்றுக் கொண்டவர் யார்?' என்பதை ஆராயப் புகுந்தான். அப்பொழுது, அந்த ஆலமரத்தின் புறத்தே ஒரு பக்கத்தில் நெருப்பினை உமிழும் முனையினை யுடைய ஒரு வாளியோடும், வளைந்த வில்லைக் கையிலேந்தி தனக்கு வாய்க்கும் வேட்டைத் தொழிலினை ஆராய்ந்து கொண்டு எதிரில் நிற்கும் வேட.னைக் கண்டான்.

1502. 'இவ்வேடன் காலில் செருப்பும், இடையில் வாளோடு கட்டிய கச்சும், கையில் கூரிய அம்பினை ஏறிட்டவில்லும் கொண்டு நின்றான். கொலை செய்வதற்கு ஏற்றவற்றைக் கைக்கொண்டு நிற்பவனாகிய இவனே என் மனைவியைக் கொன்று இனிய உயிரைப் பருகிப் பழி பூண்டவன்.

வேடனை, மறையவன் மன்னன்மேல் ஆணையிட்டு அழைத்தல்

1503. என்று கருதி, "ஏடா வேடா! நீயே என் மனைவியைக் கொன்றாய்," என்று தீயினை உமிழும் கண் களையும், மின்னல் போன்ற பற்களையுமுடைய எமனைப் போன்று வலிய வாயினைத் திறந்து முழக்கம் செய்தான். பின் "மன்னவன் மேல் ஆணை" என்று கூறி மன்னவன் ஆணையாகிய பாசத்தை வீசி இழுத்துச் சென்றான்.

1504. மாண்டவ ளைத்தன் வெந்நிடை யிட்டான் மகவொக்கல்
றாண்டவ ணைத்தான் றாய்முலை வேட்டழு
தன்சேயைக்
காண்டொறும் விம்மாக் கண்புனல் சோரக் கடிதேகா
ஆண்டகை மாறன் கூடல் அணைந்தான் அளியன்றான்.

1505. மட்டவிழ் தாரான் வாயின் மருங்கே வந்தெய்தா
உட்டுக ளில்லா வேடனை முன்விட் டுயிரன்னாள்
சட்டக நேரே யிட்டெதிர் மாறன் றமர்கேட்பக்
கட்டுளி சிந்தா முறையிடு கின்றான் கையோச்சா.

1506. கோமுறை கோடாக் கொற்றவர் ஏறே முறையேயோ
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா முறையேயோ
மாமதி வானோன் வழிவரு மைந்தா முறையேயோ
தீமைசெய் தாய்போற் செங்கை குறைத்தாய்
முறையேயோ.

1507. பிறங்குங் கோலான் மாறடு கொற்றம் பெறுவேந்தன்
உறங்கும் போதும் தன்னருள் ஆணை யுலகெங்கும்
அறங்குன் றாவாக் காப்பதை யென்ப வஃதியாதிம்
மறங்குன் றாதான் செய்கொலை காவா வழியென்றான்.

1504. பரிதாபத்திற்குரிய அம்மறையவன் இறந்து போன தன் மனைவியை முதுகில் இட்டுக் கொண்டும். குழந்தையை தன் அரையின் பக்கத்தில் அணைத்துக் கொண்டும், தாயின் முலைப்பாலை விரும்பி அழுகின்ற குழந்தையைக் காணும்தோறும் கண்ணீர் சோர விம்மி அழுது கொண்டும் விரைந்து சென்று ஆண் தன்மையுடைய பாண்டியனது மதுரையைச் சார்ந்தான்.

அரண்மனை அடைதல்

1505. பிறகு அவ்வந்தணன், மணமுடைய மலர் மாலையை அணிந்த பாண்டியனுடைய அரண்மனை வாயிலை அடைந்து, மனத்திலே குற்றமில்லாத வேடனை முன்னே விட்டு, உயிர் போன்ற தன் மனைவியின் உயிரற்ற உடலை எதிரே கிடத்திப் பாண்டியனின் அமைச்சர் முதலானோர் கேட்ப அவர்க்கு எதிரே கையை மேலே தூக்கிக் கண்ணீர் பெருக முறையிடத் தொடங்கினான்.

1506. "அரசியல் முறை தப்பாத மன்னர்களுள் ஆண் சிங்கம் போன்றவனே! இது முறையோ? தாமரை மலரில் வசிக்கும் திருமகள் வாழ்கின்ற குளிர்ந்த மார்பினையுடைய வனே! இது மறையோ? பெருமை மிக்க சந்திரன் மரபில் தோன்றியவனே! இது முறையோ? குற்றம் செய்தவன் போல் சிவந்த கையைத் தறித்துக் கொண்டவனே! இது முறையோ?" (கடைசி வரியில் கூறப்பட்டுள்ளது. பொற்கைப் பாண்டியன் வரலாறு, பாண்டியனின் முன்னோர் வரலாறு இங்கு ஏற்றிக் கூறப்படுகின்றது. இவ்வரலாற்றினைச் சிலப்பதிகாரம் பழமொழி நானூறு பரிமேலழகர் உரை போன்றவற்றில் கண்டு கொள்க.)

1507. சிறப்புடைய செங்கோலினால் பகைவரை வெல்லும் வெற்றியுடைய அரசன் உறங்கும்போதும் அவனுடைய அருளாணையானது உலகம் முற்றும் தருமநெறி வழுவாமல் காக்கப்பெறும் என்பார்கள், பெரியோர். அவ்வாணை கொலைத் தொழில் குறையாத இவ்வேடன் செய்த கொலையைக் காவாவிடத்து என்ன பயனுடைத்து" என்றான்.

1508. வாயிலு ளார்த மன்னவன் முன்போய் மன்னாநங்
கோயிலின் மாடோர் வேதியன் மாதைக்
கொலைசெய்தான்.
ஆயினன் என்றோர் வேடனை முன்விட் டவிந்தாளைத்
தாயினன் வந்திங் கிட்டயர் கின்றான் றமியென்றார்.

1509. இறைமக னஞ்சா என்குடை நன்றால் என்காவல்
அறமலி செங்கோ லஞ்சு பயந் தீர்த் தரசாளும்
முறைமையு நன்றால் மண்கலி மூழ்கா முயன்றேந்தும்
பொறைமையு நன்றா லென்று புலந்து புறம்போந்தான்.

1510. வேதிய னிற்குந் தன்மை தெரிந்தான் மெலிவுற்றான்
சாதியின் மிக்காய் வந்த துனக்கென் தளர்கின்றாய்
ஓதுதி யென்னக் காவல னைப்பார்த் துரைசான்ற
நீதியு ளாய்கே ளென்றுரை செய்வான் நிகழ்செய்தி.

1511. இன்றிவ ளைக்கொண் டோர்வட நீழல் இடைவிட்டுச்
சென்றுத ணீர்கொண் டியான்வரு முன்னிச்
சிலைவேடன்
கொன்றய னின்றா னென்றுலை யூட்டுங்
கொலைவேல்போல்
வன்றிறன் மாறன் செவிநுழை வித்தான்
மறையோனால்.

1508. வாயில் காப்போர் தம் அரசன் முன் சென்று, "அரசே! நமது அரண்மனை வாயிலின் பக்கத்தில் ஒரு மறையவன் தன் உயிரிழந்த மனைவியின் உடலை எடுத்து வந்து அங்குப் போட்டு அவளைக் கொலை செய்தான் என்று ஒரு வேடனை முன்னே விட்டுத் தனியே வருந்து கின்றான்' என்றனர்.

1509. அதனைக் கேட்டவுடன் அரசன் அஞ்சி, "என் வெண்கொற்றக் குடை நன்றாய் இருந்தது! என் குடிகளுக்கு ஐவகை அச்சமும் உண்டாகாமல் போக்கி ஆட்சி புரியும் முறையும் நன்றாய் இருந்தது. நாடு வறுமையில் மூழ்காமல் முயற்சியுடன் தாங்கும் பொறையும் நன்றாய் இருந்தது!" என்று தன்னை வெறுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

மறையவன் பாண்டியனிடம் முறையிடுதல்

1510. மறையோன் வந்து நிற்கும் நிலைமையினைக் கண்ட பாண்டியன் உள்ளம் மெலிந்து அவனை நோக்கி, "சாதியில் மிக்கவனே! நீ ஏன் வருந்துகின்றனை? உனக்கு நேர்ந்த துன்பம் யாது? சொல்லக் கடவாய்" என்றான். உடனே அம் மறையோன் மன்னனைப் பார்த்து, "புகழ் அமைந்த நீதியுள்ளவனே! கேட்பாயாக!" என்று தொடங்கி நடந்த செய்தியைச் சொல்லத் தொடங்கினான்.

1511. "நான் இன்று இவளை அழைத்துக் கொண்டு வந்து ஒரு ஆலமர நிழலில் இருத்தி விட்டுத் தண்ணீர் கொண்டு வரச் சென்றேன்! தண்ணீரினை முகந்து கொண்டு நான் வருவதற்கு முன்னரே, இந்த வில்வேடனான இச்சிலை வேடனே இவளைக் கொன்று, விட்டு அருகே நின்று கொண்டுருந்தான்.'' என்று மறையவன் கூறிய அச்சொற்கள் உலையிலிட்டுக் காய்ச்சிய வேல்போல மிக்க வலியினையுடைய பாண்டியனின் செவிகளில் புகுந்தன.

1512. அந்தணன் மாற்றந் தன்னையு முட்கொண்
டறநோக்குஞ்
சந்தன வெற்பன் மறவனை நோக்கத் தாழ்ந்தன்னான்
எந்தை பிரானே நாயடி யேனின் றெய்ப்பாற
வந்து புகுந்தேன் அந்த மரத்தின் மருங்கோர்சார்.

1513. ஐயோ நானுங் கொன்றவன் அல்லேன் கொன்றாரைக்
கையேன் வேறுங் கண்டில னென்றா னிவளாகத்
தெய் யே றுண்ட வாறெவ னென்றா ரெதிர்நின்றார்
மெய்யே யையா யானறி யேனிவ் விளைவென்றான்.

1514. இக்கொலை செய்தான் யானல னென்னா
துன்னென்னத்
தக்கவ னேயோ தறுகண் மறவன் உரைமெய்யோ
சிக்க ஒறுத்தா லல்லதை யுண்மை செப்பானென்
றொக்க வுரைத்தார் மந்திர ருள்ளார் பிறரெல்லாம்.

1515. மன்னன் றானு மற்றது செய்மின் னெனமள்ளர்
பின்னந் தண்டஞ் செய்தனர் கேட்கப் பிழையில்லான்
முன்னஞ் சொன்ன சொற்பெய ரானாய் மொழியாநின்
றின்னந் தீரத் தேருமி னென்றான் என்செய்வான்.

1516. ஆற்றவொ றுக்குந் தண்டமு மஞ்சான் அறைகின்ற
கூற்றமு மொன்றே கொன்ற குறிப்பு முகந்தோற்றான்
மாற்றவ ரேயோ மாவோ புள்ளோ வழிவந்த
கோற்றொடி யைக்கொன் றென்பெற வல்லான்
கொலைசெய்வான்.

வேடன் பதில் கூறல்

1512. அறத்தில் இருந்து பிழை படாத பொதிய மலையையுடைய பாண்டியன், மறையவன் சொல்லையும் கேட்டு மனதிற் கொண்டு, வேடனை நோக்கினான். உடனே அவ்வேடன் அரசனை வணங்கி, "எந்தையே! அரசர் பெருமானே! நாயினும் கடைப்பட்டவனாகிய நான் இன்று இளைப்பாறும் பொருட்டு அந்த ஆலமரத்தின் அடியில் ஒரு பக்கத்தில் வந்து நின்றேன்.

1513. "ஐயனே! நான் இவளைக் கொல்ல வில்லை' வேறு கொன்றவரைப் பார்க்கவும் இல்லை," என்று கூறினான். அதற்கு எதிர் நின்ற அமைச்சர்கள், "ஆயின் இவள் உடம்பிலே அம்பு தைத்து உருவியது எவ்வாறு?" என்று வினவினர். வேடன், "ஐயா! இந்நிகழ்ச்சியை உண்மையாகவே நானொன்றும் அறியேன்" என்று கூறினான்.

1514. அதைக் கேட்ட அமைச்சரும் பிறரும், "இவ் வேடன் இக்கொலையினைச் செய்தவன் யானல்லேன் என்று சொல்வதன்றி, யான் செய்தேன் என்று உண்மை கூறும் தகுதியை உடையவனோ? இவன் கூறும் சொல் உண்மை யாகுமோ? இவனை மிகவும் தண்டித்தாலன்றி உண்மை கூறான்" என்று ஒரு சேரக் கூறினர்.

1515. அரசனும், "அப்படியே செய்யுங்கள்" என்று கட்டளை இட்டான். தண்டிப்பவர்கள் வேடனைப் பலவாறு தண்டித்துக் கேட்டனர். குற்றமற்ற அவ்வேடன் முன்னர் சொன்ன சொல்லினின்றும் சிறிதும் பிறழாமலே சொல்லி, "இன்னும் நன்றாக ஆராயுங்கள்" என்று கூறினான். இதையன்றி அவன் வேறு யாது செய்ய வல்லான்?

1516. அப்பொழுது பாண்டியன், "இவன் கடும் தண்டத்திற்கும் அஞ்சுகின்றான் இல்லை. இவன் கூறுகின்ற மறு மொழியும் வேறுபாடின்றி ஒன்றேயாயுள்ளது. இவன் முகத்தில் சிறிதும் கொலைக் குறிப்பும் காணப்படவில்லை. தனக்குப் பகைவரோ? அன்றி விலங்கோ! பறவையோ! கொல்வதற்கு? வழியில் வந்த இப்பார்ப்பனியைக் கொல்லு தலால் இவனுக்கு வரும் பயன் யாது?

1517. கைதவ னாமிக் கானவ னேயோ பிறரேயோ
செய்தவர் யாரோ யிக்கொலை வேட்டஞ் செய்தோர்மா
எய்த விலக்கிற் றப்பிய கோறா னேறுண்டில்தம்
மைதவழ் கண்ணான் மாய்ந்தன ளேயோ வறியேனால்.

1518. என்னா முன்னித் தென்னவன் இன்ன மிதுமுன்னூல்
தன்னா லாயத் தக்கதை யென்றான் தகவிற்றன்
அன்னா ரந்நூ லாய்ந்திது நூலா லமையாதால்
மன்னா தெய்வத் தாலே தேறும் வழியென்றார்.

1519. வேந்தர்கள் சிங்கம் வேதிய னைப்பார்த் திதுதீர
ஆய்ந்துன துள்ளக் கவலை யொழிப்பேன் அஞ்சேனின்
ஏந்திழை யீமக் கடனிறு விப்போ தென்றேவித்
தேந்துணர் வேங்கைத் தார்மற வோனைச்
சிறைசெய்தான்.

1520. மின்னனை யாடன் செய்கடன் முற்றா மீண்டோனைத்
தன்னமக் கோயிற் கடைவயின் வைத்துத் தானேகிக்
கொன்னவில் வேலான் தங்கள் குடிக்கோர்
குலதெய்வம்
என்ன விருந்தார் அடிகள் பணிந்தா னிதுகூறும்.

1517. "இக்கொலையினைப் புரிந்தவர், வஞ்சகனாகிய இவ்வேடன்தானோ? அன்றிப் பிறரோ? யாரோ? அல்லது வேட்டையாடுவோர் விலங்கினை எய்தக் குறிப்பினின்றும் தப்பிய அம்புதான் தைத்தலால் மைதீட்டிய கண்களை யுடைய இவள் இறந்தவளோ? ஒன்றும் அறிந்திலேன்"

தெய்வத்தால் தெளிவடைய வேண்டும்

1518. என்று பாண்டியன் நினைத்து, "இன்னும் அற நூலால் ஆராய்ந்து தெளியத் தக்கது என்றான்" உடனே தகுதியில் அரசனை ஒத்தவர்களாகி அமைச்சர்கள், "அரசே! இது நூலாராய்ச்சியாலே தெளியத் தக்கது அன்று, தெய்வத்தால் தெளிவடையும் நெறியினை உடையது" என்றனர்.

1519. அதனைக் கேட்ட மன்னர்களுள் சிங்கம் போன்ற பாண்டியன், மறையவனை நோக்கி, "நான் இதனை நன்கு ஆராய்ந்து உன் மனக் கவலையைப் போக்குவேன்! நீ அஞ்சற்க, நின் மனைவியின் ஈமக் கடனை முடித்து வருக" என்று அவனைப் போக்கிவிட்டு, தேன் சிந்தும் பூங்கொத்துகளையுடைய வேங்கை மலர் மாலையை அணிந்த வேடனைச் சிறையிலிட்டான்.

அரசன் சோமசுந்தரப் பெருமானை வேண்டுதல்

1520. மின்னலை யொத்த மனைவிக்குச் செய்ய வேண்டிய ஈமக் கடன்களைச் செய்து முடித்துத் திரும்பி வந்த மறையவனைத் தன் அரண்மனை வாயிலில் இருக்கச் செய்தான். கொலைத் தொழில், பயின்ற வேற்படை ஏந்திய பாண்டியன் சென்று தனக்கும் குடிக்கும் குலதெய்வம் என்று உள்ள சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளை வணங்கி இதனைக் கூறத் தொடங்கினான்.

வேறு

1521. மன்றாடு மணியேயிம் மறவன்றான் பார்ப்பனியைக்
கொன்றானோ பிறர்பிறிதாற் கொன்றதோ இதுவறநூல்
ஒன்றாலு மளப்பரிதாக் கிடந்ததா லுன்னருளால்
என்தாழ்வு கெடத்தேற்றா யென்றிரந்தான் அவ்வேலை.

1522. திருநகரின் புறம்பொருசார் குலவணிகத்
தெருவின்கண்
ஒருமனையின் மணமுளதங் கந்தணனோ டொருங்குநீ
வருதியுன துளந்தேறா மாற்ற மெலாந் தேற்றுமென்று
இருவிசும்பி னகடுகிழித் தெழுந்ததால் ஒருவாக்கு.

1523. திருவாக்குச் செவிமடுத்துச் செழியன்றன்
புறங்கடையிற்
பெருவாக்கு மறையவனோ டொருங்கெய்திப்
பெரும்பகல்போய்க்
கருவாக்கு மருண்மாலைக் கங்குல்வாய்த் தன்னைவேற்
றுருவாக்கிக் கடிமனைபோய் ஒருசிறைபுக்
கினிதிருந்தான்.

1524. அன்றிறைவன் அருளாலங் கவர்கேட்க அம்மனையின்
மன்றல்மகன் றனக்களந்த நாளுலப்ப மறலியிருட்
குன்றமிரண் டெனவிடுத்த கொடும்பாசக்
கையினர்வாய்
மென்றுவருஞ் சினத்தவரில் ஒருவனிது வினவுமால்.

1521. "வெள்ளியம்பலத்தில் ஆடும் மாணிக்கமே! இவ்வேடன்தான் பார்ப்பனியைக் கொன்றானோ? அல்லது பிறர் வேறு காரணத்தால் கொன்றனரோ? இந்நிகழ்ச்சி அறநூல் முதலிய ஒன்றாலும் அளந்து அறிய முடியவில்லை, உமது திருவருளினால் அடியேனது குறை தீரத் தெளிவித்தருள வேண்டும்'' என்று குறையிரந்து வேண்டினான். அப்பொழுது,

இறைவனின் திருவாக்கு

1522. இத்திருநகரத்தின் புறம்பே ஒரு பக்கத்தில் வணிகர் குலத் தெருவிலுள்ள ஒரு வீட்டில் திருமணம் நடைபெற உள்ளது. அங்கு அம்மறையவனோடு நீ ஒரு சேர வருவாயாக. உம் உள்ளம் தெளியாதத மாறு பாட்டினை எல்லாம் தெளியும்படி செய்விப்போம்" என்று பெரிய வானத்தினுடைய வயிற்றைக் கிழித்துக் கொண்டு ஒரு அசரீரி வாக்கு எழுந்தது.

1523. அத்திருவாக்கினைக் கேட்ட பாண்டியன், தனது கடைவாயில் உள்ள மறையுணர்ந்த அந்தணனோடு ஒருங்குகூடி பெரிய பகற்பொழுது கழித்து கருமையை உண்டாக்கும் மாலைப் பொழுதின் இருளில் தான் வேறு வேடம் பூண்டு அக்கலியாண வீட்டிற்குச் சென்ற ஒருவரும் அறியாமல் ஒரு பக்கத்தில் இனிது இருந்தான்.

எமதூதர் பேச்சு

1524. அப்போது சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் அப்பாண்டியனும் மறையவனும் கேட்குமாறு அம்மண வீட்டின் கண், மணமகனுக்கு வரையறுத்த வாழ்நாள் முடிதலால் கூற்றுவனால் அனுப்பப்பட்ட இரண்டு கரியமலை போன்ற பாசத்தைக் கையில் கொண்டவராய் வாய் மென்று சினமுடையவராய் உள்ள எமதூதர் இருவரில், ஒருவன் பேசத் தொடங்கினான்.

1525. இன்றேயிங் கிவனுயிரைத் தருதிரெனும் இரும்பகட்டுக்
குன்றேறுங் கோனுரையாற் கொள்வதெவன்
பிணியுடம்பின்
ஒன்றேனு மிலதொருகா ரணமின்றி யுயிர்கொள்வ
தன்றே யென் செய்துமென மற்றவன் ஈதறைகிற்பான்.

1526. ஆற்றாலே றுண்டகணை யருகொதுங்கும்
பார்ப்பனியைக்
காற்றால்வீழ்த் தெவ்வாறு கவர்ந்தேமப் படியிந்தச்
சாற்றர வாரத்தில் தாம்பறுத்துப் புறநின்ற
ஈற்றாவை வெருளவிடுத்து இவனாவி கவர்கென்றான்.

1527. அந்தமொழி கேட்டரசன் அருமறையோய் கேட்டனையோ
இந்தமொழி யெனப்பனவ னிவனிவ்வா றிறந்தாலென்
பைந்தொடியா ளிறந்ததுமப் படியேஎன் மனக்கவலை
சிந்தவிது காண்பேனென் றொருங்கிருந்தான்
தென்னனொடும்.

1528. ஒட்டியபல் கிளைதுவன்றி ஒல்லொலிமங்
கலந்தொடங்கக்
கொட்டியபல் லியமுழங்கக் குழுமியவோ
சையின்வெருண்டு
கட்டியதாம் பிறப்புனிற்றுக் கற்றாவொன் றதிர்ந்தோடி
முட்டியதால் மணமகனை முடிந்ததால் அவனாவி.

1525. "மலைபோன்ற எருமைக் கடாவில் ஏறும் நம் தலைவனாகிய எமன், இப்போதே இங்கு இம்மண மகன் உயிரைக் கொண்டு வாரும்" என்று கூறிய ஆணையால் இவன் உயிரைக் கவர்வது எங்ஙனம்? உடம்பில் ஒரு பிணியும் இல்லையே. ஒரு காரணமும் இல்லாமல் ஒருயிரைக் கொண்டு போவது இயலாததன்றே. என்ன செய்வோம்?" என்று வினவ, மற்றொருவன் இதனைக் கூறுவான்.

1526. "வழியில் உள்ள ஆலமரத்து நிழலின் அருகு ஒதுங்கிய பார்ப்பிணியின் உயிரை அம்மரத்தின் கண் முன்னரே சிக்கிக் கிடந்த கணையைக் காற்றினால் வீழ்த்தி எங்ஙனம் கவர்ந்தோமோ, அவ்வாறே புறத்தே நின்ற கன்றினை ஈன்ற பசுவினை இம்மண விழாவின் ஆரவாரத்தினால் கயிற்றை அறுத்துக் கொண்டு வெகுண்டோடச் செய்து இவன் உயிரைக் கவர்வோமாக" என்றான்.

1527. அவ்வார்த்தையை மன்னவன் கேட்டு, "அரிய மறையுணர்ந்த அந்தணனே! இவ்வார்த்தையைக் கேட்டா யோ?" என்றான். அதற்கு அம்மறையவன், "இம்மண மகன் இங்குக் கூறியவாறே இறந்துபடுவானாயின் என் மனைவி இறந்ததும் அப்படியேதான், என் மனத் துன்பம் நீங்க இந்நிகழ்ச்சியைக் காண்போம்" என்று கூறிப் பாண்டிய னோடும் ஒருசேர இருந்தனன்.

மணமகன் பிணமகனாதல்

1528. மணமகன் இல்லத்தில் அவனுடைய நெருங்கிய சுற்றத்தார் யாவரும் ஒன்று சேர்ந்து ஒல்லெனும் ஒலியோடு மண வினையைத் தொடங்கினர். அப்போது பல இசைக் கருவிகள் ஒலித்தன. அவை ஒருங்கு கூடிப் போரொலி செய்தன. இங்ஙனம் முழங்கி எழுந்த ஓசையால் அங்குக் கட்டியிருந்த ஒரு இளம் கன்றினையுடைய பசு வெகுண்டு அலறிக் கயிற்றை அறுத்துக் கொண்டோடி மணமகனை முட்டித் தள்ளியது, அவன் இறந்தான்.

1529. மணமகனே பிணமகனாய் மணப்பறையே
பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோய் அழுகையொலி
யாய்க்கழியக்
கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க்
கொன்றுமிலை.

1530. கண்டானந் தணனென்ன காரியஞ்செய் தேன்எனத்தன்
வண்டார்பூங் குழன்மனைவி மாட்சியின் கழிதுன்பங்
கொண்டான்மற் றவனொடுந்தன் கோயில்புகுந்
தலர்வேப்பந்
தண்டாரான் அமைச்சர்க்கும் பிறர்க்குமிது சாற்றி
னான்.

1531. மறையவனை யின்னுமொரு மணமுடித்துக் கோடியென
நிறையவரும் பொருள் ஈத்து நீபோதி யெனவிடுத்துச்
சிறையமுவத் திடைக்கிடந்த செடித்தலைய இடிக்குரல
கறையுடல்வே டனைத்தொடுத்த கால்யாப்புக்
கழல்வித்து.

1532. தெளியாதே யாமிழைத்த தீத்தண்டம் பொறுத்தியென
விளியாஇன் னருள்சுரந்து வேண்டுவன நனிநல்கி
அளியானா மனத்தரச னவனையவ னிடைச் செலுத்திக்
களியானை விழவெய்த கௌரியனைப்
போய்ப்பணிவான்.

1529. மணமகனே பிணமகனாயும், மணப்பறையே பிணப் பறையாயும், மங்கல அணியுடைய மகளிரின் வாழ்த்தொலியே அழுகையொலியாயும் மாறி முடிய, கணப் பொழுதினுள்ளே பிறந்து இறக்கின்ற இவ்வுடலினாலே பெறக்கூடிய பயனை அறிவுடையவரே பெறுவர். அறிவு சிறிதும் இல்லாதவர்களுக்கு அப்பயன் எய்தல் சிறிதும் இல்லையாம்.

மறையவன் துன்பம்

1530. மறையவன் அதனைக் கண்டு "என்ன காரியம் செய்துவிட்டேன்!" என்று கூறி இரங்கி, வண்டு மொய்க்கும் பூவையணிந்த கூந்தலையுடைய தன் மனைவி இறந்ததனால் உண்டாகிய துன்பத்தினும் மிக்க துன்பத்தைக் கொண்டான். மலர்ந்த வேப்பம் பூ மாலையை அணிந்த பாண்டியன் அவ்வேதியனுடன் தன் மாளிகையை அடைந்தான். அமைச்சர்களுக்கும் ஏனையோர்க்கும் இதனைக் கூறினான்.

1531. பின்பு குலோத்துங்க பாண்டியன், அந்தணனை நோக்கி, "நீ இன்னும் ஒரு கலியாணம் செய்து கொள்வாயாக" என்று கூறி அவனுக்கு அரிய பொருள் நிறையக் கொடுத்து, "செல்க" என்று விடை கொடுத்து அனுப்பினான். பின்னர் சிறைச்சாலையில் மனக் கவலையோடு கிடந்த, முடைநாற்றம் வீசும் தலையினையும், இடி போன்ற, குரலினையும், கரிய உடம்பினையும் உடைய வேடனை, பூட்டிய கால் விலங்கிலிருந்து விடுவித்தான்.

1532. தண்ணளி நீங்காத மனத்தையுடைய பாண்டியன், அவ்வேடனைத் தன் அருகில் அழைத்து, "உண்மை அறியாமல் நான் செய்த தண்டத்தைப் பொறுத்துக் கொள்ளக் கடவாய்." என்று கூறி, அவன் விரும்பிய பொருள்களை அளித்து அவனிடத்திற்குப் போக விடுத்தான். பின்னர் சமணர்கள் ஏவிய களிப்பினையுடைய யானை விழும்படி அம்பெய்த சோமசுந்தரக் கடவுளைச் சென்று வணங்கத் தொடங்கினான்.

வேறு

1533. ஆதரம் பெருகப் பாவியேன் பொருட்டெம் மடிகள்நீ
ரரும்பழி யஞ்சு
நாதரா யிருந்தீர் எந்தையர்க் குண்டோ நான்செயத்
தக்கதொன் றென்னாக்
காதலிற் புகழ்ந்து பன்முறை பழிச்சிக் கரையின்மா
பூசனை சிறப்பித்
தேதம தகற்றி யுலகினுக் குயிரா யிருந்தனன்
இறைகுலோத் துங்கன்.

பழியஞ்சின படலம் முற்றிற்று.

26. மாபாதகம் தீர்த்த படலம்

1534. வேத நாயகன் வெம்பழி யஞ்சிய
நாத னான நலனிது நல்கிய
தாதை யைக்கொலை செய்த தனயன்மா
பாத கந்தனைத் தீர்த்தமை பாடுவாம்.

1535. விரைசெய் மாலைக் குலோத்துங்க மீனவன்
திரைசெய் நீர்நிலஞ் செங்கோல் செலத்தனி
அரசு செய்யுமந் நாளில் அவந்தியென்
றுரைசெய் மாநக ரானொரு பூசுரன்.

1536. வெருவுங் காய்சின மாறிய வேதியன்
மருவுங் காதல் மனையெனும் பேரினாள்
திருவுங் காமனற் றேவியு மண்புனை
உருவுங் காமுறு மொப்பில் வனப்பினாள்.

1533. அன்பு மேலோங்க அவ்விறைவன் முன் நின்று, "எம் பெருமானே! பாவியேன் பொருட்டு தேவரீர் அரிய பழியினை அஞ்சுகின்ற நாதராய் இருந்தீர். என் தந்தையாகிய உமக்கு நான் செய்யத்தக்கது கைம்மாறாக ஏதேனும் உண்டோ?" என்று பேரன்போடு புகழ்ந்து பல முறை துதித்தான். அளவில்லாத பெரிய பூசைகளைச் செய்வித்தான். பின்னர் அக் குலோதத்துங்க பாண்டியன் மக்களுக்குத் துன்பம் உண்டாகாமல் உலகினுக்கு ஓர் உயிராய் இருந்து ஆட்சி செய்தான்.

பழியஞ்சின படலம் முற்றிற்று.

26. மாபாதகம் தீர்த்த படலம்

1534. வேதநாயகனான இறைவன், கொடிய பழியினை அஞ்சி, நிகழ்த்திய திருவிளையாடல் இதுவாகும். இனி அவ்விறைவன், பெற்ற தந்தையைக் கொலை புரிந்த மகனுடைய மாபாதகத்தை நீக்கிய திருவிளையாடலைக் கூறுவோம்.

1535. மணம் வீசும் மாலையை அணிந்த குலோத்துங்க பாண்டியன் அலைவீசும் கடல் சூழ்ந்த புவி முழுவதும் தனி அரசு புரிந்துவரும் நாளில், அவந்தி நகரத்தில் ஒரு வேதியன் வாழ்ந்து வந்தான்.

தாயிடம் இன்பம் துய்த்த தனயன்

1536. யாவரும் அச்சம் கொள்ளும் சினமற்ற அம் மறையவனுக்கு விருப்பம் பொருந்திய மனைவி என்னும் பெயர் மட்டும் கொண்டு மனைமாட்சி சிறிதும் இன்றி, திருமகளும், மதவேளின் நல் மனைவியாகிய இரதியும் மட்பாவையும் விரும்பத்தக்க ஒப்பற்ற அழகினையுடைய ஒருத்தி இருந்தாள்.

1537. படியி லோவியப் பாவை யொப்பாகிய
வடிவி னாளவள் பால்மக னென்றொரு
கொடிய பாவி பிறந்து கொலைமுதற்
கடிய பாவக் கலன்போல் வளருநாள்.

1538. கோடி கோடி யடுஞ்சிலை கோட்டியே
கோடி கோடி கொடுங்கணை பூட்டியே
கோடி கோடி விகாரமுங் கூட்டியே
கோடி கோடி யநங்கர் எய் தார்கொலோ.

1539. இளமைச் செவ்விய யாக்கையன் மையல்கூர்
வளமைக் காமமும் வல்வினை யுந்நிறைத்
தளைவிட் டீர்த்தலின் தன்னை வயிற்றிடை
விளைவித் தீன்றவள் தன்னை விரும்பினான்.

1540. அன்னை யென்னும் அழிதகை யாளகத்
தின்னு யிர்த்துணை யும்மனக் காவலாய்
மன்னு நாண மடமுதல் நால்வருந்
தன்னை நீங்கலிற் றானுமொத் தாளரோ.

1541. இன்பமோசிறி தாகும் இதில்வருந்
துன்ப மோகரை யில்லாத் தொடுகடல்
என்ப தாரு மிவனா லறியவிவ்
வன்ப தான வினையால் வருந்துவான்.

1542. மைய னாக மதியை விழுங்கவக்
கையன் ஆயைக் கலந்தொழு குஞ்செயல்
ஐயன் றான்குறிப் பாற்கண்டு அயற்செவிக்
குய்ய லாவண்ண முள்ளத் தடக்கினான்.

1537. ஒப்பற்ற சித்திரப்பாவை போன்ற அழகினை யுடைய அவளிடத்து, மகன் என்ற ஒரு கொடும்பாவி பிறந்தான். கொலை முதலிய கொடிய பாவங்களாகிய சரக்குகளை ஏற்றிய கப்பல் போல வளர்ந்து வந்தான்.

1538. அநேகம் கோடி காமர்கள், பல கோடி கொலைத் தொழிலையுடைய விற்களை வளைத்துப் பல கோடி கொடிய அம்புகளைப் பூட்டி, பல கோடி விகாரங் களைக் கூட்டி எய்தார்களோ? யாம் அறியோம்.

1539. இளமையான உடலையுடையவனாகிய அவன், மயக்கம் மிக்க குன்றாத காமமும், வலிய தீவினையும், நிறையாகிய கட்டினை விடுவித்து இழுத்தலால் தன்னைப் பெற்று வளர்த்த தாயினையே விரும்பினான்.

1540. தாய் என்று சொல்லப்படும் அக்கற்பிழந்தவள், தன் உள்ளத்தில் இனிய உயிர்த்துணையாகவும் மனதுக்குக் காவலாகவும் விளங்கிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால்வரும் தன்னைவிட்டு நீங்கப் பெற்றவளாய் அவன் விருப்பத்திற்கு உடன்பட்டாள்.

காமம் அறிவினை அழித்தல்

1541. காமத்தால் வரும் இன்பமோ மிகச் சிறியது. அதில்வரும் துன்பமோ கரையில்லாத கடல் போலப் பெரியது, என்ற உண்மையை அப்பாவியின் மூலம் யாவரும் உணர்ந்துகொள்ளும் வகையில், அவன் இக்கொடிய தீவினையினால் வருந்துவானாயினான்.

1542. காம மயக்கமாகிய இராகு (பாம்பு) வானது அறிவாகிய மதியை (திங்களை) விழுங்குவதால் அக்கீழ் மகன் தாயைக் கூடி ஒழுகும் செயலினை அவன் தந்தை யானவன் குறிப்பாலறிந்தான். அது பிறர் செவிக்கு எட்டா வண்ணம் அதனை உள்ளத்தின் கண் அடக்கி ஒழுகினான்.

1543. வேற்றோர் வைகல் வெளிப்படக் கண்டறஞ்
சாற்று நாவினன் வேறொன்றுஞ் சாற்றிலன்
சீற்ற மேல்கொடு செல்வன்கொல் வேன் என
ஏற்றெ ழுந்தன னீன்றாள் விலக்குவாள்.

1544. தாயி லின்ப நுகர்ந்தனை தந்தையைக்
காயி லென்பெறு வாயெனக் காமுகர்க்
காயி லன்னையில் அப்பனி லென்பயன்
ஏயி லின்னரு ளென்னற மென்என்றான்.

1545. மண்டொ டுங்கரு விப்படை வன்கையிற்
கொண்டு தாதை குரவனென் றோர்கிலான்
துண்ட மாகத் துணித்தான்ஆய் வாய்முகந்
துண்ட காம நறவால் உணர்விலான்.

1546. மைக்க ருங்கங்குல் வாய்க்கொன்ற தாதைக்குத்
தக்க தீத்தவி சிட்டன்னை தன்னொடுங்
கைக்க டங்கு பொருளொடுங் கல்நெறி
புக்க னன்புடை சூழ்ந்தார் புளிநரே.

1547. எய்யுங் கோறொடு வில்லர் இடிக்குநேர்
செய்யுஞ் சொல்லினர் செல்லலை நில்லெனக்
கையி லுள்ளவுங் கைக்கொண்டு காரிகைத்
தையல் தன்னையுந் தாங்கொடு போயினார்.

தனயன் தந்தையைக் கொன்றான்

1543. மற்றொரு நாளில் வெளிப்படக் கண்டு அறநெறியைக் கூறும் நாவினையுடையவனாய், யாதொன்றும் கூறானாயினான். அப்படி இருந்தும் அவன் மகன் மிகவும் கோபம் கொண்டு, "என் தந்தையைக் கொல்வேன்" என்று எதிர்த்து எழுந்தான். அவனைப் பெற்றவள் விலக்குவாளானாள்.

1544. "நீ தாயினிடத்துக் காம இன்பத்தை நுகர்ந்தாய். இன்னும் தந்தையைக் கொன்றயாயின் என்ன பயன் அடைவாயோ? என்று கூறித் தடுத்தாள். அதற்கு அவன், "காமுகர்களுக்குத் தாயாலும் தந்தையாலும் என்ன பயன்? இனிய அருளைப் பெறின் என்ன பயன்? அறத்தைப் பெறின் என்ன பயன்?" என்றான்.

1545. மண்வெட்டும் கருவியைக் கையில் ஏந்தித் தன் தந்தையை ஐங்குரவருள் ஒருவனென்று அறியாதவனாய், தாயிடத்தில் நுகர்ந்த காமமாகிய கள்ளினால் அறிவிழந்து அவனைத் துண்டு துண்டாக வெட்டினான்.

மாபாதகன் தன் பொருளையும் தாயையும் பறிகொடுத்தல்

1546. பிறகு அப் பாதகன் மை போன்ற கருமையுடைய இரவில் தன்னால் கொல்லப்பட்ட தந்தையைத் தகனம் செய்தான். சுமக்கத் தகுந்த பொருளோடும் தாயோடும் கற்கள் நிறைந்த காட்டின் வழியே நெடுந்தூரம் சென்றான். ஆறலைக்கும் வேடர்கள் அவனைச் சுற்றிலும் சூழ்ந்து கொண்டனர்.

1547. இடிபோன்ற சொல்லையும், எய்யப்படும் கூரிய கணையைப் பூட்டிய வில்லையும் கொண்ட அவ் வேடர்கள், "செல்லாதே நில்" என்று நிறுத்தி அவன் கையில் உள்ள பொருளைப் பறித்துக் கொண்டு அழகிய அம் மாதையும் கைக்கொண்டு போனார்கள்.

1548. சென்று சேணிடைச் சிக்கற வாழலாம்
என்ற எண்ணமொன்று எய்திய வண்ணமொன்று
ஒன்று நாமெண்ணத் தெய்வமொன் றெண்ணிய
தென்ற வார்த்தை யிவனிடைப் பட்டதால்.

1549. தாதை தன்றன யற்கினி யார்துணை
மாதர் யாயை மறவர்கைக் கொள்ளவிப்
போது தான்றுணை யென்பவன் போன்றுமா
பாத கருத்துரு வாய்வந்து பற்றினான்.

1550. ஆவ வென்னும் அழும்சிவ தா வெனும்
பாவம் பாவம் பழியிது வோவைய
கோவெ னுங்கை குலைத்தெறி யுந்நிழற்
பாவை போல விடாதுபின் பற்றுமால்.

வேறு

1551. நல்லதீர்த் தஞ்சிவ தலநலோர் பக்கமுஞ்
செல்லவொட் டாதரன் சீர்த்திநா மஞ்செவிப்
புல்லவொட் டாதுளம் புகுதவொட் டாதுநாச்
சொல்லவொட் டாதுகண் துயிலவொட் டாதரோ.

1552. சுற்றுமுன் பின்புறச் சூழ்ந்துதன் கொடுக்கினிற்
பற்றிநின் றீர்க்குமா பாதகத் தாலலைந்
தெற்றினிச் செய்வதென்று ஆற்றலா திடருழந்
துற்றவே றுலகெலாம் அச்சமுற் றுழலுமால்.

1548. 'தூர தேசத்தில் சென்று இடையூறின்றி வாழலாம்' என்று அவன் கருதிய எண்ணம் ஒன்று. அவனுக்கு நிகழ்ந்த நிகழ்ச்சியோ மற்றொன்று 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது' என்ற பழமொழி இம்மாபாத கனிடத்தில் பலித்தது.

மாபாதகன் பிரமகத்தியால் துன்புறுதல்

1549. வெட்டுண்டு இறந்த தந்தையானவன், "அழகிய தாயை வேடர் கையில் சிக்கவிட்ட நம் தனயனுக்கு இனி யார் துணையாவார் எனவருந்தித் துணை இழந்த இப் பொழுது யானே துணையாவேன்" என்று தொடர்ப வனைப் . போல மாபாதக (பிரமகத்தி) வடிவாய் வந்து அவனைப் பற்றினான்.

1550. அவ்வாறு பற்றிய கொலைப் பாவம் "ஐயோ என்று அலறும், அழும் 'சிவதா' என்று முறையிடும். "பாவம்! கொலைப்பழி இத்தன்மையதோ! ஐயகோ" என்று புலம்பும். "பாவம்! பாவம்!" எனும். கையை அசைத்து நிலத்தில் மோதும். உடம்பின் சாயையாகிய நிழல் போல விடாது பின்பற்றிச் செல்லும்.

1551. நல்ல தீர்த்தத்தின் அருகிலும், சிவ தலத்தின் அருகிலும் நல்லவர் அருகிலும் செல்ல விடாது. சிவபெருமானின் புகழும் அவன் திருப்பெயரும் செவியில் படவிடாது. ஒருகால் செவியில் படினும் மனதில் புகவிடாது. அவற்றை நாவினால் கூற விடாது. கண்ணுறங்க விடாது.

1552. முன்னும் பின்னும் சூழ்ந்து தன் கொய்சகத்தைத் தன் கொடுக்கினில் பற்றி நின்று இழுக்கும், இப்படியே மாபாதகத்தினால் அலைந்து, "இனி என் செய்வேன்? இனி என் செய்வேன்?' என்று பெரிதும் துன்பமுற்றுப் பன்னெடுங்காலம் தனியே உலகெங்கும் திரிந்து அஞ்சி வருந்துவான் ஆனான்.

1553. உறுகணோ யாற்றநாள் உற்றுழன் றுலகெலாம்
மறுகவே திரியுமா பாதகன் வலியெலாஞ்
சிறுகுவான் சிவனருட் செயலினிற் பாதகங்
குறுகுநாள் குறுகுநாள் கூடலைக் குறுகினான்.

வேறு

1554. அழிதகன் குறுகு வான்முன் அங்கயற் கண்ணி தந்தக்
குழையிரு காதுங் கோத்துக் கொலைகெழு புலிப்பற் றாலி
நுழைமயிர் நெடுநாண் பின்னல் நோன்பிடர் அலைப்பப் பூண்டோர்
பழிதகை யாத வேடப் பாவையாய்ப் படிவங் கொள்ள.

1555. கொலையிரும் பழிக்கன் றஞ்சுங் கூடல் எம் பெருமான் கொன்றை
மிலையிருங் குஞ்சி வேங்கை மெல்லிணர்க் கண்ணி வேய்ந்து
கலையிரு மருப்பிற் கோடிக் காதள வோடுந் தாடிச்
சிலையிருந் தடக்கை வேடத் திருவுருக் கொண்டு தோன்றி.

1556. கொண்டல்கண் படுக்கு மாடக் கோபுர மருங்கிற் போந்தின்
கண்டகக் கருக்கு வாய குரைக்குநாய் கதுவிக் காப்பப்
புண்டலை வாளி வில்லோர் புறங்கிடந் திமைப்பத் திங்கள்
துண்டவா ணுதலா ளோடுஞ் சூதுபோர் ஆடல் செய்வான்.

மாபாதகன் மதுரையை அடைதல்

1553. இவ்வாறு பல நாட்கள் துன்பமடைந்து வருந்தி, உலகின்கண் கண்டோரெல்லாம் மனம் இளகி வருந்துமாறு எங்கும் மாபாதகன் திரிந்தான். அவன் வலிமை முழுவதும் குறைந்தவனாய்ச் சிவபெருமானது திருவருட் செயலினால் அக்கொலைப் பாவம் குறுகி நீங்கும் நாள் அணுக, மதுரை யம்பதியை அடையலாயினான்.

1554. அத்தீநெறிப்பட்ட பாதகன் அங்கு வருவதற்கு முன் அங்கயற்கண்ணம்மையார், தந்தத்தால் ஆகிய குழை களை இரு செவிகளிலும் தரித்து, கொலை பொருந்திய புலிப்பல்லாகிய தாலி கோத்த, மயிராற் பின்னிய நீண்ட மங்கல நாணினை, பெருமைமிக்க கழுத்தில் அசைந்தலையைத் தரித்து, பழிக்கும் தன்மையில்லாத ஒரு வேட மகளாய்த் திருவுருவம் கொண்டார்.

வேடுவன், வேட்டுவச்சி

1555. கொலைப்பழிக்கு அஞ்சி அன்று மதுரையம் பதியில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள், கொன்றை மாலை அணிந்த நீண்ட சிகையின்கண் வேங்கையின் பூங்கொத்தாலாகிய மாலையை அணிந்து, கலைமானின் இரு கொம்பைப் போல் காதுவரை நீண்ட மீசையும், வில்லை ஏந்திய நீண்ட பெரிய கையையும் உடைய வேடத்திருவுருவம் கொண்டு தோன்றியருளினார்.

1556. முகில்கள் தங்கும் மாடங்கள் நிறைந்த கோபுரத்தின் பக்கத்தில் பனங்கருக்குப் போன்ற பற்களை யுடைய வாயால் குலைக்கின்ற நாய்கள் சிறிதும் அவர்களை விட்டு நீங்காது காவல் புரியவும், தசை பொருந்திய நுதியை யுடைய கணையும் வில்லும் ஒரு புறத்தில் கிடந்து விளங்கவும், திங்களின் ஒரு பாதியைப் போன்ற நெற்றியை யுடைய பிராட்டியாருடன் (வேட்டுவச்சியோடு) இறைவன் வேடுவனாகச் சூதாடிக் கொண்டிருந்தார்.

1557. வெருவரு வேழம் உண்ட வெள்ளில்போல் வறிய
னாகிப்
பருவர லுடனாங் கெய்தும் பாதகன் வரவுநோக்கி
ஒருவரு முள்ளத் தாலு முன்னருங் கொடிய பாவி
வருவது காண்டி என்னா மாதரை நோக்கிக் கூறும்.

1558. அணங்குநோ யெவர்க்குஞ் செய்யு மநங்கனா
லலைப்புண் டாவி
உணங்கினார் உள்ளஞ் செல்லு மிடனறிந் தோடிச்
செல்லா
குணங்குல னொழுக்கங் குன்றல் கொலைபழி பாவம்
பாரா
இணங்குமின் னுயிர்க்கு மாங்கே இறுதிவந் துறுவ
தெண்ணா.

1559. கள்ளுண்டல் காம மென்ப கருத்தறை போக்குச்
செய்வ
எள்ளுண்ட காமம் போல வெண்ணினிற் காணிற்
கேட்கிற்
தள்ளுண்ட விடத்தி னஞ்சந் தலைக்கொண்டால் என்ன
வாங்கே
உள்ளுண்ட வுணர்வு போக்கா துண்டபோ தழிக்குங்
கள்ளுண்.

1560. காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ
டாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்பது என்றான்.

இறைவன் இறைவிக்குக் காமக் கேட்டைக்கூறுதல்

1557. அச்சமில்லாத யானையால் உண்ணப்பட்ட விளாங்கனி போலச் சிறிதும் உள்ளீடு இல்லாதவனாய்த் துன்பத்துடன் அங்கு வருகின்ற மாபாதகனது வருகையை நோக்கி, சோமசுந்தரக் கடவுள் இறைவியை நோக்கி, "ஒருவரும் மனத்தாலும் நினைப்பதற்கரிய கொடியபாதகன் வருவதைக் காண்பாயாக" என்று கூறினார்.

1558. "யாவர்க்கும் காமநோயைச் செய்கின்ற மாரனாலே அலைக்கப்பட்டு உயிர் சோர்ந்தவர்களின் உள்ளங்கள் செல்லுதற்கரிய இடத்தினை அறிந்து சென்று சேரா. குணமும், குலமும், ஒழுக்கம் குறைதலையும், கொலையும் பழிபாவங்கள் உண்டாதலையும் பார்க்க மாட்டா. தம் உயிருக்கும் அவ்விடத்தே அழிவு வருதலையும் எண்ண மாட்டா.

1559. "கள்ளுண்ணலும் காமமும் அறிவைக் கெடுக்கும், அவற்றில் இகழப்பட்ட காமமானது எண்ணினும், காணினும் கேட்கினும் தவறுதலுற்ற இடத்தினும் விஷம் தலைக் கேறியது போல அப்பொழுதே அறிவைக் கெடுத்துவிடும். கள்ளோ அவ்வாறு கெடுக்காது உண்ட பொழுதில் மட்டுமே அறிவைக் கெடுக்கும்.

1560. "காமமே கொலைகட்கெல்லாம் காரணமாய் உள்ளது. கண்ணோட்டமில்லாத காமமே களவுகளுக் கெல்லாம் காரணமாகும். கூற்றுவனும் அஞ்சுதற்குரிய காமமே கள்ளுண்ணுவதற்கும் காரணமாகும். ஆகவே காமமே நரக பூமியைக் காணியாக்கியாளக் கொடுக்க வல்ல தாகும்" என்று கூறியருளினார்.

1561. கொலைப்பழி கோட்பட்டாங்கே குறுகியான் முகங்கண் டேட
அலைப்பட ருழந்து சாம்பி யழிவதென் பார்ப்பான் என்னக்
கலைப்படு திங்கள் வேணிக் கானவன் அருட்கண் நோக்கந்
தலைப்படச் சிறிது பாவந் தணிந்துதன் னறிவு தோன்ற.

1562. முற்பக லிழைத்த பாவ முதிர்ச்சியாற் பிறந்து தந்தை
தற்பக னான வாறுந் தாதையை வதைத்த வாறும்
பிற்பகல் அந்தப்பாவம் பிடித்தலைத் தெங்குந் தீராது
இப்பதி புகுந்தவாறு மெடுத்துரைத் திரங்கி நின்றான்.

1563. மறப்பெரும் படிவங் கொண்டு மனத்தருள் சுரந்து நின்ற
அறப்பெருங் கருணை மூர்த்தி யழிதகை யவனைப் பார்த்தித்
திறப்பழி யாங்குச் சென்று மீங்கன்றித் தீரா தென்றக்
கறைப்பழி தீரும் வண்ணங் கருதியோர் உறுதி கூறும்.

1564. வருதிநின் நாமஞ் சொன்னோர் வருக்கமு நரகில் வீழக்
கருதிநீ செய்த பாவங் கழிப்பவர் எவர்யா நோக்கந்
தருதலா லெளிதிற் றீரச் சாற்றுது ஐயங் கையேற்
றொருபொழு துண்டி யீச னுறுதவ ரேவல் செய்தி.

இறைவன் பிரமபழி நீங்க வழி கூறுதல்

1561. கொலைப் பாவத்தால் பெரும்துயர் அடைந்து அங்கு வந்த கொடிய பாதகனுடைய முகத்தைச் சிவபெருமானாகிய வேடுவன் நோக்கி, "ஏடா பார்ப்பானே! நீ துன்பத்தால் அலைப்புண்டு வருந்தி வாடுவது என்னை?" என்று வினவியருளினார். ஒரு கலையுடைய பிறையைச் சடையில் அணிந்த வேடனாகிய சிவபெருமானின் திருவருட் பார்வை சிறிது தலைப் படுவதால் பாவம் தொலைந்து தனது முன்னை உணர்வு தோன்றியது.

1562. முற்பிறப்பில் செய்த பாவமுதிர்ச்சியாலே பிறந்து, தாயைக் கூடிய தன்மையும், அது காரணமாகத் தந்தையைக் கொன்ற தன்மையும், பின்னாளில் அக்கொலைப் பாவம் பிரமகத்தி வடிவமாய் வந்து பிடித்து வருத்த எங்கும் திரிந்து அது நீங்கப் பெறாமல் இப்பதி வந்தடைந்ததையும் எடுத்துக் கூறி அழுது கொண்டு நின்றான்.

1563. புறத்தில் மறத்தொழிலையுடைய பெரிய வேட்டுவ வடிவம் கொண்டு, அகத்தில் அருள் ஊறி நின்ற அறவுருவாகிய பேரருட் பெருமான் அந்தப் பாவியை நோக்கி, "இக் கொடிய பழியானது இப்பகுதியிலன்றி வேறெங்குச் சென்றாலும் நீங்காது," என்று கூறி அப்பெரிய பழி தீரும் வகையை எண்ணி ஓர் உபாயம் கூறியருளினார்.

1564. "உனது பெயரைக் கூறியவரின் மரபில் உள்ளவரும் நரகில் விழுமாறு நீ அறிந்து செய்த இக்கொடிய பாவத்தைப் போக்குபவர் யார்? நாம் உன்மீது திருவருள் நோக்கம் செய்தமையால் இப்பாவம் எளிதில் நீங்கும் வண்ணம் கூறுகின்றோம். கையில் பிச்சை ஏற்று ஒரு பொழுது மட்டும் உண்பாய். சிவனடியார்களுக்குக் குற்றேவல் செய்வாய்.

1565. செங்கதிர்க் கடவுள் வானந் தீண்டுமுன் னெழுந்து தீந்தண்
பைங்கதிர் அறுகு கொய்து பசுக்களை யருத்தி ஆர்வம்
பொங்கமுப் போதுங் கோயிற் புறத்தொட்டித் தீர்த்த மாடிச்
சங்கரன் தனைநூற் றெட்டு மெய்வலஞ் சாரச் செய்தி.

1566. இத்தவ நெறியில் நின்றா லிப்பழி கழியும் என்னாச்
சித்தவன் புடைய வேடத் திருவுருக் கொண்ட கொன்றைக்
கொத்தவ னுரைத்தான் கேட்டுக் கொடிச்சியா யிருந்த அம்மை
மத்தவன் கரித்தோல் போர்த்த மறவனை வினவு கின்றாள்.

1567. ஐயவிக் கொடியோன் செய்த பாவத்துக் களவில் காலம்
வெய்யநா லேழு கோடி நரகிடை வீழ்ந்தானேனும்
உய்வகை யிலாத பாவி இவனுக்கென் உய்யுந் தேற்றஞ்
செய்வகை யென்று கேட்பச் செங்கண்மால் விடையோன் செப்பும்.

1568. அடுபழி யஞ்சா நீசர் ஆயினு நினைக்கி னச்சம்
படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண்டு எங்கும்
விடுவகை யின்றி வேறு களைகணு மின்றி ஈயக்
கடவனைக் காப்ப தன்றோ காப்பென்றான் கருணை மூர்த்தி.

1565. சிவந்த கிரணங்களையுடைய சூரியன் உதிப்பதற்கு முன்னமே எழுந்து, இனிய, தண்ணிய, பசிய ஒளியையுடைய அறுகம் புல்லைக் கொய்து, பசுக்களுக்குக் கொடுப்பாய். அன்பு மேலோங்க மூன்று காலமும், திருக் கோயிலின் புறத்தேயுள்ள தொட்டித் தீர்த்தத்தின்கண் நீராடி, சிவபெருமானை நூற்றெட்டுமுறை அங்கப் பிரதட்சணம் செய்யக் கடவாய்.

அழியக் கடவோனைக் காத்தலே பாதுகாப்பு

1566. இத்தவ ஒழுக்கங்களில் நின்றால் இந்தக் கொலைப்பழி நீங்கும்" என்று உள்ளத்தில் அன்புடைய வேடத் திருவுருவம் கொண்ட கொன்றை மலரை அணிந்த சோமசுந்தரக் கடவுள் கூறியருளினார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த வேட்டுவச்சியாய் இருந்த உமையம்மை யார், மத மயக்கத்தினையுடைய வலிய யானையின் தோலைப் போர்த்தருளிய வேட வடிவத்திலிருந்த பெருமானை கேட்கத் தொடங்கினார்.

1567. "ஐயனே! இக்கொடியவன் தான் செய்த பாவத்திற்கு அளவிறந்த காலம் வரையும் கொடிய இருபத் தெட்டுகோடி நரகத்தில் விழுந்தானாயினும் உய்யும் வகை இல்லாத பாவியாவான். இவனுக்கு உய்யும் வகையினை அருளிச் செய்தல் என்னை?" என்று வினவினார். சிவந்த கண்ணையுடைய இடபவூர்தியையுடைய சிவபெருமான் கூறியருளுவான்.

1568. அருளே உருவாகிய சோமசுந்தரக் கடவுள், "கொல்லும் பழிக்கு அஞ்சாத புலையராயினும் அவரையும், நினைத்தால் அச்சமுண்டாகும் கொடும் பழியினை அஞ்சாது செய்த மாபாதகத்தால் கட்டுப்பட்டு எங்கும் தீரும் வகை யில்லாமல், வேறு பற்றுக்கோடும் இன்றி அழியக் கூடிவரையும் காப்பாற்றுவதல்லவா உண்மையான பாதுகாப்பாகும்" என்று கூறியருளினார்.

1569. நெய்தற்போ தனைய வுண்க ணேரிழை நீடா தொன்று
செய்தற்குஞ் செய்யா மைக்கும் வேறொன்று செயற்கு மாற்றல்
மெய்தக்க கருணை வள்ளல் வேண்டினெவ் வினைஞ ரேனும்
உய்தக்கோர் ஆதல் செய்கை உன்னருள் விளையாட் டன்றோ.

1570. என்றக மகிழ்ச்சி பொங்க இயம்பினாள் இயம்ப லோடுங்
குன்றக நாட்ட வேடக் குழகனு மறைந்து வெள்ளி
மன்றக நிறைந்தான் மேக மறைந்திட மறைந்து செல்லும்
மின்றக விடாது பின்போம் விளங்கிழை மடந்தை யோடும்.

1571. ஆததா யியுங் கண் டானா அற்புத மடைந்து கூடல்
நாதனார் நவின்ற வாற்றால் நன்னெறி விரதச் செய்கை
மாதவ ஒழுக்கந் தாங்கி வருமுறை மதிய மூன்றிற்
பாதகங் கழிந்து தெய்வப் பார்ப்பன வடிவ மானான்.

1572. சொற்பதங் கடந்த எந்தை சுந்தர நாதன் றாளிற்
பற்பல வடசொன் மாலை பத்தியிற் றொடுத்துச் சாத்திச்
தற்பர அறிவா னந்தத் தனியுரு வுடைய சோதி
பொற்பத மருங்கிற் புக்கான் புண்ணிய மறையோன் அம்மா.

உமாதேவியார் இறைவனைப் புகழ்தல்

1569. கருங்குவளை மலர்போன்ற மையுண்ட கண்ணையுடைய உமையம்மையார், சிவபெருமானை நோக்கி, "நீர் யாதொன்றும் செய்தற்கும், செய்யாமைக்கும் வேறொன்று செய்தற்கும், உண்மையான ஆற்றலுடைய கருணை வள்ளல், நீர் விரும்பினால் எத்தகைய கொடிய பாவிகளும் உய்யுமாறு செய்தல் உமது அருள் விளையாட்டன்றோ?"

1570. என்று மனக்களிப்பு மேலோங்கத் திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாறு கூறியவுடன் மலைநாட்டை யுடைய வேடனாகிய சோமசுந்தரக் கடவுள் மறைந்தருளி னார். மேகம் மறைய உடன் மறைந்துபோகும் மின்னல் போல விடாது பின் செல்லும் விளங்கிய அணிகளை யுடைய மீனாட்சியம்மையாரும் மறைந்தருளினார். வெள்ளியம் பலத்துள் இருவரும் நிறைந்தருளினர்.

1571. மாபாதகனும் அதைப் பார்த்து நீங்காத வியப் பினை அடைந்தான். மதுரை நாயகன் கூறியருளிய வண்ணமே நன்னெறிக்கு ஏதுவாகிய விரதச் செயலையும், பெரிய தவ ஒழுக்கத்தையும் மேற்கொண்டு, செய்துவரும் முறைமையால் மூன்று மாதத்திலே மாபாதகம் முற்றும் நீங்கி, தெய்வத்தன்மை பொருந்திய பிராமண வடிவம் பெற்றான்.

1572. அங்ஙனம் புண்ணிய வடிவாகிய அந்தணன், சொல்லின் எல்லையைக் கடந்த சோமசுந்தரக் கடவுளின் திருவடியில் பற்பல வடமொழியில் அமைந்த பாமாலைகள் பலவற்றைப் பக்தியுடன் தொடுத்துச் சார்த்திப் பணிந்து வணங்கினான். பின்பு உண்மை அறிவு ஆனந்தம் என்னும் (சச்சிதானந்த) ஒப்பற்ற திருவுருவுடைய பரஞ்சுடராகிய சோமசுந்தரக்கடவுளின் அழகிய திருவடி நீழலில் கலந்தான்.

1573. அன்னையைப் புணர்ந்து தாதை குரவனா மந்த
ணாளன்
தன்னையுங் கொன்ற பாவந் தணித்துவீ டளித்த
தென்றால்
பின்னைநீ ரிழிநோய் குட்டம் பெருவயிறு ஈளை
வெப்பென்று
இன்ன நோய் தீர்க்குந் தீர்த்தம் என்பதோ இதற்கு
மேன்மை.

வேறு

1574. அழிந்தவே தியன்மா பாதகந் தீர்த்த தறிந்துவேந்
தமைச்சரூர் உள்ளார்
ஒழிந்தபா ருள்ளார் வானுளர் வியப்ப முற்றுநல்
லுரையுணர் எல்லாங்
கழிந்தபே ரருளிக் கயவன்மேல் வைத்த காரணம்
யாதெனக் கண்ணீர்
வழிந்துநான் மாடக் கூடல்நா யகனை வழுத்தினார்
மகிழ்ச்சியுள் திளைத்தார்.

மாபாதகம் தீர்த்த படலம் முற்றிற்று.

27. அங்கம் வெட்டின படலம்

1575. வேதகந் தரத்து முக்கண் வேதியன் மறையோன்
செய்த
பாதகந் தவிர்த்தவாறு பகர்ந்தனம் விஞ்சை யீந்த
போதகன் மனைக்குத் தீங்கு புந்திமுன் னாகச்
செய்த
சாதகன் தனைப்போ ராற்றித் தண்டித்த தண்டஞ்
சொல்வாம்.

புறத்தொட்டித் தீர்த்தம்

1573. தாயைப் புணர்ந்து, தந்தையும் குரவனும் ஆகிய அந்தணனைக் கொன்ற மாபாதகத்தையும் போக்கி வீடு பேற்றை 'புத்தொட்டித் தீர்த்தம்' அளித்தது என்றால், பின் நீரிழிவு, குட்டம், பெருவயிறு, ஈளை, வெப்பு முதலிய இந்நோய்களைத் தீர்க்கும் தீர்த்தம் என்று கூறுவதோ இதற்கு மேன்மையாகும்?

1574. மன்னனும் மந்திரிகளும் ஊரில் உள்ளவர்களும் ஏனைய நாட்டில் உள்ளவர்களும் தேவர்களுமாகிய அனைவரும், நிலையிழிந்த வேதியனது மாபாதகத்தைப் போக்கியதை அறிந்து வியப்படைந்தனர். "நல்ல உரையையும் உணர்வையும் கடந்த பெரிய திருவருளை இந்தக் கீழ்மகன் மீது வைத்ததற்குக் காரணம் யாதோ?" என்று கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பொழிய நான்மாடக் கூடல் நாயகனை துதித்து உவகைக் கடலில் அழுத்தினார்கள்.

மாபாதகம் தீர்த்த படலம் முற்றிற்று.

27. அங்கம் வெட்டின படலம்

1575. வேதம்பாடும் திருமிடற்றையும், மூன்று கண்ணையும் உடைய சோமசுந்தரக்கடவுள், பார்ப்பனன் புரிந்த மாபதகத்தை நீக்கியருளிய திருவிளையாடலைக் கூறினோம். இனி வாள்வித்தை கற்பித்த ஆசிரியன் மனைவிக்கு அறிவு சான்றாகத் தீங்கு புரிந்த மாணவனைப் போர் செய்து தண்டித்த திருவிளையாடலைக் கூறுவோம்.

1576. கூர்த்தவெண் கோட்டி யானைக் குலோத்துங்க வழுதி ஞாலங்
காத்தர சளிக்கு நாளிற் கடிமதில் உடுத்த கூடல்
மாத்தனி நகருள் வந்து மறுபுலத் தவனா யாக்கை
மூத்தவ னொருவன் வைகி முனையவாள் பயிற்றி வாழ்வான்.

1577. வாள்வினைக் குரவன் அன்னான் வல்லமண் விடுத்த வேழம்
தோள்வினை வலியா லட்ட சுந்தர விடங்கன் தன்னை
ஆள்வினை யன்புந் தானும் வைகலு மடைந்து தாழ்ந்து
மூள்வினை வலியை வெல்லு மூதறி வுடைய னம்மா.

1578. கைவினை மறவாள் விஞ்சைக் காவலன் அவனைத் தாழ்ந்து
தெவ்வினை வெல்வான் கற்குஞ் சிங்கவே றனையார் தம்முள்
உய்வினை உணராப் பாவி சித்தனென் றொருவ னுள்ளான்
அவ்வினை நிரம்பக் கற்றான் ஆகலூழ் வலியா லன்னான்.

1579. மானவாள் விஞ்சை யாலே தனைநன்கு மதிக்கத் தக்க
தானதோர் செருக்கின் ஆற்றன் னாசிரி யற்கு மாறாய்த்
தானுமோர் விஞ்சைக் கூடஞ் சமைத்துவாள் பலருங் கற்க
ஊனுலாம் படைவல் லானில் ஊதிய மிதப்பக் கொள்வான்.

வாளாசிரியனும் சித்தனும்

1576. கூரிய வெள்ளிய கொம்புகளைக் கொண்ட யானைப் படையினையுடைய குலோத்துங்க பாண்டியன் பூமியை நன்முறையில் பாதுகாத்து ஆட்சி புரிந்து வரும் காலத்தில், அயல்நாட்டைச் சேர்ந்த முதிர்ந்த அறிவுடையான் ஒருவன் காவல்மிக்க மதுரைத் திருநகரில் வந்து குடியேறிக் கூர்மையுடைய வாட்போர் வித்தையைக் கற்பித்து வாழ்ந்து வந்தான்.

1577. வாள்தொழில் பயிற்றுவிக்கும் குரவனாகிய அம்முதியவன், வலிய சமணர்கள் ஏவிய யானையைத் தோள் வலிமையால் வெற்றி கொண்ட அழகனாகிய சோமசுந்தரக் கடவுளை நாள்தோறும் இடையறாத அன்புடன் சென்று தாழ்ந்து வணங்கி, மூண்டெழும் வினையின் வலியை வெல்லும் பேரறிவுடையவனானான்.

1578. கொலைமிக்க வாளினைக் கையில் கொண்டு வித்தையில் வல்லவனாகிய அம்முதியவனை வணங்கி, பகையினை வெல்லுமாறு வாள்வித்தை பயிலும் சிங்க ஏற்றினை யொத்த மாணவர் பலருள் உய்யும் நெறியை அறியாத பாவியாகிய 'சித்தன்' என்ற ஒருவன் இருந்தான். அவன் ஆகூழின் வலிமையினால் அவ்வித்தையைக் குறைவின்றிக் கற்றான்.

1579. பின்னர் பெருமைமிக்க வாள் வித்தையாலே தன்னைப் பலரும் நன்கு மதிக்கத்தக்க திறமை பெற்றிருக்கும் ஒரு செருக்கினால் தன் ஆசிரியனுக்கு மாறாக, தானும் ஓர் வித்தைக்கூடம் அமைத்துப்பலரும் வந்து வாள்வித்தை பயிலுமாறு பயிற்றலானான். புலால் தங்கிய வாள் வல்லனாகிய தன் ஆசிரியனைவிட அதிக ஊதியம் பெறுவானாயினான்.

1580. ஒருத்தனே யிருவர் வாளின் விருத்தியும் ஒருங்கு கொள்ளும்
கருத்தனாய் விருத்த னூரிற் கழிவது கருதி யன்னான்
வருத்துவா ளிளையர் தன்பால் வரமனந் திரித்து நாளும்
விருத்தமே செய்வான் தாயை விரும்பினோற் கிளையோ னன்னான்.

1581. தொடத்தொடப் பொறுக்குந் திண்மைத் தொன்னில மனையா னில்லா
இடத்தவன் தேவி பால்போ யிடனுண்டே யிடனுண் டேயென்
றடுத்தடுத் தஞ்சாது என்றும் கேட்டுக்கேட் டகல்வா னாக
நடைத்தொழிற் பாவை யன்ன நங்கைவா ளாதி ருந்தாள்.

1582. பின்னொரு பகற்போய்ச் செங்கை பிடித்தனன் வலிப்பத் தள்ளி
வன்னிலைக் கதவ நூக்கித் தாழக்கோல் வலித்து மாண்ட
தன்னிலைக் காப்புச் செய்தாள் தனிமனக் காவல் பூண்டாள்
அந்நிலை பிழைத்த தீயோன் அநங்கத்தீ வெதுப்பப் போனான்.

1583. அறங்கடை நின்றா ருள்ளும் ஆற்றவுங் கடைய னாகிப்
புறங்கடை நின்றான் செய்த புலைமைதன் பதிக்குந் தேற்றாள்
மறந்தவிர் கற்பி னாடன் மனம்பொதிந் துயிர்க டோறும்
நிறைந்தநான் மாடக் கூடல் நிமலனை நினைந்து நொந்தாள்.

சித்தன் தன்னாசிரியன் மனைவியை விரும்புதல்

1580. சித்தன் தான் ஒருவனே இருவரின் வாள் வித்தை பயிற்றலால் வரும் வருவாயையும் ஒரு சேர அடையும் கருத்தினையுடையவனாய் அவ்வாசிரியனை அவ்வூரினின்றும் வெளியேற்ற எண்ணினான். அம்முதியவனிடத்தே, வருத்துகின்ற வாட்போர் பயிலும் மாணவர்களைத் தன்னிடம் பயில வருமாறு மனம் திரிந்து நாள்தோறும் இடையூறு செய்வானாயினான். தாயினிடம் இன்பம் நுகர்ந்த மாபாதகனுக்கு இளையான் போல்வனாய் அச்சித்தன் இருந்தான்.

1581. தோண்டத் தோண்ட பொறுக்கும் திண்ணிய பழமையாகிய நிலத்தைப் போலும் பொறுமையுடைய அவ்வாசிரியன் இல்லாதபொழுது அவன் மனைவியிடத்துச் சென்று, "இடன் உண்டோ, இடன் உண்டோ" என்று அடுத்தடுத்துச் சிறிதும் அஞ்சாது கேட்டுக் கேட்டு நீங்க, நடக்கும் தொழிலையுடைய பாவை போன்ற அம்மாது ஒன்றும் பேசாது இருந்தாள்.

1582. சித்தன் மற்றொரு நாள் சென்று அவள் சிவந்த கையைப் பிடித்து இழுத்தனன். ஒப்பில்லாத மனமாகிய காவலையுடைய அவள், அவனை வெளியே தள்ளிக் கதவினைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டு தனது கற்பு நிலையினைக் காத்துக் கொண்டனள். அப்போது தன் எண்ணம் தவறிய சித்தன் காமத்தீ வெதும்பப் போயினான்.

சித்தன் மனைவி இறைவனை வேண்டுதல்

1583. பாவநெறியில் நின்றார் எல்லாருள்ளும் மிகவும் கடையனாகி, மனையின் வாயிற் புறத்தே வந்து நின்ற அக்கொடியவன் செய்த இழிசெயலை அறக்கற்பினையுடைய அப்பெண் தன் மனத்தின் கண் மறைத்து வைத்து கணவனுக்குத் தெரிவிக்காது உயிர்கள் தோறும் நிறைந்துள்ள நான்மாடக் கூடலில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளை நினைந்து வருந்தினாள்.

1584. தாதக நிறைந்த கொன்றைச் சடையவன் புறம்பு செய்த
பாதகம் அறுக்குங் கூடற் பகவனெவ் உயிர்க்குந் தானே
போதக னாகித் தேற்றும் புண்ணியன் புலைஞன் பெய்த
தீதக முணர்ந்து தண்டஞ் செய்வதற் குள்ளங் கொண்டான்.

1585. கோளுடைக் குரவ னேபோற் சிந்தனைக் குறுகிச் சித்தா
காளையா நீயுஞ் சாலக் கழியமூப் படைந்த யாமும்
வாளம ராடி நந்தம் வலிகளும் அளந்து காண்டும்
நாளைவா வருது நாமும் நகர்ப்புறத் தொருசார் என்றான்.

1586. நாதனாங் குரவன் கூற நன்றென வுவந்து நாலாம்
பாதகன் அதற்கு நேர்ந்தான் படைக்கலக் குரவன் மீண்டு
போதரு மளவில் வையம் புதையிருள் வெள்ளத் தாழ
ஆதவன் வைய முந்நீர் வெள்ளத்து வாழ்ந்த தம்ம.

1587. ஆசினன் குரவற்கின்னா ஆற்றினோன் பாவம் போல
மாசிரு டிணிந்த கங்குல் வலிகெட வடிவாள் விஞ்சைத்
தேசிக னொருவன் அன்னான் திணியுடல் சிதைப்பத் தீட்டுங்
காய்சின வாள்போற் கீழைக் கல்லிடை முளைத்தான் வெய்யோன்.

1584. உள்ளே மகரந்தம் நிறைந்த கொன்றைமலர் மாலையை அணிந்த சடையையுடையவனும் வேற்று நாட்டிற் செய்த மாபாதகத்தைப் போக்கும் மதுரைப் பிரானும், பக்குவமான உயிர்களுக்கும் தானே உணர்த்தும் புண்ணிய வடிவினனுமாகிய சோமசுந்தரக் கடவுள் நீசனாகிய சித்தன் செய்த தீங்கினை மனத்தில் உணர்ந்து அவனைத் தண்டிப்பதற்குத் திருவுள்ளம் கொண்டருளி னான்.

இறைவன் சித்தனைப் போருக்கழைத்தல்

1585. வலிமையமைந்த அவ்வாளாசிரியனைப் போலத் திருவுருக் கொண்டு சிந்தனை அடைந்து, "சித்தா! காளைப் பருவத்தினையுடைய நீயும், மிக்க முப்படைந்த யாமும் வாட்போர் புரிந்து நம்தம் வலிமைகளை அளந்தறி வோம். நாளைக்கு நீ நகரின் புறத்தே வருக;' நாமும் வருவோம்" என்று கூறியருளினான்.

1586. இறைவனாகிய வாளாசிரியன் கூற, நாலாவது பாதகமாகிய காமத்தை மேற்கொண்ட சித்தன், மகிழ்ந்து "நல்லது" என்று கூறி அதற்கு உடன்பட்டான். வாளா சிரியன் வடிவம் தாங்கிய இறைவர் சித்தனிடமிருந்து மீண்டு போகும் போது உலகமானது நிறைந்த இருள் வெள்ளத்தில் முழுகும்படி சூரியன் மேற்குக் கடலில் மூழ்கினான்.

1587. குற்றமில்லாத நல்ல குரவனுக்குத் துன்பம் செய்த சித்தனது பாவச் செறிவு போலக் கரிய இருள் நிறைந்த இரவின் வலிமை கெடுமாறு கூரிய வாள்வித்தை கற்பிக்கும் வாளாசிரியனாகிய இறைவன் அச்சித்தனது உடலைச் சிதைப்பதற்குத் தீட்டுகின்ற காயும் சினத்தை யுடைய வாட்படை போலக் கதிரவன் கிழக்கு மலையிலே தோன்றினான்.

1588. நன்றியைக் கொன்று தின்றோ னாயக னாணைக்
கஞ்சும்
வன்றிறல் அரிமா னூர்தித் தெய்வதம் வழிபட் டேத்தி
வென்றிவாள் பரவிக் கச்சு வீக்கிவாள் பலகை யேந்திச்
சென்றுவா ளுழவன் சொன்ன செருக்களங் குறுகி
னானே.

1589. மதுகைவா ளமர்க்கு நென்னல் வந்தறை கூவிப் போன
முதுகடும் புலியே றன்ன முடங்குடற் குரவன் தானும்
அதிர்கழல் வீக்கிக் கச்சும் அசைத்துவெண் ணீறுஞ்
சாத்திக்
கதிர்கொள்வாள் பலகை தாங்கிக் கயவனுக் கெதிரே
வந்தான்.

1590. மடங்கலே றொன்றும் பைங்க ணரியொன்றும்
மலைந்தால் என்ன
முடங்கல்வான் திங்க ளொன்று முக்கணு நான்கு
தோளும்
விடங்கலுழ் மிடறுந் தோற்றா வென்றிவாள் விஞ்சை
வேந்தும்
அடங்கலன் னானு நேரிட் டாடம ராடல் செய்வார்.

1591. எதிர்ப்பர்பின் பறிவர் நேர்போ யெழுந்துவா னேறு போல
அதிர்ப்பர்கே டகத்துள் தாழ்வுற் றடங்குவர் முளைப்பர்
வாளை
விதிப்பர்சா ரிகைபோய் வீசி வெட்டுவர் விலக்கி மீள்வர்
கொதிப்பர்போய் நகைப்பர் ஆண்மை கூறுவர் மாறி
நேர்வர்.

1588. சூரவன் செய்த நன்றியை முற்றும் கெடுத்தவனாகிய சித்தன், சிவபெருமான் ஆணைக்கு அஞ்சும் மிக்க வலிய சிங்கவூர்தியையுடைய துர்க்கையையும் வாட்படையையும் வழிபட்டுத் துதித்து கச்சினை இறுக்கிக் கட்டி வாட்படையையும் கேடகத்தையும் கையிலேந்திச் சென்று வாளாசிரியர் சொல்லிய போர்க்களத்தை அடைந்தான்.

இருவரும் போர் புரிதல்

1589. நேற்றுவந்து வலிய வாட்போருக்கு அறை கூவிச் சென்ற முதிய கடிய புலியேற்றினை யொத்த வளைந்த உடலையுடைய இறைவனாகிய ஆசிரியனும், ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்து கச்சினைக் கட்டித் திரு நீற்றினையும் தரித்து, வாளையும் கேடகத்தையும் கையில் தாங்கி அக்கீழ் மகனுக்கு எதிரே வந்தான்.

1590. சிங்க ஏறு ஒன்றும், பைங்கண் நரி ஒன்றும் எதிர்த்துப் போர் புரிந்தாற் போல, வளைந்த வெள்ளிய பிறையும் மூன்று கண்களும் நான்கு திருத்தோள்களும் நஞ்சுடைய திருமிடறும் ஆகிய இவைகள் தோன்றாது மறைத்து வந்த வெற்றி மிக்க வாள் வித்தைக்கு இறைவனும் பகைவனாகிய சித்தனும் எதிர்த்து வெல்லும் போரினைச் செய்யத் தொடங்கினர்.

1591. இருவரும் ஒருவரையொருவர் எதிர்ப்பர்; பின்வாங்குவர். மீண்டும் முன்சென்று மேலெழுந்து இடியேறு போல முழங்குவர். கேட்கத்தினுள்ளே பதுங்கி மறைவர். மீண்டும் வெளிப்படுவர். ஏந்திய வாளை அசைப்பர். இடசாரி வலசாரியாகச் சென்று வாளை வீசி வெட்டுவர். அவ்வெட்டினை விலக்கித் திரும்புவர். வெகுள்வர். நகைப்பர். நெடுமொழி கூறுவர். சாரிகை மாறி எதிர்ப்பர்.

1592. வெந்நிடு வார்போல் போவர் வட்டித்து விளித்து மீள்வர்
கொன்னிடு வாள்மார் பேற்பர் குறிவழி பிழைத்து
நிற்பர்
இந்நிலை நாலைங் கன்ன லெல்லைநின் றாடல்
செய்தார்
அந்நிலை யடுபோர் காண்பார் அனைவருங் கேட்க
வையன்.

1593. குரத்தியை நினைத்த நெஞ்சை, குறித்துரை நாவை,
தொட்ட
கரத்தினை, பார்த்த கண்ணை, காத்தனை கோடி
என்றென்று
உரைத்துரைத் தவற்றுக் கெல்லா முறுமுறை தண்டஞ்
செய்து
சிரத்தினைத் தடிந்து வீட்டித் திருவுரு மறைந்து
நின்றான்.

1594. போர்கெழு களங்கண் டாருள் பொருபடைக் கேள்விச்
செல்வர்
வார்கெழு கழற்கா லானைக் கண்டிலர் மனையில்
தேடி
ஏர்கெழு கற்பி னாளை எங்குற்றான் குரவன் என்னக்
கூர்கெழு வடிவேற் கண்ணாள் போயினார் கோயிற்
கென்றாள்.

1595. என்றவப் போதே கோயிற் கேகினான் மீண்டான் தேடிச்
சென்றவர் சித்தன் றன்னைச் செருக்களத் தடுபோர்
செய்து
வென்றனை யேபின் னந்த வெங்களத் தெங்குந் தேடி
நின்றனைக் காணா திங்கு நேர்ந்தனம் யாங்கள்
என்றார்.

1592. புறம்காட்டிச் செல்வார் போலப் போவர். சுழன்று போருக்கழைத்துத் திரும்புவர். அச்சத்தைத் தருகின்ற வாள்வெட்டினைத் தமது மார்பின் கண் ஏற்பர். தாம் கொண்ட இலக்கின் நெறி தவற நிற்பர். இங்ஙனம் இருபது நாழிகை வரையும் நின்று போர் புரிந்தனர். அப்பொழுது கொல்லுதலையுடைய போரினைக் காண்போர் அனைவரும் கேட்குமாறு இறைவன்.

சித்தன் அங்கங்களை இறைவன் வெட்டுதல்

1593. "குருபத்தினியை விரும்பிக் கருதிய உள்ளத்தையும் அவளை நோக்கித் தகாத மொழி கூறிய நாவினையும், விரும்பிப் பார்த்த கண்ணினையும், காத்துக் கொள்வாய்" என்று சொல்லிச் சொல்லி அவ்வங்கங்களையெல்லாம் வெட்டி வெட்டி எறிந்து, இறுதியில் தலையினையும் கீழே வீழ்த்தி விட்டு மறைந்தருளினார்.

இறைவனின் திருவிளையாடலை யாவரும் அறிதல்

1594. போர் புரிதலைப் பார்த்துக் கொண்டு அப்போர்க்களத்தில் நின்றவர்களுள்ளே வாள்வித்தை பயிலும் மாணவர்கள், நெடிய வீரக் கழலையணிந்த தம் குரவனைக் காணாது வீட்டிற்குத் தேடிச் சென்று, அழகு மிக்க கற்பெனும் திண்மை வாய்ந்த அவர் மனைவியை நோக்கி "ஆசிரியர் எங்குச் சென்றுள்ளார்?" என்று வினவினர். கூர்மையான வேல் போன்ற கண்களையுடைய அம்மங்கை, "திருக்கோயிலுக்குச் சென்றுள்ளார்" என்று கூறினாள்.

1595. என்று அவள் கூறிய போதே கோயிலுக்குச் சென்றிருந்த அவர் திரும்ப வந்தார். மாணவர்கள் அவரை நோக்கி, "நீர் போர்க்களத்தில் சித்தனோடு போர் புரிந்து அவனுடைய அங்கங்களை வெட்டி வெற்றி பெற்றீரே! பின்பு நாங்கள் அங்கு அப்போர்க்களத்தில் எங்குத் தேடியும் காணாமல் இங்கு வந்தோம்" என்றனர்.

1596. விரைசெய்தா ரவன்யா னங்கம் வெட்டினேன் அல்லே
னீங்கள்
உரைசெய்வ தெவன்யா ரென்போற் சித்தனை உடன்று
மாய்த்து
வரைசெய்தோள் விந்தைக் கீந்தார் மற்றிது சுற்றம்
வைகைத்
திரைசெய்நீர்க் கூட லெந்தை திருவுளச் செயல்கொல்?
என்றான்.

1597. மட்குத்த கலவைக் கொங்கை மனைவியுஞ் சித்தன்
தன்னைக்
கிட்டிப்பல் காலும் வந்து கேட்டது நெருநல் வாய்வந்
தொட்டுத்தன் கையைப் பற்றி யீர்த்ததும் உள்ளம்
வெந்து
தட்டிப்போய்க் கதவந் தாழிட் டிருந்ததுஞ் சாற்றி
னாளே.

1598. அம்மனை யருளிச் சொன்ன படியெலாம் அருளிச்
செய்து
தெம்முனை யடுவாள் வீரர் சித்தனை மாய்த்தார் ஈது
மெய்ம்மையா மென்று கண்ட மைந்தரும் விளம்பக்
கேட்டான்
எம்மையா ளுடைய கூட லிறைவிளை யாட்டே
யென்றான்.

1599. கொடியை நேரிடையா ளோடுங் கொற்றவாள் இளைஞ
ரோடுங்
கடியநான் மாடக் கூடற் கண்ணுத லடிக்கீழ்த் தாழ்ந்து
நெடியனான் முகனுந் தேறா நெறியது சிறிய ஏழை
அடியனே னளவிற் றேநின் னருள்விளை யாட
லென்றான்.

1596. அதனைக் கேட்டு மணம் மிக்க மாலையணிந்த குரவன், "யான் சித்தனுடைய அங்கங்களை வெட்டினேன் அல்லேன். நீங்கள் இங்ஙனம் கூறுவது என்னை? என்போல் வந்து போர் புரிந்து சித்தனைக் கொன்று மலை போல் உயர்ந்த தோள்களைக் கொற்றவைக்கு அளித்தவர் யாவரோ? இந்நிகழ்ச்சி அலை வீசும் நீர் சூழ்ந்த வையை யாற்றை யுடைய நான்மாடக் கூடலில் எழுந்தருளி இருக்கும் எம் தநதையாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவுளச் செயலோ?" என்று கூறினான்.

1597. கலவை பூசிய கொங்கையையுடைய அவ்வாசிரி யனின் மனைவியும், தன்னைச் சித்தன் நெருங்கி வந்து பல முறையும் 'இடனுண்டா?' என்று கேட்டதும், நேற்றைப் பொழுது நெருங்கி வந்து தன் கையைப் பற்றி இழுத்ததும் மனம் வெதும்பி அவனை விலக்கிக் கதவைத் தாழிட்டுக் கொண்டு இருந்ததும் கூறினாள்.

1598. அது கேட்ட மாணவர்கள், "சித்தனை வாள் வீரர் கொல்லும்போது இவ்வம்மையார் சொல்லியபடி யெல்லாம் சொல்லியே கொன்றார். இஃது உண்மையாகும்" என்று பார்த்த மாணவர்கள் சொல்ல ஆசிரியன் கேட்டான். "இஃது எம்மை ஆளுகின்ற கூடல் நாயகனுடைய திருவிளையாடலே" என்றான்.

1599. கொடி போன்ற இடையையுடைய தன் மனைவி யோடும் வாள் வித்தை பயிலும் மாணவர்களோடும் நான் மாடக்கூடலில் எழுந்தருளியுள்ள நெற்றிக்கண் இறைவனது திருவடியின் கண் வணங்கி, "திருமாலும் பிரமனும் தெளியாத நெறியதாகிய உனது அருள் விளையாட்டு, சிறிய ஏழை அடியேன், அறியும் அளவினதோ?" என்று துதித்தான்.

1600. தண்மதி வழிவந் தோனு நகருளார் தாமும் பாதி
விண்மதி மிலைந்த வேணி விடையவன் ஆடல்
நோக்கிக்
கண்மலர் வெள்ளத் தாழ்ந்து கனைகழ லடியில்
தாழ்ந்து
பண்மலர் கீதம் பாடி யாடினார் பழிச்சி நின்றார்.

வேறு

1601. அடியவருக் கெளியரியவர் பரதேசி காவலரென்று
அடிவீழ்ந் தேத்தி
தடியயில்வேற் குலோத்துங்கன் மாணிக்க மாலையெனு
மனையா ளோடுந்
தொடியணிதோள் முதுமகனைக் களிறேற்றி
நகரைவலஞ் சூழ்வித் திப்பால்
முடியணிவித் தனந்தகுண பாண்டியற்குத் தன்னிறைமை
முழுது மீந்தான்.

1602. நிலைநிலையாப் பொருளுணர்ந்து பற்றிகந்து
கரணமொரு நெறியே செல்லப்
புலனெறிநீத் தருள்வழிபோய்ப் போதமாந்
தன்வலியைப் பொத்தி நின்ற
மலவலிவிட் டகலவரா உமிழ்ந்தமதி போல்விளங்கி
மாறி யாடுந்
தலைவனடி நிழல்பிரியாப் பேரின்பக் கதியடைந்தான்
தமிழ்நர் கோமான்.

அங்கம் வெட்டின படலம் முற்றிற்று.

பாண்டியன் வாளாசிரியனைச் சிறப்பித்தல்

1600. குளிர்ந்த திங்கள் மரபில் வந்த பாண்டியனும் நகரில் உள்ளோரும், வானில் பாதி மதியினை அணிந்த சடையும் இடபவூர்தியும் உடைய சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலை நோக்கி, கண்களாகிய மலரிலிருந்து ஒழுகும் ஆனந்தக் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கி, ஒலிக்கின்ற வீரக் கழல் அணிந்த திருவடியில் வணங்கிப் பண் நிறைந்த இசைப்பாட்டுகளைப் பாடி ஆடித் துதித்து நின்றார்கள்.

1601. அடியார்க்கு எளியராகிய இச் சோமசுந்தரக் கடவுள் தனக்கு ஓர் களைகண் இல்லாதவரைக் காத்தலில் வல்லவர்" என்று வேற் படையேந்திய குலோத்துங்க பாண்டியன் வீரவளை அணிந்த தோளுடைய முதியவனை மாணிக்க மாலை என்று கூறப்படும் அவன் மனைவியோடும் யானையின் மேல் ஏற்றி நகர் வலம் செய்வித்தான். பின்னர் குலோத்துங்க பாண்டியன் தன் புதல்வனான அனந்தகுண பாண்டியனுக்கு முடிசூட்டித் தன் அரசை அவனிடத்து ஒப்புவித்தான்.

குலோத்துங்க பாண்டியன் சிவகதி அடைதல்

1602. நிலையுள்ள பொருள் இதுவெனவும், நிலையில்லாத பொருள் இதுவெனவும் உணர்ந்து நிலையற்ற பொருளின் மேலிருந்த பற்று முழுதும் நீக்கி, ஐம்புலன்களின் நெறியினின்றும் நீங்கித் திருவருள் நெறி சென்று போதமாகிய தனது வலியினை மறைத்து நின்ற ஆணவ மலவலி விட்டு அகல, இராகு என்னும் பாம்பினால் உமிழப்பட்ட சந்திரனைப் போல விளங்கி கால்மாறியாடிய சிவபெருமானுடைய திருவடி நிழலைப் பிரியாத பேரின்ப வீட்டினை தமிழர் பெருமானாகிய குலோத்துங்க பாண்டியன் அடைந்தான்.

அங்கம் வெட்டின படலம் முற்றிற்று.

28. நாகமெய்த படலம்

1603. செங்கண்மால்விடை மேல்விடங்கர் செருகளத்திடை வாளெடுத்
தங்கம்வெட்டிய சேவகத்தை அறைந்தனந்தமிழ் மாறன்மேற்
சங்கையிட்ட மண்நீசராற்றிய தறுகண்வேள்வி முளைத்ததோர்
வெங்கண்வாளர வைத்துணித்து விளித்தவாறும் விளம்புவாம்.

1604. கோதிலாத குணத்தனந்த குணப்பெருந்தகை மீனவன்
ஆதிநாயக னுருவமாகிய வைந்தெழுத்தொடு கண்டிவெண்
பூதிசாதன மாவதேபொரு ளென்றுபத்திமை பூண்டுதன்
தாதையேமுத லாயமன்னவர் தம்மினுந்தலை யாயினான்.

1605. அத்தகைச்சிவ சாதனந்தனி லன்புமிக்கவ னொழுகலால்
அத்தன்மெய்த்திரு வைந்தெழுத்தொலி யாலுநீற்றொளி யாலுமுட்
பைத்தவல்லிரு ளும்புறத்திரு ளுஞ்சிதைந்து பராபரன்
வித்தகத்திரு வேடமானது மீனவன்றிரு நாடெலாம்.

28. நாகமெய்த படலம்

1603. சிவந்த கண்களையுடைய திருமாலாகிய இடப வூர்தியின் மேல் எழுந்தருளும் பேரழகராகிய சோமசுந்தரக் கடவுள், போர்க்களத்தின்கண் வாட்படையைதத் தாங்கி அங்கம் வெட்டிய திருவிளையாடலைக் கூறினோம். இனி தமிழ் வேந்தனாகிய பாண்டியன்மேல் பகைகொண்டு சமணர் செய்த கொடிய வேள்வியின்கண் தோன்றிய வெங் கண் கொடிய பாம்பினைத் துண்டு செய்து கொன்றருளிய திருவிளையாடலைக் கூறுவோம்.

அனந்த குண பாண்டியன்

1604. குற்றமற்ற குணமும் பெருந்தகுதியும் உடைய அனந்தகுண பாண்டியன், முழுமுதல் தலைவனாகிய சோம சுந்தரக் கடவுளின் திருவுருவாகிய ஐந்தெழுத்துடன், உருத்திராக்கமும், விபூதியும் ஆகியவையே மெய்ப்பொருள் என்று தெளிந்து அவற்றிடம் அளவில்லாத பக்தி பூண்டு தம் தந்தை முதலாகிய அரசர்களினும் மிகச் சிறந்து விளங்கினான்.

1605. அத் தன்மையுடைய சிவ சாதனத்திடத்தில் அன்பு மிகுந்து அப்பாண்டியன் ஒழுகுதலால், அவன் திரு நாடு முழுவதும் இறைவன் திருவுருவமாகிய ஐந்தெழுத்தின் ஒலியாலும், திருநீற்றின் ஒளியாலும் முறையே உள்ளே பரந்த வலிய மலவிருளும், புறவிருளும் கெட்டுச் சிவ பெருமானது மேன்மையுடைய திருவேடமாகப் பொலிந்தது.

1606. நாயினுங்கடை யானமாகுடல் நள்ளிருட்புரை நெஞ்சரெண்
ணாயிரஞ்சமண் வேடரன்ன தறிந்துகொண்டு
வெகுண்டழற்
றோயிரும்பென மானவெங்கனல் சுட்டிடத்தரி யார்களாய்
மாயிருந்தமிழ் மாறனைத்தெற வஞ்சவேள்வி
இயற்றுவார்.

1607. எல்லைகாத மளந்துசாலை எடுத்தழற்படு குண்டமுங்
கல்லியாரழல் இட்டெழும்புகை கௌவியெண்டிசை
களுமுறச்
செல்லவான உடுக்களும்பொரி யிற்பொரிந்தன
சிதறநீண்டு
ஒல்லைதாவி விசும்புதைவர ஒட்டிவெங்கனன்
மூட்டினார்.

1608. அத்தழன்றெரி குண்டநின்று மகன்பிலத்தெழு
வானெனப்
பைத்ததுஞ்சிருள் வாயும்வாயிரு பாலும்வாலிய பகிர்மதிக்
கொத்துநஞ்சினம் ஒழுகுபற்களு மூழியாரல் விழிகளும்
வைத்தசைந்தொரு வெற்புவந்தென வந்துளானொரு
தானவன்.

1609. உதித்தசெங்க ணரக்கவஞ்சன் உருத்தெழுந்தெரி
வடவையிற்
கொதித்தடும்பசி தாகமுங்கொடி தாலெனக்கொடி
யோரைநீர்
விதித்திடும்பணி யாதெனக்கென மீனவன்றனை
மதுரையோ
டெதிர்த்தெடுத்து விழுங்கி வாவென ஏவினாருட
னேகினான்.

சமணர்கள் சூழ்ச்சி

1606. நாயினும் கடைப்பட்ட அழுக்குடம்பினை யுடைய நடு இரவின் இருள்போன்ற உள்ளத்தையுடைய வராகிய சமணக் குரவர் எண்ணாயிரவரும் அதனை அறிந்து சினந்து, "நெருப்பிற் காய்ச்சிய இரும்பு போல, மானமாகிய நெருப்புச் சுட்டெரிக்க, பொறாமை கொண்டு பெரிய தமிழ் வளர்க்கும் பாண்டியனைக் கொல்லுதற்கு வஞ்சகமான வேள்வி ஒன்றினைச் செய்வராயினர்.

1607. ஒரு காத அளவு அளந்து வேள்விச்சாலை ஒன்றை அமைப்பித்தனர். தீ வளர்க்கும் ஓம குண்டமும் தோண்டி நிறைந்த தீயினை அதிலிட்டு மிகுந்த புகை எட்டுத் திசைகளிலும் பரவவும், வானிலுள்ள விண்மீன்கள் பொரிந்து பொரிபோலச் சிந்தவும், ஓங்கி வளர்ந்து உயர்ந்து வானுலகத்தைத் தடவவும் கொடிய நெருப்பினை எழுப்பி மூட்டினார்கள்.

1608. கொதித்து எரிகின்ற வேள்விக் குண்டத்தினின்று அகன்ற பிலத்தினின்றும் எழுகின்றவனைப் போல், பரந்த இருள் தங்கிய வாயினையும், வாயின் இரண்டு பக்கங்களில் பிறைச் சந்திரன் போன்று முளைத்த நச்சுப் பற்களையும், ஊழித் தீயை உமிழ்ந்து நிற்கும் கண்களையும் கொண்டு ஒரு மலை அசைந்து வந்தாற்போல ஓர் அவுணன் எழுந்து வெளி வந்தான்.

1609. அங்ஙனம் வந்த சிவந்த கண்களையுடைய கொடியோனாகிய அவுணன் எரிகின்ற வடவைத் தீ போல் கொதித்து வருந்துகின்ற பசியும் நீர் வேட்கையும் மிக அச் சமணர்களை நோக்கி, "நீவிர் எனக்கு இடும் பணி யாது?" என்று வினவினான். அவர்கள், "பாண்டியனை மதுரை யோடும் எதிர்த்து எடுத்து விழுங்கிவிட்டு வருக" என்று சொல்லி விடுத்தனர். அவனும் விரைந்து சென்றான்.

வேறு

1610. பாயுடை யவர்விட விடநாகப் படிவுகொள் நிசிசர
னிலனண்டந்
தோயுட லினனுடல் விடமூறிச் சொரிதுளை எயிறினன்
வடவைச்செந்
தீயுடை யனஎன வெரிகண்ணன் திணியிருள்
வரைமுழை யெனவிண்ட
வாயுடை யவனெடு நெறிமுன்னி முழைநுழை வரையென
வருகின்றான்.

1611. அரவிறை யுறைபிலம் வெளிகாண வரையுடல் புதைபட
நிலம்விள்ள
வருவிழி யழல்எழ வுயிர்கான்முன் வளியுளர் கிளர்வலி
விளிவெய்தப்
பொருசின விழியெதிர் படுபைங்கூழ் புகையெழ
வனமரை பொரிபொங்கர்
கருகிட முதுசினை இறைகொள்ளுங் ககநிரை
சிறைகருள் படவீழ.

1612. அகனிலம் வெருவுற நிலனேந்து மரவிறை வெருவுற
வெயில்காலும்
பகன்மதி வெருவுற இவைகௌவும் பணிகளும்
வெருவுற அகல்திக்கின்
புகர்மலை வெருவுற அடுதண்டப் புரவலன் வெருவுற
வருசெங்கண்
நகைமதி புரையெயி றவன்மாட மகரெதிர் குடவயின்
வருமெல்லை.

நாக வடிவுடைய அவுணன் தன்மை

1610. பாயை உடையாக உடைய சமணர்ஏவ, நஞ்சினையுடைய பாம்பின் வடிவம் கொண்ட அவுணன், வானத்தைத் தீண்டும் பெரிய உடலையும், வருந்துகின்ற விஷத்தைச் சொரிகின்ற துளையினையுடைய பெரிய பற்களையும் வடவைத் தீயைப் போல எரிகின்ற கண் களையும், இருள் செறிந்த மலையின் குகை போலத் திறந்த வாயினையும் உடைய ஒரு பாம்பின் வடிவம் கொண்டு மலைபோல எழுந்து விரைந்து நடந்தான்.

1611. அப்போது அவனுடைய பாதி உடல் புதைபடு தலால் பாம்புகளின் தலைவனான அனந்தன் உறையும் பாதாலம் வெளியே தெரியும்படி நிலம் பிளந்தது. கண் களில் நெருப்பு எழ, விடுகின்ற அவனது பெருமூச்சின்முன் சலிக்கின்ற காற்றினுடைய பெரியவலிமையானது கெட்டது. சினத்தையுடைய விழிகட்கு எதிர்ப்பட்ட பசிய பயிர்கள் கருகி வாடின. காடுகளும், அழகிய சோலைகளும் வாடின. பெரிய மரக்கிளைகளில் வசிக்கும் பறவைக் கூட்டங்கள் சிறகுகள் கருகிக் கீழே சுருண்டு விழுந்தன.

1612. அகன்ற நிலவுலகம் அஞ்சியது. அந்நிலவுலகைத் தாங்கும் அரசன் அஞ்சினான். கிரணத்தை வீசும் சூரியனும், சந்திரனும் அஞ்சினர். இவற்றை விழுங்கும் இராகு கேதுவாகிய பாம்புகளும் அஞ்சின. அகன்ற திசைகளில் உள்ள முகத்தில் புள்ளிகளையுடைய மலைபோன்ற திக்கு யானைகளும் அஞ்சின. கொல்லும் தண்டினையுடைய எமனும் அஞ்சினான். இவ்வாறு அனைத்தும் அஞ்சும்படி வளைந்த பற்களையுடைய அவுணன் நாக வடிவோடு மாடங்கள் நிறைந்த மதுரைப் பதியின் மேற்குத் திசையை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

1613. கண்டவர் கடிநகர் கடிதோடிக் கெளரியன் அடிதொழு
தடிகேள்நம்
கொண்டல்கண் வளர்மதில் வளைகூடற் குடவயி
னொருபெரு விடநாகம்
அண்டமு மகிலமு மொருவாயிட் டயில்தர வருவதை
யெனநீள்வாய்
விண்டுகொண் டணைவதை யெனலோடும் வெருவலன்
மதிகுல மறவீரன்.

1614. மற்றிது முன்மத கரிவிட்டோர் வரவிட வருவதை
யெனஎண்ணம்
உற்றிது தனையும் விளித்தற்கெம் முடையவர்
விடையவர் விடநாகஞ்
சுற்றிய சடையின ருளரென்னாச் சுரருல கிழிசுட
ரெனநிற்குங்
கற்றளி யிடையுறை யிறைமுன்போய்க் கனைகழ
லடிதொழு தறைகிற்பான்.

1615. வழிவழி யடிமைசெய் தொருபோது மறவலன் வழிபடு
மடியேனின்
மொழிவழி முறைசெய்து வருவேனிம் முதுநகர்
அடையவு மமணீசர்
அழிவது கருதினர் விடுநாக மடைவதுன் அருள்வழி
யதனாவி
கழிவது கருதிய வடியேனைக் கருணைசெய் தருள்இது
கடனென்றான்.

பாண்டியன் சோமசுந்தரக் கடவுளின் திருவருளைப் பெறுதல்

1613. அதனைப் பார்த்தவர்கள் காவலையுடைய நகரின் கண் விரைந்து ஓடிப் பாண்டியனின் அடிகளை வணங்கி, "அரசே! முகில் தூங்கும் மதில் சூழ்ந்த நம் மதுரைப் பதியின் மேற்றிசையில் நஞ்சுடைய ஒரு பெரிய பாம்பானது அண்டங்களையும், மற்றெல்லாவற்றையும் வாயில் போட்டு உண்ணுவதற்கு வருவதுபோல் பெரிய வாயைத் திறந்து கொண்டு வருகிறது,'' என்று முறையிட்டனர். திங்கள் மரபில் வந்த வெற்றி மிக்க வீரனாகிய அனந்தகுண பாண்டியன் அது கேட்டு அஞ்சானாயினான்.

1614. "முன்னர் மதயானையை விடுத்த சமணர்களே இப் பாம்பையும் விடுத்தார்கள் போலும்! அதைப் போலவே இப் பாம்பினையும் கொல்வதற்கு எம்மை ஆளாக உடையவரும், இடப ஊர்தியையுடையவரும் நஞ்சுள்ள பாம்பினை அணிந்த சடையினையுடையவருமாகிய சோமசுந்தரக்கடவுள் இருக்கின்றார்" என்று நினைத்துத் தேவருலகிலிருந்து இறங்கிச் சூரியனைப் போல் நிற்கும் மாணிக்க விமானத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் திருமுன் சென்று ஒலிக்கின்ற கழலணிந்த திருவடிகளை வணங்கிக் கூறத் தொடங்கினான்.

1615. "எம் பெருமானே! அடியேன் உம்மை ஒரு போதும் மறவாது. வழி வழி அடிமை செய்து வழிபட்டு வருகின்ற இயல்பினன். நின் ஆணை வழியே ஆட்சி புரிந்து வருகின்றேன். சமணராகிய கீழோர் இத்தொன்மை மிக்க நகரை அழிக்கக் கருதி விடுத்த பாம்பு வருகின்றது. உமது திருவருளின் வழியே அதன் உயிர் நீங்க வேண்டும் என்று கருதினேன். அடியேனுக்கு கருணை வைத்தருள்க. இது நினக்குக் கடமையாகும்" என்று தொழுது குறையிரந்தான்.

1616. அனுமதி கொடுதொழு திறை பாத மகமதி கொடுபுறன்
அடைகின்ற
பனிமதி வழிவரு தமிழ்மாறன் பகழியொ டடுசிலை
யினன்ஏகிக்
குனிமதி தவழ்தரு மதில்நீடுங் கொடியணி குடகடை
குறுகாமுன்
தனிவரை எனநிகர் தருகோபத் தழல்விழி யரவினை
யெதிர்கண்டான்.

வேறு

1617. பல்பொறிப் பகுவாய்ப் படம்புடை பரப்பிப் பக்கமெண்
டிசையொடு விசும்பிற்
செல்கதிர் புதைத்துத் திணியிருள் பரப்பித் திங்களின்
பகிர்புரை நஞ்சம்
பில்கெயி றதுக்கிப் பெரிதுயிர்த் தகல்வாய் பிளந்துமா
நகரெலாம் ஒருங்கே
ஒல்லெனக் கௌவி விழுங்குவான் சீறி உருத்தனன்
உரகவா ளவுணன்.

1618. அடுத்தனன் அரச சிங்கவே றிடியே றஞ்சவார்த்
தங்கையிற் சாபம்
எடுத்தன னெடுநா ணிருதலை வணக்கி எரிமுகக்
கூர்ங்கணை தொடுத்து
விடுத்தனன் விடுத்த சரமெலா முரகன் வெறுந்துகள்
படக்கறித் துமிழ்ந்து
படுத்தனன் பொறாது பஞ்சவன் புராரி பங்கயச் சேவடி
நினையா.

1619. கொடியதோர் பிறைவாய் அம்பினை விடுத்துக் கோளரா
வளையுடல் துணித்தான்
இடியதோ வெனவார்த் தெறிநிறக் குருதி யிரங்கிவீ
ழருவியிற் கவிழ
நெடியதோ ருடலம் புரள்படக் கூர்வால் நெளிதர
விளிபவன் மேலைக்
கடியதோ ரால காலவெள்ளம் போலக் கக்கினான்
கறையிருள் நஞ்சம்.

பாண்டியன் பாம்பினைத் துண்டித்தல்

1616. பிறகு, பாண்டியன் சிவபெருமானிடம் அனுமதி பெற்று வணங்கி, அவருடைய திருவடிகளைச் சிந்தையில் கொண்டு புறத்தே வந்தான். அவ்வாறு வந்த சந்திரன் மரபில் தோன்றிய தமிழ் வேந்தனான அனந்தகுண பாண்டியன் கொல்லுதற்குரிய அம்பும் வில்லும் எடுத்துக் கொண்டு மதிதவழ்கின்ற மதில்களில் நெடிய கொடிகள் கட்டிய மேற்கு வாயிலை அடைந்தான். அங்கு ஒப்பற்ற மலை என்று சொல்லத்தக்க வடிவத்தோடு சினத்தீ சிந்தும் கண்களையுடைய பாம்பினை எதிரே வரக் கண்டான்.

1617. பாம்பின் வடிவாகிய கொடிய அவுணன் பல புள்ளிகளையும், பிளந்த வாயினையுமுடைய தன் படத்தைப் பரப்பி, எட்டுத் திக்குகளையும், வானில் செல்லும் கதிரவனையும் மறைத்துச் செறிந்த இருளைப் பரப்பி, சந்திரனது பிளவினை ஒத்த நஞ்சினை உமிழும் பல்லினை அதுக்கிப் பெருமூச்சு விட்டு அகன்ற வாயைத் திறந்து பெரிய நகர் முழுவதையும் ஒரு சேர விழுங்கு வதற்குச் சீறிச் சினந்தான்.

1618. அப்போது, அரசருள் ஆண் சிங்கம் போன்ற அனந்தகுண பாண்டியன் நெருங்கி, இடியேறும் அஞ்சும்படி ஆரவாரம் செய்தான். அழகிய கையில் வில்லை எடுத்து நாணினைப் பூட்டி கூரிய தீ முகக் கணை களைத் தொடுத்து விடுத்தனன். அவ்வாறு விடப்பட்ட கணைகள் அனைத்தையும் பாம்பின் வடிவாகிய அவுணன் கடித்து உமிழ்த்து சிதைத்தான். அதனைக் கண்ட பாண்டியன் மனது பொறாமல் சோம சுந்தரக்கடவுளின் திருவடியை மனத்தில் சிந்தித்துத் துதித்தான்.

1619. அவ்வாறு துதித்து, கொடியதாகிய ஒரு பிறை போலும் வாயிலையுடைய கணையை விடுத்து வலிய பாம் பினது நெளிந்த உடலைத் துண்டு படுத்தினான். அப்பாம் பாகிய அவுணன் இடியொலியோ என்று ஐயுறப் பேரொலி செய்து, தீயின் நிறம் போன்ற இரத்தம் அருவி போலப் பெருக, நீண்ட ஒப்பற்ற உடல் புரளத் துடித்து வால் நெளிய இறக்கும்போது கொடிய ஆலகால விஷத்தின் பெருக்கைப் போலக் கரிய நஞ்சினைக் கக்கினான்.

1620. தீவிட முருத்துத் திணியிருள் கடுப்பத் திருநகர்
எங்கணும் செறிந்த
காவிடங் கூவல் கயந்தலை சதுக்கங் கழகமா வணமக
ழிஞ்சி
கோவிட மாட முபரிகை மேடை கோபுர மருங்கெலாம்
பரந்து
தாவிட மயங்கி உறங்கினார் போலச் சாம்பினார்
தனிநகர் மாக்கள்.

1621. நிலைதளர்ந் துடலந் திமிர்ந்துவேர் வரும்பி நிறைபுலன்
பொறிகர ணங்கள்
தலைதடு மாறி யுரைமொழி குழறித் தழுதழுப்
படைந்துநா வுணங்கி
மலைதரு கபமேல் நிமிர்ந்துணர் வழிந்து மயங்கிமூச்
சொடுங்கியுள் ளாவி
அலைதர ஊசல் ஆடினார் கிடந்தா ரன்னதொன்
னகருளா ரெல்லாம்.

1622. தென்னவன் விடங்கண் டஞ்சுமால் போலச்
சினகர மடைந்து தாழ்ந்தெந்தாய்
முன்னவ ஆதி முதல்வ வித்தின்றி முளைத்தவ
முடிவிலா முனிவ
என்னவ வன்பர்க் கெளியவ யார்க்கும் இறையவ
இந்நகர்க் கென்றும்
மன்னவ அநாதி மறையவ முக்கண் வானவ
நினைச்சர ணடைந்தேன்.

பாம்பின் நஞ்சு எங்கும் பரவுதல்

1620. அக்கொடிய நஞ்சானது சினந்துசெறிந்த இருள் பரவியதைப் போல அழகிய நகர் முழுவதும் இடையீடின்றிப் பரவியது. நெருங்கிய சோலைகள், கிணறு, குளம் நான்கு தெருக்கள் கூடுமிடம், கல்விச் சாலை, கடைவீதி, அகழி, மதில், அரண்மனை, மாடங்கள், உப்பரிகைகள், மேடைகள், கோபுரங்கள், நாட்டிய சாலைகள் ஆகிய எல்லா இடங்களிலும் தாவிப் பரவியது. ஒப்பற்ற அந்நகரின் மக்கள் யாவரும் நஞ்சினால் மயங்கி உறங்கினவர்களைப் போல வாடினார்கள்.

1621. நிலைகெட்டு உடல் கம்பித்து வியர்வை அரும்பி நிறைந்த புலன்களும், பொறிகளும் அந்தக் கரணங்களும் தடுமாறி, உரைக்கின்ற மொழி தடுமாறி, நாத்தழுதழுப் புற்று வரண்டு, கபம் மேலிட்டு அறிவழிந்து மயங்கி, உள்ளே உள்ள உயிர்ப்பு அடங்கி, உயிர் அலைய ஊசல் போல அப்பழைய நகரில் உள்ள அனைவரும் ஊஞ்சல் போல ஆடிக் கிடந்தனர்.

பாண்டியன் வேண்டுகோள்

1622. அனந்தகுண பாண்டியன், ஆலகால விடத்தைக் கண்டு அஞ்சிய திருமால்போலத் திருக்கோயிலை அடைந்து தாழ்ந்து வணங்கி, "எந்தையே! யாவருக்கும் முற்பட்டவனே! ஆதியாகிய முதல்வனே! வித்தின்றித் தோன்றியவனே! இறுதியில்லாத முனிவனே! எனக்குரிமை யானவனே! அன்பர்க்கு எளியவனே! எல்லோருக்கும் தலைவனே! இம்மதுரைப் பதிக்கு எக்காலத்தும் தலைவனே! அநாதியாயுள்ள மறையவனே! மூன்று கண்ணுள்ள தேவனே! நின்னைப் புகலாக அடைந்தேன்!

1623. அடுத்துவந் தலைக்கு மாழியைத் துரந்து மாழியுண்
டேழுமொன் றாகத்
தொடுத்துவந் தலைக்கும் பெருமழை தடுத்துந்
துளைக்கைவிண் துழாவவெண் பிறைக்கோ
டெடுத்துவந் தலைக்குங் களிற்றினை விளித்து
மிந்நகர் புரந்தனை யின்று
மடுத்துவந் தலைக்கும் விடத்தினால் மயங்கும்
வருத்தமுங்களை தியென்றிரந்தான்.

1624. அருட்கட லனைய ஆதிநா யகன்றன் அவிர்சடை
அணிமதிக் கொழுந்தின்
பெருக்கடை யமுதத் தண்டுளி சிறிது பிலிற்றினான்
பிலிற்றிட லோடும்
பொருக்கென எங்கும் பாலினிற் பிரைபோற்
புரையறக் கலந்துபண் டுள்ள
திருக்கிளர் மதுரா நகரமாப் புனிதஞ் செய்ததச்
சிறுதுளி யம்ம.

1625. இரவிமுன் னிருள தெனஇறை யருண்முன்
இருண்மல வலியென வெங்கும்
பரவிய வமுதால் விடமகன் றவசப் படிவொழிந்
தியாவரும் இன்பம்
விரவிய களிப்பின் மேவினா ரிருந்தார் மீனவர்
பெருந்தகை வேந்தன்
அரவணி சடையாற் கன்புருத் தானே ஆகிமண்
காவல்செய் திருந்தான்.

நாகமெய்த படலம் முற்றிற்று.

1623. நெருங்கி வருத்தும் கடலை வற்றச் செய்தீர்! கடல் நீரைப் பருகி ஏழு மேகங்களும் ஒன்றாகத் திரண்டு வந்து பெய்து வருந்தும் பெருமழையைத் தடுத்தீர்! துளையுடைய துதிக்கையினால் விண்ணினைத் துழாவி வெண்பிறை போன்ற கொம்புடன் வந்த களிற்றினைக் கொன்றருளினீர்! இவ்வாறு இம் மதுரைத் திருநகரைப் பாது காத்து அருளிய தேவரீர் இப்பொழுது கொடிய விஷத்தினால் கட்டுண்டு வருந்தும் வருத்தத்தையும் நீக்கியருளும்!" என்று விண்ணப்பம் செய்தான்.

மதுரை மாநகரம் விஷம் நீங்குதல்

1624. கருணைக் கடல் அனைய ஆதி நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள், தம் விளக்கமுடைய திருச்சடையின் கண் அணிந்த இளம் பிறையினது பெருக்கமைந்த அமுதத்தின் தண்ணிய துளியைச் சிறிது சிந்தினார். அவ்வாறு சிந்தியவுடன் அத்துளி விரைந்து பாலிற் பிரை போல் நகரமெங்கும் குற்றமறப் பரவி, முன்னுள்ள மதுரை மாநகர் ஆகுமாறு தூய்மை செய்தது.

1625. சூரியன் முன்னர் இருள் ஓடுதல் போலவும், இறைவனது திருவளின் முன்னே ஆணவ மலத்தின் வலிமை கெடுதல் போலவும் எங்கும் பரவிய அமுதத்தினால் நஞ்சு நீங்கப் பெற்று மயக்க வடிவம் நீங்கி யாவரும் இன்புற்று மகிழ்ந்து இருந்தனர். அனந்தகுண பாாண்டியன் பாம்பினை அணிந்த சடையையுடைய சோமசுந்தரக் கடவுளுக்கு அன்பே வடிவமாகி நிலவுல்கைப் பாதுகாத்துக் கொண்டிருந்தான்.

நாகமெய்த படலம் முற்றிற்று.

29. மாயப் பசுவை வதைத்த படலம்

1626. சுருதி யின்புறத் தவர்விடு மராவினைச் சுருதி
கருத ரும்பரன் அருளுடைக் கௌரியன் துணித்த
பரிசி தங்கது பொறாதமண் படிறர்பின் விடுப்ப
வருபெ ரும்பசு விடையினான் மாய்த்ததும் பகர்வாம்.

1627. பணப்பெ ரும்பகு வாயுடைப் பாந்தளை யளந்த
குணப்பெ ருந்தகை துணித்தபின் பின்வருகுண்டர்
தணப்ப ருங்குழாம் காலினாற் றள்ளுண்டுசெல்லுங்
கணப்பெ ரும்புயல் போலுடைந்து ஓடின கலங்கி.

1628. உடைந்து போனவர் அனைவரு மோரிடத் திருள்போல்
அடைந்து நாமுன்பு விடுத்தமால் யானைபோ லின்று
தொடர்ந்த பாம்பையுந் தொலைத்தனர் மேலினிச் சூழ்ச்சி
மிடைந்து செய்வதை யாதென வினயமொன் றோர்வார்.

1629. ஆவை யூறுசெய் யார்பழி யஞ்சுவார் அதனை
ஏவு வாமிது வேபுணர்ப் பென்றுசூழ்ந் திசைந்து
பாவ காரிகள் பண்டுபோல் பழித்தழல் வளர்த்தார்
தாவி லாவுருவாகியோர் தானவன் முளைத்தான்.

29. மாயப் பசுவை வதைத்த படலம்

1626. வேதநெறிக்குப் புறம்பாகிய சமணர்கள் ஏவிய பாம்பினை, வேதமும் அறியாத இறைவன் திருவருளைப் பெற்ற அனந்தகுண பாண்டியன் துண்டு படுத்திய திருவிளையாடல் இது. இனி அதனைப் பொறுக்காது சமணர் பின்பு ஏவுகின்ற பெரிய மாயப் பசுவினைச் சோம சுந்தரக் கடவுள் தம் இடபத்தினால் வதைத்தருளிய திருவிளையாடலைக் கூறுவோம்.

சமணர்கள் மாயப் பசுவினை ஏவுதல்

1627. படமுடைய பெரிய பிளந்த வாயினையுடைய பாம்பினை, அனந்தகுண பாண்டியன் துணித்த பின்பு, அப்பாம்பினைப் பின் தொடர்ந்து கூட்டமாக வந்த சமணர்கள் காற்றினால் தள்ளப்பட்டு ஓடும் மேகங்கள் போல உடைந்து மனம் கலங்கி ஓடினர்.

1628. அவ்வாறு ஓடிய அச் சமணர்கள் ஓரிடத்தில் இருள் செறிந்தது போல ஒன்று கூடி, "நாம் முன்பு விடுத்த யானையைக் கொன்றது போலவே, இன்று சென்ற பாம்பினையும் அழித்தனர். இனிமேல் நாம் யாது சூழ்ச்சி செய்வது?" என்று ஒரு வஞ்சகத்தை ஆலோசித்தனர்.

1629. "பசுவிற்குத் துன்பம் செய்யார்கள். அதற்குத் துன்பம் செய்தலால் வரும் பழிக்கு அஞ்சுவார்கள். ஆதலால் பசுவை விடுப்போம். இதுவே தக்க சூழ்ச்சியாகும்" என்று கருதி யாவரும் கருத்தொருமித்து முடிவு செய்தனர். பாவகாரிகளாகிய அச்சமணர்கள், முன் போலவே கொடிய வேள்வி ஒன்றினைச் செய்தனர். கெடுதல் இல்லாத பசுவின் உருவத்தில் ஓர் அவுணன் தோன்றினான்.

1630. குண்ட முற்கணின் றெழுந்தவக் கொடியவெம் பசுவைப்
பண்டு போலவர் விடுத்தனர் கூடலம் பதிமேல்
உண்டு மில்லையும் எனத்தடு மாற்றநூ லுரைத்த
பிண்டி யானுரை கொண்டுழல் பேயமண் குண்டர்.

வேறு

1631. மாடமலி மாளிகையில் ஆடுகொடி மானக்
கொடுகளி னோடுமுகில் குத்திமிசை கோத்துச்
சேடன்முடி யுங்கதிர்கொள் சென்னிவரை யுந்தூள்
ஆடவடி யிட்டுலவை யஞ்சிட வுயிர்த்தே.

1632. விடுத்திடு முயிர்ப்பினெதிர் பூளைநறை வீபோல்
அடுத்திடு சராசரம் அனைத்துமிரி வெய்தக்
கடுத்திடு சினக்கனலின் உக்குலக மெல்லாம்
மடுத்திடு தழற்கடவுள் வார்புனலை மான.

1633. உடன்றிறைகொள் புள்ளொடு விலங்கலறி யோட
மிடைந்தபழு வத்தொடு விலங்கலை மருப்பால்
இடந்தெறி மருத்தென எறிந்தளவி லோரைத்
தொடர்ந்துடல் சிதைத்துயிர் தொலைத்திடியி னார்த்தே.

1634. மறலிவரு மாறென மறப்பசு வழிக்கொண்
டறலிவர் தடம்பொருநை ஆறுடைய மாறன்
திறலிமலர் மங்கையுறை தென்மதுரை முன்னா
விறலிவரு கின்றதது மீனவன் அறிந்தான்.

1630. வேள்விக் குண்டத் தீயினின்று தோன்றிய அந்தக் கொடிய பசுவினை, 'அத்தி, நாத்தி' என்று கூறிய தடுமாற்ற நூலினைக் கூறிய அசோக மரத்தின் அடியில் உள்ள அருகனது உரையினைக் கொண்டுழலும் பேய் போன்ற சமணர்கள் முன் போல் மதுரைத் திருநகரின் மேல் விடுத்தனர்.

மாயப்பசு மதுரை மாநகரத்தின் மீது பாய வருதல்

1631. மாடங்கள் நிறைந்த மாளிகையில் ஆடுகின்ற கொடியைப் போன்று தம் கொம்புகளிளினால் வானில் ஓடுகின்ற மேகங்களைக் கொத்தி, மேலே கோத்துக் கொண்டு ஆதிசேடன் முடியும், ஒளியுடைய முடிக் கொண்ட மேருமலையும் புழுதியாட அடி பெயர்த்து வைத்தது. காற்றும் அதிருமாறு மூச்செறிந்தது.

1632. விடுகின்ற மூச்சின் எதிரே, சராசரப் பொருள் களுமாகிய எல்லாம் தேனையுடைய பூளைப் பூப் போல சிதறி ஓடின. மிக்கு எழுகின்ற அதன் கோபத் தீயினுக்கு உலக மனைத்தையும் அழிக்கும் தீக்கடவுளின் அனல், குளிர் புனலை ஒப்பதாகும்.

1633. தங்கிய பறவைகளும், விலங்குகளும், அலறி ஓல மிட்டு ஓடின. செறிந்த காடுகளையும், மலைகளையும் வெகுண்டு கொம்பினால் அடியோடு பெயர்த்துக் காற்றினைப் போல எறிந்தது அளவற்ற மக்களைப் பின் தொடர்ந்து அவர்கள் உடலைச் சிதைத்து உயிரைத் தொலைத்து இடி போலப் பேரொலி செய்தது.

1634. கூற்றுவன் வரும் தன்மை போலக் கொலைத் தொழில் மாயப் பசுவானது வழிநடந்தது. கருமணல் பரந்த பெரிய பொருநையாற்றுக்குத் தலைவனான பாண்டியனது வீரமகளும் திருமகளும் உறைகின்ற தென் திசையில் உள்ள மதுரையை நோக்கி வெற்றி கொண்டு பாய வந்து கொண்டிருந்தது. அதனைப் பாண்டியன் அறிந்தான்.

1635. மீனவனு மாநகருண் மிக்கவரு முக்கண்
வானவனை மாமதுரை மன்னவனை முன்னோர்
தானவனை யாழிகொடு சாய்த்தவனை யேத்தா
ஆனதுரை செய்துமென ஆலய மடைந்தார்.

1636. நாதமுறை யோபொதுவின் மாறிநட மாடும்
பாதமுறை யோபல உயிர்க்குமறி விக்கும்
போதமுறை யோபுனித பூரண புராண
வேதமுறை யோவென விளித்துமுறை யிட்டார்.

1637. நின்றுமுறை யிட்டவரை நித்தன் அருள்நோக்கால்
நன்றருள் சுரந்திடப நந்தியை விளித்துச்
சென்றமண ரேவவரு தீப்பசுவை நீ போய்
வென்றுவரு வாயென விளம்பினன் விடுத்தான்.

வேறு

1638. தண்டங் கெழுகூற் றமுமஞ்சத் தறுகட் செங்கண்
குண்டந் தழன்று கொதிப்பக் கொடுநாக் கெறிந்து
துண்டந் துழாவக் கடைவாய்நுரை சோர்ந்து சென்னி
அண்டந் துழாவ எழுந்தன் றடலேறு மாதோ.

பாண்டியனும் நகர மக்களும் இறைவனை வேண்டல்

1635. முக்கண் மூர்த்தியும், மதுரையை ஆண்ட சுந்தர பாண்டிய மன்னவனும், சலந்தரன் என்னும் ஓர் அசுரனை ஆழிகொண்டு அழித்தவனுமாகிய சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலைப் பாண்டியனும், அந்நகரத்தில் உள்ள பெரியோர்களும் அடைந்தனர். 'அவ்விறைவனைத் துதித்து நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறுவோம்' என்று எண்ணினர்.

1636. நாதனே! இது முறையோ? வெள்ளியம்பலத்துள் மாறிகால் ஆடும் திருவடியையுடையவனே! இது முறையோ? எல்லா உயிர்களுக்கும் அறிவினை ஊட்டும் அறிவே! இது முறையோ? தூயவனே! எங்கும் நிறைந்தவனே! பழம் பொருளே! வேதத்தை அருளியவனே! இது முறையோ? என்று கூறி முறையிட்டார்கள்.

1637. அவ்வாறு நின்று முறையிட்டவர்களை, சோமசுந்தரக் கடவுள், தம் திருவருள் நோக்கோடு பார்த்துக் கருணை புரிந்து இடபவடிமாய் உள்ள திருநந்தி தேவரை அழைத்து "நீ சென்று சமணர்கள் ஏவலால் வருகின்ற கொடிய பசுவை வென்று வருவாயாக" என்று கூறி விடுத்தார்.

இடப நந்தி தோற்றப் பொலிவுடன் வரும் காட்சி

1638. இறைவனின் ஆணையைப் பெற்று உடனே நந்தி, தண்டப் படையை ஏந்திய கூற்றுவனும் அஞ்சும்படி, சினந்து எழுந்தது, அதன் சிவந்த கண்கள் வேள்விக்குண்டத்து அழல்போல கொதித்தன. வளைந்த நாக்கு நாசியினைத் துழாவியது. கடைவாய் நுரை வழிந்து ஒழுகியது. தலை வானுலகத்தைத் தொட்டு நின்றது. இப்படி ஒரு தோற்றத்துடன் வலிமை மிக்க இடபம் எழுந்தது.

1639. நெற்றித் தனியோடை நிமிர்ந்து மறிந்த கோட்டிற்
பற்றிச் சுடர்செம் மணிப்பூண்பிறை பைய நாகஞ்
சுற்றிக் கிடந்தால் எனத்தோன்றுவெள் ளாழி யீன்ற
கற்றைக் கதிர்போற் பருமம்புறங் கௌவி மின்ன.

1640. கோட்டுப் பிறைகால் குளிர்வெண்கதிர்க் கற்றை போலச்
சூட்டுக் கவரித் தொடை டத்தொங்கலு நெற்றி முன்னர்ப்
பூட்டுத் தரள முகவட்டும் பொலியப் பின்னல்
மாட்டுச் சதங்கைத் தொடைகல்லென வாய்விட்டு
ஆர்ப்ப.

1641. பணிநா வசைக்கும் படியென்னக் கழுத்தில் வீர
மணிநா வசைப்ப நகைமுத்தின் வகுத்த தண்டை
பிணிநாண் சிறுகிங்கிணி பிப்பல மாலைத் தொங்கல்
அணிநா ணலம்பச் சிலம்பார்ப்ப அடிக ணான்கும்.

1642. அடியிட்டு நிலங்கிளைத் தண்டமெண் டிக்கும் போர்ப்பப்
பொடியிட் டுயிர்த்துப் பொருகோட்டினிற் குத்திக்
கோத்திட்டு
இடியிட் டதிர்கார் எதிரேற்றெழுந் தாங்கு நோக்கி
செடியிட்டு இருகண் அழல்சிந்த நடந்த தன்றே.

1639. மேலும் நெற்றியில் பட்டம் சிறந்து விளங்கியது. வளைந்த கொம்பிலே செம்மணிப்பூண் பிறைச்சந்திரனைக் கேது என்னும் பாம்பு சுற்றிக்கிடந்தாற் போலத் திகழ்ந்தது. முதுகிலே பொற்கவசம் வெள்ளிய கடல் பெற்ற நெருங்கிய கிரகணத்தையுடைய சூரியனைப் போல் விளங்கியது.

1640. கொம்பிலே கட்டப்பட்ட கவரிக் குஞ்சம் கொம் பாகிய பிறைமதி கக்கிய குளிர்ந்த வெள்ளிய கதிரைப் போலத் தொங்கியது. நெற்றிக்கு முன்னே பூட்டுதலை யுடைய முத்தாலாகிய முகவட்டுப் பொலிந்தது. பின்னலாகிய மாட்டுச் சதங்கை மாலை கல்லொன்று வாய்விட்டு ஒலித்தது.

1641. பாம்பு நாவினை அசைத்தது போன்று கழுத்திலே வீரமணி நா அசைந்து, ஒலித்தது. நான்கு கால் களிலும் ஒளிபொருந்திய முத்தை உள்ளிடு பருக்கையாகக் கொண்டு செய்த தண்டையும், கயிற்றில் கோத்த சிறு சதங்கை மாலையும், கயிற்றில் வரிசைபடக் கோத்த அழகிய அரசிலை வடிவாகச் செய்த மாலையும், சிலம்பும் ஒன்று சேர்ந்து ஒலித்தன.

1642. காளையானது தன் அடியினால் நிலத்தைக் கிளறி அண்டத்தையும் எட்டுத் திசையையும் மூடுமாறு புழுதி எழுப்பியது. பெரு மூச்செறிந்து போருக்குரிய கொம்பினால் குத்தி மண்ணைக் கோத்துக் கொண்டு, இடித்து முழங்கும் மேகத்தை எதிர்க்க எழுந்தாற்போல வானத்தை நோக்கிய வண்ணம் கண்களினின்றும் தீயினைச் சிந்த விரைந்து நடந்தது.

வேறு

1643. பால்கொண்ட நிழல்வெண் டிங்கட் பகிர்கொண்ட மருப்பிற் கொண்மூச்
சூல்கொண்ட வயிற்றைக் கீண்டு துள்ளியோர் வெள்ளிக் குன்றம்
கால்கொண்டு நடந்தால் என்னக் கடிந்துடன்று ஆவைச் சீற்றம்
மேல்கொண்டு நாற்றம் பற்றி வீங்குயிர்ப் பெறிந்து கிட்டா.

1644. குடக்கது குணக்க தென்னக் குணக்கது குடக்க தென்ன
வடக்கது தெற்க தென்னத் தெற்கது வடக்க தென்ன
முடுக்குறு மருப்பிற் கோத்து முதுகுகீ ழாகத் தள்ளும்
எடுக்குறு மலையைக் கால்பேர்த்து எனத்திசைப் புறத்து வீசும்.

1645. கொழுமணிச் சிகர கோடி சிதைபடக் குவட்டில் வீசும்
பழுமரச் செறிவில் வான்றோய் பணையிற எறியும் வானின்
விழுமறப் பசுப்போல் வீழ வேலைவாய் வீசுமிங்ஙன்
செழுமதிக் கோட்டு நந்தித் தேவிளை யாடல் செய்து.

1646. பூரியர் எண்ணி யாங்கே பொருதுயி ரூற்றஞ் செய்யாது
ஆரிய விடைதன் மாண்ட வழகினைக் காட்டக் காமுற்று
ஈரிய நறும்பூ வாளி யேறுபட் டாவி யோடும்
வீரியம் விடுத்து வீழ்ந்து வெற்புரு வாயிற் றன்றே.

இடபநந்தி மாயப் பசுவைக் கொல்லுதல்

1643. வெள்ளிய இடபமானது, பால் போலும் வெண்மையான தனது பிறைச் சந்திரனை யொத்த கொம்பினால் மேகத்தின் சூல் கொண்ட வயிற்றினைக் கிழித்து துள்ளிக் கொண்டு வெள்ளிமலையொன்று கால் பெற்று நடந்தாற் போல விரைந்து சென்று பகைத்து, சீற்றம் கொண்டு, நிலத்தை மோந்து பெருமூச்செறிந்து பசுவினை நெருங்கியது.

1644. அப்பொழுதே மேற்கே உள்ள பசுவைக் கிழக்கே உள்ளது என்றும், கிழக்கேயுள்ளதை மேற்கேயுள்ள தென்றும், வடக்கேயுள்ளதை தெற்கேயுள்ள தென்றும், தெற்கேயுள்ளதை வடக்கேயுள்ளதென்றும் சொல்லும்படி நான்கு திசைகளிலும் அதை இடைவிடாது துரத்தியது, கொம்பில் கோத்து முதுகு கீழாகுமாறு தள்ளியது. மீண்டும் எடுத்தது. மலையைக் காற்று பெயர்த்து வீசியது போல திசைப் புறத்திலே எறிந்தது.

1645. பருத்த உருப்பெற்ற மணிகள் நிறைந்த சிகரங்கள் தூளாகும்படி மலையின் மேல் தூக்கி எற்றியது. வானை அளாவிய ஆலமரங்களின் கிளைகள் முறியுமாறு எடுத்து வீசியது. விண்ணுலகத்தினின்றும் கடலில் விழும் காமதேனுவைப் போலக் கடலின்கண் எடுத்து வீசியது. இவ்வாறு மதிபோன்ற கொம்பினையுடைய திருநந்தியாகிய இடபம் போர் விளையாடலைப் புரிந்தது.

1646. கீழோரான சமணர்கள் எண்ணிய வண்ணமே பொருது அதன் உயிர்க்குத் துன்பம்செய்யாது, இடபமானது மாட்சிமைப்பட்ட தனது பேரழைக் காட்டிற்று. அப்பசுவானது அதனைக் காமுற்று மலரம்பால் ஏறுண்டு, இச்சை கொண்டு உயிரோடு வீரியத்தையும் விட்டுக் கீழே வீழ்ந்தது. உடனே அதன் உடல் மலை வடிவமாயிற்று.

1647. வாங்கின புரிசை மாட மாநக ரானா வின்பந்
தூங்கின வரவாய் வேம்பின் றோடவிழ் தாரான் திண்டோள்
வீங்கின விரவி தோன்ற வீங்கிரு ளுடைந்த தென்ன
நீங்கின நாண மோடு நிரையமண் குழாங்கள் எல்லாம்.

1648. உலகறி கரியாத் தன்பேர் உருவினை இடபக் குன்றாக்
குலவுற நிறுவிச் சூக்க வடிவினாற் குறுகிக் கூடல்
தலைவனை வணங்க ஈசன் றண்ணருள் சுரந்து பண்டை
இலகுரு வாகி யிங்ங னிருக்கென விருத்தி னானே.

1649. அந்நிலை நகரு ளாரும் அரசனு மகிழ்ச்சி தூங்கிச்
சந்நிதி யிருந்த நந்தி தாளடைந் திறைஞ்சிப் போக
மின்னவிர் சடையா னந்தி வென்றிசால் வீறு நோக்கி
இன்னமு தனையா ளோடுங் களிசிறந் திருக்கு நாளில்.

1650. அவ்விடை வரைமேன் முந்நீ ரார்கலி யிலங்கைக் கேகுந்
தெவ்வடு சிலையி ராமன் வானர சேனை சூழ
மைவரை யனைய தம்பி மாருதி சுக்கி ரீவன்
இவ்வடல் வீரரோடும் எய்தியங் கிறுத்தான் மன்னோ.

1647. வளைந்த மதிலையுடைய பெரிய மாடங்கள் நிறைந்த மதுரையம்பதியில் உள்ள மக்கள் யாவரும் அது கண்டு நீங்காத மகிழ்ச்சியடைந்தனர். அரம் போல வாயுடைய இலைகளையுடைய வேம்பின் இதழ் விரிந்த மாலையணிந்த அனந்த குண பாண்டியனின் திண்ணிய தோள்கள் பூரித்தன. சூரியன் உதித்த போது இருள் கெட்டு ஓடுதல் போலச் சமணர்கள் யாவரும் நாணத்துடன் புறம் கொடுத்து ஓடினர்.

இடப மலை

1648. உலகத்தார் அறியும் சான்றாக இடபநந்தி தனது தூல சரீரத்தை 'இடப மலை'யாக அங்கே விளங்க நிறுத்தி விட்டு சூக்கும சரீரத்தோடு மதுரை நாயகனை அடைந்து வணங்க, அவ்விறைவன் திருவருள் சுரந்து "முன்னை வடிவாகி இங்கேயே இருப்பாயாக" என்று இருத்தியருளினார்.

1649. அப்போது நகர மக்களும் அனந்த குண பாண்டியனும் களிப்பு கொண்டு சந்நிதியில் இருந்த திரு நந்தி தேவரின் திருவடியை அடைந்து வணங்கிச் சென்றனர். சோமசுந்தரக் கடவுள் அந்த நந்தி தேவரின் வெற்றி மிக்க பெருமிதத்தினைக் கண்டு இனிய அமுதத்தை யொத்த மீனாட்சியம்மையோடும் களிப்புற்று இருந்தருளினார்.

இராமபிரான் இடபமலையில் வந்து தங்குதல்

1650. பகைவரைக் கொல்லும் கோதண்டத்தை ஏந்திய இராமபிரான், மூன்று நீர்களையுடைய கடல்சூழ்ந்த இலங்கைக்குப் போகும்போது வானரப் படைகள் சூழ நீலமலையை யொத்த இலக்குவன், அனுமன், சுக்கிரீவன் முதலாய வெற்றியையுடைய வீரர்களோடும் அந்த இடபக் குன்றின் மேல் வந்து தங்கினான். (இலக்குவன் மேருமலை போன்று பொன்னிறமானவன், அவனை நீலமலை என்றது இராமனை நோக்கித் தற்குணமாகக் கூறினார் என்க.)

1651. அன்னது தெரிந்து விந்தம் அடக்கிய முனிஅங் கெய்தி
மன்னவற் காக்கங் கூறி மழவிடைக் கொடியோன் கூடற்
பன்னரும் புகழ்மை யோது பனுவலை யருளிச் செய்ய
முன்னவன் பெருமை கேட்டு முகிழ்த்தகை முடியோ னாகி.

1652. முனியொடு குறுகிச் செம்பொன் முளரியுள் மூழ்கி யாதித்
தனிமுத லடியை வேணி முடியுறத் தாழ்ந்து வேத
மனுமுறை சிவாக மத்தின் வழிவழா தருச்சிச் தேத்திக்
கனிவுறும் அன்பி லாழ்ந்து முடிமிசைக் கரங்கள் கூப்பி.

1653. புங்கவ சீவன் முத்தி புராதிப புனித போக
மங்கலம் எவற்றி னுக்குங் காரண வடிவ மான
சங்கர நினது தெய்வத் தானங்க ளனந்தம்; இந்த
அங்கண்மா ஞால வட்டத் துள்ளன அவைக டம்மில்.

வேறு

1654. அற்பு தப்பெரும் பதியிந்த மதுரையீ தாற்றப்
பொற் புடைத்தென்ப தெவன்பல புவனமு நின்பாற்
கற்பு வைத்துய நீசெய்த கருமத்தின் விருத்தம்
வெற்பு ருக்களாய்ப் புடைநின்று விளங்கலான் மன்னோ.

1651. அதனை அறிந்த விந்தமலையை அடக்கிய அகத்திய முனிவன் அங்குச் சென்று மன்னவனாகிய இராம பிரானுக்கு ஆக்க மொழி கூறி, இளமை மிக்க இடபக் கொடியுடைய சோமசுந்தரக் கடவுளின் மதுரைப் பதியின் புகழையுடைய மான்மியத்தைப் பாடியருளினார். அம்முதல் வனின் பெருமையைக் கேட்ட இராம பிரான் தலைமேல் கூப்பிய கைகளுடன்,

1652. அம்முனிவனோடு சென்று, சிவந்த பொற்றா மரைத் தீர்த்தத்தை அடைந்து நீராடி, யாவர்க்கும் ஆதி யாகிய ஒப்பற்ற முதற் கடவுளின் திருவடியை. சடையுடைய தனது முடி பொருந்துமாறு வணங்கி, வேத முறையும் சிவாகம முறையும் வழுவாது அருச்சனை செய்து களித்த பேரன்பில் நின்றார்.

இராமபிரான் சொக்கலிங்க மூர்த்தியைப் போற்றுதல்

1653. "தேவர் யாவர்க்கும் உயர்ந்தோனே! சீவன் முக்தி புறத்திற்குத் தலைவனே! தூய போக நலங்கள் எவற்றுக்கும் காரண வடிவாகிய சங்கரனே! அழகிய இடத்தையுடைய பெருமை மிக்க இந் நிலவுலகத்தில் நின்னுடைய தெய்வத் தன்மை பொருந்திய பதிகள் பல உள்ளன அவற்றுள்,

1654. "இம் மதுரைப் பதியே மிக்க அற்புதமுடைய சிறந்த பதியாகும். இது மிக்க மேன்மையுடையது என்று கூறுவது யாதெனில் எல்லாவுலகமும் நின்னிடத்தே அன்பு வைத்து உய்யும் பொருட்டு நீர் செய்தருளிய திருவிளை யாடல்களின் வரலாறு மலைவடிவங்களாகி இத் திருநகர்ப் புறத்தே நின்று விளங்குதலினாலாகும்.

1655. கண்ட வெல்லையிற் றுன்பங்கள் களைதற்கும் அளவை
கண்ட ரும்பெருஞ் செல்வங்கள் அளித்தற்குங் கருணை
கொண்டு நீயுறை சிறப்பினாற் குளிர்மதிக் கண்ணி
அண்ட வாணவிவ் விலிங்கத்துக் கொப்புவே றாமோ.

1656. தோய்ந்தி டும்பொழு தீட்டிய தொல்வினைப் படலம்
மாய்ந்தி டும்படி மாய்த்துநின் மங்கல போகம்
ஈந்தி டும்படிக் கிருந்தமா தீர்த்தத்தின் இயல்பை
ஆய்ந்தி டும்பொழு ததற்கொரு தீர்த்தமொப் பாமோ.

1657. எத்த லத்தினும் ஒவ்வொன்று விழுமிதாம் இந்த
மெய்த்த லத்திலிம் மூவகை விழுப்பமும் விளங்கும்
அத்த வாதலா லித்தல மடைந்தவ ரெவர்க்குஞ்
சித்த சுத்தியும் பல்வகைச் சித்தியும் பயக்கும்.

1658. அடிய னேனெண்ணுங் கருமமுஞ் சரதமே யாக
முடியு மாவரி தச்செயன் முடியுமெப் படியப்
படிபு ரிந்தருள் கடிதெனப் பணிந்தனன் பரனும்
நெடிய வான்படும் அமுதென எதிர்மொழி நிகழ்த்தும்.

வேறு

1659. இரவிதன் மரபின் வந்த இராமகேள் எமக்குத் தென்கீழ்
விரவிய திசையிற் போகி விரிகடற் சேது கட்டிக்
கரவிய வுள்ளக் கள்வன் கதிர்முடி பத்துஞ் சிந்தி
அரவமே கலையி னாளை யருஞ்சிறை யழுவ நீக்கி.

1655. "தரிசித்த மாத்திரத்திலே சகல துன்பங்களையும் போக்குவதற்கும் சகல செல்வங்களை அருளுதற்கும் கருணை கொண்டு தேவரீர் வீற்றிருக்கும் சிறப்பினாலே குளிர்ந்த பிறையை மாலையாய் அணிந்த தேவனே! இச் சொக்கலிங்கத்திற்கு வேறொன்று ஒப்பாகுமோ?

1656. "தன்னில் நீராடும் பொழுது தேடிவைத்த பழவினைத் தொகுதியை சிதைத்து நினது நன்மையாகிய மங்கல போகத்தை அருளும்படி அமைந்த இப் பொற்றா மரைத் தீர்த்தத்திற்கு, ஆராயும் போது பொருந்திய இதற்கு மற்றொரு தீர்த்தம் ஒப்பாகுமோ?

1657. "எந்தத் தலங்களிலும் மூர்த்தியும், தீர்த்தமும், தலமுமாகிய மூன்றுனுள் ஒவ்வொன்று சிறப்புடையதாகும். இந்த உண்மைத் தலத்தில் இம் மூன்றும் சிறப்புற்று விளங்கும். ஆதலினால், இறைவனே! இந்தப் பதியானது தன்னை அடைந்தவர் யாவர்க்கும் மனத் தூய்மையும் அணிமா முதலிய பலவகைச் சித்திகளையும் அருளும்.

1658. "அடியேன் எண்ணிய கருமமும் உண்மையாக முடியும் தன்மை அரிதோ! அச் செயல் எப்படி முடிதல் வேண்டுமோ அவ்வாறு முடியும் பொருட்டு விரைந்து அருள் புரிதல்வேண்டும்" என்று இரந்து வேண்டினான். சோமசுந்தரக் கடவுளும் பரந்தத வானின் கண் உண்டாகும் அமிழ்து என்று சொல்லும்படி கூறியருளத் தொடங்கினார்.

இறைவனின் அசரீரி

1659. "சூரியன் மரபில் வந்த இராமனே கேட்பாயாக! எமக்குத் தென் கிழக்குத் திசையில் சென்று, விரிந்த கடலிலே சேது பந்தனம் செய்து, வஞ்சனைமிக்க உள்ளத்தையுடைய இராவணனது பத்துத் தலைகளையும் துண்டித்து, ஒலிக்கின்ற மேகலையை அணிந்த சானகியைப் பெறுதற்கரிய சிறையினின்றும் நீக்குவாய்.

1660. மீண்டுநின் னயோத்தி யெய்தி விரிகடல் உலகம் பன்னாள்
ஆண்டினி திருந்து மேனாள் வைகுண்ட மடைவா யாக
ஈண்டுநீ கவலை கொள்ளே லெனுமச ரீரி கேட்டு
நீண்டவன் மகிழ்ந்து தாழ்ந்து நிருத்தனை விடைகொ ண்டேகி.

1661. மறைப்பொரு ளுரைத்தோன் சொன்ன வண்ணமே இலங்கை யெய்தி
அறத்தினைத் தின்ற பாவி யாவிதின் றனையான் செல்வத்
திறத்தினை இளவற் கீந்து திருவிரா மேசங் கண்டு
கறைப்படு மிடற்றி னானை யருச்சித்துக் கருணை வாங்கி.

1662. பற்றிய பழியி னீங்கி யிந்திரன் பழியைத் தீர்த்த
வெற்றிகொள் விடையி னானை மீளவும் வந்து போற்றி
அற்றிரள் அனைய கோதைக் கற்பினுக் கரசி யோடும்
சுற்றிய சடையி ராமன் தொன்னக ரடைந்தா னிப்பால்.

வேறு

1663. செங்கோ லனந்த குணமீனவன் தேயங் காப்பக்
கொங்கோ டவிழ்தார்க் குலபூடணன் தன்னை யீன்று
பொங்கோத ஞாலப் பொறைமற்றவன் பாலி றக்கி
எங்கோன் அருளாற் சிவமாநக ரேறி னானே.

மாயப்பசுவை வதைத்த படலம் முற்றிற்று.

1660. "மீண்டும் உன்னுடைய அயோத்தியை அடைந்து பரந்த கடல் சூழ்ந்த உலகத்தை இனிதாக நெடு நாள் ஆண்டு பின்னாளில் வைகுண்டம் அடைவாயாக: இப்போது நீ கவலை கொள்ளாதே," என்று அசரீரி வாக்காக அருளிச் செய்தார். அவ்வுரையைக் கேட்டு இராமபிரான் மகிழ்ந்து வணங்கி, சோமசுந்தரக் கடவுளிடம் விடைபெற்றுச் சென்றார்.

இராமபிரான் வெற்றியுடன் தன்நாடடைதல்

1661. வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்த சோம சுந்தரக் கடவுள் கூறியபடியே இலங்கையை அடைந்து அறத்தை அழித்த பாவியாகிய இராவணனது ஆவியைப் பருகி, அவனுடைய நாட்டை அவனுடைய தம்பியாகிய விபீடணனுக்குக் கொடுத்து, சீதையோடு மீண்டு வந்து சேது என்னும் 'இராமேச்சுரத்தில்' சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்து அவனருளைப் பெற்றார்.

1662. இராவணனைக் கொன்றதால் தன்னைப்பற்றித் தொடர்ந்த கொலைப் பாவத்தினின்றும் நீங்கினான். தேவேந்திரனது பழியினைப் போக்கிய, வெற்றிமிக்க இடப வூர்தியையுடைய சோமசுந்தரக் கடவுளை மீண்டும் வந்து துதித்து, இருளின் திரட்சியை ஒத்த கூந்தலையுடைய கற்புக் கரசியாகிய சானகியோடும் சுற்றிக் கட்டிய சடையை யுடைய இராமன் தொன்மையான தனது அயோத்தி நகரத்தை அடைந்தான். பின்பு,

1663. செங்கோலையுடைய அனந்தகுணபாண்டியன், நிலவுலகைப் பாதுகாப்பதற்கு, மகரந்தத்தோடு மலர்ந்த மலர் மாலையுடைய 'குலபூடணன்' என்னும் மகனைப் பெற்று வளர்த்தான். பொங்குகின்ற கடல் சூழ்ந்த இந்நில வுலகின் அரசாட்சியை அவனிடத்தில் அளித்துவிட்டு எம் பெருமானாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் பெருமை பொருந்திய சிவபுரத்தை அடைந்தான்.

மாயப் பசுவை வதைத்த படலம் முற்றிற்று.

30. மெய்க் காட்டிட்ட படலம்

1664. பாவமென வடிவெடுத்த படிற்றமணர் பழித்தழல் செய்து
ஏவவரு மறப்பசுவை யேறுயர்த்தோன் விடைநந்திக்
காவலனை விடுத்தழித்த கதையுரைத்தும் அட்டாலைச்
சேவகன்மெய்க் காட்டிட்டு விளையாடுந் திறமுரைப்பாம்.

1665. வெவ்வியமும் மதயானை விறற்குலபூ டணன்சமணர்
அவ்வியவஞ் சனைகடந்த வனந்தகுணச் செழியன்பாற்
செவ்வியசெங் கோல்வாங்கித் திகிரிதிசை செலவுருட்டி
வவ்வியவெங் கலிதுரந்து மண்காத்து வருகின்றான்.

1666. சவுந்தரசா மந்தனெனத் தானைகா வலனொருவன்
சிவந்தசடை முடியண்ணல் அடியவரே சிவமாகக்
கவர்ந்தொழுகி யருச்சிக்குங் கடப்பாட்டின்
நெறினின்றோன்
உவந்தரசற் கிருமைக்குந் துணையாகி யொழுகுநாள்.

30. மெய்க் காட்டிட்ட படலம்

1664. பாவம் ஓர்வடிவந்தாங்கியது போன்ற வஞ்சனை யான சமணர்கள் பழிவேள்வி செய்து உண்டாக்கியனுப்பிய மறப் பசுவை, இடபக் கொடியையுடைய சோம சுந்தரக் கடவுள், இடப உருவினையுடய திருநந்தியாகிய காவலனை ஏவி வதைத்தருளிய திருவிளையாடலைக் கூறினோம். அட்டாலைச் சேவகனாகிய அவ்விறைவன் மெய்க் காட்டிட்டு விளையாடின திருவிளையாடலைக் கூறுவோம்.

குலபூடணன் சேனைகளைப் பெருக்கக் கட்டளை இடல்

1665. கொடிய மும்மதங்களையுடைய, யானை யுடைய வெற்றி பொருந்திய 'குலபூடண வழுதி' சமணர் களது தீய வஞ்சனையைக் கடந்த அனந்த குண பாண்டி யனிடத்து வளையாத செங்கோலைப் பெற்று ஆணைச் சக்கரத்தை உலகம் முழுவதும் செல்லுமாறு செலுத்தி, உலகினைப் பற்றி நின்ற கொடிய கலியினை ஓட்டி அதனைப் பாது காத்து வருகின்றான்.

1666. அவனுக்குச் 'சவுந்ததர சாமந்தன்' என்ற சேனாபதி ஒருவன் உள்ளான். சிவந்த சடைமுடியையுடைய சிவனடியார்களையே அச்சிவபெருமானாக மனத்திற் கொண்டு வழிபட்டு ஒழுகும் கடமை நெறியில் நின்றவனாகிய அவன் அரசனுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் துணையாக நின்று ஒழுகுபவன். (சௌந்தர சாமந்தன்—சுந்தர சாமந்தன் என்ற பெயராலும் அழைக்கப் படுவன்)

1667. வல்வேடர்க் கதிபதியாய் வருசேதி ராயனெனும்
வில்வேடன் ஒருவனவன் விறல்வலியான் மேலிட்டுப்
பல்வேறு பரிமான்றேர்ப் பஞ்சவன்மேற் படையெடுத்துச்
செல்வேனேன் றுறவலித்தான் தென்னர்பிரான்
அஃதறிந்தான்.

1668. தன்னுதா ணிழனின்ற சாமந்தன் றனைப்பார்த்தெம்
பொன்னறைதாழ் திறந்துநிதி முகந்தளித்துப் புதிதாக
இன்னமுநீ சிலசேனை யெடுத்தெழுதிக்
கொள்கென்றான்
அன்னதுகேட் டீசனடிக் கன்புள்ளான் என்செய்வான்.

1669. தென்னவர்கோன் பணித்தபணி பின்றள்ளச்
சிந்தையிலன்பு
உன்னவர னருள்வந்து முன்னீர்ப்ப வொல்லைபோய்ப்
பொன்னறைதாழ் திறந்தறத்தா றீட்டியிடும்
பொற்குவையுட்
தன்னதுளத் தவாஅமையத் தக்கநிதி கைக்கவரா.

1670. எண்ணிறந்த களிப்பினொடுந் திருக்கோயில்
இடத்தணைந்து
கண்ணிறைந்த பொன்முளரிக் கயந்தலைநீர் படிந்துதன
துண்ணிறைந்த மெய்யன்பி னொளியுருவாய்
முளைத்தெழுந்த
பண்ணிறைந்த மறைப்பொருளைப் பணிந்திறைஞ்சி
யிதுவேண்டும்.

1667. வலிய வேடர்களுக்குத் தலைவனாயிருந்து வரு கின்ற சேதிராயன் என்னும் வில்லையுடைய வேடன் ஒருவன் விளங்கினான். அவன் பல வெற்றியின் வலியினால் மேம்பட்டு இறுமாப்புடன், 'பல்வேறு வகைப்பட்ட குதிரை களையும் தேர்களையுமுடைய பாண்டியன்மேல் பகைமை பூண்டு படையெடுத்துச் செல்வேன்' என்று உறுதியாகக் கருதினான். பாண்டியர் தலைவனாகிய குலபூடணன் அதனை அறிந்தான்.

1668. பாண்டியன் தன் படைத் தலைவனாகிய சாமந்தனை நோக்கி, "நீ நமது நீதி அறையின் தாழைத் திறந்து வேண்டும் பொருளை எடுத்துக் கொடுத்துப் புதிதாக இன்னும் சில சேனைகளைச் சேர்த்துப் பதிவு செய்து கொள்வாயாக'' என்றான். அதனைக் கேட்டுச் சிவபெருமான் திருவடிக்கு அன்பு பூண்டவனாகிய சுந்தர சாமந்தன்.

1669. பாண்டியன் இட்டபணி பின்னே இருந்து தள்ளவும், மனதில் அன்புடன் நினைத்தவுடன் சிவ பெருமானின் திருவருள் முன்னே வந்து இழுக்கவும் விரைந்து சென்று, கருவூலத்தின் தாழைத் திறந்து, அறநெறியில் தேடிவைத்த திரவியக் குவியலுள் தன் உள்ளத்தின் விருப்பத்திற்கு ஏற்பப் பொருளைக் கைக் கொகண்டான்.

1670. பின் அளவற்ற மகிழ்வோடும் திருக்கோயிலுள் சென்று தேன் நிறைந்த பொற்றாமரைக் குளத்தில் நீராடி னான். தன் உள்ளத்தில் நிறைந்த உண்மை அன்பினால் ஒளி வடிவாய்த் தோன்றியருளிய இசை நிறைந்த வேதப் பொருளாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி வேண்டத் தொடங்கினான்.

1671. பண்ணியனான் மறைவிரித்த பரமேட்டி யெங்கோமான்
எண்ணியகா ரியமுடிப்பாய் இவையுனக்கு முன்னடிக்கீழ்
அண்ணியமெய் யடியவர்க்கு மாதக்க வெனவிரந்தப்
புண்ணியமா நிதிமுழுது மவ்வழியே புலப்படுப்பான்.

1672. அண்டமுக டுரிஞ்சிநிமிர் கோபுரமும் ஆயிரக்கால்
மண்டபமுங் கண்டிகையும் வயிரமணிக் கோளகையுங்
குண்டலமுந் தண்டரளக் குடைநிரையுங் கொடிநிரையுங்
கண்டனன்முன் அவனருளாற் பிறப்பேழுங்
கரைகண்டோன்.

1673. வானாடர்க் கவியுணவின் வகைமுந்நூன் மன்றன்முதல்
நானாவாஞ் சிறுவேள்வி நான்மறையோர்க் கறுசுவையின்
ஆனாத பேருண்டி துறவடைந்தோர்க்கு அருத்துபலி
தானாதி பலவேறு தருமநனி தழைவித்தான்.

1674. எவரேனு முருத்திரசா தனங்கண்டால் எதிர்வணங்கி
அவரேநம் பிறப்பறுக்க வடிவெடுத்த வரனென்று
கவராத வன்புள்ளங் கசிந்தொழுக வருச்சித்துச்
சுவையாறி னமுதருத்தி யெஞ்சியவின் சுவைதெரிவான்.

அடியார்க்குப் பொருள் வழங்கல்

1671. "பண் நிறைந்த வேதங்களை விரித்துரைத் தருளிய மேலோனே! அடியார்கள் எண்ணிய கருமங்களை யெல்லாம் முடிக்கும் எம்பெருமானே! இப்பொருள்கள் யாவும் உனக்கும் உன் திருவடியில் விருப்பம் கொண்ட உன் அடியார்களுக்கும் ஆகக் கடவன" என்று வேண்டிக் கொண்டு அத்திரவியங்கள் முழுவதும் சிவ புண்ணிய வழியிலேயே செலவழிப்பானாயினான்.

1672. வானத்தின் உச்சியைத் தடவி உயர்ந்த கோபுரமும், ஆயிரங்கால் மண்டபமும், கண்டிகையும் வயிர மணியாற் செய்த தோளணியும் குண்டலங்களும், தண்ணிய முத்துக் குடை வரிசைகளும் கொடி வரிசைகளும் ஆகிய இவற்றை இறைவனின் திருவருளால், ஏழு பிறப்பென்னும் கடலின் கரையைக் கண்டவனாகிய சாமந்தன் செய்தமைத் தான்.

1673. தேவர்களுக்கு ஊட்டும் அவியுணவின் வகை களும் பூணூல் கலியாணம் முதலிய பலவகையான சிறு வேள்விகளும் நான்மறையோர்க்கு அறுசுவை நிறைந்த பேருண்டிகளும் துறவிகட்கு ஊட்டும் திருவமுதும், பல்வேறு தருமங்களும் பெருகச் செய்தான்.

1674. யாவராயினும் விபூதியும் உருத்திராட்சமும் தரித்தவர்களைக் கண்டால் எதிர் சென்று வணங்கி, "இவரே நம் பிறப்பைப் போக்கத் திருவுருவெடுத்த சிவபெருமான்" என்று குற்றமற்ற அன்பால் உள்ளம் நெக்குருக வழிபட்டு, அறுசுவையோடு கூடிய திருவமுதை உண்பித்து அவர் உண்டு எஞ்சியவற்றை உண்பான்.

1675. இன்றைக்கா யிரநாளைக் கிருமடங்கு வருநாட்கும்
அன்றைக்கன் றிருமடங்கா வரசனது பொருளெல்லாங்
கொன்றைச்செஞ் சடையார்க்கும் அடியார்க்குங்
கொடுப்பதனைத்
தென்றற்கோன் செவிமடுத் தார் சேனைக்கோ
னிதுசெய்வான்.

வேறு

1676. காவல னவையத்து எய்திக் காரியஞ் செய்வா ரோடு
மேவினன் பிறநாட் டுள்ள வீரர்க்கு வெறுக்கை
போக்கிச்
சேவகம் பதிய .வோலை செலவிடுத்து அழைப்பான்
போலப்
பாவகஞ் செய்து தீட்டிப் பட்டிமை யோலை யுய்ப்பான்.

1677. எழுதுக தெலுங்கர்க் கோலை யெழுதுக கலிங்கர்க்
கோலை
எழுதுக விராடர்க் கோலை யெழுதுக மராடர்க் கோலை
எழுதுக கொங்கர்க் கோலை யெழுதுக வங்கர்க்
கோலை
எழுதுக துருக்கர்க் கோலை யென்றுபொய் யோலை
விட்டான்.

1678. எங்குமிப் படியே யோலை செலவிடுத் திருப்ப வாறு
திங்களின் அளவு மந்தச் சேவகர் வரவு காணா
தங்கதிர் வேலோன் சேனைக் கரசனை யழைத்து
நாளை
வெங்கதிர் படுமுன் சேனை யாவையும் விளித்தி
யென்றான்.

1675. இவ்வாறு சுந்தர சாமந்தன், கொன்றைச்சடை யாருக்கும் அவருடைய அடியார்களுக்கும் இன்றைக்கு ஆயிரம் பொன்னும், நாளைக்கு இரண்டாயிரம் பொன்னும் அடுத்து வரும் நாட்களுக்கும் அன்றைக்கு அன்று இரு மடங்குமாக அரசனுடைய பொருள்கள் எல்லாவற்றையும் அள்ளி வழங்கினான். தென்றல் வீசும் பொதியமலைக்குத் தலைவனாகிய குலபூடணன் இதனைக் கேள்வியுற்றான். சேனாதிபதியாகிய சுந்தரசாமந்தன் இதனைச் செய் வானாயினான்.

பொய் ஓலை எழுதுதல்

1676. தன் மேல் அரசன் சந்தேகப்படாத வண்ணம் அரசவையினை அடைந்து, அரசகாரியம் பார்ப்பவர் களோடு கலந்து, பிறநாட்டு வீரர்களுக்கும் பொருளை அனுப்பி பாண்டியன் சேனையில் வந்து பதிவு செய்து கொள்ள ஓலை விடுத்து அழைப்பவன் போல பாவனை காட்டிப் பொய்யோலை எழுதிவிடுப்பானாயினான்.

1677. "தெலுங்கர்களுக்கு ஓலை எழுதுக! கலிங்கர் களுக்கு ஓலை எழுதுக! விராடர்களுக்கு ஓலை எழுதுக! மராடர்களுக்கு ஓலை எழுதுக! கொங்கர்களுக்கு ஓலை எழுதுக! வங்கர்களுக்கு ஓலை எழுதுக! துருக்கர்களுக்கு ஓலை எழுதுக என்று கூறிப் பொய்யோலை எழுதுவித்து அனுப்பினான்.

1978. எங்கும் இப்படியே பொய்யோலை அனுப்பி விட்டிருக்க, ஆறுமாதங்கள் வரையும் அந்த வீரர்களின் வரவைக் காணாமல், அழகிய ஒளிமிக்க வேற்படையேந்திய குலபூடண பாண்டியன், சேனைத் தலைவனாகிய சுந்தர சாமந்தனை அழைத்து "நாளைக்குச் சூரியன் மறையு முன்னே ஓலை விடுத்த படைவீரர்கள் அனைவரையும் அழைக்கக் கடவாய் என்றான்.

1679. என்றமன் னவனுக் கேற்கச் சாமந்தன் இசைந்து
வெள்ளி
மன்றவ னடிக்கீழ் வீழ்ந்து வள்ளலே யரச னீந்த
குன்றுறழ் நிதிய மெல்லாங் கொண்டெனைப்
பணிகொண் டாயே
வன்திறற் சேனையீட்டும் வண்ணம்யா தென்ன
நின்றான்.

1680. அடியவர் குறைவு தீர்த்தாண் டருள்வதே விரதம் பூண்ட
கொடியணி மாடக் கூடற் கோமகன் காமற் காய்ந்த
பொடியணி புராணப் புத்தேட் புண்ணியன் அருளி
னாலே
இடியதிர் விசும்பு கீறி எழுந்ததோர் தெய்வ வாக்கு.

1681. சூழ்ந்தெழு சேனை யோடுந் தோற்றுது நாளை நீயும்
வீழ்ந்தர சவையத் தெய்தி மேவுதி யென்ன இண்ணம்
போழ்ந்தெழு மாற்றங் கேட்டுப் பொருநரே றுவகை
வெள்ளத்
தாழ்ந்தனன் முந்நீர் வெள்ளத் தலர்கதி ரவனும்
ஆழ்ந்தான்.

1682. மீனவன் காண மேரு வில்லி தன் தமரை வன்கண்
மானவேல் மறவர் ஆக்கி வாம்பரி வீர னாகத்
தானுமோர் கூத்துக் கோலஞ் சமைந்துவந் தாட விட்ட
நீனிற வெழினி போலக் காரிருள் நிவந்த தெங்கும்.

சேனாதிபதிக்கு இறைவன் அசரீரியாக மொழிதல்

1679. அதற்கு ஏற்ப சுந்தரசாமந்தன் உடன்பட்டு, திருக் கோயிலை அடைந்து சோமசுந்தரக் கடவுளின் திருவடியின் கீழ் விழுந்து வணங்கி, "எம்பெருமானே! அரசன் அளித்த மலை போலும் பொருள்கள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு என்னை அடிமை கொண்டருளினையே! இனி மிக்க வலிமையுடைய சேனைகளைத் திரட்டும் வகையாது?" என்று குறையிரத்து வேண்டி நின்றான்.

1680. அப்போது அடியாரின் குறையினைத் தீர்த்து ஆண்டருள்வதையே விரதமாகக் கொண்டருளிய, கொடிகள் கட்டிய மாடங்கள் நிறைந்த கூடலம் பதிக்கு நாயகனாகிய, மன்மதனை எரித்த திருநீறு தரித்த முது தெய்வமும் அறவுருவனும் ஆகிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளாலே இடிமுழங்கும் வானைக் கிழித்து ஒரு தெய்வ வாக்கு எழுந்தது.

1681. "நாளைக்குச் சேனை வீரர்கள் சூழ்ந்து வர நாமும் வருவோம். நீயும் வீரர் வரவை விரும்பிய அரசனது அவையின் கண் சென்று இருப்பாயாக" என்று வானைப் பிறந்தெழுந்த வார்த்தையைக் கேட்டு வீரருள் ஆண் சிங்கம் போன்ற சுந்தர சாமந்தன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினான். விரிந்த கிரணமுடைய சூரியனும் கடலில் மறைந்தான்.

இராப் பொழுதை சேனாதிபதி கழித்தல்

1682. மேருவை வில்லாகக் கொண்ட சோமசுந்தரக் கடவுள் தன்னுடைய சிவகணங்களை அஞ்சாத மானமிக்க வேலேந்திய வீரர்களாகச் செய்து, தானும் ஒரு தாவும் குதிரை வீரனாகக் கோலம்பூண்டான். திருக்கூத்தாடுவதற்கு இடப்பட்ட நீல நிறத்தையுடைய எழினி போலக் கரிய இருள் எங்கும் வந்து பரவியது.

1683. புண்ணிய மனையிற் போகிப் புலர்வதெப் போழ்தென
றெண்ணி
அண்ணல்சா மந்தன் றுஞ்சான் அடிக்கடி யெழுந்து
வானத்
எண்ணிறை மீன நோக்கி நாழிகை எண்ணிக்
எண்ணிக்
கண்ணுத லெழுச்சி காண்பா னளந்தனன் கங்கு
லெல்லாம்.

1684. தெருட்டரு மறைக டேறாச் சிவபரஞ் சுடரோர் அன்பன்
பொருட்டொரு வடிவங் கொண்டு புரவிமேற் கொண்டு
போதும்
அருட்படை எழுச்சி காண்பான் போலஆர் கலியின்
மூழ்கி
இருட்டுகள் கழுவித் தூய இரவிவந் துதயஞ்
செய்தான்.

1685. பொருநரே றனையா னேர்ந்து போந்துநான் மாடக்
கூடற்
கருணைநா யகனைத் தாழ்ந்து கைதொழு திரந்து
வேண்டிப்
பரவிமீண் டொளிவெண் திங்கட் பன்மணிக் குடைக்கீழ்
ஏகிக்
குருமதி மருமான் கோயில் குறுகுவான் குறுகு
மெல்லை.

1686. கரைமதி யெயிற்றுச் சங்கு கன்னன்முன் னான
வென்றிப்
பிரமத கணமுங் குண்டப் பெருவயிற் றொருவன் ஆதி
வரைபுரை குறுந்தாட் பூத மறவருங் குழுமி வீக்கு
குரைகழல் வலிய நோன்றாள் கோளுடை வயவ ராகி.

1683. பெருமை மிக்க சுந்தர சாமந்தன் அறம் நிலை பெற்ற தன் வீட்டிற்குச் சென்று, "விடிவது எப்போது?" என்று கருதித் தூங்காமல் அடிக்கடி எழுந்தெழுந்து வானின் கண் உள்ள விண்மீன்களை நோக்கி, நாழிகையை எண்ணி எண்ணிச் சோமசுந்தரக் கடவுளின் வருகையைக காணுதற்கு இரவு முழுவதையும் அளந்தான்.

இறைவனை வணங்கி அரச சபை அடைதல்

1684. அறிவை விளக்குகின்ற மறைகளாலும் உணர முடியாத சிவபரஞ்சோதி ஒரு அன்பனின் பொருட்டுத் திருவுருவம் கொண்டு குதிரை மேல் எழுந்தருளி வருகின்ற அருட்படை எழுச்சியைக் காணவந்தவன்போல, கடலில் மூழ்கி இருளாகிய அழுக்கினைப் போக்கித் தூயவன் ஆகிச் சூரியன் வந்து தோன்றினான்.

1685. வீரருள் ஆண்சிங்கம் போன்ற சுந்தரசாமந்தன் எழுந்து சென்று நான்மாடக் கூடலில் வீற்றிருக்கும் அருட் கோமானாகிய சோமசுந்தரக் கடவுளைப் பணிந்து கைகூப்பி குறையிரந்து வேண்டித் துதித்து, ஒளி மிக்க வெண்மையான சந்திரனை யொத்த முத்துக் குடையின் கீழ் சென்று சந்திரன் மரபில் தோன்றிய பாண்டியனுடைய அரச சபையை அடைந்தான். அங்ஙனம் அடைந்த போது.

இறைவர் சேனைத் தலைவர் வடிவம் கொள்ளல்

1686. பிறைச் சந்திரன் போன்ற பற்களையுடைய சங்கு கன்னன் முதலிய சிவ கணங்களும், ஆழ்ந்த பெரு வயிற்றுக் குண்டோதரன் முதலிய மலையொத்த தாளை யுடைய பூதவீரர்களுள் ஒலிக்கும் வீரக் கழலணிந்த வலிய பெரிய தாள்களையும் வலிமையையும் உடைய சேனை வீரர் வடிவம் கொண்டனர்.

1687. நெட்டிலை வடிவாள் குந்தம் தோமர நேமி
நெய்த்தோர்
ஒட்டிய கணிச்சி சாப முடம்பிடி முதலா எண்ணப்
பட்டவெம் படைமூ வாறும் பரித்தசெங் கையிற் காலிற்
கட்டிய கழலர் காலிற் கடியராய்ப் புறம்பு காப்ப.

1688. வார்கெழு கழற்கா னந்தி மாகாளன் பிருங்கி என்றித்
தார்கெழு நிகும்பன் கும்போ தரன்முதற் றலைவர்
யாரும்
போர்கெழு கவசந் தொட்டுப் புண்டர நுதலில் தீட்டிக்
கூர்கெழு வடிவாள் ஏந்திக் குதிரைச்சே வகராய்ச் சூழ.

1689. கற்றைச்சா மரைகள் பிச்சங் கவிகைபூங் கொடிக்கா
டெங்கும்
துற்றக்கார் ஒலியு நாணத் தூரிய முழுது மேங்கக்
கொற்றப்போர் விடையைத் தானே குரங்குளைப்
பரியா மேற்கொண்டு
ஒற்றைச்சே வகராய் மாறி ஆடிய வொருவர் வந்தார்.

1690. பல்லிய மொலிக்கு மார்ப்பும் பாய்பரி கலிக்கு மார்ப்புஞ்
சொல்லொலி மழுங்க மள்ளர் தெழித்திடு மார்ப்பும்
ஒன்றிக்
கல்லெனுஞ் சும்மைத் தாகிக் கலந்தெழு சேனை
மேனாள்
மல்லன்மா நகர்மேற் சீறி வருகடல் போன்ற தன்றே.

1687. தகட்டு வடிவம் அமைந்த வடித்த வாளும், குந்தமும் இரும்புலக்கையும், திகிரியும், குருதி பொருந்திய மழுவும், வில்லும், வேலும், முதலாக எண்ணப்பட்ட பதினெட்டு வகைப் படைக் கலங்களையும் ஏந்தி, சிவந்த கையுடையவராயும், காலில் வீரக்கழல் உடையவராயும் காற்றினும் விரைந்து செல்லக் கூடியவராயும் உள்ள அவ் வீரர் புறம் சூழ்ந்தனர்.

1688. கால்களில் வீரக்கழல் அணிந்த நந்தியும், மாகாளனும், பிருங்கியும், வெற்றி மாலை பொருந்திய நிகும்பனும், கும்போதரனும் முதலிய சிவக்கணத் தலைவர் அனைவரும் போரிற்குரிய கவசம் பூண்டு, நெற்றியில் திருநீறு தரித்துக் கூர்மையான வாளை ஏந்திக் குதிரை வீரர்களாய்ச் சூழ்ந்து வந்தனர்.

1689. சாமரைகளும், பீலிகளும், குடைகளும், துவசமும் நெருங்கி, பலவித வாத்தியங்கள் இடி ஒலிபோல் ஒலிக்க, வெற்றி மிக்க போர்க்குரிய இடபவூர்தியையே பிடரி மயிரையுடைய குதிரையாக ஆக்கி ஒற்றைச் சேவகராய் கால்மாறி ஆடி அருளிய பெருமானார் எழுந்தருளினார்.

1690. பல வாத்தியங்கள் ஒலிக்கின்ற ஒலியும், குதிரை கள் கனைக்கின்ற ஒலியும், மேகத்தின் இடி ஒலியும் மழுங்கும்படி வீரர்கள் அதட்டும் ஒலியும் கலந்து, கல்லெனும் ஓசையுடன் வரும் சேனையானது முன்னாளில் மதுரை நகரின்மேல் கோபித்து எழுந்துவந்த கடலினைப் போல் விளங்கியது.

1691. சேனையின் வரவு நோக்கித் திருமகன் றிருமுன் ஏகுந்
தானையந் தலைவன் தென்னன் தாணிழல் குறுகிக் கூற
மீனவன் உவகை பூத்து வெயின்மணிக் கடையிற் போந்தங்
கானமண் டபத்திற் செம்பொ னரியணை மீது வைகி.

1692. தெவ்வடு மகிழ்ச்சி பொங்கச் சேனையின் செல்வம் நோக்கி
எவ்வெவ தேயத் துள்ளார் இவரென எதிரே நின்று
கௌவையின் மனச்சா மந்தன் கையிற்பொற் பிரம்பு நீட்டி
அவ்வவர் தொகுதி யெல்லாம் அணியணி நிறுவிக் கூறும்.

வேறு

1693. கொங்கரிவ ரையகுரு நாடரிவ ரைய
கங்கரிவ ரையகரு நாடரிவர் ஐய
அங்கரிவ ரையவிவ ராரியர்க ளைய
வங்கரிவ ரையவிவர் மாளவர்க ளைய.

1694. குலிங்கரிவ ரையவிவர் கொங்கணர்க ளைய
தெலுங்கரிவ ரையவிவர் சிங்களர்க ளைய
கலிங்கரிவ ரையகவு டத்தரிவ ரைய
உலங்கெழு புயத்திவர்க ளொட்டியர்க ளைய.

1695. கொல்லரிவ ரையவிவர் கூர்ச்சரர்கள் ஐய
பல்லரிவ ரையவிவர் பப்பரர்க ளைய
வில்லரிவ ரையவிவர் விதேகரிவ ரைய
கல்லொலி கழற்புனை கடாரரிவ ரைய.

பாண்டியன் சேனை வீரர்களைக் கண்டு மகிழ்தல்

1691. சேனையின் வருகையைக் கண்ட சேனாதிபதியாகிய சுந்தர சாமந்தன் குலபூடண பாண்டியனின் முன் சென்று அவன்தாள் வணங்கி விண்ணப்பம் செய்தான். உடனே அப்பாண்டியன் மனமகிழ்ந்து, ஒளிமிக்க மணிகள் பொருந்திய கடைவாயிலில் வந்து, அங்கு இருந்த மண்டபத்தின்கண் செம்பொன்னாலாகிய சிங்காதனத்தில் மேல் அமர்ந்தான்.

1692. பகைவனாகிய சேதிராயனைக் கொல்லும் மகிழ்ச்சி மிக, சேனையின் பெருக்கினைப் பார்த்து, "இவர்கள் எந்தெந்தத் தேசத்தில் உள்ளவர்கள்?" என்று வினவினான். துன்பமில்லாத மனத்தினையுடைய சாமந்தன் எதிரில் நின்று, கையில் உள்ள பொற் பிரம்பினை நீட்டி அவ்வத்தேசத்தாரையெல்லாம் அணி அணியாக நிறுத்திக் கூறத் தொடங்கினான்.

1693. "ஐயனே! இவர் கோங்க நாட்டினர்; இவர் குரு நாட்டினர். இவர் கங்க நாட்டினர். இவர் கருநட நாட்டினர். இவர் அங்க நாட்டினர். இவர் ஆரிய நாட்டினர். இவர் வங்க நாட்டினர். இவர் மாளவ நாட்டினர்.

1694. "இவர் குலிங்க நாட்டினர். இவர் கொங்கண நாட்டினர். இவர் தெலுங்கு நாட்டினர். இவர் சிங்கள நாட்டினர். இவர் கலிங்க நாட்டினர். இவர் கவுட நாட்டினர். திரண்ட கல் போலும் தோள்களையுடைய இவர் ஒட்டிய நாட்டினர்.

1695. "இவர் கொல்ல நாட்டினர். இவர் கூர்ச்சர நாட்டினர். இவர் பல்லவ நாட்டினர். இவர் பப்பரர் கல்லெனும் ஓலியையுடைய வீரக் கழலணிந்த கடார நாட்டினர். இவர் வில்லர்கள். இவர், விதேக நாட்டினர்.

1696. கேகயர்க ளாலிவர்கள் கேழ்கிளர் மணிப்பூண்
மாகதர்க ளாலிவர் மராடரிவர் காஞ்சி
நாகரிக ராலிவர்கள் நம்முடைய நாட்டோர்
ஆகுமிவர் தாமெனமெய்க் காட்டியறி வித்தான்.

1697. இத்தகைய சேட்புல னுளாரையிவண் உய்த்த
வித்தகமை யென்னென வினாவியருள் செய்யேல்
அத்தநி னரும்பொருள் அனைத்தும்வரை யாதே
உய்த்தலின் அடைந்தனர்க ளாலென வுரைத்தான்.

வேறு

1698. அந்நெடுஞ் சேனை தன்னுட் சேணிடை யடல்மா
ஹூர்ந்து
பின்னுற நிற்கு மொற்றைச் சேவகப் பிரானை நோக்கி
மன்னவ னவர்யார் என்னச் சாமந்தன் வணங்கி ஐய
இன்னவர் சேனை வெள்ளத் தியாரையென் றறிவ
தென்றான்.

1699. அவரையிங் கழைத்தி யென்றான் அரசன்றன்
வழிச்செல் வார்போற்
கவயமிட் டவரும் போந்தார் காவலன் களிகூர்ந்
தம்பொன்
நவமணிக் கலன்பொன் னாடை நல்கினான் உள்ளத்
தன்பு
தவறிலான் பொருட்டு வாங்கித் தரித்துத்தன் தமர்க்கு
மீந்தார்.

1696. இவர் கேகய நாட்டினர். ஒளி விளங்கும் மணிகள் பதித்த அணிகளை அணிந்த இவர்கள் மகத நாட்டினர். இவர் மராட நாட்டினர். இவர் காஞ்சி நாட்டிலுள்ள நாகரிகமுடையவர். இவர் நமது நாட்டினர் ஆவர்" என்று அவரவர் உருவினைக் காட்டித் தெரிவித்தான்.

1697. இத்துணைச் சேய்மை நாடுகளில் உள்ள வீரர்களை இங்கு வருவித்த சாமர்த்தியம் யாது என்று வினவியருளாது, உமது அரிய பொருளனைத்தும் வரையறையின்றிச் செலவு செய்தமையால் இவர்கள் யாவரும் வந்தார்கள்" என்று கூறினான்.

பாண்டியன் ஒற்றைச் சேவகரை நோக்கி இவர் யார்? எனல்

1698. பாண்டிய மன்னன், அப்பெரிய சேனையினுள் தூரத்திலே வலிய குதிரையைச் செலுத்திப் பின்னாக நிற்கின்ற ஒற்றைச் சேவராக, நிற்கின்ற ஒப்பில்லாத வீரனாகிய இறைவனை நோக்கி, "அவர் யார்?" என்றான். அப்போது சாமந்தன் வணங்கி, "ஐயனே! இந்தச் சேனைப் பெருக்கத்துள் இவரை யாவர் என்று அறிந்து கூறுவேன்?" என்றான்.

1699. பாண்டியன், "அவரை இங்கு அழைப்பாயாக" என்றான். அரசனது வழிபட்டுச் செல்பவனைப் போல் அவ்வொற்றைச் சேவகரும் அப்பாண்டியன் எதிரே வந்தார். பாண்டியன் மகிழ்ந்து அழகிய பொன்னாலாகிய நவமணி இழைத்த அணிகலன்களையும் பொன்னாடையையும் கொடுத்தான். ஒற்றைச் சேவகராகிய இறைவர் தம் அன்பனாகிய சுந்தர சாமந்தன் பொருட்டு அவற்றை வாங்கி அணிந்து கொண்டு தம் பரிசனங்கட்குக் கொடுத்தருளினார்.

1700. ஆய்ந்தவெம் பரிமாத் தூண்டி ஐங்கதி நடத்திக் காட்டி
ஏய்ந்ததஞ் சேனை வெள்ளத் தெய்தினார் எய்து மெல்லை
வேய்ந்ததார்ச் சேதி ராயன் வேட்டைபோய்ப் புலிகோட் பட்டு
மாய்ந்தன னென்றோ ரொற்றன் வேந்தன்முன் வந்து சொன்னான்.

1701. முரசதி ரனிக நோக்கி முகமலர்ந் துவகை பூத்த
அரசனும் அனிக வேந்தற் களவில்சீர்த் தலைமை யோடும்
வரிசைகள் மிதப்ப நல்கி வந்துமெய்க் காட்டுத் தந்து
பரசிய பதாதி தத்தம் பதிபுகச் செலுத்து கென்றான்.

1702. அறைந்தவார் கழற்காற் சேனை காவலன் அனிகந் தத்தஞ்
சிறந்தசே னாட்டிற் செல்லச் செலுத்துவான் போன்று நிற்ப
நிறைந்தநான் மாடக் கூடல் நிருத்தனந் நிலைநின் றாங்கே
மறைந்தனன் மனித்த வேடங் காட்டிய மறவ ரோடும்.

1703. கண்டனன் பொருநை நாடன் வியந்தனன் கருத்தா சங்கை
கொண்டனன் குறித்து நோக்கி யீதுநங் கூடன் மேய
அண்டர்தம் பெருமான் செய்த ஆடலென் றெண்ணிக் கண்ணீர்
விண்டனன் புளகம் போர்ப்ப மெய்யன்பு வடிவம் ஆனான்.

1700. ஆராய்ந்து கொண்ட வேகமுடைய தம்முடைய குதிரையைச் செலுத்தி, ஐந்து கதிகளிலும் நடத்திக் காண்பித்துத் தமது சேனை வெள்ளத்தினுள்ளே புகுந்தார். அவ்வாறு அடைந்த பொழுது ஒரு ஒற்றன் ஓடிவந்து பாண்டியனை வணங்கி, சேதிராயன் என்பான் வேட்டைக்குச் சென்று புலியினால் கொல்லப்பட்டு இறந்து விட்டான் என்று கூறினான்.

1701. முரசு முழங்கும் சேனையைப் பார்த்து முகமலர்ந்து மகிழ்ச்சியுற்ற வேந்தனும் சேனைத் தலைவ னாகிய சுந்தர சாமந்தனுக்கு அளவில்லாத சிறப்புடைய தலைமையோடு வரிசைகளையும் நிரம்பக் கொடுத்து, "வந்து மெய்க்காட்டுக் கொடுத்துத் துதிக்கப் பெற்ற இந்த சேனைகளைத் தங்கள் தங்கள் நாட்டிற்குச் செல்லுமாறு விடை கொடுத்தனுப்புக" என்றார்.

சேனைவீரர் யாவரும் மறைதல்

1702. ஒலிக்கின்ற வீரக் கழலணிந்த கால்களையுடைய படைத் தலைவனாகிய சுந்தரசாமந்தன் சேனைகளைத் தத்தமக்குரிய சேய்மையில் உள்ள சிறந்த நாடுகளில் செல்லுமாறு செலுத்துவான் போல் பாவனை செய்து நிற்க, பெருமை மிக்க மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் அங்கு நின்றபடியே மனிதவேடம் காட்டிய வீரராகிய சிவகணங்களோடு மறைந்தருளினார்.

1703. பொருநை ஆறு சூழ்ந்த நாட்டினையுடைய குலபூடண பாண்டியன் இதனைக் கண்டு வியந்து கருத்தில் சந்தேகம் கொண்டு உய்த்து உணர்ந்து, 'இது நம்முடையை பெருமானாகிய கூடலில் வீற்றிருக்கும் தேவதேவனாகிய சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய திருவிளையாடலே" என்று துணிந்து கண்ணில் ஆனந்தக் கண்ணீர் சொரிய உடல் முழுவதும் புளகம் மூட அன்பே வடிவமாயினான்.

1704. தனக்குயிர்த் துணையா நின்ற சாமந்தன் றன்னை
நோக்கி
உனக்கெளி வந்தார் கூட லுடையநா யகரே யென்றால்
எனக்கவர் ஆவார் நீயே என்றவற் கியாவு நல்கி
மனக்கவல் பின்றி வாழ்ந்தான் மதிவழி வந்த மைந்தன்.

மெய்க் காட்டிட்ட படலம் முற்றிற்று.

31. உலவாக்கிழி அருளிய படலம்

1705. அடியார் பொருட்டுப் பரிவயவர் ஆகிச் செழியன்
காணவிடைக்
கொடியார் வந்து மெய்க்காட்டுக் கொடுத்த வண்ண
மெடுத்துரைத்தும்
கடியார் கொன்றை முடியாரக் கன்னி நாடன்
தனக்கிசைந்த
படியா லுலவாக் கிழிகொடுத்த படியை அறிந்த
படிபகர்வாம்.

1706. வள்ளல் குலபூ டணன்றிங்கள் வாரந் தொடுத்துச்
சிவதருமம்
உள்ள வெல்லாம் வழாதுநோற் றொழுகும் வலியால்
தன்னாட்டில்
எள்ளல் இல்லா வேதியரை யிகழ்ந்தா னதனான்
மழைமறுத்து
வெள்ளம் அருக வளங்குன்றி விளைவஃ கியது
நாடெல்லாம்.

1704. தனக்கு உயிர்த்துணையாக நின்ற சுந்தர சாமந்தனைப் பார்த்து, "உமக்கு மதுரையில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளே எளிதில் வந்து அருளினார் என்றால் எனக்கு அக்கடவுள் நீயே" என்று கூறி அவனுக்குச் சில சிறப்புக்களைச் செய்தான். பின்னர் சந்திரன் மரபில் வந்த குலபூடண பாண்டியன் சிறிதும் மனக் கவலை இல்லாமல் வாழ்ந்து வருவானாயினான்.

மெய்க் காட்டிட்ட படலம் முற்றிற்று

31. உலவாக்கிழி அருளிய படலம்

1705. இடபக் கொடியையுடைய சோமசுந்தரக் கடவுள் தம் அடியாராகிய சாமந்தர் பொருட்டுக் குதிரை வீரராகிப் பாண்டியன் காணுமாறு வந்து மெய்க்காட்டுக் கொடுத்தருளிய திருவிளையாடலைக் கூறியருளினோம். இனி மணம் நிறைந்த கொன்றை வேணியராகிய அவரே அப்பாண்டிய நாடன் தனக்கு மனமொத்த அன்பனான படியினால் உலவாக்கிழி கொடுத்தருளிய திருவிளை யாடலை நாம் அறிந்தவாறு கூறுவோம்.

பாண்டிய நாட்டில் வறுமை

1706. சிறந்த வள்ளலாகிய குலபூடண பாண்டியன் சோமவாரம் முதலாக உள்ள சிவபுண்ணியங்கள் அனைத்தையும் வழுவாமல் அனுட்டித்துக் கொண்டு வந்தான். தவறாமல் நோற்று நடக்கும் அச்செருக்கினால் தனது நாட்டில் உள்ள சிறந்த மறையோரை அவமதித்தான். அதனால் மழை பெய்யாது ஒழிந்தது. மழையின்மையால் நாட்டில் விளைவு குன்றி வளம் குறைந்தது.

1707. அறவோ ரெல்லா நிரப்பெய்தி ஆகங் கிடந்த நூலன்றி
மறைநூல் இழந்து முனிவேள்வி வானோர் வேள்வி
தென்புலத்தின்
உறைவோர் வேள்வி யிழந்திழிந்த தொழில்செய் தாற்றா
துயிர்வளர்ப்பான்
புறநா டணைந்தார் பசியாலே புழுங்கி யொழிந்த
குடியெல்லாம்.

1708. எந்நா டணைவோம் எனவிரங்க விரங்கி மதிக்கோன்
மதிநாளிற்
பொன்னாண் முளரித் தடங்குடைந்து சித்திக்
களிற்றைப் பூசித்துத்
தன்னா தரவாற் கயற்கண்ணி தலைவன் றன்னை
யருச்சித்து
முன்னா வீழ்ந்து கரமுகிழ்த்துப் பழிச்சி மகிழ்ந்து
மொழிகின்றான்.

1709. அத்த வுலகில் உயிர்க்குயிர்நீ யல்லை யோவவ்
வுயிர்பசியால்
எய்த்த வருத்த மடியேனை வருத்து மாறென் யானீட்டி
வைத்த நிதியந் தருமத்தின் வழியே சென்ற
தினியடிகள்
சித்த மலர்ந்தென் னிடும்பைவினை தீர வருட்கண்
செய்கவென.

1710. கோளா டரவ மரைக்க சைத்த கூடற்பெருமான்
குறையிரக்கும்
ஆளா மரசன் தவறுசிறி தகங்கொண் டதனைத்
திருச்செவியிற்
கேளார் போல வாளாதே யிருப்ப மனையிற்
கிடைத்தமலன்
தாளா தரவு பெறநினைந்து தரையிற் கிடந்து
துயில்கின்றான்.

1707. அந்தணர் எல்லாம் வறுமையில் வாடினர். மார்பிற் கிடந்த பூணூலன்றி வேதம் ஓதுதலை இழந்தனர். முனிவர் வேள்வியும் தேவர் வேள்வியும் பிதிரர் வேள்வியு மாகிய இவற்றைக் கைவிட்டு வறுமைத் துன்பம் பொறுக்காது இழிந்த தொழிலைச் செய்தேனும் உயிரை ஓம்புதற் பொருட்டு வேற்று நாடுகளுக்குச் சென்றனர். அவரொழிந்த குடிகளெல்லாம் பசியினாலே மனம் புழுங்கி,

பாண்டியன் இறைவனிடம் முறையிடல்

1708. "எந்நாட்டிற்குச் செல்வோம்?" என்று வருந்தினர். திங்கள் மரபினனாகிய குலபூடணன் மனம் வருந்தினான். சோமவாரத்தன்று அன்றலர்ந்த மலர்களை யுடைய பொற்றாமரை தீர்த்தத்தில் நீராடி சித்தி விநாயகரை வணங்கிக் கொண்டு தனது அன்பினால் அங்கயற் கண்ணியோடு அமர்ந்தருளிய சோமசுந்தரக் கடவுள் திருமுன் சென்று அர்ச்சித்து வீழ்ந்து வணங்கி எழுந்து கை குவித்து நின்றான்.

1709. "ஐயனே! உலகின் கண் உள்ள உயிர்களுக் கெல்லாம் உயிராய் உள்ளவனே! அவ்வுயிர்களுக்கெல்லாம் பசியால் வருந்தும் வருத்தம் தேவரீரைச் சாராது அடியேனைச் சார்ந்து வருத்தக் காரணம் யாது? அடியேன் தேடிவைத்த பொருள்களெல்லாம் சிவ புண்ணிய நெறியிலே செலவாயின. இனி, நீர் திருவுள்ளம் மலர்ந்து அடியேனுடைய துன்பம் நீங்குமாறு திருவருள் நோக்கம் செய்தருள்க" என்று குறையிரந்தான்.

1710. கொல்லும் பாம்பினை அரையிற் கட்டி அருளிய சோமசுந்தரக் கடவுள் குறையிரந்து வேண்டி நின்ற அடியானாகிய அரசனது பிழையினைச் சிறிது திருவுள்ளத்திற் கொண்டு அவன் மொழியைத் தமது திருச் செவியிற் கேளாதவர் போலச் சும்மா இருந்தார். மன்னன் தனது மாளிகையிற் சென்று இறைவனது திருவடியை அன்பு மிகச் சிந்தித்துத் தரையிற் படுத்து உறங்குவானாயினான்.

1711. அங்கண் வெள்ளி யம்பலத்துள் ஆடு மடிக
ளவன்கனவிற்
சங்கக் குழையும் வெண்ணீறுஞ் சரிகோ வணமுந்
தயங்கவுரன்
சிங்க நாதங் கிடந்தசையச் சித்த வடிவா யெழுந்தருளி
வெங்கண் யானைத் தென்னவர்கோன் முன்னின்
றிதனை விளம்புவார்.

1712. ஏடா ரலங்கல் வரைமார்ப எம்பா லென்றும்
அன்புடைமை
வாடா விரத விழுச்செல்வ முடையாய் வைய
மறங்கடிந்து
கோடா தளிக்குஞ் செங்கோன்மை யுடையா யுனக்கோர்
குறையுளதுன்
வீடா வளஞ்சேர் நாட்டிந்நாள் வேள்விச் செல்வம்
அருகியதால்.

1713. மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையாம்
மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமாம்
மறையே நமது கோவணமா மறையே நமது விழியாகும்
மறையே நமது மொழியாகு மறையே நமது வடிவாகும்.

1714. வேதந் தானே நமதாணைச் சத்தி வடிவாய்
விதிவிலக்காய்ப்
போதங் கொளுத்தி நிலைநிறுத்திப் போகங் கொடுத்துப்
பல்லுயிர்க்கும்
பேதஞ் செய்யும் பிணியவிழ்த்தெம் பிரியா வீடு
தருவதுதேன்
நாதஞ் செய்யுந் தார்வேந்தே நமது செங்கோல்
அதுவாகும்.

வழுதி கனவில் இறைவன் தோன்றுதல்

1711. அப்பொழுது வெள்ளியம்பலத்துள் ஆடியருளும் சோமசுந்தரக் கடவுள் பாண்டியனின் கனவில், சங்கக் குண்டலமும், வெள்ளிய திருநீறும், சரிந்தகோவணவுடையும் விளங்க, சிங்க நாதமென்னும் ஒரு வாச்சியம் மார்பிலே கிடந்து அசைய சித்தமூர்த்தியாக எழுந்தருளி வந்து குலபூடணனை நோக்கி, முன்னே நின்று இதனைக் கூறியருளினார்.

1712. "இதழ் நிறைந்த மலர் மாலையணிந்த மலை போலும் மார்பினையுடைய பாண்டியனே! நம்மிடத்து நீங்காத அன்பும் கெடாத விரதமும் ஆகிய சிறந்த செல்வத்தையும் உடையவனே! உலகில் தீமையைப் போக்கிக் கெடுதலின்றிப் புரக்கும் செங்கோலையுடையவனே! நின்பால் ஒருகுறை உள்ளது. நீ மறையவர்களைப் போற்ற மறுத்தாய். அதனால் அழியாத வளமை மிக்க உன் நாட்டிலே இப்போது வேள்வியாகிய செல்வம் குறைந்தது.

1713. வேதமே நமது ஆசனம். வேதமே நமது பாதுகையாகும். வேதமே நமது ஊர்தி. வேதமே நமது காற்சிலம்பு. வேதமே நமது கோவணம். வேதமே நமது கண்ணாகும். வேதமே நமது திருவாக்கு. வேதமே நமது திருவுருவமாகும்.

1714. வேதமே நமது ஆணையாகிய சக்தி வடிவாகியும் விதிவிலக்காகியும், அறிவைக் கொளுத்தி நன்னெறியில் நிறுத்திப் போகம் அளித்துப்பின், திரிபினை விளைக்கும் ஆணவ மலக் கட்டினை அவிழ்த்து உயிர்களுக்கெல்லாம் எமது பிரியாத வீடு பேற்றினை அருளுவதாகும். வண்டுகள் ஒலிக்கும் மாலையை அணிந்த பாண்டிய மன்னனே! அவ் வேதமே நம் செங்கோலாகும்.

1715. அந்த மறைக டமக்குறுதி யாவார் அந்நூல்
வழிகலிநோய்
சிந்த மகத்தீ வளர்த்தெம்பால் சிந்தை செலுத்து
மந்தணரால்
இந்த மறையோர் வேள்விமழைக் கேது வாகு
மிவர்தம்மை
மைந்த இகழ்ந்து கைவிட்டா யதனான் மாரி
மறுத்தன்றால்.

1716. மும்மைப் புவனங் களுமுய்ய முத்தீ வேட்கும்
இவர்தம்மை
நம்மைப் போலக் கண்டொழுகி நாளு நானா
வறம்பெருக்கிச்
செம்மைத் தருமக் கோலோச்சித் திகிரி யுருட்டி
வாழ்தியென
உம்மைப் பயன்போ லெளிவந்தா ருலவாக் கிழியொன்
றுதவுவார்.

1717. இந்தக் கிழியில் எத்துணைப்பொன் னெடுத்து வழங்குந்
தொறுநாங்கள்
தந்த வளவிற் குறையாத தன்மைத் தாகு மிதுகொண்டு
வந்த இலம்பா டகற்றென்று கொடுத்து வேந்தன்
மனக்கவலை
சிந்தத் திருநீ றதுசாத்தி மறைந்தா ரையர் திருவுருவம்.

1718. கண்ட கனவு நனவாகத் தொழுதான் எழுந்து
கௌரியர்கோன்
அண்டர் பெருமான் றிருவடிபோ லம்பொற் கிழியை
முடித்தலைமேற்
கொண்டு மகிழ்ச்சி தலைசிறப்ப நின்றோர் முகூர்த்தங்
கூத்தாடித்
தண்டா வமைச்சர் படைத்தலைவர் தமக்குங் காட்டி
யறிவித்தான்.

1715. அந்த வேதங்களுக்கு உறுதியாவார் வறுமைத் துன்பம் நீங்க வேள்வித் தீயினை வளர்த்து எம்மிடத்துச் சிந்தையைச் செலுத்துகின்றவர் அந்தணர் ஆவார். இவ்வந்தணர் வேட்கும் வேள்வியே மழைக்குக் காரணமாகும். மைந்தனே! நீ இவர்களை கைவிட்டனை. அதனால் மழை பெய்யா தொழிந்தது.

1716. மூன்று உலகங்களும் உய்யும் பொருட்டு முத்தீயை வளர்க்கும் இவ்வந்தணர்களை நம்மைப் போலவே கருதி ஒழுகி எப்பொழுதும் பல வளங்களைப் பெருக்கி அற வடிவாகிய செங்கோலைச் செலுத்தி ஆணைச் சக்கரத்தை நடத்தி வாழ்வாயாக" என்றார். முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயன்போல் எளிவந்த அவ்விறைவர் உலவாக்கிழி ஒன்று தந்தருளினார்.

1717. "இந்த உலவாக்கிழியில் இருந்து எவ்வளவு பொன்னை எடுத்துச் செலவழித்தாலும் அது நாம் கொடுத்த அளவினின்றும் சிறிதும் குறையாது. இதனை வைத்துக் கொண்டு உனது நாட்டில் ஏற்பட்ட வறுமையைப் போக்குவாயாக" என்று கூறிக் கொடுத்தருளினார். பின்னர் மன்னன் மனக்கவலை கெட நெற்றியில் திருநீறு சாத்தி மறைந்தருளினார்.

பாண்டியன் உலவாக்கிழி பெற்று மகிழ்தல்

1718. குலபூடண பாண்டியன் தான் கண்ட கனவு நனவாக எழுந்து வணங்கி, தேவ தேவனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவடியைப் போல அழகிய பொன் முடிப்பினை தன் முடியணிந்த தலையின்மேல் கொண்டு, மகிழ்வு மேலோங்க ஒரு முகூர்த்த நேரம் வரை ஆனந்தக் கூத்தாடினான். பிறகு அமைச்சர்களுக்கும் சேனைத் தலைவர்களுக்கும் அதனைக் காண்பித்து நடந்த செய்தியைக் கூறினான்.

1719. செங்க ணரிமான் பிடர்சுமந்த தெய்வ மணிப்பூந்
தவிசேற்றிச்
சங்க முழங்க மறைமுழங்கச் சாந்தந் திமிர்ந்து
தாதொழுகத்
தொங்கல் அணிந்து தசாங்கவிரைத் தூப நறுநெய்ச்
சுடர்வளைத்துக்
கங்கை மிலைந்த கடவுளெனக் கருதிப் பூசை
வினைமுடித்தான்.

1720. அடுத்து வணங்கி வலஞ்செய்திட் டம்பொற் கிழியைப்
பொதிநீக்கி
எடுத்து முத்தீ வினஞர்க்கும் யாகங் களுக்கும்
யாவர்க்கும்
மடுத்து நாளும் வரையாது வழங்க வழங்க
அடியார்க்குக்
கொடுக்கக் குறையா வீட்டின்ப மாயிற் றையர்
கொடுத்தகிழி.

1721. ஆய பொதியில் விளைபொன்னா லகும்பு செய்து
விசும்பிழிந்த
கோயில் அதனை யகம்புறமுங் குயின்று ஞானக்
கொழுந்தனைய
தாயி லறுகாற் பீடிகைவான் றடவு கொடிய நெடியபெரு
வாயில் பிறவு மழகெறிப்ப வேய்ந்தான் மறையின்
வரம்பறிந்தான்.

1722. முந்திக் குறையா நிதிக்கடலை முகந்து முகந்து
நாடோறுஞ்
சிந்திக் குலபூ டணக்கொண்டல் தெய்வ தருமப்
பயிர்வளர்ப்பப்
பந்தித் திரைமுந் நீர்மேகம் பருகிச் சொரியப்
பலவளனும்
நந்திக் கன்னி நாடளகை நகர்போற் செல்வந்
தழைத்தன்றே.

பூசித்துப் பயன்படுத்தல்

1719. பிறகு உலவாக்கிழியினை, சிவந்த கண்களை யுடைய சிங்கத்தின் பிடர் சுமந்த தெய்வத்தன்மை பொருந்திய மணிகள் இழைத்த அழகிய ஆசனத்தின் மீது ஏற்றி, சங்கங்கள் ஒருபால் முழங்கவும், வேதம் ஒருபால் ஒலிக்கவும், சந்தனக் குழம்பைப் பூசி, மகரந்தம் சிந்த மாலையைச் சூட்டி தசாங்க உபகாரம் புரிந்து நறும் தூபமும் நெய்த் தீபமும் காட்டி, கங்கையைத் தரித்த சோமசுந்தரக் கடவுளைப் போல அவ்வுலவாக்கிழியினைப் பாவித்துப் பூசை முடித்தான்.

1720. பின் நெருங்கி வந்து வலம் செய்து அழகிய பொன் முடிப்பை கட்டவிழ்த்து எடுத்துப் பொன்னை அந்தணர்களுக்கும் வேள்விகளுக்கும் மற்றவர்களுக்கும் வரையாது வாரி வாரி வழங்கினான். இவ்வாறு நாள்தோறும் வரையறையின்றிக் கொடுக்க அப்பொற்கிழி சிறிதும் குறைவுபடாத முக்தி இன்ப வீட்டைப் போலாயிற்று.

1721. அந்த உலவாக் கிழியில் விளைந்த பொன்னி னால், வேதத்தின் எல்லையை அறிந்தவனாகிய குலபூடண பாண்டியன், சோம சுந்தரக் கடவுள் எழுந்தருளிய விண்ணி னின்று ஒளிவீசி இழிந்த இந்திர விமானத்தை உள்ளும் புறமும் தகடு இழைத்து வேய்ந்தான். ஞானக் கொழுந்து போன்ற அங்கயற் கண்ணம்மையின் திருக்கோயிலும், ஆறுகாற் பீடமும், விண்ணினைத் தொடுகின்ற கொடியுடைய நீண்ட பெரிய கோபுர வாயிலும் மற்றுள்ள வையும் அப்பொற்றகட்டால் அழகு பெறச் செய்தான்.

பாண்டிய நாடு செழித்து விளங்கல்

1722. குலபூடண பாண்டியனாகிய மேகம், உலவாக் கிழியாகிய குறையா நிதிக்கடலை முகந்து முகந்து நாள் தோறும் பொழிந்து தெய்வத் தன்மை பொருந்திய தருமமாகிய பயிரை வளர்க்கும் பொழுது, முகில்கள் வரிசையாய் வரும் அலைகளையுடைய கடல் நீரைக் குடித்து மழையினைப் பொழியப் பல் வளங்களும் மிகுந்தன. அதனால் பாண்டிய நாடானது அளகா புரியைப் போலச் செல்வம் தழைத்தது.

1723. வையா கரணர்க ணையா யிகர்மறை வல்லோர்
மறைமுடி சொல்லாய்வோர்
மெய்யா மிருதிகள் பொய்யா விரதிகள் வேள்வித்
தழல்களை வாழ்விப்போர்
பையா டரவணி யையான் அவன்னுரை பகர்வோ
ருலகியல் அகல்வோர்கள்
எய்யா துறைதலின் நையா தளகைய தென்னப்
பொலிவது தென்னாடு.

உலவாக்கிழி அருளிய படலம் முற்றிற்று.

32. வளையல் விற்ற படலம்

1724. வேதந் தனது வடிவென்று விண்ணின்று இழிந்த
விமானமறைக்
கீதன் செழியன் றனக்குலவாக் கிழிதந் தளித்த
வழியிதுவப்
போதங் கடந்த பொருள்வணிகப் புத்தேண் மாட
மணிமறுகு
பாதந் தடவ நடந்துவளை பகர்ந்த பரிசு பகர்கிற்பாம்.

1725. இறைவன் குலபூ டணன்றிகிரி யிவ்வா றுருட்டு
நாள்முன்னாள்
சிறைவண் டறையுந் தாருவன தெய்வ முனிவர்
பன்னியர்தந்
நிறையன் றளந்து காட்டுகென நெடியோன் மகனைப்
பொடியாக்கும்
அறவன் றானோர் காபாலி யாகிப் பலிக்கு
வருகின்றான்.

1723. அப்போது வேதத்தில் வல்லவர்களும், உபநிடதங்களில் வல்லவர்களும், ஸ்மிருதியில் வல்லவர்களும் வியாகரணத்தில் வல்லவர்களும், நியாய நூலில் வல்லவர்களும், விரதங்களை ஏற்பவர்களும், வேள்வித் தீக்களை ஓம்புபவர்களும் படம் விரித்து ஆடுகின்ற பாம்பினை அணிந்த ஐந்துமுகமுடைய சிவபெருமானது உரையாகிய ஆகமங்களைப் போதிப்பவர்களும், உலகியலினின்றும் நீங்கியவர்களும் வறுமையால் வருந்தாது, வசிப்பதனால் நாடானது அளகாபுரியைப் போல் விளங்கியது.

உலவாக்கிழி அருளிய படலம் முற்றிற்று

32. வளையல் விற்ற படலம்

1724. மறையே தனது திருவுருவம் என்று கூறியருளி வானிலிருந்து இறங்கிய விமானத்தில் வீற்றிருக்கும் வேதகீதனாகிய சோமசுந்தரக் கடவுள் பாண்டியனுக்கு உலவாக்கிழி தந்தருளிய திருவிளையாடல் இதுவாகும். இனி சுட்டறிவினைக் கடந்த அவ்விறைவன் தெய்வத் தன்மையுடைய வணிகனாய் மாடங்கள் நிறைந்த அழகிய வீதியிலே திருவடிகள் தோய நடந்தருளி வளையல் விற்ற திருவிளையாடலைக் கூறுவோம்.

1725. மன்னனாகிய குலபூடணன் தனது ஆணையாகிய திகிரியை இவ்வாறு செலுத்தும் பொழுது முன்னொரு காலத்தில் சிறைவண்டு ஒலிக்கும் தாருகவனத்துள்ள தெய்வத்தன்மை பொருந்திய முனிபத்தினிகளின் கற்பினை அளந்து காட்டும் பொருட்டுத் திருவுளம் கொண்டு, திருமாலின் புதல்வனாகிய மன்மதனைப் பொடியாக்கிய அறவடிவினன் ஆகிய இறைவன் அன்று தான் ஓர் கபாலி ஆகி பலிக்கு வருகிறான்.

1726. வேத மசைக்குங் கோவணமு மெய்யி னீறு முள்ளாளக்
கீதமிசைக்குங் கனிவாயும் உள்ளே நகையுங்
கிண்கிணிசூழ்
பாத மலரும் பாதுகையும் பலிகொள் கலனுங்
கொண்டிரதி
மாதர்கணவன் றவவேட மெடுத்தா லொத்து
வருமெல்லை.

1727. விள்ளுங் கமலச் சேவடிசூழ் சிலம்பின் ஒலியு மிடறதிரத்
துள்ளுங் கீத வொலியுங்கைத் துடியி னொலியுந்
துளைச்செவிகீண்டு
உள்ளம் பிளந்து நிறைகளைந்தீர்த் தொல்லை வருமுன்
வல்லியர்கள்
பள்ளங் கண்டு வருபுனல்போற் பலிகொண் டில்லின்
புறம்போந்தார்.

வேறு

1728. ஐயங்கொண் டணைவார் ஐயர் பரிகலத் தைய மன்றிக்
கையம்பொன் வளையும் பெய்வார் கருத்துநா ணன்றிக்
காசு
செய்யும்பொன் மருங்குல் நாணு மிழப்பர்வேள் சிலையம்
பன்றிக்
கொய்யுந்தண் மலர்க்க ணம்புங் கொங்கையிற்
சொரியச் சோர்வார்.

பிட்சாடனர்

1726. கட்டிய வேதமாகிய கோவணமும், திருமேனியில் விபூதிப் பூச்சும் உள்ளாளமாகிய கீதம் பாடும் கொவ்வைக்கனி போன்ற வாயும், உள்ளே அரும்பிய புன்முறுவலும் கிண்கிணி சூழ்ந்த திருவடித் தாமரையும் திருவடியில் தரித்த பாதுகையும், பலியேற்கும் கபாலமும் (தலையோடும்) ஆகிய இவற்றைக் கொண்டு அழகிய ரதியின் கணவனான மன்மதன் தவவேடம் எடுத்துவந்தாற் போன்று பிட்சாடனர் வடிவம் தாங்கி வந்தார்.

1727. தாமரை மலர் போன்ற சிவந்த திருவடியில் சிலம்பின் ஒலியும், திருமிடறானது துடிக்கத் துள்ளுகின்ற கீத ஒலியும் திருக்கரத்தில் ஏந்திய உடுக்கை ஒலியும், செவியைக் கிழித்து மனத்தில் ஊடறுத்து, இருடி பத்தினிகளைப் பரவசப்படுத்தின. அவர்கள் நிறையழிந்து தம்மை மறந்து அவ்வொலியிலே ஈடுபட்டுப் பள்ளத்தை நோக்கி ஓடிவருகின்ற நீரைப் போல விரைந்து கையில் பிட்சையினைக் கொண்டு வீட்டின் புறத்தே வந்தார்கள்.

1728. அவ்வாறு பிட்சையினைக் கொண்டு வருகின்ற அம்முனிபத்தினிகள், இறைவனது பிட்சை ஏற்கும் கலத்திலே அப்பிட்சையையன்றிக் கையில் அணிந்த அழகிய பொன்னாலாகிய வளையலையும் சொரிவார்கள். மனத்தில் உள்ள நாணத்தை இழப்பதோடு இடையில் இருந்த பொன்னாலாகிய மேகலையையும் இழப்பார்கள். மன்மதனது வில்லிலிருந்து வரும் அம்பேயன்றித் தம் கண்களிலினின்றும் வரும் கண்ணீரும் தம் மார்பிலே சொரிய காமத்தால் நிலை தளர்வார்கள்.

1729. மடமயி லனையார் எங்கள் வளையினைத் தருதி
ரென்றார்
கடல்விட மயின்றா னுங்கள் கந்தரத் துள்ள தென்றான்
தடமதிக் கொம்ப னாரெங் கலையினைத் தருதி
ரென்றார்
முடமதி மிலைந்தா னுங்கண் முகமதி யிடத்த
தென்றான்.

1730. இடையறிந் தெம்மைச் சேர்மி னென்றனர் இளையர்
எங்கோன்
கடலமு தனையீர் நுங்கட் கிடையினிக் காணா
தென்றான்
மடநலா ரஃதேற் பண்டை வண்ணமீந் தில்லிற் செல்ல
விடையளித் தருண்மி னென்றார் வேலைபுக் குறங்கு
மென்றான்.

1731. நங்கையர் கபாலிக் கென்று நடுவிலை போலும்
என்றார்
அங்கண னடுவி லாமை நும்மனோர்க் கடுத்த
தென்றான்
மங்கைய ரடிக ணெஞ்சம் வலியகற் போலு மென்றார்
கொங்கலர் கொன்றை யானுங் கொங்கையே வன்க
லென்றான்.

இருடி பத்தினியர்க்கும் இறைவருக்கும் நிகழ்ந்த உரையாடல்

1729. இளமையான மயில் போன்ற அப்பெண்கள், "எங்கள் வளையலைத் தாருங்கள்" என்று கேட்டனர். கடலில் தோன்றிய நஞ்சினை உண்ட நாயகன், "அஃது உங்கள் கழுத்தில் உள்ளதே!" என்று பதில் அளித்தான். (வளை - சங்கு; மகளிர் கழுத்திற்கு சங்கு உவமை) முழு நிலவையும் பூங்கொம்பையும் போன்ற அப்பெண்கள், "எமது கலையினைத் (ஆடையினை) தாருங்கள்" என்றனர். வளைவாகிய பிறையை அணிந்த அப்பெருமான், "அது உங்கள் முகமாகிய சந்திரனிடம் உள்ளது என்று பதில் கூறினான். (கலை—ஒளிக்கீற்று)

1730. அம்மங்கையர், "இடையறிந்து (சமயமறிந்து) எம்மைச் சேர்மின்!" என்றனர். எம்பெருமான், "கடலில் தோன்றிய அமுதத்தை ஒத்த பெண்களே! உங்களுக்கு இனி இடை (மருங்குல்) காணப் பெறாதே?" என்றனன். மடப் பத்தையுடைய அப்பெண்கள், "அவ்வாறெனின் எம்முடைய முன்னை நிறத்தைக் கொடுத்து, எங்கள் வீட்டிற்குச் செல்ல விடை கொடுத்தருளும்" என்றனர். இறைவர் உடனே, "எம்முடைய விடை (திருமால்) பாற் கடலில் பள்ளி கொண்டுள்ளதே" என்றார்.

1731. அம்மகளிர், "இக் கபாலிக்கு எப்பொழுதும் நடு வில்லை (நடுவுநிலைமை) போலும்!" என்றனர். இறைவர் "நடுவில்லாமை (இடையில்லாமை) உம்மைப் போன்ற வர்க்கே அடுத்தது" என்றான். அப்பெண்களின், "அடிகளின் நெஞ்சு வன்கல்லை (மலையை) ஒக்கும்" என்றனர். மகரந்தம் மிக்க கொன்றை மாலையை அணிந்த சிவபெருமான், "உங்கள் கொங்கையே வலிய கல் (மலை) ஆகும்" என்று கூறினான்.

1732. காதுவே லன்ன கண்ணார் கங்கைநீர் சுமந்த தேதுக்
கோதுமின் என்றார் நும்பா லுண்பலி யேற்க வென்றான்
ஏதுபோ லிருந்த தைய னிசைத்தசெப் பென்றா ரீசன்
கோதுறா வமுதன் னீர்நுங் கொங்கை போலிருந்த
தென்றான்.

1733. கறுத்ததை யெவன்கொல் ஐய சுந்தர மென்றார்
வேளை
வெறுத்தவன் மாரி பெய்தற் கென்றனன் விழியால்
வேலை
ஒறுத்தவர் யாவ தென்றீ ருத்தர மென்றார் கூற்றைச்
செறுத்தவன் றென்பா னின்று நோக்கினாற் றெரிவ
தென்றான்.

1734. செக்கரஞ் சடையான் கண்ணில் தம்முருத் தெரிய
நோக்கி
இக்கொடி யார்போற் கண்ணுள் எம்மையு மிருத்தி
ரென்றார்
நக்கனுந் தனையன் னார்கண் ணிடைக்கண்டு
நகைத்து நம்மின்
மிக்கவர் நுங்க ணுள்ளார் விழித்தவர்க் காண்மி
னென்றான்.

1735. அஞ்சலிப் போது பெய்வார் சரணமென் றடியில் வீழ்வர்
தஞ்செனத் தளிர்க்கை நீட்டித் தழுவிய கிடைக்குந்
தோறும்
எஞ்சுவா னெஞ்சா தேத்தி யெதிர்மறை யெட்டுந்
தோறும்
வஞ்சனாய் அகல்வான் மையல் வஞ்சியர்க் கணிய
னாமோ.

1732. கொலை புரியும் வேல் போன்ற கண்ணை யுடைய அப்பெண்கள், "நீர் கங்கை நீர் சுமந்தது ஏதுக்கு (எதன் பொருட்டு?) கூறுங்கள்" என்றனர். இறைவன், "அது நும்மிடத்து உண்பலி ஏற்க" என்று விடையளித்தான். அப்பெண்கள், "இவ்வையன் உரைத்த செப்பு யாது போலிருந்தது?" என்று கூறினர். இறைவன், "குற்றமற்ற அமுதம் போன்றவர்களே! நுமது கொங்கை போல் இருந்தது" என்று கூறினான்.

1733. "ஐயனே! கந்தரம் (கழுத்து) கருத்தது என்ன காரணம்?" என்று அப்பெண்கள் வினவினர். மன்மதனை எரித்த பெருமான், "மாரி பெய்தற்கு" (கந்தரம் - மேகம்) என்று விடையிறுத்தான். கண்களால் வேற்படையை வென்ற அம்மகளிர் "உத்திரம் (பதில்) எதுவென்று கூறினீர்?" என்றனர். காலனை உதைத்த இறைவன், "தென்பால் நின்று நோக்கினால் தெரிவது" (உத்திரம் - வடக்கு) என்றான்.

இறைவர் மங்கையரிடம் அகப்படுவாரா ?

1734. தாருகாவனத்து இருடிகளின் பத்தினியர் பிட்சாடன மூர்த்தியின் கண்களில் தங்கள் வடிவம் புலப்படும்படியாக நோக்கி, "இக்கொடி போன்ற மகளிரைப் போல நும் விழியுள் எம்மையும் வைத்துக் கொள்ளும்" என்று இரந்து வேண்டினர். இறைவனும், தம்மை அப்பெண்களின் விழியுட்கண்டு நகைத்து, "நம்மைப் போல் பேரழகுடையவர் உங்கள் கண்களிலே உள்ளார். அவரை நன்றாக விழித்துப் பாருங்கள்" என்றார்.

1735. உடனே இருடி பத்தினிகளெல்லாம் அஞ்சலி யாகக் கைகுவித்துப் பிட்சாடன மூர்த்தியின் திருவடிகளில் விழுந்து, "நீரே துணை" என்று தளிர் போன்ற கைகளை நீட்டித் தழுவ நெருங்கி வருவார்கள். அவர்கள் தழுவ நெருங்குந் தோறும் இறைவன் அப்பாற்படுவானாயினான். சலிக்காது துதித்து எதிர்கின்ற வேதங்கள் எட்டுந்தோறும் வஞ்சகனாய் அகப்படாது நீங்கும் பெருமான் காம மயக்கத்தையுடைய அப்பெண்களுக்கு அகப்படுவாரோ?

1736. அடுத்தெமைத் தழாதி ரேல்நீர் அவிழ்த்தபூங் கலையை மீள
உடுத்துமி னும்பால் யாங்கண் மையனோ யுழப்ப நோக்கிக்
கடுத்தெமர் முனியா முன்னங் கழற்றிய வளையுங் கையில்
எடுத்திடு மென்றார் நாளை யிடுதுமென் றேகி னானே.

1737. பிள்ளைவெண் டிங்கள் வேய்ந்த பிரான்கொண்டு போன நாணும்
உள்ளமு மீட்க லாற்றா துயங்கினார் கலையுஞ் சங்குந்
துள்ளவைங் கணையான் வாளி துளைப்பவெம் பசலை ஆகங்
கொள்ளைகொண் டுண்ண நின்றார் அந்நிலை கொழுநர் கண்டார்.

1738. பொய்தவ வடிவாய் வந்து நம்மனைப் பொன்னின் அன்னார்
மெய்தழை கற்பை நாணை வேரோடுங் களைந்து போன
கைதவன் மாடக் கூடற் கடவுளென் றெண்ணித் தேர்ந்தார்
செய்தவ வலியாற் கால மூன்றையுந் தெரிய வல்லார்.

வேறு

1739. கற்புத் திரிந்தார் தமைநோக்கிக் கருத்துத் திரிந்தீர் நீராழி
வெற்புத் திரிந்த மதிற்கூடன் மேய வணிகர் கன்னியராய்ப்
பொற்புத் திரியா தவதரிப்பீர் போமென் றிட்ட சாபங்கேட்
டற்புத் திரிந்தார் எங்களுக்கீ தகல்வ தெப்போ தெனமுனிவர்.

1736. அப்போது இருடி பத்தினிகளின் இறைவரை நோக்கி, "ஐயனே! நீர் எம்மை நெருங்கித் தழுவாது போவீரேல் அவிழ்ந்த ஆடையையேனும் எமக்கு மீள உடுத்தி விடுமின்! நாங்கள் உம்மைக் கண்டு கொண்ட காம மயக்கத்தாலே துன்பமுற்ற எங்கள் கணவர் அதனை நோக்கி எங்களைச் சினந்து வெறுக்காமுன் கைகளை விட்டுக் கழற்றிய வளையல்களையும் கையில் எடுத்து இடுமின்! என்று வேண்டினர். "நாளை வந்து இடுவோம்" என்று கூறி மறைந்தருளினார்.

1737. வெள்ளிய இளமதியை அணிந்த இறைவன் கொண்டு போன நாணத்தையும் மனத்தையும் மீட்க முடியாமல் வாட்டமுற்று அப்பெண்கள், ஆடைகளும், வளையல்களும் நெகிழ, மன்மதனின் கணைகள் உடலைத் துளைக்க உடம்பு முழுவதும் பசலை படர நின்றனர். அங்ஙனம் நின்ற நிலையை அவர்கள் கணவராகிய தாருகாவன முனிவர்கள் கண்டனர்.

1738. செய்த தவத்தால் காலம் மூன்றையும் அறியும் வல்லமையுள்ள அத்தாருகாவன முனிவர்கள், பொய்த்தவ வேடம் பூண்டு வந்து நமது மனையிலுள்ள மனைவியரின் கற்பினையும் நாணினையும் அடியோடு கவர்ந்து சென்றவர், மாடங்கள் நெருக்கிய கூடலில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளே என்று சிந்தித்துணர்ந்தார்கள்.

கணவரால் சாபம் பெறுதல்

1739. பின்பு கற்பு நிலை திரிந்த தம் மனைவியரைப் பார்த்து, "நீவிர் மனம் வேறுபட்டீர். ஆதலால் சக்கர வாளகிரி தனது வடிவம் திரிந்து வந்தது போன்ற மதில் சூழ்ந்த கூடலில் வசிக்கும் வணிகப் பெண்களாக, அழகு சிறிதும் குறையாமல் பிறப்பீர்கள். செல்லுங்கள்" என்று சாபமிட்டனர். அச்சாபத்தினைக் கேட்டு அம்மகளிர் "எங்களுக்கு இச்சாபம் விலகுவது எப்போது?" என்று வினவினர். அம்முனிவர்கள்,

1740. அந்த மாட மதுரைநகர்க் கரசா கியசுந் தரக்கடவுள்
வந்து நும்மைக் கைதீண்டும் வழியிச் சாபங்
கழியுமெனச்
சிந்தை தளர்ந்த பன்னியருந் தென்னர் மதுரைத்
தொன்னகரிற்
கந்த முல்லைத் தார்வணிகர் காதன் மகளி
ராய்ப்பிறந்தார்.

1741. வளர்ந்து பேதை யிளம்பருவ மாறி யல்குல் புடையகன்று
தளர்ந்து காஞ்சி மருங்கொசியத் ததும்பி யண்ணாந்
தரும்புமுலை
கிளர்ந்து செல்லும் பருவத்திற் கிடைத்தா ராக
இப்பான்மண்
அளந்த விடையான் வந்துவளை பகரும் வண்ணம்
அறைகிற்பாம்.

1742. கங்கை கரந்து மணிகண்டங் கரந்து நுதற்கண்
கரந்தொருபால்
மங்கை வடிவங் கரந்துழையு மழுவுங் கரந்து
மடவிடையூர்
அங்க ணழகர் வளைவணிகர் ஆகி யேன மளந்தறியாச்
செங்க மலச்சே வடியிரண்டுந் திரைநீர் ஞால மகள்சூட

1743. பண்டு முனிவர் பன்னியர்பாற் கவர்ந்த வளையே
பட்டுவடங்
கொண்டு தொடுத்து மீண்டவர்க்கே யிடுவேம் எனுமுட்
கோளினர்போற்
றொண்டர் தொடுத்த வைவண்ணத் துணர்த்தார்
போலத் தோள்சுமந்து
மண்டு வளையை விலைபகர்ந்து வணிக மறுகில்
வருகின்றார்.

1740. "மாடங்கள் நெருங்கிய அம்மதுரைக்கு நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள் வந்து உங்களைக் கை தீண்டும்போது இந்தச் சாபம் நீங்கும்" என்று கூறினர். அச்சாபத்தால் மனம் வாடிய பத்தினிகள், பாண்டியனின் பழைய நகரின் கண் மணம் மிக்க முல்லை மலர் மாலையணிந்த வணிகர்களின் அன்புடைய புதல்வியராய்த் தோன்றினார்கள்.

இறைவர் வளையல் விற்பவராய் வருதல்

1741. அவர்கள் வளர்ந்து, இளமையாகிய பேதைப் பருவம் கடந்து, அல்குல் பரக்க, மேகலை யணிந்த இடை தளர்ந்து வளைய், அரும்பிய கொங்கைகள் விம்மி நிமிர்ந்து பூரித்து ஓங்க, மங்கைப் பருவத்தை அடைந்தனர். புவியை அளந்த திருமாலாகிய இடபவூர்தியையுடைய இறைவன் வந்து வளையல் விற்கும் தன்மையைக் கூறுவோம்.

1742. இளமையாகிய இடபத்தை ஊர்ந்தருளும் அழகிய கண்களையுடைய சோமசுந்தரக் கடவுள், முடியில் சூடிய கங்கையையும், நீலகண்டத்தையும், நெற்றிக் கண்ணையும், இடபாகத்தில் உள்ள உமாதேவியார் திருவுருவையும், மான் மழுவையும் மறைத்து வளையல் விற்கும் வணிகராய் வேடம் கொண்டு, திருமாலாகிய பன்றியினால் தேடி அறியப் படாத செந்தாமரை போன்ற சிவந்த இரண்டு திருவடிகளையும் கடல் சூழ்ந்த நிலமகள் தனது முடியில் சூட,

1743. முன்னே முனிவரின் மனைவியரிடத்துக் கவர்ந்த வளைகளையே பட்டுக் கயிற்றால் கோத்து வந்து மீளும் அம்மகளிர்க்கே இடுவோம் என்னும் கருத்துடையவர் போல, அடியார்கள் தொடுத்துச் சூட்டும் மலர் மாலையைப் போல் தோளில் சுமந்து நெருங்கிய வளையல்களை விலை கூறிக்கொண்டு வணிக வீதியில் நடந்து வந்தார்.

1744. மன்னு மறையின் பொருளுரைத்த மணிவாய் திறந்து
வளைகொண்மின்
என்னு மளவிற் பருவமுகில் இமிழின் னிசைகேட்
டெழுமயில்போற்
றுன்னு மணிமே கலைமிழற்றத் தூய வணிகர்
குலமகளிர்
மின்னு மணிமா ளிகைநின்றும் வீதி வாயிற் புறப்பட்டார்.

1745. வளைக ளிடுவார் எனத்தங்கண் மனமெல் லாந்தம்
புடையொதுங்கத்
தளைக ளிடுவார் வருகின்றார் தம்மைக் கொம்மை
வெம்முலையார்
துளைக ளிடுதீங் குழலிசைபோற் சுரும்பு பாடக்
கருங்குழன்மேல்
விளைக ளொழுக நுடங்கிவரு மின்போ லடைந்து
கண்டார்கள்.

1746. கண்ட வடிவால் திளைப்பதற்குக் கழிபே ரன்பு
காதல்வழிக்
கொண்டு செல்ல வொருசார்தங் குணனா நாண
முதனான்கும்
மண்டி யொருசார் மறுதலைப்ப மனமும் உழன்று
தடுமாற
அண்டர் பெருமான் விளையாடற் கமையச் சூழ்ந்தா
ரமுதனையார்.

வளையல் விற்றல்

1744. வணிக வேடம் கொண்ட சோமசுந்தரக் கடவுள், நிலைபெற்ற வேதத்திற்குப் பொருள் உரைத்த அழகிய திருவாயைத் திறந்து, "வளையல் வாங்குங்கள்! வளையல் வாங்குங்கள்!" என்று பகர்ந்தருளினார். அப்போது கார் காலத்துச் சூல்கொண்ட கருமேகம் ஒலிக்கும் இனிய ஒலியினைக் கேட்டு ஆடுதற்கு எழும் மயில் போல மேகலை ஒலிக்க களங்கமில்லாத வணிக குலமகளிர் ஒளி விடுகின்ற மணிகள் அழுந்திய மாளிகையினின்றும் புறப்பட்டு வீதியின்கண் வந்தார்கள்.

1745. கைக்கு வளையல் அணிய வருபவர் போலத் தோன்றித் தங்கள் மனம் முழுவதும் தம்மிடம் ஒடுங்குமாறு அவற்றை விளக்கிடுவதற்கு வருகின்ற அவ்வணிகரை, திரட்சியுடைய இளம் தனங்களையுடைய அம்மகளிர் இனிய வேய்ங்குழலின் இசை போல வண்டுகள் பாடவும், கரிய கூந்தலின் மேலிருந்து தேன் ஒழுகவும், அசைந்து வருகின்ற மின்னலைப் போல் சென்று பார்த்தார்கள்.

1746. கண்டவுடன் பேரன்பு கொண்டு அவருடன் கூடி இன்பம் நுகர்வதற்கு ஒருபால் ஆசையின் வழியே கொண்டு போக, மற்றொரு பக்கம் தங்கள் குணமாகிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, என்னும் நான்கும் நெருங்கித் தடுக்க, மனம் சுழன்று தடுமாற, நிலை கலங்கி, தேவர் பிரானாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவிளை யாடலுக்குப் பொருந்த அமுதம் போன்ற அப்பெண்கள் சூழ்ந்து மொய்த்தனர்.

வேறு

1747. இரங்குமே கலைச்சிலம் பன்றி யேனைய
விரும்பிய குழைதொடி மின்செய் கண்டிகை
மருங்கிறச் சுமப்பினும் வளைகைக் கில்லெனின்
அரும்பிய முலையினார்க் கழகுண் டாகுமோ.

1748. செல்வநல் வணிகர்எம் செங்கைக் கேற்பன
நல்வளை தெரிந்திடும் என்று நாயகர்முன்
வல்வள ரிளமுலை மகளிர் மின்னுமிழ்
கல்வளர் கடகமென் காந்த ணீட்டினார்.

1749. பண்டருங் கிளவியங் கயற்கட் பாவைகைத்
தண்டளிர் பற்றிய தடக்கை மாதர்கைம்
முண்டகம் பற்றியே முகிழ்த்துப் பல்வரி
வண்டுக ளேற்றுவார் மையல் ஏற்றுவார்.

1750. புங்கவன் இடுவளை புடைத்து மீளவந்
தெங்களுக் கிடவிலை யிடுதி ராலெனக்
கொங்கவிழ் பைங்குழ லெருத்தங் கோட்டிநின்று
அங்கர நீட்டுவா ராசை நீட்டுவார்.

வணிக மகளிர்க்கு ஐயன் வளையலிட்டு மையலூட்டுதல்

1747. ஒலிக்கின்ற மேகலையும் சிலம்பும் அல்லாமல் ஏனைய விரும்பிய குழையும் தொடியும் ஒளிவீசும் கண்டிகையும் ஆகிய இவற்றை இடை முறியுமாறு பெண்கள் அணிந்தாலும்,கைகளில் வளையல் இல்லையானால் முகிழ்த்த தனங்களையுடைய அவர்களுக்கு அழகு உண்டாகுமோ?

1748. ஆதலின் அம்மங்கையர், "செல்வம் மிக்க நல்ல வணிகரே! எம்முடைய சிவந்த கைகளுக்குப் பொருந்திய நல்ல வளையல்களை ஆராய்ந்து இடுவீராக" என்று குவிந்து வளர்ந்த இளமையான கொங்கைகளையுடைய அம்மகளிர் வணிகர் முன்னே, ஒளிவீசும் கற்கள் அழுந்திய கடக மணிந்த காந்தள் மலர்போன்ற தங்கள் மெல்லிய கைகளை நீட்டினார்கள்.

1749. இசை போன்ற இனியசொல் அங்கயற்கண்ணம் மையினது திருக்கரமாகிய குளிர்ந்த தளிரைப் பற்றிய நெடிய கையால், வணிக மகளிரின் தாமரை மலர் போன்ற கைகளைப் பிடித்து முகிழ்ப்பித்துப் பலவரிகளையுடைய வளையல்களை இடுவதுடன், வணிகராகிய இறைவர் அவர்கள் காம மயக்கத்தையும் மிகுவித்தார்.

1750. இறைவனாகிய வணிகரால் வளயைல்கள் அணிவிக்கப் பெற்ற அப்பெண்கள், தாம் அணிந்த வளையல்களை உடைத்துவிட்டு மீளவும் வந்து, "எங்களுக்கு இன்னும் வளையல் இடவில்லையே! இப்போது இடுக!" என்று மணம் வீசும் பசிய கூந்தல் சரிந்த கழுத்தினை வளைத்து முகத்தினை மறைத்து நின்று தம் அழகிய கைகளை நீட்டி, தமது காதலையும் தோற்றுவிப்பார்கள்.

1751. எமக்கிடும் எமக்கிடு மெனப்பின் பற்றியே
அமைத்தடந் தோளினா ரனங்கன் பூங்கணை
தமைத்துளை படுத்துவோர் சார்பி லாமையாற்
கமைப்பறு நாண்முதற் காப்பு நீங்கினார்.

1752. முன்னிடு வளையெலாங் கழல முன்புசூழ்ந்
தின்னவை பெரியவே றிடுமென் றிட்டபின்
அன்னவும் அனையவே யாக மீள வந்
தின்னமுஞ் சிறியவா இடுமென் றேந்துவார்.

1753. பின்னிடு வளைகளுஞ் சரியப் பேதுறா
முன்னெதிர் குறுகிநீர் செறித்த மொய்வளை
தன்னோடு கலைகளுஞ் சரிவ தேயென
மின்னென நுடங்கினார் வேனெ டுங்கணார்.

1754. இவ்வளை போல்வளை யாமுன் கண்டிலேம்
மெய்வளை வணிகிரிவ் வரிய வெள்வளை
எவ்வயின் உள்ளஇன் றினிய வாகியெம்
மெய்ம்மயிர் பொடிப்பெழ வீக்கஞ் செய்தவே.

1755. நாளையும் வளையிட நண்ணு மிங்கென்பார்
கோள்வளை விலையிது கொண்டு போமென்பார்
வாள்விழி யீர்பினாள் வாங்கிக் கோடுமென்று
ஆளரி யேறனார் ஆடிப் போயினார்.

1751. மூங்கிலை ஒத்த பருத்த தோளையுடைய அவ் வணிககுல மங்கையர் மதவேளின் மலர்க்கணைக்கு ஆற்றாது அதனைப் போக்க ஒரு துணையும் இன்றி, பொறுத்தலையுற்ற நாணம் முதலிய காவலினின்றும் நீங்கி ஒருவர்பின் ஒருவராக வந்து, "எமக்கு வளையல் இடும்! எமக்கு வளையல் இடும் என்று வேண்டுவர்.

1752. முன்னே இட்ட வளையல்கள் அனைத்தும் கழன்றுவிட்ட அம்மகளிர் வணிகர் முன்வந்து நெருங்கி, "இவ்வளையல்கள் அளவிற் பெரியன; ஆதலின் கழன்றன. வேறு சிறிய வளையல்கள் இடுமின்!" என்று கூறி அங்ஙனம் இட்ட பின் அவையும் அங்ஙனமே கழன்று ஓட மீண்டும் வந்து, "இன்னும் சிறிது வளையல்களை இடுமின்!" என்று கையை நீட்டுவர்.

1753. பின் இட்ட வளையல்களும் கழன்று ஓட, மனமயங்கி அவ்வணிகர் முன் சென்று, எதிர் நின்று, "நீர் இட்ட நெருங்கிய வளையல்களோடு மேகலையும் கழல்கின்றனவே!" என்று வேல் போன்ற நெடுங்கண்ணை யுடைய அம்மகளிர் மின்னலைப் போலத் துவண்டு வெட்கி நிற்பர்.

1754. பின்பு வணிக குலமகளிர் வளையல் வணிகரை நோக்கி, "வளையல் வணிகரே! இவ்வளையல் போன்ற வளையல்களை யாம் முன்னே எங்கும் கண்டிலோம். இது உண்மை. இந்த அருமையான வளையல்கள் எங்குள்ளன? இன்று எம் உடம்பு இனிய புளகாங்கிதம் அடையுமாறு செய்தன.

1755. "நாளையும் வளை இடுவதற்கு இங்கு வருவீராக! மற்றும் இதோ நாங்கள் கொண்ட வளையலுக்கு உரிய விலைப் பொருளைப் பெற்றுக்கொண்டு போங்கள்" என்று கூறினர், ஆண் சிங்க ஏறு போன்ற அவ்வணிகீசர் அம்மகளிரைப் பார்த்து, "வாள் விழியீர்! நாளை வாங்கிக் கொள்வோம்" என்று கூறிவிட்டுத் திருவிளையாடல் செய்து சென்றருளினார்.

1756. போயின வணிகர்தம் புடையின் மின்னெனப்
பாயின மகளிரும் பலருங் காணமுன்
மேயின விண்ணிழி விமானத் துள்ளொளி
ஆயின திருவுரு வாகித் தோன்றினார்.

வேறு

1757. மட்டலம்பு கோதையார்முன் வளைபகர்ந்த வணிகர்தாம்
பட்டிசைந்த வல்குல்நங்கை பாகராகும் எனவியந்
துட்டதும்பு முவகைவெள்ள முற்றெழுந்த குமிழிபோற்
சுட்டதும்பு புனலிலாழ்ந்து களியடைந்த நகரெலாம்.

1758. உருவிலாளி யுடல்பொடித்த வொருவர்கூட லிருவரான்
மருவிலார் திருக்கைதொட்டு வளைசெறிந்த நீர்மையாற்
கருவின்மாத ராகிநாயகர் கன்னிமார்கண் மின்னுவேற்
பொருவில்காளை யெனவரம்பில் புதல்வரைப் பயந்தனர்.

1759. பிறந்தமைந்தர் அளவிறந்த பெருமைகொண்ட
பெருமிதஞ்
சிறந்தவீர மாற்றலேற்ற திறல்புனைந்து வைகினார்
மறந்ததும்பு வேனெடுங்கண் வணிகமாதர் சிறிதுநாள்
துறந்தரன்றன் அருளடைந்து துணையடிக்கண்
வைகினார்.

வளையல் விற்ற படலம் முற்றிற்று

இறைவர் மறைதல்

1756. அங்ஙனம் சென்ற வணிகராகிய பெருமானார் தம் பக்கத்தில் பரந்து நின்ற வணிக மகளிரும் மற்றவர்களும் கண்டு வியக்கும் வண்ணம், முன்புதாம் எழுந்தருளியிருந்த விண்ணிழி விமானத்துள் விளங்கும் பேரொளி மயமாகிய சிவலிங்கத் திருவுருவில் கலந்து தோன்றியருளினார்.

1757. மாலையணிந்த மகளிர் முன்னே வளையல் விற்ற வணிகரானவர், பட்டாடை பொருந்திய நிதம்பத்தை யுடைய உமாதேவியை ஒரு பாகத்தில் உடைய இறைவரா வார் என்று நகரில் உள்ள அனைவரும் அறிந்து வியப்புற்று ஆனந்தக் கண்ணீர் பொழிந்து, உள்ளத்தில் உவகை வெள்ளம் உற்று எழுந்த குமிழ் போல மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தனர்.

1758. திருமால் பிரமன் ஆகிய இருவராலும் அடையப் படாதவரும் மன்மதனுடைய உடலை நீறாக்கியவரும் கூடல்நாயகரும் ஆன சோமசுந்தரக் கடவுள் தமது திருக்கையினாலே தொட்டு வளையல் இட்ட தன்மை யினால் கருவுற்று ஒளிவிடுகின்ற வேலுடைய ஒப்பில்லாத காளையாகிய முருகக் கடவுளைப் போல அளவற்ற புதல்வர்களைப் பெற்றார்கள்.

வணிக மங்கையர் சிவப்பேறு அடைதல்

1759. அவ்வாறு தோன்றிய புதல்வர்கள் அளவற்ற பெருமை கொண்ட களிப்பும், மிக்க வீரமும், ஆற்றலும் தக்க வெற்றியும் பெற்று வாழ்ந்து வந்தார்கள். கொலை மிக்க வேல் போன்ற விழியுடைய வணிக மகளிர் சிலநாள் கழித்து சிவபெருமான் திருவருளைப் பெற்று அவருடைய இரு திருவடிக் கண்ணும் கலந்து தங்கினார்கள்.

வளையல் விற்ற படலம் முற்றிற்று

33. அட்டமா சித்தி உபதேசித்த படலம்

1760. கொத்திலங்கு கொன்றைவேய்ந்த கூடலாதி மாடநீள்
பத்தியம்பொன் மறுகணைந்து வளைபகர்ந்த பரிசுமுன்
வைத்தியம்பி னாமியக்க மாதர்வேண்ட வட்டமா
சித்திதந்த திறமினித் தெரிந்தவாறு செப்புவாம்.

1761. மின்னலங்கல் வாகைவேல் விழுப்பெருங் குலத்தினிற்
தென்னவன்ற னாணைநேமி திசையெலாம் உருட்டு நாள்
முன்னைவைக லூழிதோறு மோங்குமொய் வரைக்கணே
மன்னுதண் பராரையால நிழன்மருங்கு மறைமுதல்.

1762. அடுப்பமாசில் வெள்ளிவெற்பின் அருகிருக்கு மரகதங்
கடுப்பவாம மிசையிருந்து கனகவெற்பன் மகளெனும்
வடுப்படாத கற்பினாள் மடித்துவெள்ளி லைச்சுருள்
கொடுப்பநேச மூறுபோக குரவனாகி வைகினான்.

33. அட்டமா சித்தி உபதேசித்த படலம்

1760. கொன்றைப் பூங்கொத்தணிந்து கூடல் பதியில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள், நீண்ட மாட வரிசை மிக்க அழகிய செல்வம் மிக்க வீதியில் சென்று வளையல் விற்ற திருவிளையாடலை முன் எடுத்துக் கூறினோம். இயக்க மகளிர் வேண்டிக் கொள்ள அட்டமா சித்திகளை உபதேசித்த திருவிளையாடலை இனி அறிந்த வாறு கூறுவோம்.

கார்த்திகை மாதர் அட்டமாசித்தி அருளும்படி வேண்டுதல்

1761. வெற்றிமிக மாலை சூடிய மீன் போன்ற வேலாயுதம் ஏந்திய மேன்மையான பாண்டியர் குலத்தில் தோன்றிய குலபூடண வழுதியானவன் தனது ஆணையை உலகம் முழுதும் செலுத்தி அரசாட்சி செய்து வந்தான். ஊழிக்காலம் தோறும் வளருகின்ற வலிய திருக்கைலாய மலையின் கண் நிலைபெற்ற பருத்த அரையினையுடைய கல்லால நிழலின்கண் வேதமுதல்வனாகிய இறைவன் முற்காலத்தில் வீற்றிருந்தார்.

1762. அப்போது குற்றமற்ற வெள்ளி மலையின் அருகே மரகதக் கொடி இருப்பது போல வலப்பக்கத்தி லிருந்து மலையரையன் புதல்வியாகிய குற்றமற்ற கற்பினை யுடைய உமையம்மையார் எழுந்தருளித் தம் திருக்கை களால் வெற்றிலைச் சுருளை மடித்துக் கொடுக்க, அச்சிவ பெருமான் மிக்க அன்பு சுரக்கும் (போககுருமூர்த்தியாய்) குரவனாய் இருந்தருளினார்.

1763. பிருங்கிநந்தி யேமுதற் பெருந்தகைக் கணத்தரும்
மருங்கிருந்த சனகனாதி மாதவத்தர் நால்வரும்
ஒருங்கிறைஞ்சி யுண்ணவுண்ண வமுதமூறு சிவகதைக்
கரும்பருத்த வாய்மலர்ந்து கருணைசெய்யும்
எல்லைவாய்.

1764. பௌவமூழ்கு சூர்தடிந்த பாலனுக்கு முலைகொடுத்
தெய்வமாய வினைகள் தீரியக்கமாதர் அறுவருந்
தெய்வநீறு முழுதணிந்து செய்யவேணி கண்டிகைச்
சைவவேட மாதவந் தரித்துவந்து தோன்றினார்.

1765. மந்திரச்சி லம்பலம்பு மலரடிக்கண் வந்திசெய்
தெந்தையட்ட சித்திவேண்டும் எங்களுக்கெ னத்தொழா
அந்தளிர்க்கை யவரிரப்ப வண்ணல்தன் மடித்தலந்
தந்திருக்கு மாதையங்கை சுட்டியீது சாற்றுமால்.

வேறு

1766. அலர்பகும் பொலங்கொம் பன்ன வணங்கிவள்
நிறைவால் எங்கும்
மலர்பரா சத்தி யாகி மகேசையா யணிமா வாதிப்
பலர்புகழ் சித்தி யெட்டும் பணிந்துகுற் றேவல் செய்யுஞ்
சிலதிய ராகிச் சூழ்ந்து சேவகஞ் செய்ய வைகும்.

1763. பிருங்கியும், திருநந்தி தேவரும், பெருந் தகுதியுடைய சிவகணத் தலைவரும், அருகில் இருந்த சனகன் முதலிய பெரிய தவத்தினையுடைய முனிவர் நால்வரும் ஒரு சேர வணங்கி, உண்ண உண்ண அமுது ஊற்றெடுக்கும் சிவகதையாகிய கரும்பினைச் செவியால் உண்ண திருவாய் மலர்ந்து அருள் செய்து கொண்டிருந்தார்.

1764. அந்நிலையில், கடலின்கண் மூழ்கி மறைந்த சூரபன்மனை வதைத்தருளிய முருகக் கடவுளுக்குப் பால் கொடுத்தலால் துன்பமாகிய வினைகள் நீங்கப் பெற்ற கார்த்திகைப் பெண்களான இயக்க மாதர் அறுவரும் தெய்வத் திருநீற்றினை உடல் முழுவதும் பூசி, சிவந்த சடையையும் உருத்திராக்க வடத்தையும் தாங்கி, சைவ தவ வேடம் பூண்டு சிவபெருமான் திருமுன்பு வந்து தோன்றினார்கள்.

1765. அழகிய தளிர் போன்ற கைகளையுடைய அம் மகளிர், வேதமாகிய மறைச்சிலம்பு ஒலிக்கும் தாமரை மலர் போன்ற திருவடியின்கண் விழுந்து வணங்கி நின்று, "எம் பெருமானே! அடியேங்களுக்கு அட்டமா சித்தியை உபதேசித்து அருளும்" என்று குறையிரந்து வேண்டினார். இறைவன் தனது மடித்தலம் பெற்று இருக்கும் உமையம்மையைச் சுட்டிக்காட்டி இதனைக் கூறியருளுவானாயினான்.

இறைவன் இயக்கியர்க்கு அட்டமா சித்திகளை உபதேசித்தல்

1766. "மலர்ந்த பசிய பொற்கொம்பு போன்ற இவ்வுமை நங்கை, தன் பூரணத் தன்மையால் எங்கும் நிறைந்த பராசக்தியும், மகேஸ்வரியாகியும் உள்ளவள். அணிமா முதலிய பலரும் புகழத்தக்க அட்டமா சித்திகளும் பணிந்து குற்றேவல் செய்யும் சேடியர்களாகித் தன்னைச் சூழ்ந்திருக்க வீற்றிருப்பவள்.

1767. இவளைநீர் சிந்தித் தான்முன் னீட்டிய வினையை
நீக்கித்
தவலருஞ் சித்தி யெட்டுந் தருமெனக் கருணை பூத்துச்
சிவபரஞ் சோதி எட்டுச் சித்தியுந் தெளித்தல்
செய்தான்
அவரது மறந்தார் உம்மை ஆழ்வினை வலத்தான்
மன்னோ.

1768. செழுமதிப் பிளவு வேய்ந்த தேவுமக் குற்ற நோக்கி
முழுமதி முகத்தி னாரை முனிந்துநீர் பட்ட மங்கைப்
பழுமர முதலஞ் ஞானப் பாறையாய்க் கிடமின் என்னக்
கழுமலுற் றவர் தாழ்ந் தென்று கழிவதிச் சாப
மென்றார்.

1769. இப்படிக் கருங்க லாகிக் கிடத்திரா யிரம்யாண்
டெல்லைக்கு
அப்புற மதுரை நின்று மடுத்துமைத் தொடுத்த சாபத்
துப்பற நோக்கி நுங்கள் தொல்லுரு நல்கிச் சித்தி
கைப்படு கனிபோற் காணக் காட்டுதும் போதி
ரென்றான்.

வேறு

1770. கொடியனார்கள் அறுவரும்
நெடியவானி மிர்ந்துகார்
படியும்பட்ட மங்கையால்
அடியிற்பாறை யாயினார்.

1767. "இப்பிராட்டியை நீங்கள் சிந்திப்பீர்களாயின் இவள் நீங்கள் முற்பிறப்பில் செய்த வினைகளைப் போக்கி கெடுதல் இல்லாத அட்டமா சித்திகளையும் தந்தருள்வாள்" என்று திருவாய் மலர்ந்தருளி, சிவப்பரஞ்சுடர் அட்டமா சித்திகளையும் தெளிவித்து அருளினார். பின்னர் அவ்வியக்கியர் அறுவரும் முன்னைய ஊழ்வினையின் வலியினால் உமாதேவியைச் சிந்தியாமல் சிவபெருமான் அருளிய அட்டமா சித்திகளை மறந்து விட்டனர்.

அறுவருக்கும் சிவபெருமான் சாபமிடல்

1768. செழுமதிப் பிளவினை அணிந்த இறைவனும் அப்பிழையை நோக்கி நிறைமதி போன்ற முகத்தினை யுடைய அப்பெண்களைச் சினந்து, "நீங்கள் பட்ட மங்கை என்னும் தலத்திலே ஆலமரத்தடியில் அசேதனமாகிய கற்பாறையாகக் கிடப்பீர்" என்று சபித்தார். இயக்கியர்கள் மனம் தளர்ந்து வணங்கி, "எம்பெருமானே! இச்சாபம் நீங்குவது எப்போது?" என்று கேட்டனர்.

1769. சிவபெருமான், "ஆயிரம் வருடம் இவ்வாறு கருங்கல் பாறையாய்க் கிடவுங்கள். அதன்பிறகு யாம் மதுரையினின்றும் அவ்விடத்திற்கு வந்து உங்களைப் பற்றிய சாபத்தைப் போக்கி உங்கள் பழைய வடிவத்தைக் கொடுத்து எட்டுச் சித்திகளையும் உள்ளங்கையில் உள்ள நெல்லிக்கனி போல் ஐயம் திரிபின்றிக் காணுமாறு காட்டுவோம். செல்வீர்" என்று அருளிச் செய்தான்.

அட்டமா சித்தி அருளல்

1770. பூங்கொடி போன்ற அப்பெண்கள் அனைவரும் நீண்ட ஆகாயத்தில் எழுந்து மேகம் படியும் 'பட்டமங்கை' என்னும் பதியில் உள்ள ஆலமரத்தின் அடியில் கருங்கற் பாறையானார்கள்.

1771. கதிர்கலம்பெய் காட்சிபோல்
உதிர்பழத்தின் உடலெலாம்
புதைபடக் கிடந்தனர்.
மதரரித் தடங்கணார்.

1772. பருவமா யிரங்கழிந்
தொருவமாட மதுரைஎம்
குரவனெண் குணத்தினான்
திருவுளந் திரும்பினான்.

1773. தன்னதிச்சை கொண்டதோர்
இன்னருட் குரவனாய்
அந்நெடுங்க லாயினார்
முன்னர்வநது தோன்றினான்.

1774. இருட்டதும்பு கோதையார்
மருட்டதும்பு வினைகெட
அருட்டதும்பு கண்ணினாற்
றெருட்டதும்ப நோக்கினான்.

1775. அடிகணோக்க எம்புயங்
கடிகொணெய்தல் காந்தள்பைங்
கொடிகொண்முல்லை குமுதமேற்
படியப்பூத்த பாறையே.

1771. பெரிய கண்களையுடைய அம்மகளிர், வேட் கோவர் வனைந்த புதுக்கலம் விழும் தோற்றம் போல உதிர் கின்ற ஆலம் பழத்தினால் உடல் முழுவதும் புதையக் கிடந்தனர்.

1772. ஆயிரம் ஆண்டும் சென்றது. பின் மதுரையில் எழுந்தருளியுள்ள இறைவனும் எட்டுக் குணங்களையுடைய வனுமாகிய சோமசுந்தரக் கடவுள் திருவுள்ளத்தில் கருணை கொண்டருளினான்.

1773. தனது இச்சையினால் ஒப்பற்ற ஞானாசாரிய வடிவம் கொண்டருளிய இனிய தோற்றத்தோடு நீண்ட கருங் கல்லாய்க் கிடக்கும் அப்பெண்களின் முன் வந்து தோன்றியருளினான்.

1774. இருள் மிக்க கூந்தலையுடைய அப்பெண்களின் அஞ்ஞானத்தால் வந்த பெருவினை கெடுமாறு அருள் நிறைந்த திருவிழியால் ஞானமிக நோக்கியருளினார்.

1775. இறைவன் அவ்வாறு நோக்கியருள, அக்கற் பாறைகள் தாமரை, மணம்மிக்க நெய்தல், காந்தள், பசிய கொடியால் மலரும் முல்லை, ஆம்பல் தம்மேல் படிய பூத்தன.

(பூத்தன என்றது அப்பாறைகள் பெண் வடிவம் பெற்றமை கூறுவது)

1776. தாக்கவேத கத்திரும்
பாக்கமுற்ற பொன்னென
நீக்கமற்ற இருண்மல
வீக்கமற்று விட்டதே.

1777. நிறையுமன்பெ னுந்நதி
பொறையெனுங் கரைகடந்
திறைவனின்ன ருட்கடல்
துறையின்வாய் மடுப்பவே.

1778. எழுந்திறை யடிக்கணே
அழுந்துநேச மொடுதவக்
கொழுந்தனார்கள் அறுவரும்
விழுந்திறைஞ்சி னாரரோ.

1779. குமரற்கூட்டும் இளமுலை
உமையொப்பார்கள் சென்னிமேல்
அமலச்சோதி யங்கையாம்
கமலப்போது சூட்டினான்.

1780. சித்தியெட்டு மந்நலார்
புத்தியிற்கொ ளுந்தவே
கைக்கலத்தில் வைத்ததோர்
முத்தெனத்தெ ருட்டுவான்.

1781. அணிமா மகிமா விலகிமா அரிய கரிமாப் பிராத்திமலப்
பிணிமா சுடையோர்க் கடைவரிய பிராகா மியம்
ஈசத்துவமெய்
துணிமா யோகர்க் கெளியவசித் துவமென் றெட்டாம்
இவையுளக்கண்
மணிமா சறுத்தோர் விளையாட்டின் வகையா மவற்றின்
மரபுரைப்பாம்.

1776. பரிச வேதியில் இரும்பு தன் தன்மை கெட்டுப் பொன்னாவது போல் இறைவன் திருவருட் பார்வையால் அவர்கள் ஆணவமாகிய மாசு நீங்கித் தூய்மை அடைந்தனர்.

1777. நிறைந்த அன்பு என்னும் ஆறானது பொறாமை என்னும் கரையைக் கடந்து இறைவனின் இனிய திருவருளாகிய கடலின் கண் சென்று கலந்தது போல்.

1778. தவக்கொழுந்து போன்ற அவ் அறு மகளிரும் ஆழ்ந்த அன்புடன் எழுந்து இறைவன் திருவடிக்கண் விழுந்து வணங்கினார்கள்.

1779. முருகக் கடவுளுக்குப் பால் அருத்தும் இளைய கொங்கைகளையுடைய உமையம்மை போலும் அப்பெண் களின் முடியின் மேல் தூய ஒளிவடிவினனாகிய இறைவர் தமது தாமரை மலர் போன்ற திருக்கையை வைத்தார்.

1780. அட்டமாசித்திகளையும், அப்பெண்களின் அறிவிற்கு ஏற்ப பொருந்தும்படி, அங்கையின் கண் வைத்த முத்தினைப் போலத் தெளிவுபட உபதேசித்தருளினார்.

1781. அணிமாவும், மகிமாவும், இலகிமாவும் அருமையுடைய கரிமாவும், பிராத்தியும், மலமாகிய குற்றமுடையார்க்கு அடைதற்கு அரிய பிராகாமியமும் ஈசத்துவமும், மெய்ப் பொருளை உணர்ந்த பெரியோருக்கு வசித்துவமும் என்று அச்சித்தி எட்டு வகைப்படும். இவைகள் உள்ளத்தின் கண் அரிய அவிச்சையை நீக்கின வர்களின் விளையாட்டின் வகையாகும். அவற்றின் தன்மையைக் கூறுவோம்.

1782. அறவுஞ் சிறிய வுயிர்தொறுந்தான் பரம காட்டை
யணுவாய்ச்சென்
றுறையுஞ் சிறுமை யணிமாவா முவரி ஞால
முதல்மேலேன்
றறையுஞ் சிவாந்த மாறாறு முள்ளும் புறனும் அகலாதே
நிறையும் பெருமை தனையன்றோ மகிமா வென்னும்
நிரம்பியநூல்.

1783. இலகு மேரு பாரம்போல் இருக்கும் யோகி
தனையெடுத்தால்
இலகு வான பரவணுப்போ லிருப்ப திலகி மாவாகும்
இலகு வான பரவணுப்போ லிருக்கும் யோகி
தனையெடுத்தால்
இலகு மேரு பாரமென விருப்ப தன்றோ கரிமாவாம்.

1784. பிலத்தி லிருந்தோன் அயனுலகிற் புகுதல் மீண்டும்
பிலமடைதல்
பலத்தின் மிகுந்த பிராத்தியதாம் பரகாயத்தில்
நண்ணுதல்வான்
புலத்தி னியங்க லிச்சித்த போக மனைத்துந்
தானிருக்குந்
தலத்தி னினைந்த படிவருதல் பிராகா மியமாந்
தவக்கொடியீர்.

1785. விண்ணி லிரவி தன்னுடம்பின் வெயிலால் அனைத்தும்
விளக்குதல்போல்
மண்ணி லுளவாம் பொருள்பலவுங் கால மூன்றும்
வானத்தின்
கண்ணி லுளவாம் பொருளுந்தன் காயத்து ஒளியா
லிருந்தறிதல்
எண்ணி லிதுவு மறையொருசார் பிராகா மியமென்
றியம்புமால்.

அட்டமா சித்திகள்

1782. மிக நுண்ணிய உயிர்கள் தோறும் தான் மிக்க சிறுமையாகிய பரமாணுவாய்ச் சென்று தங்கும் நுண்மையே அணிமாவாகும். பொருள் நிரம்பிய நூல்கள், கடல் சூழ்ந்த நிலமுதலாக எல்லாவற்றினும் மேல் என்று கூறப்படும் சிவம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளும் புறமும் நீங்காது உறையும் பெருமையை 'மகிமா' என்று கூறுவோம்.

1783. மேருமலையின் பாரம் போலக் கனத்திருக்கும் யோகியை எடுத்தால் இலேசான பரமாணுவைப் போல சுமையற்று இருப்பது 'இலகிமா'வாகும். இலேசான பரமா ணுவைப் போல் மெலிந்திருக்கும் யோகியை எடுத்தால் மேருமலையைப் போலக் கனத்திருப்பது 'கரிமா'வாகும்.

1784. தவக்கொடி போலும் நங்கையீர்! பாதாளத்தில் உள்ள ஒருவன் பிரமன் உலகில் அடைதலும், மீளவும் பாதாளம் புகுதலும் பலத்தின் மிக்க 'பிராத்தி'யாகும். வேறு உடலிற் புகுதலும், விண்ணில் சஞ்சரித்தலும், தான் விரும்பிய இன்பங்கள் அனைத்தும் தான் இருக்கும் இடத்தில் நினைத்த வண்ணம் வரச் செய்தலும் 'பிரகாமிய'மாகும்.

1785. வானில் உள்ள சூரியன் தன் உடல் ஒளியால் எல்லாவற்றையும் விளங்கச் செய்தல் போல நிலவுலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும், மூன்று காலங்களை யும், விண்ணிலுள்ள பொருள்கள் அனைத்தையும், தனது உடம்பின் ஒளியால் விளங்கச் செய்து தான் இருந்த இடத்திலே இருந்து அறிதலும் ஒரு சார் 'பிரகாமிய'மாகும்

1786. ஈச னெனமுத் தொழிலுந்தன் னிச்சை வழிசெய்
தெழுபுரவித்
தேசன் முதற்கோள் பணிகேட்பத் திகழ்வ தீசத்
துவமாகும்
பூசல் அவுணர் புள்விலங்கு பூத மனிதர் முதலுலகும்
வாச வாதி யெண்மருந்தன் வசமாக் கொள்கை
வசித்துவமாம்.

1787. எம்மை யுணர்ந்த யோகியர்கள் இவற்றை விரும்பா
ரெனினுமவர்
தம்மை நிழல்போ லடைந்துலகர்க் கனையார் பெருமை
தனையுணர்த்தும்
செம்மை யுடைய விவையென்னச் சித்தி எட்டுந்
தெளிவெய்தக்
கொம்மை முலையா ரறுவருக்குங் கொளுத்தி
னானெண் குணச்செல்வன்.

வேறு

1788. தேவதே வுபதே சித்தியைச் சிலம்பன் செல்வி
பாவனை வலத்தால் நன்கு பயின்றுவான் வழிக்கொண்
டேகிப்
பூவலர் கதுப்பி னல்லார் அறுவரும் புரமூன் றட்ட
காவலன் விரும்பி வைகுங் கயிலைமால் வரையிற்
புக்கார்

அட்டமாசித்தி உபதேசித்த படலம் முற்றிற்று.

1786. சிவபெருமான் போல முத்தொழிலையும் தன் இச்சையின் படியே இயற்றி, ஏழு குதிரைகளையுடைய சூரியன் முதல் ஒன்பது கோள்களும் தன் ஏவல் கேட்ப திகழ்வது, 'ஈசத்துவம்' ஆகும். போர்த் தொழிலையுடைய அவுணரும் பறவையும் விலங்கும் பூதமும் மனிதரும் முதலிய பல்வகை உயிர்களையும், இந்திரன் முதலிய திக்குப் பாலர் எண்மரையும் தன் வசமாகச் செய்து கொள்வது 'வசித்துவ'மாகும்.

1787. எம்மையறிந்த சிவயோகியர் இச்சித்திகளை விரும்பார் ஆயினும் இச்சித்திகள் அவர்கள் உடம்பின் நிழல் போலத் தொடர்ந்து உலகினர்க்கு அவர் பெருமையைச் செம்மையாக உணர்த்தும் தகுதியை உடையன என்று எட்டுக் குணங்களாகிய செல்வத்தினையுடைய சிவ பெருமான் அவ்வெட்டுச் சித்திகளையும் திரண்ட கொங்கைகளையுடைய மகளிர் அறுவருக்கும் அறிவித்தான்.

1788. மலர்கள் நிறைந்த கூந்தலையுடைய அப்பெண்கள் அறுவரும் தேவ தேவனாகிய சோமசுந்தரக் கடவுள் உபதேசித்தருளிய அட்டமா சித்தியையும், மலையரையன் புதல்வியாகிய உமாதேவியாரைத் தியானித்து அந்த வலிமையால் நன்றாய்ப் பயின்றனர். பின்னர் வான் வழியாகச் சென்று திரிபுரங்களை எரித்த இறைவன் விரும்பி வீற்றிருக்கும் கைலை மலையை அடைந்தனர்.

அட்டமாசித்தி உபதேசித்த படலம் முற்றிற்று.

34. விடை இலச்சினையிட்ட படலம்

1789. சந்துசூழ்மல யச்சிலம்பர் தவம்புரிந்த இயக்கிமார்க்
கந்தநாலிரு சித்திதந்த தறைந்தனந்தன தடிதொழா
வந்துமீள்வள வன்பொருட்டு வடாதுவாயில் இறந்தழைத்
திந்துசேகரன் விடையிலச்சினை யிட்டவாறு
விளம்புவாம்.

1790. தோடுவெட்டிய மலைத்துவாள்விதிர் துணைவிழிக்குயி
லிளமுளைக்
கோடுவெட்டிய குறிகொள்மேனியர் குடிகொண்மாநகர்
கடிகொள்பைங்
காடுவெட்டிய காரணக்குறி காடுவெட்டிய சோழனென்
றேடுவெட்டிய வண்டுசூழ்பொழில் எயில்கொள்கச்சி
யுளானவன்.

1791. உத்தமச்சிவ பத்தரிற்பெரி துத்தமன்புது விரைகலன்
மித்தையென்றுவ ணீறுகண்டிகை யாரமென்றணி
மெய்யினான்
நித்தவேதபு ராணமாதிநி கழ்த்திடும்பொருள் கண்ணுதல்
அத்தனேபர தத்துவப்பொருள் என்றளந்தறி
கேள்வியான்.

34. விடை இலச்சினையிட்ட படலம்

1789. சந்தன மரங்கள் சூழ்ந்த பொதிய மலையில் சோம சுந்தரக் கடவுள், தவம் புரிந்த இயக்க மாதர் அறுவர்க்கு எட்டுச் சித்திகளையும் அருளிச் செய்த திருவிளையாடலைக் கூறினோம், திருவடிகளைத் தினம் வந்து தொழும் சோழ மன்னன் பொருட்டு வடக்கு வாயில் திறந்து அழைத்து பிறை முடியனாகிய இறைவன் இடபக் குறியினைப் பொறித்த திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

காடு வெட்டிய சோழன் தன்மை

1790. தோட்டினைப் போர் புரிந்து வெட்டி வாளை அசைத்தால் ஒத்த இரு விழிகளையுடைய குயில் போலும் உமையம்மையார் இளமையாகிய கொங்கையால் தழுவக் குழைந்த குறியினைக் கொண்ட திருமேனியுடைய ஏகம்ப வாணர் எழுந்தருளி இருக்கும் காஞ்சி நகரில், கண்டவர் அச்சம் கொள்ளும் பசிய காடுகளை வெட்டிய காரணத்தால் 'காடு வெட்டிய சோழன்' என்ற பெயரைப் பெற்ற மன்னன் ஒருவன் இருந்தான்.

(உமையம்மையின் தனக்குறியணிந்த வரலாற்றை காஞ்சிப்புராணம் — பெரியபுராணம் முதலியவற்றில் காண்க.)

1791. அம்மன்னன் உத்தம சிவபக்தர்கள் எல்லோரிலும் மிக உத்தம சிவ பக்தன். நறுமணம் கமழும் சந்தனமும் அணிகலனும் அழியும் பொருள் என்று கருதி வெள்ளிய திருநீறும், உருத்திராக்க மாலையும் அணிந்த மேனியையுடையவன். அழியாத வேதங்களும் புராணங் களும் கூறும் பொருள் நுதற்கண்ணுடைய சிவபெருமானே என்பதையும், அச்சிவபெருமானே மேலான உண்மைப் பொருள் என்பதையும் அளந்தறிந்த கேள்வியையுடையவன்

1792. அங்கமாறொடு வேதநான்கும் அறிந்துமெய்ப்பொரு
ளாய்ந்துளஞ்
சங்கைகொண்டனு தினமரன்புகழ் சாற்றுசைவ
புராணநூல்
பொங்குமின்சுவை யமுதுதன்செவி வாய்திறந்து
புகட்டியுண்டு
எங்கணாயக னடியிணைக்க ணிருத்துமன்பு
கருத்துளான்.

1793. முக்கணாயகன் முப்புரத்தை முனிந்தநாயகன்
மங்கையோர்
பக்கநாயகன் மிக்கவானவர் பரவுநாயகன் அரவணிச்
சொக்கநாயக னுடலுஞ்செவி யான்முகந்து சுவைத்தருந்
தக்கபாலொடு தேன்கலந்து தருக்கியுண்பவ னாயினான்.

1794. அங்கயற்கண் மடந்தைபாகன் அடித்தலந்தொழு
மாசைமேல்
பொங்கிமிக்கெழு மன்பனாய்மது ரேசன்மின்னு
பொலங்கழற்
பங்கயப்பத மென்றுநான்பணி வேனெனப்பரி வெய்தியே
கங்குலிற்றுயில் வான்கயற்புரை கண்ணிபங்கனை
யுன்னியே.

1795. அன்றுசெம்பியர் கோமகன்கன வின்கணேயருள்
வெள்ளிமா
மன்றுள்நின்றவர் சித்தராயெதிர் வந்துமன்னவ
நின்னுளத்
தொன்றுமஞ்சல் ஒருத்தனாகி யுருத்திரிந்து தனித்துவந்
தின்றுவந்தனை செய்துபோதி யெனப்புகன்றன
ரேகினார்.

1792. இங்ஙனம் ஆறு அங்கங்களையும் நான்கு மறைகளையும் கற்று உண்மைப் பொருளை ஆராய்ந்து துணிந்தவன். உள்ளத்தால் அப்பொருளைச் சிந்தித்து எப்பொழுதும் சிவபெருமான் புகழைக் கூறுகின்ற சைவ புராண நூல்களாகிய மிக்க அமுதினைத் தன் செவியால் நுகர்ந்து எங்கள் இறைவனாகிய அவ்விறைவனுடைய திருவடியில் மிகுந்த அன்பு வைத்த மனமுடையவன்.

1793. முக்கண் நாயகனும், முப்புரத்தை எரித்த நாயகனும் உமையை ஒரு கூறில் வைத்த இறைவனும், சிறந்த தேவர்கள் வழிபடுகின்ற இறைவனுமாகிய, பாம்பு அணிந்த சொக்கலிங்க மூர்த்தியின் திருவிளையாடலையும் செவியினால் மொண்டு, சுவையினையுடைய சிறந்த பாலும் தேனும் கலந்து உண்டு களிப்பவனாவான்.

சோழன் கனவில் தோன்றுதல்

1794. அங்கயற்கண்ணம்மையை ஒரு பாகத்தில் உடைய சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளைத் தொழ வேண்டும் என்னும் ஆசை மேலே பொங்கி எழுதலால் தொழ வேண்டும் என்னும் விருப்பம் மேன்மேலும் கொண்டு, “நான் எப்போது பொன்னலாகிய வீரக் கழலணிந்த மதுரைப் பிரானின் திருவடிகளைக் கண்டு வணங்குவேன்?” என்று அன்பு கூர்ந்து, கயல் போன்ற கண்ணுடைய உமையம்மையின் பாகனாகிய அப்பெருமானைச் சிந்தித்துக் கொண்டே இரவில் உறங்குவானாயினான்.

1795. அப்போது காடு வெட்டி என்னும் அச்சோழனின் கனவில், அருள் மயமாகிய பெரிய வெள்ளியம்பலத்திலே நின்றருளிய பெருமான் சித்த மூர்த்தியாய் வடிவம் தாங்கி, வந்து, “சோழனே! நின் மனதின் கண் சிறிதும் அஞ்சற்க. நீ ஒருவனாய் மாறுவேடம் பூண்டு துணையின்றி இன்றே புறப்பட்டு மதுரைக்கு வந்து தரிசனம் செய்து கொண்டு போவாயாக” என்று திருவாய் மலர்ந்தருளினார்.

1796. கேட்டுவேந்தன் விழித்துணர்ந்து கிளர்ந்தவற்புத னாகிய
ஈட்டுசேனை யமைச்சுளார்பிறர் யாருமின்றி
வழிக்கொளீஇ
நாட்டமூன்றவ னாமவாள்கொடு நல்லருட்டுணை
யாய்வழி
காட்டவன்பெனும் இவுளிமேல்கொடு கங்குல் வாய்வரு
வானரோ.

1797. கல்லுமாரழ லத்தமும்பல கலுழியுங்குண கனைகடற்
செல்லுமாநதி பலவும்வானிமிர் கன்னலுஞ்செறி
செந்நெலும்
புல்லுமாநில னுங்கழிந்து புறங்கிடக்க நடந்துபோய்
வல்லுமாமுலை யார் கணம்பயில் வைகையந்துறை
யெய்தினான்.

1798. குறுகுமுன்னர் அதிர்ந்துவைகை கொதித் தகன்கரை
குத்திவேர்
பறியவன்சினை முறியவிண்டொடு பைந்தருக்களை
யுந்தியே
மறுகிவெள்ளம் எடுத்தலைத்தர மன்னவன்கரை
தன்னினின்
றிறுதியில்லவ னைத்தொழற்கிடை யூறிதென்றஞர்
எய்துவான்.

1799. இழுதொடுஞ்சுவை யமுதுபொற்கலன் இட்டுணாதிரு
கண்கணீர்
வழியவந்து விலக்குவாரின் வளைந்ததாறு பகற்செயும்
பொழுதெழும்பொழுதோமறுக்கம் விளைக்குமேயிகல்
பூழியன்
வழுதியன்றியும் வைகையும்பகை யானதென்று
வருந்தினான்.

1796. உடனே காடு வெட்டிய சோழன், இறைவன் அருளிய பாட்டினைக் கேட்டு விழிப்படைந்து, வியப்புடன் தொகுக்கப்பட்ட சேனைகளும் மந்திரிகளும் வேறு யாரும் இல்லாமல் அவ்விரவிலேயே நல்ல திருவருள் துணையாய் நின்று வழிகாட்ட அன்பு என்னும் குதிரையில் ஏறி, கண் மூன்றுடைய இறைவனது திருநாமமான திருவைந்தெழுத் தென்னும் வாட்படை ஏந்தி மதுரையை நோக்கி வழி கொண்டான்.

மதுரையை நோக்கிச் செல்லல்

1797. மலைகளும், நெருப்புப் போன்ற பாலை நிலங்களும், பல காட்டாறுகளும், ஒலிக்கும் கீழ்கடலில் கலக்கும் பெரிய நதிகளும், வானோங்கி நிற்கும் கரும்பும், செந்நெற் பயிர்களும் மிகுந்த மருத நிலங்களும், பிற்படப் புறப்பட்டு புறத்தே கழிய நடந்து சென்று, பெரிய கொங்கையையுடைய மகளிர் கூட்டம் நீராடிப் பயிலும் வையையாற்றின் அழகிய நீர்த் துறையையடைந்தனன்.

மழையையும் வெள்ளத்தையும் கண்டு மனம் தளர்தல்

1798. சோழன் அங்கு வருவதற்கு முன்னரே வையை யாறு வெள்ளம் பெருகிக் கொந்தளித்து ஆரவாரித்துக் கரையை அகழ்ந்து, வானளாவிய பசிய மரங்களை வேர்கள் அறவும், வலிய கிளைகள் முறியவும் தள்ளிச் சுழன்று ஓடியது. சோழமன்னன் கரையில் நின்று கொண்டு, வெள்ளத்தைக் கண்டவன் "சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து வணங்குவதற்கு இடையூறு விளைந்ததே!" என்று துன்புறுவானாயினான்.

1799. மேலும், "நெய்யொடு சுவைமிக்க அமுது பசித்தவனுக்குப் பொற்கலத்தில் இட்டிருக்க' அதனை அவன் உண்ணப் போகும் சமயத்தில் வந்து தடுத்து விலக்கி இரண்டு விழியினின்றும் கண்ணீர் சிந்துமாறு செய்கின்ற வரைப் போல் இந்நதி தடுத்தது, சூரியன் உதிக்கும் பொழுது வந்தாலோ பகை கொண்டுள்ள பாண்டியன் துன்பம் செய்வான். பாண்டியனே அல்லாமல் இவ்வையை யாறும் பகையாயிற்றே! என்று எண்ணி வருந்தினான்.

1800. வெள்ளநோக்கி யழுங்குசெம்பியன் மெலிவுநோக்கி
விரைந்தெழீஇக்
கள்ளநோக்கில் அகப்படாதவர் கனவுபோலவன்
நனவில்வந்
துள்ளநோக்குடை யன்பருக்கு ளுருவமாகிய சித்தர்தாம்
பள்ளநோக்கி வரும்பெரும்புனல் வற்ற நோக்கினர்
பார்த்தரோ.

1801. வறந்தவாறு கடந்துவந்து வடக்குவாயி றிறந்துபோய்
நிறைந்தகாவல் கடந்துவீதிக ணீந்திநேரியர்
வேந்தனைச்
சிறந்தவாடக புனிதபங்கய திப்பியப்புனல் ஆடுவித்
தறந்தவாதறை காளகண்டர்த மாலயம்புகு வித்தரோ.

வேறு

1802. வெம்மைசெய் கதிர்கால் செம்பொன் விமானசே
கரத்தின் மேய
தம்மையும் பணிவித் தெண்ணில் சராசர மனைத்தும்
ஈன்ற
அம்மையங் கயற்க ணாளா மணங்கையும் பணிவித்
துள்ளஞ்
செம்மைசெய் தின்ப வெள்ளத் தழுத்தினார் சித்த சாமி.

1803. எண்ணிய வெண்ணி யாங்கே யான்பெற முடித்தாய்
போற்றி
பண்ணியன் மறைக டேறாப் பான்மொழி மணாள
போற்றி
புண்ணியர் தமக்கு வேதப் பொருளுரை பொருளே
போற்றி
விண்ணிழி விமான மேய சுந்தர விடங்க போற்றி.

சித்தராய் வந்து அழைத்துப் போதல்

1800. கள்ள நோக்கில் அகப்படாதவராகிய சிவபெருமான் வெள்ளத்தைக் கண்டு மனம் வருந்தும் சோழனுடைய துன்பத்தைப் பார்த்து அவன் கனவில் வந்தது போலவே தோற்றம் கொண்டு நனவிலும் விரைந்து வந்தார். ஞானக் கண்ணாகிய அகப்பார்வையினையுடைய அன்பர்கட்கு கருணை வடிவமாய்த் தோன்றியருளும் சித்தமூர்த்தி, பள்ளத்தை நோக்கி ஓடிவருகின்ற வெள்ள நீரை நோக்கி வற்றும்படி திருவுளம் கொண்டார்.

1801. உடனே அவ்வெள்ளம் வற்றியது. சித்த மூர்த்திகள் அச்சோழ மன்னனை அழைத்துக் கொண்டு வற்றிய வையை யாற்றினைக் கடந்து சென்று வடக்கு மதில் வாயிலினைத் திறந்து உள்ளே போய்ப் போர் வீரர்கள் நிறைந்த காவல்களையும், பல வீதிகளையும் தாண்டி மேலான தூய பொற்றாமரைத் தீர்த்தத்தையும் அடைந்து அதில் சோழனை நீராடச் செய்வித்து, அறம் பிறழாது சாம கானம் கூறும் கண்டத்தையுடைய இறைவர் தமது திருக்கோயிலினுள்ளும் புகச் செய்தார்.

சோமசுந்தரரை வணங்குதல்

1802. அச்சித்த மூர்த்தியாகிய பெருமான், வெம்மையான செங்கதிர் ஒளிவீசும் பொன்னாலாகிய விமானங்களுள் முடிபோல்வதாகிய இந்திர விமானத்தில் எழுந்தருளிய தம்மையும் வணங்கச் செய்தார். அளவற்ற சராசரங்களைப் பெற்றருளிய தாயாகிய அங்கயற்கண்ணம்மையையும் வணங்கச் செய்தார். அச்சோழனது உள்ளத்தைத் தூய்மை செய்து பேரின்பப் பெருக்கில் ஆழச் செய்தருளினார்.

1803. "யான் எண்ணியபடியே முடிவு பெறச் செய்தவனே, வணக்கம்! பண் அமைத்த மறைகளால் அறியப்படாத அங்கயற்கண்ணம்மையின் தலைவனே வணக்கம்! கண்ணுவர் முதலிய முனிவர்களுக்கு வேதத்தின் பொருளை அருளிச் செய்த மெய்ப் பொருளே வணக்கம்! விண்ணினின்றும் இறங்கிய விமானத்தில் எழுந்தருளிய சோமசுந்தரன் என்னும் பேரழகு உடையவனே வணக்கம்!

1804. எவ்வுடல் எடுத்தேன் மேனா லெண்ணிலாப் பிறவி
தோறும்
அவ்வுட லெல்லாம் பாவ மறம்பொருட் டாக வன்றோ
தெவ்வுடன் பொடித்தா யுன்றன் சேவடிக் கடிமை பூண்ட
இவ்வுட லொன்றே யன்றோ வெனக்குட லான தையா.

1805. இன்னன பலவும் ஏத்தி யிறைஞ்சிப்பல் வரமும்
வேண்டும்
மின்னகு வேலி னானை வேந்தநீ போந்த வண்ணம்
தென்னவ னறிந்தா லேதஞ் செய்யுமென் றார்த்தார்க்
கண்ணி
மன்னனைச் சித்த சாமி யுத்தர வழிக்கொண் டேகா.

1806. மண்ணினை வளர்க்கும் வைகை வடகரை யளவு
நண்ணிப்
புண்ணிய நீற்றுக் காப்புப் புண்டர நுதலிற் சாத்தி
உண்ணிறை கருத்துக் கேற்ப வுறுதுணை யுனக்குண்
டாகி
நண்ணுக வென்று பொன்னி நாடனை விடுத்து மீண்டு.

வேறு

1807. காப்புச் செய்த கதவில் விடைக்குறி
யாப்புச் செய்தமைத் தீர்ஞ்சடை சித்தர்போய்த்
தூப்புக் கைவரை சூழ்வட மேருவிற்
கோப்புச் செய்தபொற் கோயிலின் மேயினார்.

1804. அடியேன் முன்னாளில் எண்ணிறந்த பிறவிகள் தோறும் எவ்வுடல்களை எடுத்தேனோ? அவ்வுடல்கள் எல்லாம் நல்வினை தீவினையுமாகிய அவ்விரண்டின் பொருட்டே ஆகும். பகைவனாகிய மதவேளின் உடலை நீறாக்கியவனே! அடியேன் இப்போது தாங்கியுள்ள உடல் ஒன்றே உனது சிவந்த திருவடிகட்கு அடிமை பூண்டது. ஐயனே! இந்த உடலே எனக்கு உற்ற உடலாய் நின்று பயன் தந்தது."

1805. இவை போன்று இன்னும் பலவும் கூறித் துதித்து வணங்கிப் பல வரங்களை, மின்னலைப் போலும் வேற்படையை ஏந்திய சோழ மன்னன் வேண்டினான். சோமசுந்தரக் கடவுளாகிய சித்தமூர்த்திகள், சோழனை நோக்கி, "மன்னவனே! நீ இங்குவந்த செய்தியைப் பாண்டியன் அறிந்தால் உனக்குத் துன்பம் செய்வான்" என்று கூறினார். பின் ஆத்திமலையை அணிந்த அந்தச் சோழ மன்னனைச் சித்த மூர்த்திகள் வடக்கு வழியாக அழைத்துக் கொண்டு சென்றார்.

1806. நிலவுலகில் உள்ள உயிர்களைக் காக்கும் வையையாற்றின் வடகரை வரையும் சென்று, புண்ணிய வடிவாய் உள்ள திருநீற்றினைத் திரிபுண்டரமாக அவன் நெற்றியில் அணிவித்து, "உன்னுள்ளத்தில் நிறைந்த கருத்துக்கேற்ப உனக்கு நல்ல துணை உண்டாகப் பெற்று செல்லக் கடவாய்" என்று சொல்லி அவனை வழியனுப்பி வைத்து மீண்டார்.

வடக்கு வாயிலில் இடபக்குறி இடுதல்

1807. திரும்பி வந்து தாம் முன் திறந்த வடக்கு மதில் வாயிற் கதவினை மூடி அதன் கண் இடபமுத்திரை இட்டு, குளிர்ந்த சடையுடைய சித்தமூர்த்திகள் துதிக்கையுடைய யானைகள் சுமக்கும், வடமேருமலை போன்ற தன் அழகிய விமானத்தில் எழுந்தருளியிருந்தார்.

1808. கங்கு லின்கருங் கைகுறைப் பானெனச்
செங்கை நீட்டித் தினகரன் றோன்றலும்
எங்க ணாயகன் இட்ட குறியறிந்
தங்கண் வாயி றிறப்பவ ரையுறா.

1809. மற்றை வாயில்கண் மூன்றினும் வல்லைபோய்
உற்று நோக்கினர் தாநென்னல் ஒற்றிய
கொற்ற மீனக் குறிபிழை யாமைகண்
டெற்றி தாங்கொலென் றேந்தன்மு னெய்தினார்.

1810. போற்றி மன்னதம் பொன்னங் கயற்குறி
மாற்றி யுத்தர வாயிற் கதவதில்
ஏற்றி லச்சினை யிட்டனர் யாரையென்று
ஆற்றல் வேந்த வறிகிலம் யாமென்றார்.

1811. வையை நாடனும் வந்தது நோக்குறீஇ
ஐய வின்னதோ ரற்புத மாயையைச்
செய்ய வல்லவர் யாரெனத் தேர்கிலான்
ஐய மெய்தி யகன்மனை நண்ணினான்.

1812. மறுத்த வுண்டியன் மாமலர்ப் பாயலை
வெறுத்த வன்தரை மேற்பள்ளி கொள்ளவும்
பொறுத்த னன்றுயின் றான்இருட் போழ்தினிற்
கறுத்த கண்டர் கனவினிற் கூறுவார்.

காவலர் ஐயுறல்

1808. இரவாகிய அரக்கியின் கருமையான கையினைத் தறிப்பவன் போலச் சூரியன் சிவந்த கிரணமாகிய கைகளை நீட்டித் தோன்றினான். அவ்விடத்து அவ்வாயிலைத் திறப்ப வர்கள் வடக்கு வாயிலின் கதவிலே இடபக்குறி பொறிக்கப் பட்டிருப்பதைக் கண்டு ஐயுற்றனர்.

1809. ஏனை மூன்று வாயில்களிலும் விரைந்து சென்று உற்றுப் பார்த்தனர். அவ்விடங்களில் தாம் நேற்று வைத்த கயல் முத்திரை பிறழாமல், இருப்பதைக் கண்டனர். "இது யாதாய் முடியுமோ?" என்று அஞ்சி, குலபூடண பாண்டியன் முன்னே சென்றனர்.

1810. "அரசே! வணக்கம், வடக்கு வாயிற்கதவின் கண் நமது மீன் குறியை மாற்றி இடபக்குறியினை இட்டவர் யார் என்று அறிகிலோம்" என்று மன்னனிடம் கூறினார்.

1811. வையையாறு பாயும் நாட்டையுடைய பாண்டி யனும் வந்து அதனை நோக்கி, "இஃது ஓர் அற்புதம்! இம் மாயையைச் செய்ய வல்லார் யாவர்? ஒன்றும் அறிகிலேன்" என்று ஐயம் கொண்டவனாய்த் தன் அரண்மனையை அடைந்தான்.

பாண்டியன் கனவில் இறைவன் தோன்றுதல்

1812. அவன் அன்று முழுவதும் உணவை நீக்கி, இரவினும் உணவின்றிப் பெருமைமிக்க மலர்ப்படுக்கையை வெறுத்துக் கவலை மிக்கவனாய்த் தரையில் படுத்து நித்திரை செய்தான். அன்றிரவு கருத்த கண்டத்தையுடைய சோமசுந்தரக் கடவுள் அவன் கனவில் வந்து கூறியருள்வார்.

1813. மட்ட லம்பிய தாதகி மாலையான்
உட்ட தும்பி யொழுகிய வன்பினாற்
கட்டி லங்கெயிற் கச்சியிற் காடெலாம்
வெட்டி நம்புடை வித்திய பத்தியான்.

1814. வந்து நம்மை வழிபட வேண்டினான்
இந்த வாயி றிறந்தழைத் தின்னருள்
தந்து மீள விடுத்துப்பின் றாட்கொளீஇ
நந்த மால்விடை நாம்பொறித் தேமெனா.

1815. அருளி னான்ஐயந் தேற்றி யகன்றபின்
மருளி னீங்கி மலர்க்கண் விழித்தெழீஇ
வெருளி னான்வெயர்த் தான்விம்மி னான்பல
பொருளி னாற்றுதித் தான்குல பூடணன்.

1816. வள்ளல் அன்புக் கெளிவந்த மாண்புகண்
டுள்ள வுள்ளநின் றூற்றெழு மற்புத
வெள்ள மும்புர மானந்த வெள்ளமும்
கொள்ளை கொண்டுதன் கோமனை நீங்கினான்.

1817. அளிய றாமனத் தன்புடை யன்பருக்
கெளியர் ஆடலை யார்க்கும் வெளிப்படத்
தெளியு மாறு தெளிவித்துத் தன்னைப்போல்
விளிவு லாவின்ப வெள்ளத் தழுத்தினான்.

1813. "தேன் சிந்தும் ஆத்திமாலையை அணிந்த சோழன் உள்ளத்தில் நிறைந்த அன்பினால், காவல் மிக்க மதிலையுடைய காஞ்சி மாநகரின் காடனைத்தையும் வெட்டி நம்மிடம் கொண்ட பக்தியாகிய விதையை விதைத்தவன்.

1814. இங்கு வந்து அவன் நம்மை வணங்க விரும்பினான். நாம் இந்த வடக்கு வாயிலைத் திறந்து அவனை உள்ளே அழைத்து இனிய அருள் பாலித்து மீண்டும் அனுப்பிவிட்டுப் பின் தாளிறுக்கி நமது பெரிய விடை இலைச்சினையை வைத்தோம்" என்று கூறி மறைந்தருளினார்.

1815. அருளாளரான சோமசுந்தரக் கடவுள் ஐயம் போக்கி மறைந்த பின் குலபூடண பாண்டியன் மலர் போலும் கண் துயில் உணர்ந்து எழுந்தான். ஐயுறவினின்றும் நீங்கினான். அஞ்சி வியர்த்து உடல் பூரித்துப் பொருள் நிறைந்த பல பாடல்களாலே துதித்தான்.

1816. சோமசுந்தரக் கடவுள் அன்புக்கு எளிவந்த மாண்பு கண்டு, நினைக்கும் தோறும் இடையறாது சுரந்து எழுகின்ற அதிசய வெள்ளமும் சிவானந்த வெள்ளமும் தன்னைக் கொள்ளை கொள்ளத் தனது அரண்மனையை விட்டு நீங்கினான்.

1817. உயிர்களிடத்தில் அருள் நீங்காத மனத்தை யுடைய அன்பு நிறைந்த அடியார்கட்கு எளியராயுள்ள சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலை யாவருக்கும் புலப்படுத்தி அவர்களையும் தன்னைப்போல் அழியாத பேரின்ப வெள்ளத்தில் மூழ்கச் செய்தான்.

வேறு

1818. கோடாத செங்கோலும் வெண்குடையும் கோமுடியும்
ஏடா ரலங்க லிராசேந் திரற்களித்துத்
தோடா ரிதழியான் தாட்கமலஞ் சூடிவான்
நாடாள் அரசுரிமை பெற்றா னரபதியே.

விடை இலச்சினையிட்ட படலம் முற்றிற்று.

35. தண்ணீர்ப் பந்தர் வைத்த படலம்

1819. சம்பு மதுரைப் பரனிரவு தனியே வந்து தனைப்பணிந்த
வெம்பு கதிரோன் மருமானை விடுத்து மீண்டு
தாழிறுக்கி
அம்பொற் கதவின் விடைபொறித்த தறைந்தும்
தென்னன் அடுபடைக்கு
வம்பு மலர்தோய் புனற்பந்தர் வைத்துக் காத்த
வகைசொல்லாம்.

1820. தென்னன் அரச புரந்தரன்கோல் செலுத்து நாளிற்
காடெறிந்த
மன்னன் பின்னர் வெளிப்படையாப் போந்து போந்து
மதுரேசன்
பொன்னங் கமலத் தாள்வணங்கிப் போவான் முன்னிப்
பொரும் பொருநைக்
கன்னி நாடன் கேண்மைபெற விடுத்தான் வரிசைக்
கையுறையே.

குலபூண்டிய பாண்டியன் சிவபதம் அடைதல்

1818. குலபூடண பாண்டியன் தனது செங்கோலையும் வெண்கொற்றக் குடையையும், அரச முடியையும் மாலையணிந்த இராசேந்திர பாண்டியனிடம் ஒப்பு வித்தான். இதழ் நிறைந்த கொன்றை மாலையணிந்த இறைவனது திருவடி மலரைத் தனது முடியில் அணிந்து விண்ணுலகை ஆளும் அரசுரிமையைப் பெற்றான்.

விடை இலச்சினையிட்ட படலம் முற்றிற்று

35. தண்ணீர்ப் பந்தர் வைத்த படலம்

1819. சம்புவாகிய மதுரைச் சோமசுந்தரக் கடவுள் இரவில் தனியாக வந்து தன்னை வணங்கிய வெம்மையான சூரியன் மரபினனாகிய சோழனை அனுப்பி விட்டுத் திருப்பித் தாழிட்டு அழகிய பொற்கதவில் விடையிலச் சினையிட்ட திருவிளையாடலைக் கூறினோம். பாண்டிய னது போர் செய்யும் படைகட்கு மணம்மிக்க மலர் தோய்ந்த தண்ணீர்ப் பந்தல் வைத்துக் காத்தருளிய திருவிளை யாடலை இனிக் கூறுவோம்.

சோழன் தன் மகளை வழுதிக்குக் கொடுக்க எண்ணுதல்

1820. இராசேந்திர பாண்டியன் செங்கோல் செலுத்தும் நாளிலே பின்னர் காடு வெட்டிய சோழன் சோமசுந்தரக் கடவுளை யாவரும் அறிய வெளிப்படையாக வந்து தரிசனம் செய்து கொண்டு போகக் கருதிப் பொருநை யாற்றினையுடைய கன்னி நாடனாகிய இராசேந்திர பாண்டியனது நட்பினைப் பெற வேண்டி வரிசையாகிய கையுறையை அனுப்பினான்.

1821. பொன்னி நாடன் வரவிடுத்த பொலம்பூ ணாடை
முதற்பிறவுங்
கன்னி நாடன் கைகவர்ந்து தானுங் கலக்குந்
தொடர்பினால்
உன்னி வேறு கையுறையுய்த் துறவு செய்ய
உவப்பெய்திச்
சென்னி காதன் மகட்கொடுப்பா னிசைந்தான்
அந்தச் செழியற்கு.

1822. செழியன் றனக்கு வரையறுத்த செய்தி கேட்டுச்
செம்பியர்கோன்
கழியன் புடைய குலமகளைத் தான்போய்க் கொள்வான்
கருதிமதி
வழிவந் தவற்குத் தம்பியென வந்த வரச சிங்கமெனும்
பழியஞ் சாதான் வஞ்சித்துப் பழனக் காஞ்சிப்
பதிபுகுவான்.

1823. காஞ்சிப் பதிமுன் குறுகுமிளங் காவ லோனைக்
கடற்சேனை
தாஞ்சுற் றியவந் தெதிர்கொடுபோய்த் தன்முன்
றனக்கென்று இருந்தமகள்
ஆஞ்சிற் றிடையை மணம்புணர்த்தி யந்த மருகற்
கரசுநிலை
வாஞ்சித் தரச புரந்தரனைப் பிடிக்க மதித்தான்
வனமெறிந்தான்.

வேறு

1824. மருமகன்ற னுடனெழுந்து மாமனான வளவர்கோன்
பொருமகன்ற சேனையானை புடைநெருங்க மதிவழித்
திருமகன்றன் மேலமர்த் திறங்குறித்து முரசறைந்
துருமகன்ற பல்லியம் மொலிப்பவந்து ளானரோ.

1821. காவிரி நாடனான சோழ மன்னன் அனுப்பிய பொன்னணிகலன் பொன்னாடை போன்ற பிற பொருள் களையும் கன்னி நாடனாகிய பாண்டின் ஏற்றுக் கொண்டான். தானும் சோழனுடன் மனம் ஒன்றுபடும் நட்பினை விரும்பி வேறுகையுறை அனுப்பி நட்புப் பூண்டான். சோழன் மகிழ்வடைந்து அந்த இராசேந்திர பாண்டியனுக்குத் தன் அன்புக்குரிய மகளைத் திருமணம் செய்து கொடுக்க உடன்பட்டான்.

அரச சிங்கனுக்குச் சோழன் தன் மகளை மணம் செய்தளித்தல்

1822. இராசேந்திர பாண்டியனுக்குச் சோழன் தன் மகளை மணம் செய்து கொடுக்க உறுதி செய்த செய்தியினை இராசேந்திரனுடைய தம்பியும் பழிக்கு அஞ்சாதவனுமாகிய 'அரசிங்கன்' (இராச சிங்கன், இராச சிம்மன்) என்பவன் கேள்விப்பட்டான். தன் தமையனுக்குப் பேசப்பட்ட சோழனுடைய அன்பு மிக்க சிறந்த மகளைத் தானே மணந்து கொள்ளக் கருதித் தமையனை வஞ்சித்து காஞ்சி நகரை அடைந்தான்.

1823. காஞ்சி நகரை நோக்கி வரும் சிற்றரசனாகிய அரச சிங்கனைக் காடு வெட்டிய சோழன் தன் கடல் போன்ற சேனை சூழ எதிர் வந்து அழைத்துச் சென்றான். தமையனுக்கு என்று வரையறுத்திருந்த சிற்றிடையையுடைய தன் புதல்வியை அரசசிங்கனுக்கே மணம் செய்து கொடுத்தான். அந்த மருமகனுக்குப் பாண்டிய நாட்டின் அரசுரிமை கிடைக்க வேண்டும் என்று கருதி இராசேந்திர பாண்டியனைப் பிடிக்கக் கருதினான்.

பாண்டியன் மீது படையெடுத்தல்

1824. மாமனாகிய சோழமன்னன் தன் மருமகனாகிய அரச சிங்கனோடு எண்ணில்லாத சேனைகள் சூழ. யானைக் கூட்டம் பக்கத்தில் நெருங்கி வர, சந்திரன் தோன்றலாகிய இராசேந்திர வழுதியின் மேல் போர் செய்தலைக் குறித்து முரசு அறைவித்துப் புறப்பட்டு இடியும் அஞ்சும் பல கருவிகளை முழங்கி வந்தான்.

1825. திரண்டதிர்ந் தெழுந்துவந்த சென்னிசேனை தன்னகர்க்
கிரண்டுயோ சனைப்புறத் திறுக்குமுன்னர் ஒற்றரால்
தெருண்டு தென்னன் மாடநீடு கூடன்மேய சிவனதாள்
சரண்புகுந்து வேண்டுகென்று சார்ந்துதாழ்ந்து
கூறுவான்.

1826. அன்றுபாதி யிரவில்வந்துன் அடிபணிந்து தமியனாய்ச்
சென்றசென்னி யென்னுநின்ன திருவடிக்க
ணன்பினான்
இன்றுமந் நிலையனா யெனக்குவேண்டு வனவிடுத்
தொன்று கேண்மை புரிகுவா னுளத்திலொன்றை
யுன்னினான்.

1827. அறத்தினுக்கு ளாகியென்று நின்றநீ யவன்செயும்
மறத்தினுக்கு ளாகியின்று வன்மைசெய்வ தேயறப்
புறத்தினார் புரம்பொடித்த புண்ணியா எனக்கரைந்
துறைத்துவேண்டி னானவேலை யும்பர்நாதன்
அருளினால்.

1828. மெய்துறந்த வாய்மையென்று விண்ணினின்று மண்ணலே
ஐதுநுங்கள் சேனையேனு மாகவத்து நாளைநீ
எய்திவந்த தெவ்வரோ டெதிர்ந்துருத்து நின்றுபோர்
செய்திவென்றி நின்னதாதல் செய்துமென் றெழுந்ததால்.

1825. போர் குறித்துத் திரண்டு முழங்கி வந்த சோழனுடைய அப்படைகள் மதுரைக்கு இரண்டு யோசனை தூரத்தில் தங்கப் பாடிவீடு அமைத்தான். காடு வெட்டிய சோழ மன்னன் அரச சிங்கனோடு படை எடுத்து வந்திருப்பதை ஒற்றர்கள் மூலம் இராசேந்திர பாண்டியன் அறிந்தான். மாடங்கள் நிறைந்த கூடல் நாயகரான சோம சுந்தரப் பெருமானின் திருக்கோயிலை அடைந்து திருவடிகளில் வணங்கிக் குறையிரந்து வேண்டத் தொடங்கினான்.

1826. "எம்பெருமானே! அன்று நள்ளிரவில் தனியனாய் வந்து உமது திருவடியைப் பணிந்து சென்ற உமது பக்தனாகிய காடு வெட்டிய சோழன் இப்போதும் அந்நிலையை யுடையவனாதற்கு எனக்கு வேண்டும் பொருளை அனுப்பி நல்ல நட்பினைப் பெற விரும்பியவன் இப்போது எனக்கு விரோதமாகப் படையெடுத்து வந்துள்ளான்.

1827. அறத்தினை விடுத்து மறத்தினையுடைய அசுரர்களின் முப்புரங்களையும் நீறாக்கிய புண்ணியனே! வந்து வணங்கிய அன்று அவனுடைய அறச் செயல் களுக்குத் துணையாகி நின்ற நீர் அவன் செய்யும் மறச் செயலுக்கும் துணையாகி நின்று அருள் புரிவீரோ! கொடுமை செய்வது நன்றோ?" என்று கூறிக் குறையிரந்து வேண்டினான். அப்போது தேவர் தலைவனாகிய சோம சுந்தரக் கடவுளின் திருவருளால்,

இறைவரின் அசரீரி

1828. வானிலிருந்து அசரீரி மொழி ஒன்று தோன்றியது. "பாண்டியனே! நாளைக்கு நீ உன் அற்பமான சேனையோடு போர்க்களத்திற்குச் சென்று உன் பகைவரோடு எதிர்த்துச் சினந்து போர் புரிவாயாக! வெற்றி உன்னுடையதாகச் செய்வோம்" என்று வானில் அசரீரி எழுந்தது.

1829. காயவாணி செவிநுழைத்த காலைவேந்தர் இந்திரன்
நாயனா ரடிக்கணே நயந்தவன்பு முவகையும்
ஆயவேலை வீழ்ந்துதாழ்ந் தகன்றுதன் னிருக்கைபோய்
மேயினான் நிமிர்ந்தகங்குல் விடியுமெல்லை நோக்குவான்.

1830. கழித்தகங்கு லிறவிசும்பு கண்விழிக்கு முன்னரே
விழித்தெழுந்து சந்தியாதி வினைமுடித்து வானநீர்
சுழித்தலம்பு வேணியண்ணல் தூயபூசை செய்தெழீஇத்
தெழித்தெழுந்த சேனையோடு செருநிலத்தை
நண்ணினான்.

1831. அலைசிறந்த சலதிமீதொ ராறுசெல்லு மாறுபோல்
மலைசிறந்த நேரிவெற்பன் மள்ளர் சேனை வெள்ளமேற்
கலைசிறந்த மதிநிறைந்த கன்னிநாடு காவலான்
சிலைசிறந்த சிறியசேனை சென்றுஅலைத்து நின்றதே.

1832. உருமுவன்ன குரலினார் உலவையன்ன செலவினார்
வெருவுதீயின் வெகுளியார் வெடித்தவீர நகையினார்
செருவின்மான அணியினார் சினைஇமடித்த வாயினார்
இருவர்சேனை மள்ளரும் மெதிர்ந்துகை கலந்தனர்.

1829. ஆகாய வாக்கு கேட்டவுடன் இராசேந்திர பாண்டியன் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியவனாய், சோமசுந்தரக் கடவுளைப் பன்முறை விழுந்து வணங்கி விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து நீங்கித் தன்னிருக்கையை அடைந்து இரவு விடியும் எல்லையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்.

1830. நீண்ட இரவுப் பொழுதானது கழிய, வானம் வெளுக்கும் முன்னரே இராசேந்திர பாண்டியன் துயில் நீங்கி எழுந்தான். சந்தி முதலிய நித்திய கடன்களையும், கங்கை சுழித்து ஒலிக்கும் முடியினையுடைய இறைவனது பூசையையும் முடித்துக் கொண்டு எழுந்து தன் சேனை சூழப் புறப்பட்டுப் போர்க்களத்தை அடைந்தான்.

1831. அலைமிக்க கடலின் மீது ஓர் ஆறு சென்று பாயுமாறு போல, மலையிற் சிறந்த நேரி மலையினை யுடைய சோழனது பெரும் படை வீரராகிய கடலின் மேல், கலைப் பயிற்சியில் சிறந்த அறிவு நிறைந்த கன்னி நாட்டு மன்னனாகிய பாண்டியனது வில்போரில் தலைசிறந்த சேனை வருத்தி நின்றது.

சோழன் படையும் பாண்டியன் படையும் கலந்து போரிடுதல்

1832. இடி போன்ற குரலையுடையவரும், காற்றைப் போல் கடிது செல்லும் செலவினையுடையவரும் அஞ்சப்படும் தீப்போன்ற சினமுடையவரும், வெடிப்புடன் தோன்றிய வீர நகையுடையவரும், போரில் மானமென்னும் அணியினை உடையவரும் சினந்து மடிந்த வாயினை யுடையவருமாகி இரு திறத்துப் படை வீரரும் எதிர்த்துக் கைகலந்து போர் புரியத் தொடங்கினர்.

1833. மன்றலந் தெரியனேரி மலையவன் றமர்க்கெலாந்
தென்றலம் பொருப்பினான் இரண்டநான்கு கருவியும்
மின்றயங்கு செய்யவேணி விடையவன்றன் அருளினால்
ஒன்றனந்த மாகவந் துருத்தெதிர்ந்து தோன்றுமால்.

1834. தேரினோதை கந்துகஞ் சிரிக்குமோதை சொரிமதக்
காரினோதை பேரியங் கறங்குமோதை மறவர்தம்
போரினோதை வீரர்தோள் புடைக்குமோதை யோடுமுந்
நீரினோதை யொன்றெனக் கலந்தொடுங்கி நின்றதே.

1835. சிலைபயின்ற வீரரோடு சிலைபயின்ற வீரரே
கலைபயின்ற வாளரோடு கலைபயின்ற வாளரே
கொலைபயின்ற வேலரோடு கொலைபயின்ற வேலரே
மலைபயின்ற மல்லரோடு மலைபயின்ற மல்லரே.

1836. கரியுகைத்த பாகரோடு கரியுகைத்த பாகரே
பரியுகைத்த மறவரோடு பரியுகைத்த மறவரே
கிரியுகைத்த வலவரோடு கிரியுகைத்த வலவரே
எரியுகைத் தெதிர்ந்தகால் எனக்கலந்து மலைவரால்.

1837. விடுக்கும்வாளி யெதிர்பிழைப்பர் வெய்யவாளி யெய்துபின்
தொடுக்கும்வாளி வில்லொடுந் துணிப்பர்பின் கணிப்பற
மடுக்கும்வாளி! மார்புதைப்ப வாங்கிமற்றவ் வாளிகொண்
டடுக்குமேவ லாரையெய் தடர்ப்பர்கிள்ளி மள்ளரே.

1833. மணம்மிக்க மாலையணிந்த நேரிமலையை யுடைய சோழன் படைவீரர்கட்கெல்லாம், தென்றல் வீசும் பொதிய மலையினையுடைய பாண்டியனது திரண்ட நால்வகைப் படையும் மின் போல் விளங்கும் சிவந்த சடையும் இடப ஊர்தியும் உடைய சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் ஒன்று சேர்ந்து ஆனந்தமாக அளவில்லாத உருக் கொண்டு வந்து தோன்றின.

1834. தேர் செல்லும் ஒலியும், குதிரைகள் கனைக்கும் ஒலியும், மதம் சொரியும் யானைகளின் பிளிற்றொலியும், பெரிய வாத்தியங்கள் ஒலிக்கும் ஒலியும், வீரர்கள் புரியும் போரின் ஒலியும், அவர்கள் தோள் தட்டும் ஒலியும் ஆகிய இவற்றோடு கடலின் ஒலி ஒன்று என்று கூறுமாறு ஒன்று கலந்தன.

1835. வில்தொழில் பயின்ற வீரர்களோடு வில் தொழில் பயின்ற வீரர்களும், படைக்கலம் பயின்ற வீரரோடு படைக்கலம் பயின்ற வீரர்களும், கொலை பயின்ற வேல் வீரரோடு வேல் வீரரும், மற்றொழில் பயின்ற மல்லர்களோடு மற்றொழில் பயின்ற மல்லர்களும் போரிட்டனர்.

1836. யானை செலுத்தும் வீரரோடு யானை செலுத்தும் வீரரும், குதிரை செலுத்தும் வீரரோடு குதிரை செலுத்தும் வீரரும், மலை போன்ற தேர் செலுத்தும் வீரரோடு தேர் செலுத்தும் வீரரும், எரிப்பினை மூட்டி எரித்த காற்றைப் போல எதிர்த்துப் போர் செய்தனர்.

1837. சோழனுடைய சேனை வீரர்கள் பாண்டிய வீரர் விடுக்கும் கணையிலிருந்து தப்புவர். கொடிய கணைகளைத் தாம் விடுத்துப் பின்னர் அவர்கள் விடுக்கும் அம்புகளை வில்லோடு துண்டு படுத்துவர். பின் அவர்கள் அளவில்லாமல் செலுத்தும் அம்புகள் தம் மார்பில் தைக்க அவற்றைப் பிடுங்கி அவ்வம்புகளால் நெருங்கும் பகைவரை எதிர்த்துக் கொல்வர்.

1838. சோனைமாரி யிற்சரஞ் சொரிந்துநின்று துள்ளுவார்
ஆனவாளி யெதிர்பிழைத் தொதுங்கிநின்று அழற்சரங்
கூனல்வாளி சிலையிறத் தொடுத்தெறிந்து கூவுவார்
மீனகேத னத்துவேந்தன் வீரர்சென்னி வீரர்மேல்.

1839. தறிந்ததாள் தகர்ந்தசென்னி தரையுருண்ட வரையெனச்
செறிந்ததோள் சரிந்ததேர் சிதைந்தபல் படைக்கலம்
முறிந்தயானை கையிறா முழங்கிவீழ்ந்த செம்புனல்
பறிந்தபாறு பாரிடங்கள் பைத்தகூளி மொய்த்தவே.

1840. மடலினீடு தாரலங்கன் மன்னர்சேனை யின்னவா
றுடலினீழல் அடியகத் தொடுங்கவும்ப ருச்சியிற்
கடலினீடு கதிர்பரப்பு கடவுளெய்து மளவுநின்
றடலினீடி யிடைவிடாம லமருழந்த தாலரோ.

1841. அந்தநாள் அனைத்தையும் மழிக்கநின்ற வரன்நுதற்
சிந்துதீ யெனக்கனன் றுருத்துநின்று தெறுதலால்
எந்தயாறு மறவறப்ப இம்பரன்றி யும்பரும்
வெந்துவான யாறும்வற்ற வேனில்வந் திறுத்ததால்.

1842. மண்பிளந்து பிலநுழைந்து வரைபிளந்து நிரையவாய்
எண்பிளந்து நின்றபொங்கர் இலையுகப் பிளந்துமேல்
விண்பிளந்து பரிதிநீடு வெங்கரங்கள் யாரையுங்
கண்பிளந் தழன்றுவீசு கானலெங்கு மானதே.

1838. மீன்கொடியுடைய பாண்டிய வீரர்கள் சோழன் படை வீரர்களின் மேல் மழைபோலக் கணைகளைப் பொழிந்து களித்து நின்று துள்ளுவர். அங்ஙனமே பகைவர் எறிந்த அம்புகளுக்கு எதிர் தப்பி ஒதுங்கி நின்று அவர்கள் அம்பும் வளைந்தவில்லும் முறியுமாறு கொடிய கணைகளைத் தொடுத்து வீரமுழக்கம் செய்வர்.

1839. படைவீரர்களின் கால்கள் முறிந்தன. அறுபட்ட தலைகள் நிலத்தில் உருண்டன. மலைபோன்ற பெரிய தோள்கள் துண்டாகிச் சரிந்தன. தேர்கள் அழிந்தன. பல படைக்கலங்களும் முறிந்தன. குருதி வெள்ளம் ஓடிற்று. பருந்துகளும் பூதங்களும் கரியபேய்களும் போர்க்கள மெங்கும் நெருங்கின.

1840. இதழுடைய மணமிக்க மாலையை அணிந்த இரண்டு மன்னர்களின் சேனைகளும் இவ்வாறு உடம்பின் நிழல் அடியில் ஒடுங்குமாறு வான் உச்சியில் கடல் போல அளவின்றிப் பரந்த கிரணங்களையுடைய சூரியன் வருமளவும் வெற்றியின் மிக்கு நின்று இடைவிடாமல் போர் புரிந்தன.

வேனில் கொடுமை

1841. இறுதிக் காலத்தில் எல்லாவற்றையும் அழிக்குமாறு நின்ற உருத்திர மூர்த்தியின் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய தீயைப் போலச் சூரியன் சினந்து எரிதலால் நதிகளிலும் நீர் வறண்டது. இந்நிலவுலகமே அல்லாமல் வானுலகமும் கருகி, ஆகாய கங்கையும் வற்ற வேனிற் காலம் வந்துற்றது.

1842. சூரியனுடைய வெய்ய கிரணங்கள் நிலவுலகத்தைப் பிளந்து சென்று பாதாளவுலகிற் சென்று மலைகளையும் பிளந்தன. அளவற்ற சோலைகளின் இலைகள் கருகி விழுமாறு செய்தன. யாவரையும் கண் கூசுமாறு கானல் எங்கும் வீசிற்று.

வேறு

1843. ஆயிடை யலகைத் தேரும் அடைந்தவர் வெயர்வு மன்றித்
தூயநீர் வறந்த அந்தச் சுடுபுலந் தோய்ந்த காலும்
மீயுயர் மதிநி லாவும் வெய்யவாய்ச் சுடுநல் லோருந்
தீயவர் தம்மைச் சேர்ந்தாற் றீயவ ராவ ரன்றோ.

1844. விளைமத வூற்று மாறி வெகுளியுஞ் செருக்கு மாறித்
துளையுடைக் கைம்மான் றூங்கு நடையவாய்ச் சாம்பிச் சோர்ந்த
உளர்தரு மூழிக் காலி னோடுவாம் புரவி யெய்த்துத்
தளர்நடை யுடைய வாகித் தைவரு தென்றல் போன்ற.

1845. கானலந் தேர்மேற் சூறைக் காலெனும் பாகன் றூண்ட
வேனில்வேந் தேறிச் சீறி வெப்பமாம் படைகள் வீச
மாநிலங் காவல் பூண்ட மன்னவர் இருவர் தங்கள்
தானையு முடைந்து தண்ணீர் நசைசுடச் சாம்பிற் றன்றே.

1846. இரக்கமில் கொடிய செல்வர் மருங்குபோ யிரப்பார் போல
உருப்பமொண் டிறைக்குங் கள்ளி நீழல்புக் கொதுங்கு வாரும்
தருக்கற நிரப்பால் எய்த்தோர் தம்மினும் வறியார் பாற்சென்று
இரப்பபோ லிலைதீந் துக்க மரநிழ லெய்துவாரும்.

1843. பொய்த் தோற்றமுடைய கானல் நீரும், அங்கு சென்றவர்களின் வியர்வை நீரும் அல்லாமல் வேறு நல்ல நீர் சிறிதும் இன்றி வற்றின. தீயவரோடு சேர்ந்த நல்லவரும் தீயராவார் அல்லவா? ஆதலால் வெப்ப நிலத்தில் படிந்து வரும் காற்றும் வானில் உயர்ந்து விளங்கும் திங்களின் ஒளியும் சுடுவதாயிற்று.

1844. துளை பொருந்திய கையையுடைய யானைகள் இடைவிடாது ஒழுகும்மதநீர் சுரத்தலால் சினமும் செருக்கும் மாறி மந்த நடையுடையனவாய் வாடிச் சோர்ந்தன. ஊழிக் காற்றைப் போல் விரைந்து செல்லும் கடிய நடையுடைய குதிரைகள் தளர்ந்த நடையை உடையனவாகி தவழும் தென்றலை ஒத்தன.

1845. சூறைக் காற்று என்னும் பாகனால் செலுத்தப் பட்ட கானலாகிய தேரின் மேல், வேனிற்காலம் என்னும் அரசன் ஏறிச் சினந்து வெப்பமாகிய படைக்கலங்களை வீச மாநிலம் காவல் பூண்ட இரண்டு மன்னர்களின் சேனைகளும், அவ்வெம்மைக்குத் தோற்று நீர் வேட்கை வருத்த வாடின.

1846. இரக்கமற்ற கொடிய செல்வரிடம் சென்று இரப்பவரைப் போல வெப்பத்தை அள்ளி வீசுகின்ற கள்ளி மரத்தின் நிழலில் சிலர் சென்று ஒதுங்கினர். களிப்பு நீங்க மிக வறுமையடைந்தோர் தம்மிலும் மிகுந்த வறுமையுடை யாரிடம் சென்று இரத்தல் போலச் சிலர் இலைகள் கருகி உதிர்ந்த மரத்தின் நிழலின் கீழே சென்று ஒதுங்கினர்.

1847. கொல்லிபம் பரிமான் தேரின் குறுநிழல் ஒதுங்கு வாரும்
அல்லிருள் வட்டத் தொல்வெண் கவிகையு ளடங்கு
வாருஞ்
செல்லிடம் பிறிது காணார் வீரவான் சென்றோர் நின்ற
கல்லுட னிழல்சேர் வாரு மாயினார் களம ரெல்லாம்.

1848. ஆயதோ ரமையந் தன்னில் அளவிலா வுயிர்க்கு மீன்ற
தாயனார் துலைபோல் யார்க்குஞ் சமநிலை யாய கூடல்
நாயனார் செழியன் றானை நனந்தலை வேத நாற்காற்
பாயதோர் தண்ணீர்ப் பந்தர் பரப்பியப் பந்தர் நாப்பண்.

1849. புண்டர நுதலுங் காதின் புறத்தணி மலரும் பாத
முண்டக மலர்மேல் ஒற்றைக் கிண்கிணி முழக்குங்
கச்சியாப்
புண்டதோ லுடையுங் கண்டோ ருள்ளமுங் கண்ணுங்
கொள்ளை
கொண்டபுன் னகையும் உள்ளக் கருணையின் குறிப்புந்
தோன்ற.

1850. அருமறை யகத்து ணின்றாங் கருந்தவர் ஆகி வேணிப்
பொருபுனல் பூரித் தாங்கோர் புண்ணியச் சிரகந் தாங்கி
ஒருவருக் கொன்றே யாகி யிலக்கருக் கிலக்க மாகித்
தருகுறும் புழையால் வாக்கித் தணித்தனர் தண்ணீர்த்
தாகம்.

1847. கொலைத் தொழில் மிக்க யானை, குதிரை, தேர் இவற்றின் சிறு நிழலில் சிலர் ஒதுங்கினர். மிக்க இருள் போன்ற கேடகத் துள்ளும் வெள்ளிய குடையினுள்ளும் சிலர் ஒதுங்கினர். செல்லுவதற்கு வேறு இடமின்றி வீர சுவர்க்கம் சென்ற வீரர்களின் பெயர் குறித்து நின்ற நடுகநற்களின் நிழலில் சிலர் ஒதுங்கி நின்றனர்.

சோமசுந்தரக் கடவுள் தண்ணீர்ப் பந்தர் வைத்தல்

1848. இவ்வாறு வெப்பத்தால் வருந்தும் சமயத்தில் அளவிறந்த உயிர்கள் அனைத்திற்கும் ஈன்ற தாய் போன்றவராகிய பெருங்கருணையாளரும், தராசுக் கோல்போல் நடுவுநிலைமை தாங்குபவரும் கூடற் பெருமானுமாகிய சோமசுந்தரக் கடவுள் இராசேந்திர பாண்டியன் படையின் நடுவுள் நான்கு வேதங்களும் நான்கு கால்களாய்ப் பொருந்தியதொரு தண்ணீர்ப் பந்தர் வைத்தார். அப்பந்தரின் நடுவில்,

1849. நெற்றியில் அணிந்த திரிபுண்டரமும், காதின் மீது அணிந்த மலரும், திருவடித் தாமரையில் தரித்த ஒற்றைக் கிண்கிணியின் ஒலியும், இடுப்பில் கச்சினால் இறுகக் கட்டப்பட்ட புலித்தோல் ஆடையும், கண்டோர் உள்ளத்தைக் கவரும் திருப்புன் முறுவலும், திருவுள்ளத்தில் எழுந்த அருட்குறிப்பும் புலப்பட,

1850. அரிய வேதத்தில் கூறப்படும் தவக்கோலம் உடையவராய் எழுந்தருளியிருந்து சடையில் அணிந்த புண்ணிய வடிவம் தாங்கிய வற்றாத கங்கை நீரை நிரப்பிய ஒரு கெண்டியை ஏந்தி, ஒருவருக்கு ஒன்றேயாய் இலட்சம் பேருக்கு இலட்சமாய் உள்ள துவாரத்தினால் தண்ணீர் வார்த்துத் தாகத்தைத் தணித்து அருளினார்.

1851. சுந்தரப் புத்தேள் வைத்த துறுமலர் வாசத் தெண்ணீர்ப்
பந்தர்புக் கடைந்து நன்னீர் பருகியெப்ப் பகல ஆற்றல்
வந்தபின் செழியன் தன்னோர் வளவன்மேல் ஏறிச் சீறி
அந்தமி லனிகஞ் சிந்தித் தும்பைவேய்ந் தடுபோர்
செய்தார்.

1852. கடலுடைந் தென்னப் பொன்னி காவலன் தானை சாய
மடலுடை வாகை வேய்ந்து வளவனை மருக னோடும்
மிடலுடைத் தறுகட் சேனை வீரர்வெங் கையாற் பற்றி
அடலுடைக் கன்னி நாடர்க் கரசன்முன் கொண்டு
போந்தார்.

1853. கொடுவந்த வளவன் தன்னைக் கோப்பெருஞ் செழியர்
கோமான்
வடுவந்த தம்பி யோடு மாடநீள் கூடன் மேய
கடுவந்த மிடற்றார் முன்போய் விடுத்தெந்தை
கருத்தியாது என்ன
நடுவந்த நிலையான் கேட்ப நாயக னிகழ்த்து மன்னோ.

1854. அறவன் நீயல்லை யோவுன் னகத்தினுக் கிசைந்த
செய்கென்
றிறைவன தருளால் வானின் றெழுமொழி கேட்டு
வைகைத்
துறைவனும் அறத்தி னாற்றாற் சோழனைச் சிலமால்
யானை
மறவயப் பரிபூண் மற்றும் வழங்கினான் விடுத்தான்
பின்னர்.

இராசேந்திர பாண்டியன் வெற்றி பெறுதல்

1851. சோமசுந்தரக் கடவுள் வைத்தருளிய மணம் மிகுந்த மலரால் மணம் ஊட்டிய தண்ணீர்ப் பந்தரை அடைந்து, தெளிந்த நல்ல நீரினைப் பருகி இளைப்பை நீக்கிக் கொண்ட பாண்டியனின் படை வீரர்கள் முன் இழந்த வலிமையினை மீண்டும் பெற்றனர். பின்னர் சோழன் மேல் போருக்குச் சினந்தெழுந்து அவன் படைகள் சிதறும்படி, தும்பை மாலையணிந்து கொல்லுதலையுடைய போரைப் புரிந்தனர்.

1852. சோர்வடைந்திருந்த சோழப்படைகள் கலங்கிக் கடல் உடைந்தாற்போலப் புறங்கொடுத்து ஓடின. அப்போது இராசேந்திரப் பாண்டியன் வாகை மாலை சூடினான். படைவீரர்கள் காடு வெட்டிய சோழனை அவனுடைய மருமகனான அரசசிங்க பாண்டியனோடு பிடித்து, வெற்றியுடைய கன்னி நாட்டு அரசனாகிய இராசேந்திர பாண்டியன் முன்பு கொண்டு வந்தனர்.

1853. பெரிய தலைமையுடைய செழியர் பெருமானாகிய இராசேந்திர பாண்டியன் அவ்வாறு கொண்டு வரப்பட்ட சோழனையும் தன் குடிக்கு வடு உண்டாகும்படி செய்த தம்பியையும் மாடங்கள் மிக்க கூடலில் எழுந்தருளிய கறைமிடற்றனாகிய சோமசுந்தரக் கடவுள் திருமுன் கொண்டு போய் விடுத்து "எம்பெருமானே! உமது திருவுள்ளம் யாது?" என்று நடுவுநிலைமை பொருந்தியவனாய் கேட்டான். இறைவன் பதில் கூறியருளுவான்.

1854. "பாண்டியனே! நீ அறநெறி பிழையாதவன் அல்லவா? உன் கருத்திற்கு இசைந்ததைச் செய்வாயாக!" என்று இறைவன் திருவருளால் வானினின்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அதனைக் கேட்ட வையை நீர்த்துறையை யுடைய பாண்டியனும் அறநெறியில் காடு வெட்டிய சோழனைச் சில மத யானைகளையும், வெற்றியும் வண்மையும் உடைய குதிரைகளையும், அணிகலன் களையும் பிற வற்றையும் கொடுத்து அனுப்பி வைத்தான்.

1855. வள்ளல்தன் றம்பி யென்னு மன்னவர் சிங்கந் தன்னைத்
தள்ளருந் தறுக ணான்மைத் தருக்கறத் தானாள் செல்வம்
உள்ளன சிறிது மாற்றி யொதுக்கிளவ் வுயிர்க்குந் தாயாய்ப்
பள்ளநீர் அகலங் காத்துப் பல்வளம் பழுக்க வாழ்ந்தான்.

தண்ணீர்ப்பந்தர் வைத்த படலம் முற்றிற்று.

36. இரசவாதஞ் செய்த படலம்

1856. வரதன் மீனவன் படையிடை வந்துநீர்ப் பந்தர்
விரத னாகிநீர் அருத்திய வினையுரை செய்தும்
பரத நூலியல் நாடகப் பாவையா ளொருத்திக்
கிரத வாதஞ்செய் தருளிய ஆடலை யிசைப்பாம்.

1857. பருங்கை மால்வரைப் பூழியின் பைந்தமிழ் நாட்டின்
இரங்கு தெண்டிரைக் கரங்களால் ஈர்ம்புனல் வைகை
மருங்கில் நந்தன மலர்ந்தபன் மலர்கடூஉய்ப் பணியப்
புரங்க டந்தவன் இருப்பது பூவண நகரம்.

1855. பின்பு இராசேந்திரபாண்டியன் தனது தம்பியாகிய அரசசிங்கனை, தள்ளுதற்கரிய அவனது அஞ்சாமையும் ஆண்மைச் செருக்கும் நீங்க, தான் ஆளும் செல்வங்களாய் உள்ளவற்றுள் சிறிது கொடுத்து அவனை வேறாக ஒதுக்கி வைத்தான். பின் எல்லா உயிர்களுக்கும் அன்னையாய் இருந்து கடல் சூழ்ந்த இந்நிலவுலகினைக் காத்து பல வளங்களும் சிறக்க வாழ்ந்தனன்.

தண்ணீர்ப்பந்தர் வைத்த படலம் முற்றிற்று.

36. இரசவாதஞ் செய்த படலம்

1856. வள்ளலாகிய சோமசுந்தரக் கடவுள் பாண்டியன் சேனை நடுவுள் தண்ணீர்ப் பந்தல் வைக்கும் முனிவனாய் வந்து நீரைப் பருகுவித்த திருவிளையாடலைக் கூறினோம். பரதநூல் இலக்கணம் அமைந்த நாடகத்தில் வல்ல பதுமை போன்ற பொன்னனையாளுக்கு இரசவாதம் செய்த திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

திருப்பூவணத் தலத்தின் பெருமை

1857. பருத்த கையும் மலை போன்ற யானைப் படையுமுடைய இராசேந்திர பாண்டியனின் பைந்தமிழ் பாண்டிய நாட்டிலே, குளிர்ந்த நீரையுடைய வைவை யாற்றின் ஒலிக்கும் அலைக் கைகளால், பக்கமுள்ள நந்த வனங்களில் மலர்ந்த பல மலர்ளைத் தூவி இறைஞ்ச, திரிபுரங்களை நீறாக்கிய இறைவன் வீற்றிருக்கும் 'திருப்பூவணம்' என்னும் பெயர் கொண்ட ஒரு சிவத்தலம் உள்ளது.

1858. எண்ணி லங்குறை சராசர மிலிங்கமென் றெண்ணி
விண்ணி னாள்களும் கோள்களும் விலங்குவ
தியாக்கைக்
கண்ணி னான்கதிர் முதற்பல கடவுளர் பூசை
பண்ணி வேண்டிய நல்வரம் அடைந்ததப் பதியில்.

1859. கிளியு ளார்பொழிற் பூவணக் கிழவர்தங் கோயில்
தளியு ளார்தவப் பேறனாள் தாதுகு பூந்தார்
அளியு ளார்குழ லணங்கனாள் அந்தரத் தவர்க்குங்
களியு ளார்தர மயக்குறூஉங் கடலமு தனையாள்.

1860. நரம்பி னேன்ஏழிசை யாழிசைப் பாடலு நடநூல்
நிரம்பும் ஆடலும் பெண்ணல நீர்மையும் பிறவும்
அரம்பை மாதரை யொத்தன ளறனெறி யொழுகும்
வரம்பி னாலவர் தமக்குமே லாயினாள் மன்னோ.

1861. ஆய மாதர்பேர் பொன்னனை யாளென்ப அவடன்
நேய வாயமோ டிரவிரு ணீங்குமுன் எழுந்து
தூய நீர்க்குடைந் துயிர்புரை சுடர்மதிக் கண்ணி
நாய னாரடி யருச்சனை நியமமு நடாத்தி.

1862. திருத்தர் பூவண வாணரைச் சேவித்துச் சுத்த
நிருத்த மாடிவந் தடியரைப் பொருளென நினையுங்
கருத்த ளாயருச் சித்தவர் களிப்பின் சுவையூண்
அருத்தி எஞ்சிய தருந்துவாள் அஃதவள் நியமம்.

1858. அத்தலத்தில், அசையும் பொருள் அசையாப் பொருள் எல்லாம் சிவலிங்க வடிவம் என்று கருதி நவகோள்களும் விண் மீன்களும் வானின்கண் சற்று விலகிச் செல்லும். உடலில் கண்கள் உள்ள இந்திரன் சூரியன் முதலிய பல தேவர்கள் வந்து வழிபட்டுத் தாம் விரும்பிய வரங்களைப் பெற்றுள்ளனர். இத்தகைய திருப்பூவணத்தில்,

பொன்னனையாளின் தன்மை

1859. கிளிகள் நிறைந்து வாழும் சோலை சூழ்ந்த திருப்பூவண நாதருடைய திருக்கோயிலில் பணிபுரியும் உத்திர கணிகையர்களின் தவப்பயன் போல ஒரு நங்கை உள்ளாள். அவள் மகரந்தம் சிந்தும் மலர் மாலையும் வண்டு இசைபாடி மிழற்றும் கூந்தலையுமுடைய தெய்வப் பெண்ணை ஒத்தவள். தேவர்கட்கும் உள்ளத்திற் களிப்புமிக மயக்குகின்ற அமுதம் போன்றவள்.

1860. நரம்பின் ஏழிசைகளையும் யாழின் வழியே பாடுவதினும், பரத நூலின் இலக்கணப்படி ஆடுவதிலும் மிக வல்லவள். பெண்களுக்குரிய அழகின் தன்மையினும் பிறவற்றிலும் அரம்பை மகளிரை நிகர்த்தவள் ஆயினும் சிவ புண்ணிய நெறியில் நடக்கும் ஒழுக்கத்தினால் அவ்வரம்பை மகளிரினும் மேலானவள்.

1861. இத்தகைய சிறப்பமைந்த அப்பெண்ணின் பெயர் 'பொன்னனையாள்' ஆகும். அவள் நாள்தோறும் தன் அன்புள்ள தோழியர்களுடன், இரவின் இருள் புலருவதற்கு முன்னரே துயில் எழுந்து தூய நீரில் மூழ்கி, உயிர் போன்ற ஒளிமிக்க பிறைமதியைக் கண்ணியாகச் சூடிய சிவ பெருமானை அர்ச்சித்தலாகிய பூசனையை முடித்துக் கொள்வாள்.

1862. தூயதாகிய திருக்கோயிலையடைந்து திருப்பூவண நாதரை வணங்கி, 'சுத்த நிருத்தம்' ஆடுவாள். பிறகு வீட்டிற்கு வந்து சிவனடியார்களைச் சிவனெனப் பாவித்து வரவேற்றுப் பணிந்து இனிய சுவையுடன் கூடிய திருவமுது செய்விப்பாள். அதன்பின் அவர்கள் புசித்து எஞ்சியதையே புசிப்பாள். அஃது அவளுடைய நியமமாகும்.

1863. மாத ரிந்நெறி வழங்குநாண் மற்றவள் அன்பைப்
பூத லத்திடைத் தெருட்டுவான் பொன்மலை வல்லி
காதல் நாயகன் றிருவுருக் காணிய வுள்ளத்
தாத ரங்கொடுத் தருளினார் பூவணத் தையர்.

1864. ஐயர் தந்தபே ரன்புரு வாயினாள் மழுமான்
கையர் தந்திரு வுருவினைக் கருவியாற் கண்டு
மைய கண்ணினாள் வைகலும் வருபொருள் எல்லாம்
பொய்யி லன்புகொண் டன்பர்தம் பூசையில் நேர்வாள்.

1865. அடியர் பூசனைக் கன்றியெஞ் சாமையால் அடிகள்
வடிவு காண்பதெப் படியென்று மடியிலச் செழியற்கு
ஒடிவில் பொற்கிழி நல்கிய வள்ளலை யுன்னிப்
பிடிய னாளிருந் தாளஃ தறிந்தனன் பெருமான்.

1866. துய்ய நீறணி மெய்யினர் கட்டங்கந் தொட்ட
கையர் யோகபட் டத்திடைக் கட்டினர் பூதிப்
பையர் கோவண மிசையசை யுடையினர் பவளச்
செய்ய வேணியர் அங்கொரு சித்தராய் வருவார்.

1867. வந்து பொன்னனை யாண்மணி மாளிகை குறுகி
அந்த மின்றிவந் தமுதுசெய் வாரொடும் மணுகிச்
சிந்தை வேறுகொண் டடைந்தவர் திருவமு தருந்தாது
உந்து மாளிகைப் புறங்கடை யொருசிறை யிருந்தார்.

சிவபெருமானின் திருவுருவத்தைச் சமைக்க எண்ணுதல்

1863. இவ்வாறு பொன்னனையாள் ஒழுகும் நாளில் அவளுடைய அன்பை உலகத்தாருக்கு அறிவிக்கும் பொருட்டு உமையம்மையின் அன்புள்ள நாயகனான சிவ பெருமான் தமது திருவுருவத்தை வார்ப்பிக்க வேண்டு மென்னும் ஆசையை அவள் மனத்தின் கண் கொடுத்தருளினார்.

1864. மைதீட்டிய விழியுடைய பொன்னனையாள் சிவ பெருமான் கொடுத்தருளிய பெரிய அன்பே வடிவமாக மாறி மழுவையும் மானையும் திருக்கரத்தில் ஏந்திய சிவ பெருமானது திருவுருவை கருவியினால் செய்வித்தாள். நாள்தோறும் ஆடல் பாடல் முதலியவற்றால் வருகின்ற பொருள் முழுவதையும் மெய்யன்பினால் அடியார் பூசையிலே செலவழித்தாள்.

1865. கிடைக்கும் பொருள் யாவும் அடியார் வழிபாட்டிற்கே அல்லாமல் சிறிதும் எஞ்சாமையால் சிவபெருமானின் திருவுருவம் வார்ப்பது எங்ஙனம் என்று கருதி வருத்தமுற்றாள். குலபூடண பாண்டியனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத பொற்கிழியினை அருளிய சோம சுந்தரக் கடவுளைப் பெண் யானையைப் போல்வாளாகிய அவள் மனதில் சிந்தித்தாள். சிவபெருமான் அவள் நினைவைத் தம் திருவுள்ளத்தில் கொண்டிருளினார்.

சிவபெருமான் சித்தர் வடிவம் கொண்டு வருதல்

1866. ஒருநாள் சிவபெருமான், தூய திருநீறு அணிந்த திருமேனியும், கட்டுவாங்கம் (மழு) பிடித்த திருக்கரமும் யோகபட்டிகை கட்டிய இடையும், கோவணம் மீது கட்டிய ஆடையும் பவளம் போன்ற சிவந்த செஞ்சடையும் உடைய ஒரு சித்த மூர்த்தியின் வேடம் பூண்டு அங்கு வந்தார்.

1867. அங்ஙனம் வந்து பொன்னனையாளின் திருமாளிகையை அடைந்தார். அளவில்லாமல் வந்து அமுது செய்யும் அடியார்களோடும் கூடித் திருவமுது செய்யாமல் திருவுள்ளத்தில் ஏதோ ஒன்றைக் கருதியவராய்க் கடைவாயிலின் ஒரு பக்கத்தில் எழுந்தருளி யிருந்தார்.

1868. அமுது செய்தருந் தவரெலாம் அகலவே றிருந்த
அமுத வாரியை யடிபணிந் தடிச்சிய ரைய
அமுத செய்வதற் குள்ளெழுந் தருள்கென உங்கள்
அமுத னாளையிங் கழைமினென் றருளலு மனையார்.

1869. முத்த ராமுகிழ் வாணகை அல்குலாய் முக்கண்
அத்த ரானவர் தமரெலா மமுசெய் தகன்றார்
சித்த ராயொரு தம்பிரான் சிறுநகை யினராய்
இத்த ராதலத் தரியரா யிருக்கின்றார் என்றார்.

1870. நவம ணிக்கலன் பூத்தபூங் கொம்பரின் நடந்து
துவரி தழ்க்கனி வாயினாள் சுவாகதம் என்
றுவமை யற்றவர்க் கருக்கியம் ஆசனம் உதவிப்
பவம கற்றிய வடிமலர் முடியுறப் பணிந்தாள்.

1871. எத்த வஞ்செய்தேன் இங்கெழுந் தருளுதற் கென்னாச்
சித்தர் மேனியும் படிவெழிற் செல்வமு நோக்கி
முத்த வாணகை யரும்பநின் றஞ்சலி முகிழ்ப்ப
அத்தர் நோக்கினா ரருட்கணா லருள்வலைப் பட்டாள்.

1868. அரிய தவத்தினையுடைய சிவனடியார்கள் எல்லாம் திருவமுது செய்து கொண்டு திரும்பிச் சென்றனர். வேறாக இருந்த அமுத வெள்ளமாகிய சித்தமூர்த்தியைப் பொன்னனையாளின் தாதியர் கண்டு அடி வணங்கி, "ஐயனே! திருவமுது செய்ய உள்ளே எழுந்தருள வேண்டும்" என்று வேண்டினர். அதற்கு சித்தர், "உங்கள் அமுதம் போன்ற தலைவியை இங்கே அழையுங்கள்" என்றார். அத்தாதியர்,

1869. "முத்தைப் போன்ற முறுவலையும் படட அரவம் போன்ற அல்குலையும் உடைய அம்மையே! முக்கண்ணர் சுற்றமாகிய அடியார்கள் அனைவரும் திருவமுது செய்து நீங்கினர். ஒரு தம்பிரான் சித்தமூர்த்தியாய் புன்னகையுடையவராய் இந்நிலவுலகில் கிடைத்தற்கரியவராய் இன்னும் அமுது செய்யாது இருக்கின்றார்" என்று கூறினர்.

1870. உடனே பவளம் போன்ற இதழையும், கொவ்வைக் கனி போன்ற வாயையும் உடைய பொன்னனையாள், நவமணிகள் பூத்த ஒரு பூங்கொம்பு போல நடந்து சித்தமூர்த்தியின் திருமுன் சென்று, "தேவரீர் வரவு நல்வரவாகுக" என்று கூறினாள். அச்சித்தமூர்த்திகளுக்கு அருக்கியமும் ஆசனமும் கொடுத்து அடியார் பிறப்பை நீக்கிய அரிய திருவடிகளில் விழுந்து வணங்கி எழுந்தாள்.

1871. சித்தமூர்த்திகளின் திருமேனியினது அழகின் செல்வத்தைக் கண்டு, முத்துப் போன்ற அழகிய புன்னகை தோன்ற நின்று "தேவரீர் இங்கு எழுந்தருள்வதற்கு என்ன தவம் செய்தேனோ?" என்று கூறிச் சிரசின்மீது கைகூப்பித் தொழுதாள். சித்த மூர்த்திகள் அன்புடன் பொன்னனையாள் மீது திருநோக்கம் வைத்தருளினார். பொன்னனையாள் பக்தி வலையிற்பட்ட பரமனது திருவருளான வலையில் அகப்பட்டாள்.

1872. ஐய வுள்ளெழுந் தருளுக வடிகள்நீர் அடியேன்
உய்ய வேண்டிய பணிதிரு வுளத்தினுக் கிசையச்
செய்ய வல்லனென் றஞ்சலி செய்பவுண் ணகையா
மைய னோக்கியை நோக்கிமீ னோக்கிதன் மணாளன்.

1873. வடியை நேர்விழி யாய்பெரு வனப்பினை சிறிதுன்
கொடியை நேரிடை யெனஇளைத் தனையெனக்
கொன்றை
முடியி னானடி, ஆரமென் முகிழ்முலைக் கொடிதாழ்ந்
தடிய னேற்குவே றாயொரு மெலிவிலை யையா.

1874. எங்க ணாயகர் திருவுருக் காண்பதற் கிதயந்
தங்கு மாசையாற் கருவுருச் சமைத்தனன் முடிப்பேற்கு
இங்கு நாடொறு மென்கையில் வரும்பொருள் எல்லாம்
உங்கள் பூசைக்கே யல்லதை யொழிந்தில வென்றாள்.

1875. அருந்து நல்லமு தனையவள் அன்புதித் திக்கத்
திருந்து தேனென விரங்குசொற் செவிமடுத் தையர்
முருந்து மூரலாய் செல்வமெய் யிளமைநீர் மொக்குள்
இருந்த வெல்லையு நிலையில வென்பது துணிந்தாய்.

சித்தமூர்த்தி பொன்னனையாளை மெலிந்த காரணம் யாதெனல்

1872. பொன்னனையாள் சித்தமூர்த்திகளைப் பார்த்து, "எம்பெருமானே! உள்ளே எழுந்தருள்க. தேவரீர் திருவுள்ளத்திற்கு ஏற்றவாறு தொண்டினைச் செய்ய வல்லேன்" என்று கூறி வணங்கினாள். அங்கயற்கண்ணி மணாளனாகிய சோமசுந்தரக் கடவுள் உள்ளே நகைத்து மையல் விளங்கும் பார்வையுடைய பொன்னனையாளைப் பார்த்து,

1873. "பிளந்த மாவடு போன்ற விழியுடையவளே! பேரழகுடைய நீ உனது கொடி போன்ற இடையினைப் போல் சிறிது உடல் மெலிந்திருக்கின்றாய். அதன் காரணம் யாது?" என்று வினவினார். அரும்பொத்த முலையுடைய கொடி போன்ற அவள், கொன்றை மலரணிந்த சிவ பெருமானின் திருவடியை வணங்கி, "ஐயனே! அடியேனுக்கு வேறொரு மெலிவும் இல்லை.

1874. எங்கள் தலைவராகிய சிவபெருமானுடைய திருவுருவத்தை ஆக்குவதற்கு உள்ளத்தில் பெருவிருப்பம் கொண்டு மெழுகினால் கருக்கட்டி வைத்தேன். அதனைப் பொன்னினால் செய்து முடிக்கக் கருதிய எனக்கு நாள்தோறும் கையில் வரும் பொருள் முழுவதும் அடியார்களாகிய உங்கள் பூசைக்கே செல்கின்றன. சிறிதும் எஞ்சுவதில்லை" என்று கூறினாள்.

சித்தமூர்த்திகள் சிவனடியார் பெருமை கூறல்

1875. உண்ணுதற்கு அரிய அமுதம் போன்ற பொன்னனையாள், அன்போடு கூறிய இன்சொல்லாகிய தேனைச் சித்த மூர்த்திகள் தாம் திருச்செவி வாய்மடுத்து, "மயிலிறகின் அடிபோன்ற பற்களையுடையவளே! நீ யாக்கையும், இளமையும், செல்வமும் நீர்க்குமிழி போலச் சிறிதும் நிலையில்லாதவை என்று நன்கு உணர்ந்தாய்.

1876. அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை அறத்துள்
அதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்றுள்
அதிக மாஞ்சிவ பூசையுள் அடியவர் பூசை
அதிக மென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய்.

1877. உறுதி யெய்தினை யிருமையும் உன்பெயர்க் கேற்ப
இறுதி யில்லவன் திருவுரு வீகையாற் காணப்
பெறுதி யாகநின் மனைக்கிடைப் பித்தளை ஈயம்
அறுதி யானபல் கலன்களும் கொணர்தியென்
றறைந்தார்.

1878. ஈயஞ் செம்பியிரும் பிரசிதம் என்பவும் புணர்ப்பாற்
தோயும் பித்தளை வெண்கலந் தராமுதற் றொடக்கத்
தாயும் பல்வகை உலோகமுங் கல்லென அலம்பத்
தேயுஞ் சிற்றிடை கொண்டுபோய்ச் சித்தர்முன்
வைத்தாள்.

1879. வைத்த வேறுவே றுலோகமு மழுவுழை கரந்த
சித்த சாமிகள் நீற்றினைச் சிதறினர் பார்த்தே
இத்தை நீயிரா எரியிலிட்டு எடுக்கினன் பொன்னாம்
அத்தை நாயகன் றிருவுருக் கொள்கென வறைந்தார்.

1876. "நல்ல தருமம் ஒன்றே நிலையுடையது; சிறப்புடையது என்று துணிந்தாய். அத்தருமங்களுள் சிவ புண்ணியமே சிறந்தது என்றும், அச்சிவ தருமத்துள் சிவபூசையே சிறந்தது என்றும் அச்சிவபூசையுள் 'மகேசுர பூசை'யே சிறந்தது என்றும் அறிந்து சிவனடியார்களை பூசிப்பாயாயினை.

1877. "ஆதலால் நீ இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் பெற்றுக் கொண்டாய். பொன்னனையாள் என்ற உன் பெயருக்கேற்றவாறு அழிவில்லாத இறைவன் திருவுருவைப் பொன்னாற் செய்யப் பெறுவாயாக. அதற்கு உன் மனையில் உள்ள பித்தளைப் பாத்திரம் ஈயப் பாத்திரம் முதலிய எல்லாவற்றையும் இங்குக் கொண்டு வருவாய்" என்று கூறியருளினார்.

1878. உடனே, தேய்ந்த சிறிய இடையை உடைய பொன்னனையாள், ஈயம், செம்பு, இரும்பு, வெள்ளி என்பனவும் ஒன்றோடொன்று கலந்தால் உண்டாகும் பித்தளை வெண்கலம் தாரா முதலிய பலவகை உலோகங்களையும் கல்லென்று ஒலிக்கக் கொண்டு போய்ச் சித்தமூர்த்திகள் முன்னர் வைத்தனள்.

சித்தமூர்த்திகள் இரசவாதம் புரிதல்

1879. அங்ஙனம் கொண்டு வந்து வைத்த உலோகங்கள் எல்லாவற்றின் மீதும் மழுவையும் மானையும் மறைத்து வந்த சித்த மூர்த்திகள் திருநீற்றினைத் தூவி "இவையாவும் பொன்னாகுக" என்று சிந்தித்து அவளை நோக்கி, "இவற்றை நீ இன்றிரவு நெருப்பிலிட்டு எடுக்கின் யாவும் பொன்னாய் விடும். அப்பொன்னினால் இறைவன் திருமேனியை வார்ப்பிக்கக் கடவாய்" என்று கூறியருளினார்.

1880. மங்கை பாகரை மடந்தையும் இங்குநீர் வதிந்து
கங்குல் வாயமு தருந்தியிக் காரிய முடித்துப்
பொங்கு காரிருள் புலருமுன் போமெனப் புகன்றாள்
அங்க யற்கணாள் தனைப்பிரி யாரதற் கிசையார்.

1881. சிறந்த மாடநீண் மதுரையிற் சித்தர்யா மென்று
மறைந்து போயினார் மறைந்தபின் சித்தராய் வந்தார்
அறைந்த வார்கழ லலம்பிட வெள்ளிமன் றாடி
நிறைந்த பேரொளி யாயுறை நிருத்தரென்று அறிந்தாள்.

1882. மறைந்து போயினார் எனச்சிறி தயர்ச்சியு மனத்தில்
நிறைந்த தோர்பெருங் கவற்சியை நீக்கினார் என்னச்
சிறந்த தோர்பெரு மகிழ்ச்சியும் உடையவளாய்ச் சித்தர்
அறைந்த வாறுதீப் பெய்தனள் உலோகங்க ளனைத்தும்.

1883. அழல டைந்தபின் இருண்மல வலிதிரிந் தரன்றாள்
நிழல டைந்தவர் காட்சிபோல் நீப்பருங் களங்கங்
கழல ஆடக மானதா லதுகொண்டு கனிந்த
மழலை ஈர்ஞ்சொலாள் கண்டனள் வடிவிலான் வடிவம்.

1880. அவ்வாறு கூறிய உமைபாகராகிய சிவபெருமானைப் பொன்னனையாளும், "ஐயனே! நீர் இன்றைக்கு இங்கிருந்து இரவிலே திருவமுது செய்து கொண்டு இக்காரியத்தையும் முடித்துவிட்டுப் பொழுது விடியுமுன் போவீராக" என்று வேண்டினாள். அங்கயற் கண்ணம்மையைப் பிரியாதவராகிய இறைவர் அதற்கு உடன்படவில்லை.

1881. "சிறப்புடைய மாடங்கள் உயர்ந்த மதுரையில் வசிக்கும் சித்தர் யாம்", என்று கூறி மறைந்தருளினார். அங்ஙனம் அவர் மறைந்தபின், இங்குச் சித்த சாமியாய் வந்தவர், பலரும் புகழும் வீரக்கழல் அணிந்து வெள்ளியம் பலத்திலே திருக்கூத்து ஆடியருளும் எங்கும் நிறைந்த பெரிய ஒளிவடிவாய்த் தங்கிய திருக்கூத்தரே என்று உணர்ந்தனள்.

பொன்னனையாள் உலோகங்களைத் தீயிலிடப் பொன்னாதல்

1882. அச்சித்த மூர்த்திகள் மறைந்து போயினரே என்று சிறிது மனம் சோர்ந்தாள். ஆனால் அவள் தன் மனதில் நிறைந்துள்ளதாகிய ஒரு பெரிய கவலையை நீக்கினார் என்று சிறந்ததாகிய ஒரு பெரிய மகிழ்ச்சியும் அடைந்தனள். பிறகு அச்சித்த மூர்த்திகள் கட்டளை இட்ட வண்ணவே உலோகங்கள் அனைத்தையும் அன்றிரவு தீயில் புடம் இட்டனள்.

1883. ஆணவமல வலிகெட்டு இறைவனின் திருவடி நீழல் அடைந்தவர் சிவமாக விளங்குதல் போல உலோகங்கள் நெருப்பினைச் சேர்ந்தவுடன், நீங்குதல் இல்லாத களிம்பு நீங்கப் பொன்னாக மாறின. பொன்னனையாள் அப்பொன்னைக் கொண்டு ஒரு வடிவமும் இல்லாத இறைவனுக்கு ஒரு திருவுரு வார்ப்பித்தாள்.

1884. மழவிடை யுடையான் மேனி வனப்பினை நோக்கி யச்சோ
அழகிய பிரானோ வென்னா அள்ளிமுத் தங்கொண்டு அன்பிற்
பழகிய பரனை யானாப் பரிவினாற் பதிட்டை செய்து
விழவுதேர் நடாத்திச் சின்னாள் கழிந்தபின் வீடு பெற்றாள்.

1885. நையுநுண் ணிடையி னாள் அந் நாயகன் கபோலத் திட்ட
கையுகிர்க் குறியுஞ் சொன்ன காரணக் குறியுங் கொண்டு
வெய்யவெங் கதிர்கால் செம்பொன் மேனிவே றாகி நாலாம்
பொய்யுகத் தவர்க்குத் தக்க பொருந்துரு வாகி மன்னும்.

இரசவாதம் செய்த படலம் முற்றிற்று.

37. சோழனை மடுவில் வீட்டிய படலம்

1886. மின்னனை யார்பூங் கொன்றை வேணியர் இரத வாதம்
பொன்னனை யாள்முன் செய்து போந்தது புகன்றேம் ஆர்த்தார்
மன்னனை மடுவில் வீட்டி மலரடிக் கன்ப னான
தென்னனை அமரிற் காத்த திருவிளை யாடல் சொல்வாம்.

1884. அங்ஙனம் சமைக்கப் பெற்ற இடபவூர்தியுடைய இறைவனின் திருமேனியின் அழகினைப் பார்த்து, "அச்சோ! அழகிய பிரானோ (சுந்தரனோ) இவன்" என்று சொல்லிக் கன்னத்தில் அள்ளி முத்தமிட்டாள். தனது மெய்யன்பினால் இடைவிடாது இருந்த பெருமானின் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்வித்துத் திருவிழாவும் தேரும் நடத்தி சிலநாள் சென்றபின், வீடுபேற்றினை அடைந்தாள்.

இறைவன் குறியும் பெயரும் கொண்டு விளங்குதல்

1885. தேய்ந்த நுண்ணிடையையுடைய பொன்னனையாள் அப்பெருமானின் க்ன்னத்தின்கண் அள்ளுதற்கு இட்ட கையில் உள்ள நகக்குறியும் 'அழகிய பிரானோ! என்று கூறிய காரணப் பெயரையும் கொண்டு (ஏமநாதர், சுந்தர நாதர், திருப்பூவண நாதர் என்று) கலியுகத்திலே விருப்பம் மிக்க ஒளிவீசும் சிவந்த பொன்னாலாகிய திருமேனி வேறுபட்டுத் தக்க உருவமாக எழுந்தருளி இன்பம் நல்கி வருகின்றார்.

இரசவாதம் செய்த படலம் முற்றிற்று.

37. சோழனை மடுவில் வீட்டிய படலம்

1886. தேன்நிறைந்த கொன்றை மாலையணிந்த சோமசுந்தரக் கடவுள், பொன்னனையாள் முன் இரசவாதம் செய்தருளிய திருவிளையாடலைக் கூறினோம். இனி, ஆத்திமாலை அணிந்த சோழனை மடுவில் வீழ்த்தி மலர் போன்ற திருவடிக்கு அன்பனாகிய சுந்தரபாத சேகர பாண்டியனைப் போரில் காத்தருளிய திருவிளையாடலைக் கூறுவோம்.

1887. பொன்னெடுந் தேரி ராச புரந்தரன் புரந்த ராதி
பன்னெடுந் தேவர் ஏத்தப் பரனுல கடைந்தா னிப்பால்
அந்நெடுந் தகையோன் மைந்த னடலிரா சேச
னென்போன்
இந்நெடுந் தகையோன் மைந்த னிராசகம் பீர
னென்போன்.

1888. மற்றிவன் குமரன் பாண்டி வங்கிய தீப னன்னான்
பொற்றிணி தடந்தோண் மைந்தன் புரந்தர சித்தா
மன்னான்
வெற்றிகொள் குமரன் பாண்டி வங்கிய பதாகன் வீரம்
பற்றிய சுந்த ரேச பாதசே கரன் அவன்சேய்.

1889. பலர்புகழ் சுந்த ரேச பாதசே கரனாந் தென்னன்
அலைபுன லுடுத்த கூட லடிகளுந் கன்ப னாகிக்
கொலைபுணர் வேலால் வெங்கோற் குறும்பெனங்
களைக டீர்த்து
மலர்தலை யுலகம் என்னும் வான்பயிர் வளர்க்கு நாளில்.

1890. பத்துமான் றடந்தேர் நூறு பனைக்கைம்மா நூற்றுப்
பத்துத்
தத்துமா னயுத மள்ளர் தானையிவ் வளவே யீட்டி
இத்துணைக் கேற்ப நல்கி யெஞ்சிய பொருள்கள்
எல்லாஞ்
சித்துரு வான கூடற் சிவனுக்கே செலுத்து மன்னோ.

1887. பொன்தேரையுடைய இராசேந்திர பாண்டியன் இந்திரன் முதலிய பலபெரிய தேவர்கள் புகழ சிவலோகத்தை அடைந்தான். பின் அந்நெடுந்தகை யோனின் புதல்வன் 'இராசராச பாண்டியன்' அவன் மகன் 'இராச கம்பீர பாண்டியன்' என்போர் ஆண்டனர்.

1888. இந்த இராச கம்பீர பாண்டியன் மகன் 'பாண்டி வங்கிய தீபன்' என்பவன். அவனுடைய பொன்னிறம் வாய்ந்த திண்ணிய பெரிய தோள்களையுடைய புதல்வன் 'புரந்தர சித்தன்' அவனுடைய வெற்றி மிக்க குமரன் 'பாண்டி வங்கிய பதாகன்' அவன் மைந்தன் வீரம் பொருந்திய 'சுந்தரேச பாதசேகரன்' என்பவன்.

சுந்தரேச பாதசேகரன் தன்மை

1889. பலரும் போற்றும் சுந்தரேச பாதசேகரன் என்னும் அப்பாண்டியன், அலைவீசும் வையை சூழ்ந்த கூடலின் நாயகனான சோமசுந்தரக் கடவுளுக்கு அன்பனாகி கொலைத் தொழிலுடைய வேற்படையால் குறுநில மன்னர் என்னும் களைகளைப் போக்கி, பரந்த இடமமைந்த உலகில் உள்ள உயிர்கள் என்னும் சிறந்த பயிரை வளர்த்து வந்தான்.

1890. குதிரை பூட்டிய தேர் பத்தும், பனை போன்று துதிக்கையுடைய யானை நூறும், குதிரைகள் ஆயிரமும், காவலாள் பதினாயிரமும் ஆகிய இவ்வளவு படைகளையே தொகுத்து வைத்து, இத்துணை சேனைக்கும் பொருந்திய பொருளைக் கொடுத்து எஞ்சிய பொருள் முழுவதையும் அறிவே வடிவமாகிய மதுரையில் எழுந்தருளி இருக்கும் சோமசுந்தரக் கடவுளுக்கே செலவிட்டான்.

1891. கண்டிகை மகுடம் ஆதிக் கலனிரை குயின்றுந் திங்கள்
மண்டல மிடறுஞ் சென்னிக் கோபுர மாட மாதி
எண்டிசை யிருள்கால் சீப்ப எரிமணி யிழைத்து
வேய்ந்தும்
திண்டிற லுடையான் இன்ன திருப்பணி பிறவுஞ்
செய்தான்.

1892. கல்லுமா றகன்ற மார்பன் கருவியின் சிறுமை நோக்கி
மல்லுமா றாத திண்டோள் வளவர்கோன் ஒருவன்
காலிற்
செல்லுமா யிரம்ப ரிக்கோர் சேவக னென்போன் றானே
வெல்லுமா றெண்ணி வஞ்சி வேய்ந்துகொண்
டெழுந்து போந்தான்.

1893. பல்வகைக் கருவி யீட்டப் படையொடும் பரவை சீறிச்
செல்வது போலக் கன்னித் தீம்புனல் நாடு நோக்கி
மல்வரை யாத தோளான் வரவறிந் தெழுந்து மேருக்
கல்வரி சிலையான் முன்போய்க் கைதவன் தாழ்ந்து
கூறும்.

1894. பொன்னது அனைய வேணிப் புனிதவிப் பூமி நேமி
உன்னது வலத்தி னாலே யுருட்டுமென் வலத்தை
நோக்கான்
தன்னது வலத்தி னாலென் தானையின் சிறுமை
நோக்கி
என்னது தேயங் கொள்வான் எண்ணினான்
போலுமன்னோ.

1891. சிவபெருமானுக்கு முடி கண்டிகை முதலாகிய இரத்தினாபரணங்களைச் செய்வித்தான். சந்திர மண்டலத்தைத் தொடும் வானளாவிய திருக்கோபுரமும், திருமாளிகை முதலியவற்றையும் கட்டி எட்டுத் திக்குமுள்ள இருளைப் போக்கும்படி ஒளிவிடும் பன்மணிகளால் இழைப்பித்தான். இன்னும் இவை போன்ற பல திருப்பணிகளைச் செய்வித்தான்.

சோழன் பாண்டியனுடன் போர் செய்ய வருதல்

1892. மலை போன்ற பெரிய மார்பினையுடைய சுந்தரேச பாதசேகர பாண்டியனுடைய சேனையின் சிறுமையைக் கருதி மற்போர் இடையறாது செய்யும் திண்ணிய தோளையுடைய "ஆயிரம் பரிக்கோர் சேவகன்" என்னும் சோழ மன்னன் ஒருவன் தானே வெற்றி கொள்ளத் துணிந்து வஞ்சிமாலை சூடிப் பாண்டியனோடு போர் செய்யப் புறப்பட்டு வந்தான்.

பாண்டியன் சோமசுந்தரக் கடவுளை வணங்குதல்

1893. பல்வகைப் படைக்கலன்களை ஏந்திய சேனையோடும், கடலானது சீறிச் செல்வது போல, சோழனுடைய படைகள், இனிய பொருநை நீரையுடைய கன்னி நாடாகிய பாண்டிய நாட்டினை நோக்கி வருவதைப் பாண்டியன் தன் ஒற்றர்களால் அறிந்தான். மேருமலையைக் கட்டமைந்த வில்லாகக் கொண்ட சோமசுந்தரக் கடவுள் திருமுன் சென்று வணங்கி சொல்லத் தொடங்கினான்.

1894. "பொன்னனைய செஞ்சடைப் புனிதனே! உன்னுடைய திருவருள் வலிமையினால் ஆணை செலுத்தி இப்பூமியை அரசாளும் அடியேனுடைய வலிமையை நோக்காது என் சேனையின் சிறுமையை மட்டும் கருதிச் சோழன் தன்னுடைய சேனையின் வலியினால் எனது நாட்டைக் கைப்பற்றிக் கொள்ள எண்ணினான் போலும்!

1895. காவிரி நாடன் சேனைக் கடலிடை எரிபோன் மூண்டு
மேவினன் என்று கூறி மீனவன் வேண்ட வானிற்
பூவிரி வாகை நீயே புனையநாம் பொருது மென்னா
நாவிரி யாத மாற்ற நாயகன் கூறக் கேட்டான்.

1896. எல்லியங் கமலச் செவ்வி யெனமுக மலர்ந்து நாதன்
அல்லியங் கமலச் செந்தாள் அகந்தழீஇப் புறம்பு போந்து
பல்லியந் துவைப்பத் தானைப் பரவையுட் பரிமா வூர்ந்து
கொல்லியம் பொருப்பன் சேனைக் கடலெதிர் குறுகி னானே.

1897. பண்ணுத லிசைவண் டார்க்கும் பசுந்தொடைச் செழியன் றானை
எண்ணுத லிலவாஞ் சென்னி யிரும்படைக் கடல்நே ராறாய்
நண்ணுதல் எனப்போய்ப் பொன்னி நாடவன் தமர்கட் கெல்லாங்
கண்ணுத லருளா லங்கோர் கடலெனத் தோன்றிற் றம்ம.

1898. கடலென வருமா வூர்ந்து கைதவன் சேனை முன்போய்
அடலணி மேருக் கோட்டி யாலவாய் நெடுநாண் பூட்டி
மடலவிழ் துழாய்க்கோ னாட்டி வாயெரி புரத்தில் ஊட்டி
மிடலணி கூடற் கோமான் வேடுரு வாகி நின்றான்.

1895. காவிரி நாட்டையுடைய சோழன் கடல் போன்ற அளவில்லாத சேனையோடு வடவைத் தீப்போலச் சினந்து வந்தான்" என்று விண்ணப்பம் செய்தான். அப்பொழுது சிவபெருமான் திருவருளினாலே ஆகாயத்தினின்று, "பாண்டியனே! நீயே மணம் விரிந்த வாகை மாலை சூடுமாறு நாம் வந்து போர் செய்வோம்" என்று ஓர் அசரீரி வாக்குத் தோன்றியது.

1896. அம்மொழிகளைக் கேட்ட பாண்டியனுடைய முகம் சூரியனைக் கண்ட தாமரை மலரின் மலர்ச்சியைப் போல மலர்ச்சியடைந்தது. பாண்டியன், இறைவனுடைய தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகளை உள்ளத்தில் கொண்டு வெளியே வந்தான். பின்னர், பல வாத்தியங்கள் ஒலிக்க ஒரு குதிரை மீதேறிச் சேனைகள் சூழ அழகிய கொல்லி மலையையுடைய சோழனது சேனைக் கடலின் எதிரே வந்தான்.

1897. எண்ணுதற்கு இயலாத சோழனுடைய பெரிய சேனைக் கடலுக்கு நேரே, பண்ணமைந்த இசையினை வண்டுகள் ஒலிக்கும் மாலையணிந்த பாண்டியனுடைய சிறிய சேனை ஒரு ஆறு போலச் சென்றாலும், சோழனுடைய போர்வீரர்கள் எல்லார்க்கும் சோமசுந்தரக் கடவுளின் திருவருளினாலே ஒரு பெருங்கடல் போலத் தோன்றிற்று.

இறைவர் வேட்டுவர் தலைவராக வருதல்

1898. மேருமலையாகிய வில்லை வளைத்து, வாசுகியாகிய நாணை ஏற்றி, துழாய் மாலையணிந்த திருமாலாகிய அம்பைப் பூட்டி நகைத்தலாகிய நெருப்பினால் முப்புரத்தை எரித்து வெற்றி கொண்ட கூடல் தலைவனாகிய சோமசுந்தரக் கடவுள் வேட்டுவத் திருவுருவம் தாங்கிக் கடலின் அலை போல விரைந்து செல்லும் குதிரை மீதூர்ந்து பாண்டியனது சேனையின் முன்னணியில் சென்று நின்றருளினார்.

1899. கங்குல்வாய்த் திங்கள் போலக் காதணி தந்தத் தோடுங்
கங்குல்வாய் முளைத்த மீன்போற் கதிர்முத்த வடமுங் குஞ்சிக்
கங்குல்வாய் சிலைபோல் வெட்சிக் கண்ணிசூழ் கலாபச் சூட்டுங்
கங்குல்வாய் கிழிக்குந் தந்தக் கடகமு மின்னுக் கால.

1900. அண்டத்தா ரமரர் நாம மன்றுதொட் டடையத் தோற்று
கண்டத்தா ரிருளே யெங்குங் கலந்தெனக் கறுத்த மேனி
கொண்டத்தா ராரி னாற்கோர் கூற்றெனக் கொல்வே லேந்திச்
சண்டத்தீ யென்ன நின்றான் காவிரித் தலைவன் காணா.

1901. சீறியா யிரம்ப ரிக்கோர் சேவகன் வந்தேன் என்னாக்
கூறினா னெதிர்த்தான் வெள்ளிக் குன்றவன் பத்து நூறு
மாறிலாப் பரிக்கு மட்டோர் வயவனீ யன்றோ எண்ணில்
ஈறிலாப் பரிக்கு மொற்றைச் சேவகன் யானே யென்றான்.

1899. அப்போது இருளில் ஒளிவீசும் சந்திரன் போல் விளங்கும் காதில் அணிந்த தந்தத்தாலாகிய தோடும், இரவில் தோன்றிய விண்மீனைப் போல் ஒளிவீசும் முத்து மாலையும், வானவில் போல் சிகையில் அணிந்த வெட்சி மாலையுடன் மயிர்ப் பீலியாகிய நுதலணி மாலையும் இருளினைப் போக்கும் தந்தக்காப்பும் ஒளிவீசி நின்றன.

1900. தேவர்கள் பொருட்டு நஞ்சுண்ட அந்நாள் முதல், திருமிடற்றிலே தோன்றிய கருநிறம் உடல் முழுவதும் கலந்தாற்போல, கரிய திருமேனி கொண்டு கொல்லும் தொழிலையுடைய வேற்படையினை ஏந்தி, ஆத்திமாலை அணிந்த சோழனுக்குக் கூற்றுவனைப் போலவும் ஊழித் தீ போலவும் அவன் காண நின்றார், காவிரித் தலைவனாகிய சோழன் கண்டான்.

இறைவனும் – சோழனும்

1901. மிக்க சினம் கொண்டு, "ஆயிரம் குதிரைகட்கு ஒரு வீரனாகிய நான் வந்தேன்" என்று சொல்லிக் கொண்டு போய் எதிர்த்தான். வெள்ளிமலையுடைய இறைவன் "ஆயிரம் குதிரைகட்கு மட்டும் ஒரு சேவகன் நீயன்றோ? எண்ணில் முடிவு பெறாத குதிரைகளுக்கும் ஒற்றைச் சேவகன் யானே" என்றார்.

1902. என்றசொல் லிடியே றென்ன விருசெவி துளைப்பக்
கேட்டு
நின்றவன் எதிரே மின்னு நீட்டிச்செல் மேகம் போலச்
சென்றுவேல் வலந்தி ரித்துச் செயிர்த்தன
னதிர்த்துக் கீற
வன்றிற னூற்றுப் பத்து வயப்பரிக் கொருவ னஞ்சா.

1903. யாமினி யிந்த வேலால் இறப்பதற் கைய மில்லை
யாமென வகன்றான் மாவோ டாயிரம் பரிக்கோர்
மள்ளன்
காமனை வெகுண்ட வேடன் மறைந்தனன் கங்குற்
சோதி
மாமக னதுகண் டோடும் வளவனைத் துரந்து
சென்றான்.

1904. துரந்திடு மளவில் ஓடும் சோழனும் திரும்பி நோக்கிக்
கருந்தடங் கண்ணி பாகம் கரந்தவே டுவனைக்
காணான்
வருந்துயர் அச்சம் தீர்ந்தான் மதுரையின் அளவும்
பற்றிப்
புரந்தரன் புறங்கண்டானைப் புறங்கண்டு முடுக்கிப்
போனான்.

1902. இவ்வாறு வேடர் வடிவம் தாங்கிய இறைவன் கூறிய சொல் இடியேற்றைப் போல் இரு காதுகளையும் துளைக்கக் கேட்டு நின்ற சோழன் எதிரே, மின்னலை வீசும் முகிலைப் போலச் சிவபெருமான் விரைந்து சென்று வேற் படையை வலமாகச் சுழற்றி சினந்து முழங்கிச் சீற, ஆயிரம் குதிரைகட்குத் தலைவனாகிய சோழன் (ஆயிரம் பரிக்கோர் சேவகன்) பயந்தான்.

1903. "இனி யாம் இந்த வேற்படையால் இறப்பதற்கு ஐயமில்லை" என்று நினைத்து ஆயிரம் குதிரைகட்குத் தலைவனாகிய சோழன் தன் குதிரையோடு புறங் கொடுத்து ஓடினான். மன்மதனை எரித்த வேடனாகிய இறைவர் மறைந்தருளினார்.– இரவில் தோன்றும் சந்திரன் மரபில் வந்த சுந்தரபாத சேகர பாண்டியன் அதனைக் கண்டு சோழனைத் துரத்திச் சென்றான்.

1904. புறங்காட்டி ஓடிக் கொண்டிருந்த சோழன் சற்றுத் திரும்பிப் பார்த்தான். அப்போது கரிய நீண்ட கண்ணுடைய உமையம்மையின் பாகத்தை மறைத்து வந்த வேடனைக் காணாமையால், துன்பமும் அச்சமும் நீங்கித் திரும்பி வந்து, இந்திரனைப் புறம் கண்ட பாண்டியனை மதுரை வரையில் தொடர்ந்து துரத்திக் கொண்டு வந்தான்.

1905. காலொன்று முடுக்கப்பட்ட கனலொன்று நடந்தா
லொத்து
வேலொன்று தடக்கை நேரி வேந்தனால்
முடுக்குண்டோடும்
சேலொன்று கொடியினான்தன் செழுநகர் விரைந்து
செல்வான்
மாலொன்று களிற்றினாங்கோர் மதுமலர்க் கிடங்கில்
வீழ்ந்தான்.

1906. மீனவன் மதுரை மூதூர் மேற்றிசைக் கிடங்கில் வீழ
மானவெம் புரவி யோடும் வளவனும் வீழ்ந்தான் கூடற்
கோனவன் அருளால் வானோர் குரைகடல் கடையத்
தோன்றும்
ஆனையின் எழுந்தான் தென்னன் கோழிவெந் தாழ்ந்து
போனான்.

வேறு

1907. பிலத்தள வாழ்ந்த கடிமலர்க் கிடங்கிற்
பெருந்தகை யவிந்தவன் துகில்பூண்
கலந்தரும் பேழை படைபரி மான்றேர்
கரியெலாம் கவர்ந்துதன் பொருநைத்
தலத்தவன் தங்கள் நாயகர் அணியத்
தக்க தூசணிகலன் நல்கி
நலத்தகை யவர்பே ரருட் கடற்கன்பு
நதியெனப் பெருகிவீற் றிருந்தான்.

சோழனை மடுவில் வீட்டிய படலம் முற்றிற்று.

மூன்றாம் தொகுதி முற்றும்.

பாண்டியனும் சோழனும் மடுவில் விழுதல்

1905. காற்றினால் முடுக்கப்பட்ட கனல் ஒன்று நடந்தாற் போல வேற்படை ஏந்திய நீண்ட கையையுடைய நேரி மலையையுடைய சோழனால் துரத்தப்பட்டு ஓடுகின்ற கயல் எழுதிய கொடியையுடைய பாண்டியன் வளம் பொருந்திய தன் மதுரை நகர்க்கு ஓடி வருகின்றவன் மத மயக்கத்தையுடைய யானை போல, தேன் மிக்க பூக்களை யுடைய மடுவொன்றிலே விழுந்தான்.

1906. பாண்டியன், பழைய நகராகிய மதுரையின் மேற்புறத்தில் உள்ள அகழியில் விழ, அவனைத் துரத்தி வந்த சோழனும் கொடிய குதிரையோடும் வீழ்ந்தான். சோமசுந்தரக் கடவுளின் திருவருளால், தேவர்கள் பாற் கடலைக் கடைய அதில் தோன்றிய வெள்ளானை போல அம்மடுவினின்றும் வெளியேறினான். சோழன் மடுவினில் ஆழ்ந்து இறந்தான்.

பாண்டியன் இறைவனுக்கு அன்பு பூண்டு ஒழுகுதல்

1907. தண்ணிய பொருநை சூழ்ந்த நாட்டினை யுடைய சுந்தரபாத சேகர பாண்டியன், பாதாளம் வரை ஆழ்ந்துள்ள மணம் மிக்க மலர்களையுடைய மடுவில் வீழ்ந்து இறந்த சோழனுடைய ஆடை, அணி, அணிகலப் பெட்டி, காலாள், குதிரை. யானை, தேர் ஆகிய இவற்றையெல்லாம் கைப்பற்றினான். பிறகு சோமசுந்தரக்கடவுள் அணியத் தக்க ஆடைகளையும் அணிகலன்களையும் தந்து, அவ்விறை வனது உயிர்கட்கு நன்மையே புரியும் திருவருளாகிய கடலுக்குத் தனது அன்பானது நதிபோலப் பெருக வீற்றிருந்தான்.

சோழனை மடுவில் வீட்டிய படலம் முற்றிற்று.

மூன்றாம் தொகுதி முற்றும்.

பாட்டு முதற் குறிப்பகராதி

எண் : தொடர் எண்

□ □ □